பாயும் ஒளி நீ எனக்கு...!

பிரேமலதா பாலசுப்ரமணியம்

பாயும் ஒளி நீ எனக்கு..!

1

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் அறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசிந்திடல் வேண்டும் அன்னாய்!

எல்லா ஸ்லோகங்களையும் சொல்லி முடித்து, பின் வழக்கம் போல, பாரதியார் அன்னை சக்தியிடம்

வேண்டியதையே, தானும் வேண்டிக்கொண்டு பூஜை அறையில் இருந்து வெளியே வந்தாள் அபிராமி.

''என்ன அபிம்மா, இன்றைக்கு இவ்வளவு சீக்கிரமே கிளம்பறே?'' என்று வினவியபடியே, அபிராமிக்கு உணவு எடுத்து வைத்தார் கற்பகம்.

''நேற்றே சொன்னேனே அம்மா, சூர்யா இண்டஸ்ட்ரீஸ் எம்.டி. இன்னைக்கு நம்ம இல்லத்துக்கு வருகிறார் என்று? காலையில் எட்டு மணிக்கு பார்க்க முடிந்தால் நல்லது என்று அவங்க காரியதரிசி சொல்லி இருந்தாங்க, அதனால்தான் சீக்கிரம் கிளம்பறேன்... அவர் மட்டும் இந்த வருஷம் நமக்கு நிதி கொடுக்கிறதா ஒத்துகிட்டால், இந்த வருஷமே பிள்ளைகள் படிப்புக்கான அமைப்பையும் தொடங்கிடலாம்!'' என்று ஆர்வமாக சொன்ன அபிராமி, விரைவாகச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பிச் செல்ல, அவளைப் பார்த்த கற்பகத்தின் கண்களில் கனிவோடு பெருமையும் கலந்திருந்தது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த பெண்ணா இவள்? என்ற எண்ணம் எப்போதும் போல ஆச்சரியத்தை உண்டு பண்ணியதோடு, ஒரு பெருமூச்சையும் வர வைத்தது.

இந்த வயதில், ஆதரவற்ற பெண்களுக்கென்று ஒரு இல்லம் நடத்தும் அபிராமியைப் பற்றிப் பெருமையாய் இருந்தாலும், தனக்கென்று ஒரு வாழ்வை இந்தப் பெண் எப்பொழுது அமைத்துக் கொள்ளப் போகிறாள் என்ற கவலையும் இருக்கத்தான் செய்தது.

திருமணத்தைப் பற்றிப் பேசவே கூடாது என்று அபிராமி தடை விதித்திருந்தாலும், அவ்வப்போது அந்தப் பேச்சை எடுக்காமல் கற்பகமும் விட்டதில்லை. அவள் பிடி கொடுத்தால்தானே இவராலும் எதையாவது செய்ய முடியும்?

எப்போதும் போல 'கடவுளே! இந்த பெண்ணின் மனதை மாற்றி அவளுக்கென்று ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடு!' என்று வேண்டிக் கொண்டார் கற்பகம்.

தங்கள் வீட்டில் இருந்து கூப்பிடு தொலைவில் இருக்கும் சக்தி இல்லத்துக்கு வந்த அபிராமி, அங்கே வேலை செய்யும் செக்யூரிட்டியை அழைத்தாள்.

''தாஸ் அண்ணா... இன்னைக்கு எட்டு மணிக்கு மிஸ்டர். சூர்யப்பிரகாசம் என்று ஒருத்தர் வருவார். அவரைக் காக்க வைக்காமல் உள்ளே அனுப்பிடுங்க... ரொம்ப முக்கியமான மனிதர் அவர்!'' என்று சொல்லி விட்டு, அவரிடம் காண்பிப்பதற்காக நேற்றே எடுத்து வைத்து இருந்த கோப்புகளைப் பார்க்கத் துவங்கினாள்.

அந்த வீட்டின் கீழ்ப்புறம் சக்தி இல்லமும், மேலே சக்தி ஆடையகமும் இயங்கி வருகிறது.

சக்தி இல்லத்தில் இருக்கும் பெண்களோடு, வேறு பெண்களும் சக்தி ஆடையகத்தில் வேலை செய்கின்றனர்.

இரண்டு பெரிய கார்மெண்ட்ஸ் கம்பெனிக்கு, ஜாப் வொர்க் வேலை செய்து வரும் பணியைத்தான் சக்தி ஆடையகத்தில் செய்து வருகிறார்கள்.

''என்ன அபி, இன்னைக்கு சீக்கிரமே வந்திட்டே? எதாவது முக்கியமான வேலையா?'' என்று விசாரித்தபடி வந்து நின்ற சுந்தரியைப் பார்த்து புன்னகைத்த அபிராமி, ''இன்னைக்கு நன்கொடை தருகிற விஷயமா ஒரு பெரிய மனுஷர் வராருக்கா... அதான் நானும் சீக்கிரமே வந்துட்டேன்'' என்றாள்.

''அவர் வந்தவுடனே, டீ, காபி ஏதாவது வேணும்னா சொல்லு அபி, எடுத்திட்டு வரேன்'' என்று சுந்தரி

சொல்ல, அபிராமி தலையாட்டிவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த கோப்புகளை சரிப்படுத்தி வைக்கத் துவங்கினாள்.

அப்போதும் போகாமல் தயக்கத்துடன் நின்று கொண் டிருந்த சுந்தரியை நோக்கியவள், ''என்னக்கா? என்ன விஷயம்?'' என்று விசாரித்தாள்.

''இல்லை அபி... பீஸ் எடுத்துட்டு வந்து தரானே, அந்த முத்து... அவன் நம்ம சித்ரா கிட்ட கொஞ்சம் அதிகமா பேசறான்னு தோணுது'' என்று தயங்கித் தயங்கி சுந்தரி சொல்ல, அபிராமியின் முகம் மாறியது.

''ரெண்டு நாளா நானும் உன்கிட்ட சொல்லணும்னு நினைக்கிறேன்... தனியா பார்க்கவே முடியலை... சித்ரா அவன்கிட்ட முகம் கொடுத்துப் பேசறது இல்லை... இருந்தாலும் அவனும் விடாமல் பேசிட்டு இருக்கான்... அதான் உன் காதுக்கு விஷயத்தைக் கொண்டு வந்திட லாம்னு'' என்று ஒரு வழியாக விஷயத்தைச் சொல்லி முடித்தாள் சுந்தரி.

''ம்ம்ம்... இன்னைக்கு முத்து வந்தார்னா, என்கிட்டே அனுப்புங்க அக்கா'' என்று சொல்லிவிட்டு, சுந்தரியை அனுப்பிய அபிராமிக்கு மனதில் கவலை பிறந்தது.

அவளுக்குத் தெரிந்த வரை முத்து ரொம்ப நல்ல மனி தன்தான். சித்ராவிடம் ஏன் இப்படி நடந்து கொள்கிறான் என்று புரியவில்லை. சுந்தரியும் உண்மை இல்லாத விஷயத்தை சொல்லுபவள் இல்லை என்பதால், முத்து விடம் இன்று விசாரிக்க வேண்டும் என்று அபிராமி எண்ணிக் கொண்டாள்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், தனித்து வாழும் பெண்களுக்கென்று ஒரு இல்லம் உருவாக்க வேண்டும்

என்ற திட்டம் எல்லாம் அபிராமிக்கு இருந்ததில்லை. சமு தாயத்தில் நான்கு பேருக்கு உதவியாக, ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்ற எண்ணம் மட்டும் உறுதியாக ஓடிக் கொண்டிருந்தது.

என்ன செய்யப் போகிறோம் என்று யோசித்துக் கொண்டிருந்த போதுதான். சுந்தரியை சந்திக்க நேர்ந்தது.

அபிராமியும் கற்பகமும் குடி இருந்த தெருவில்தான், சுந்தரி தன் கணவனோடு வசித்து வந்தாள். தினமும் குடித்துவிட்டு வரும் அவள் கணவன், அவளை அடித்து துன்புறுத்துவதை, வீட்டு வேலை செய்ய வரும் அஞ்சலை, கற்பகத்திடம் புலம்புவதை அபிராமியும் கேட்டிருக்கிறாள்.

கணவன் மனைவிக்குள் என்ன பிணக்கு என்று தெரியாவிட்டாலும், தாலி கட்டி விட்ட ஒரே கார ணத்துக்காக மனைவியை அந்த கணவன் அடிப்பதை அபிராமியால் ஏற்றுக்கொள்ள முடிந்ததில்லை.

கண்களில் நிராசையோடு இருக்கும் சுந்தரியை சந்திக்க நேரிடும்போதெல்லாம், அபிராமிக்கு சுந்தரியின் கணவன் மேல் ஆத்திரம் எழுவதுண்டு. ஆனால், மற்ற வர் விஷயத்தில் தலையிட அவளுக்கு உரிமை இல்லை என்பதால், ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளுவாள்.

அவளது ஆத்திரத்தை வெளியிடும் சந்தர்ப்பமும் வந்தது.

ஒரு நாள் இரவு, சுந்தரியின் வீட்டில் இருந்து அவள் அலறும் சத்தம் கேட்டது. எப்போதும் நடக்கும் விஷயம் தான் என்றாலும், அன்று இரைச்சல் அதிகமாகவே இருந்தது.

எப்போதும் போல, ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள அபிராமி முயன்றபோது, வெளியே இரைச்சல் அதிக மாக, அபிராமியும் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். வெளியே வந்தவள் கண்ட காட்சி, அவளைப் பதற வைத்தது.

வீதியில் தலைவிரி கோலமாக சுந்தரி தரையில் இருக்க, அவள் மேல் கெரோசினை ஊற்றிக் கொண்டிருந்தான் அந்த கணவன் என்னும் கொடியவன்!

வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்களைப் போல, அபிராமியால் அமைதியாக இருக்க முடிய வில்லை. சட்டென்று உள்ளே சென்றவள், எதையோ எடுத்துக்கொண்டு வந்து, விடுவிடுவென்று சுந்தரியின் கணவனை நோக்கி முன்னேறினாள்.

அருகில் சென்றதும், கெரோசின் கேனை அவனிடம் இருந்து பிடுங்கியவள், மீதம் இருந்த கெரோசினை அவன் மேலேயே ஊற்றினாள்.

பிறகு, அபிராமி தீப்பெட்டியில் இருந்து குச்சியை எடுத்து உரசப் போகவும், ''ஏய்... ஏய்... அப்படி செய் யாதே!'' என்று அகமும் புறமும் பதறியபடி அவன் அலறி னான்.

கோபத்துடன் தீப்பெட்டியை விசிறி அடித்தவள், ''ஓ! உன் உயிர் மட்டும் அவ்வளவு வெல்லக் கட்டியா? இப்போ இவ்வளவு நேரம் அதைத்தானே நீ செய்ய இருந்தே?'' என்று அவனை ஆத்திரத்துடன் உறுத்தபடி வினவினாள்.

அவள் தீப்பெட்டியைத் தூக்கிப் போட்டவுடன், தன் நிலையை அடைந்தவன், அவள் மிரட்டவே அப்படி

செய்தாள் என்று புரிந்ததும், ''இது எனக்கும் என் பொண டாட்டிக்கும் இடையே உள்ள விஷயம்... நீ ஏன் அநா வசியமா தலையிடறே?'' என்று ஆணவத்துடன் எதிர்கேள்வி கேட்டான்.

''உனக்கும் உன் பொண்டாட்டிக்கும் இடையே உள்ள விஷயம்னா அது உன் வீட்டுக்குள்ளே இருந்திருக்கணும்... இப்படி வீதிக்கு வந்தால், என்னை மாதிரி நாலு பேர் கேட் கத்தான் செய்வாங்க'' என்று சொன்னவளின் பார்வை, ஒரு குற்றச்சாட்டுடன் கூட்டமாய் நின்றிருந்தவர்கள் மேல் பாய்ந்தது.

அவளது பார்வை சில பேரைத் தலை குனியச் செய்ய, ஒரு நடுத்தர வயதுக்காரர் அவள் உதவிக்கு வந்தார்.

''அந்த பொண்ணு சொல்றது சரிதானேப்பா... நீ இவ்வளவு நாள் வீட்டுக்குள்ள உன் பொண்டாட்டியைப் போட்டு அடிக்கும்போது, நாங்க ஏதாவது கேட்டோமா? இப்போ வீதிக்கு பிரச்னையை எடுத்து வந்ததே நீதானே?'' என்று சொல்ல, ஒவ்வொருத்தராய் அவனைக் கேள்வி கேட்க ஆரம்பித்தனர்.

''எல்லாரையும் சப்போர்ட்டுக்கு கூப்பிட்டு இருக்கி யாடி... போ! சப்போர்ட்டுக்கு வந்தவங்க வீட்டுக்கே போ!'' என்று ஆத்திரத்தோடு சொல்லியவன், கதவை அறைந்து சாத்திக்கொண்டு உள்ளே போய் விட்டான்.

மெல்ல, கூட்டம், கலைய, கண்ணீரோடு நின்று கொண்டிருந்த சுந்தரியை அபிராமிதான் தன் வீட்டுக்கு அழைத்து வந்தாள். கற்பகம் உணவு எடுத்து வர, இருவரும் வற்புறுத்தி சுந்தரியைச் சாப்பிட வைத்தனர்.

உணவு உள்ளே சென்றதும், கொஞ்சம் தெம்பு வந் ததோ? சுந்தரியின் கண்ணீரும் மெல்ல நின்றது.

''தினமும் இப்படி சித்திரவதைச் செய்யறானே... நீங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கக் கூடாதா?'' என்று ஆற்றாமையுடன் அபிராமி சுந்தரியிடம் வினவினாள்.

''புகார் கொடுத்துட்டு? அப்புறம் என்னம்மா செய்யச் சொல்றீங்க? அவங்க சமாதானம் பேசி அங்கேதானே அனுப்புவாங்க... இவரோட ஆத்திரம் இன்னும் ஜாஸ்தியா ஆயிடாதா? அப்படியே அவங்க இவரை ஜெயில்ல போட்டாலும், அப்புறம் நான் எங்கே போவேன்?'' என்று புதிதாய்ப் பெருகிய கண்ணீரோடு சுந்தரி கேள்வி கேட்ட போது, அபிராமியாலும் பதில் சொல்ல இயலவில்லை.

''அப்படி என்னதான் பிரச்சனை உங்களுக்கும் அவருக்கும்?'' அடுத்தவர் பிரச்சனைதான் என்றாலும், என்ன வென்று தெரிந்தால் தன்னால் உதவ முடியுமோ என்ற நோக்கத்தில், என்று சுந்தரியிடம் விசாரித்த அபிராமிக்கு அதிர்ச்சிதான் மிஞ்சியது.

சுந்தரிக்கு அப்பா கொளுத்து வேலை செய்து வந்த இடத்தில்தான், சோமநாதன் மேஸ்திரியாக வேலை பார்த்திருக்கிறான். ஒரு நாள் சுந்தரியின் அப்பாவுக்கு உடம்புக்கு ரொம்பவும் முடியாமல் போய்விட, சோமநாதன் உதவி செய்து இருக்கிறான். சுந்தரியின் அப்பா உயிர் விடும் தருவாயில், தன் மகளை நினைத்து வருத்தப்பட, சோமநாதன் தானே அவளைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லி விட, அவரும் நிம்மதியுடன் மூச்சை விட்டிருக்கிறார்.

தனக்கு இந்த ஜென்மத்தில் திருமணம் என்பதே இல்லை என்று எண்ணிக் கொண்டிருந்த சுந்தரிக்குமே, அந்த திருமணத்தில் சந்தோஷம்தான்.

தந்தை இறந்த பிறகு தனக்கும் ஒரு துணை கிடைத்ததில் நிம்மதியாக இருந்தது. அந்த நிம்மதியும் அடியோடு அழிந்தது. சோமநாதன் ஆண்மையற்றவன் என்று தெரிய வந்தபோது!

அப்போதும் சுந்தரி அவனைக் குற்றம் சாட்டவில்லை. தனக்கு விதித்தது இவ்வளவுதான் என்று அமைதியாகத்தான் இருந்தாள்.

அவள் அமைதியாக இருந்ததே, சோமநாதனுக்கு சந்தேகத்தைக் கிளப்பியது. அவள் மீது அவதூறு சுமத்தி, தன் குறையை மறைக்க முயற்சித்திருக்கிறான். தன் மேல் குற்றமில்லாத போதும், ஒண்டுவதற்கு வேறு இடம் இல்லாத காரணத்தினால், சுந்தரியும் அவனது கொடுமைகளைப் பொறுத்து வந்திருக்கிறாள்.

இன்று நிலைமை மோசமாகி இருக்கிறது. எப்போதும் பொறுமையாக இருந்த சுந்தரி, அவனது வசவுகளையும் அடியையும் பொறுக்க முடியாமல், எதிர்ப்பேச்சு பேசி விட, அவனுக்குக் கோபம் அதிகமாகி இருக்கிறது.

ஏதோ ஒரு புது துணை கிடைத்த தைரியத்தில் அவள் பேசுகிறாள் என்று சோமநாதன் நாக்கில் நரம்பில்லாமல் பேச, சுந்தரியும் எரிச்சலில், ''ஆமாம்... துணை கிடைச்சுதான் இருக்கு'' என்று சொல்லி இருக்கிறாள். அவளது அந்தப் பேச்சு, அவனை ரொம்பவும் தூண்டி விட்டிருக்கிறது. அவனுடைய ஆத்திரத்தின் விளைவே இன்றைய நிகழ்வு!

''இந்த ஆள் பண்ற கொடுமையில், செத்திடலாம்னு கூட தோணுதும்மா... ஆனால் அதுக்கு கூட மனசில தைரியம் வேணுமேம்மா!'' என்று சுந்தரி அழுதபோது, அபிராமிக்கு மனதைப் பிசைந்தது.

''இனிமேல் என்ன செய்யறதுன்னு தெரியலை... எட்டாம் கிளாஸ் வரைக்கும்தான் நான் படிச்சிருக்கேன்... என்ன வேலை கிடைக்கும்னு தெரியலை... அப்படியே நாலு வீட்டில பத்து பாத்திரம் தேய்ச்சு பொழப்பை ஓட்டி னாலும், எங்கேம்மா தங்குறது? வயசானவளா இருந் தால்கூட பரவாயில்லை, தங்ககூட இடம் இல்லை என்பதுதான் எனக்கு இப்போ பெரிய பிரச்சனைம்மா'' என்று கண்ணீர் வடித்தபோது, அபிராமி யோசனையுடன் கற்பகத்தைப் பார்த்தாள்.

அபிராமியின் எண்ணம் புரிந்தாற்போல, கற்பகம் சரி என்பது போல தலை அசைக்க, ''நீங்க எங்க வீட்டிலேயே இருக்கலாம் சுந்தரி அக்கா... எதுக்கும் கவலைப்படா தீங்க... உங்களுக்கு ஏதாவது வேலை ஏற்பாடு செய்ய லாம்... உங்க கணவர் வந்து கூப்பிட்டால் அவர் கூட போற எண்ணம் இருக்கா?'' என்று அபிராமி சுந்தரியிடம் விசாரித்தாள்.

''இல்லைம்மா... கண்டிப்பா இல்லை'' என்று உறுதி யுடன் சுந்தரி சொல்ல, ''நாளைக்கே காவல் நிலையத் தில் ஒரு புகார் கொடுத்திடலாம்!'' என்றாள் அபிராமி.

''வேண்டாம்மா!'' என்று சுந்தரி அவசரமாக மறுக்க, ''என்ன? கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று ஏதாவது சொல்லப் போறீங்களா?'' என்று அபிராமி எரிச்சலுடன் மொழிந்தாள்.

''அப்படி எல்லாம் இல்லைம்மா... அந்த ஆளை விட் டுட்டு வரேன் என்று முடிவு செய்த பின்னால, இது எல் லாம் தேவை இல்லை என்று நினைக்கிறேன்மா'' என்று சுந்தரி சொன்னபோது, புகார் கொடுப்பதைப் பற்றி அதற்கு மேல் அவள் வற்புறுத்தவும் இல்லை.

ஒதுங்க ஒரு நிழல் கிடைத்து விட்டது என்ற நிம்மதி யில் சுந்தரி உறங்கி விட, அபிராமிக்குத்தான் உறக்கம் தொலைந்து போனது.

ஒரு பெண் ஆதரவற்ற நிலையில் இருப்பது, எவ் வளவு பிரச்சனைகளைத் தோற்றுவிக்கிறது என்று யோசித்தவளுக்கு, இவ்வளவு நாளாக என்ன செய்வது என்ற எண்ணத் தேடலுக்கு விடை கிடைத்தாற்போல இருந்தது.

இதே சுந்தரி, வயதானவளாக இருந்திருந்தால், ஏதா வது முதியோர் இல்லத்தில் சேர்ந்து கொள்ளலாம். குழந் தையாக இருந்திருந்தாலோ ஒரு குழந்தைகள் காப்பகத் தில் இடம் கிடைத்திருக்கக் கூடும். இப்படி ஆதரவற்ற பெண்கள் எங்கே போவார்கள் என்று அபிராமி யோசித்த தின் விளைவே சக்தி இல்லம்!

ஆதரவற்ற பெண்களுக்காக ஒரு இல்லம் தொடங்கி, அவர்களுக்குத் தங்கள் சொந்தக் காலில் நிற்கும் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் தர வேண்டும் என்று அபிராமி அன்றுதான் முடிவெடுத்தாள்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இல் லத்தில் இப்போது முப்பது பேர் இருக்கிறார்கள். ஆதர வற்ற பெண்களுக்கு இடம் கொடுப்பதோடு மட்டுமல் லாமல், அவர்களது உள்ளத்தில் வாழ வேண்டும் என்ற தன்னம்பிக்கையை ஊட்டுவதுதான் அபிராமியின் முக்கிய வேலை.

இல்லத்தில் இருக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கு பின்னாலேயும் ஒவ்வொரு கண்ணீர் நிறைந்த கதை நிரம்பி இருக்கிறது. ஆனால், இங்கே வந்த பிறகு எல்லோர் கண்களிலும் இருந்த நிராசை மறைந்து போய்,

தன்னம்பிக்கை ஒளி வீசுவதைப் பார்க்கும்போது, அபிராமிக்கு மனம் நிறைந்து போகும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், எட்டு பெண்களோடு அபிராமியும் கற்பகமும் ஒரு வீட்டில் வசித்தபோது, ஒரு விஷமி அங்கிருந்த பெண்களில் ஒருவரிடம் வம்பு செய்யப் போக, பிரச்சனை வெடித்து, வீட்டின் சொந்தக்காரர் வீட்டைக் காலி செய்யச் சொன்னார்.

தங்களுக்கென்று சொந்த இடம் இருந்தால்தான் நல்லது என்று உணர்ந்த அபிராமி, அதுவரை தன் தாத்தா தந்து விட்டுப் போன பணத்தைத் தொடாது இருந்தவள், அதை எடுத்து, இந்த பழைய வீட்டை விலைக்கு வாங்கினாள்.

தான் மேலாளராக வேலை செய்த கார்மெண்ட் கம்பெனியில் இருந்து ஜாப் வொர்க் ஆர்டர்களைப் பெற்றவள், வங்கியில் கடன் வாங்கி தையல் இயந்திரங்களை வாங்கிப் போட்டு இல்லத்தில் இருந்தவர்களுக்கு வேலை கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து வேலை செய்ய வைத்தாள். அப்போது தோன்றியதுதான், சக்தி தையலகம்.

இல்லத்தில் இருக்கும் சில பெண்களுக்கு, குழந்தைகளும் உண்டு. அவர்களும் இல்லத்தில்தான் வளர்கின்றனர்.

அந்தக் குழந்தைகள் படிக்கும் பள்ளியின் விழாவுக்கு ஒரு முறை சென்றபோதுதான் குமரனைச் சந்தித்தாள். பன்னிரண்டாம் படிக்கும் அந்த பையன் எல்லா பாடத்திலும் முதல் மதிப்பெண் வாங்குகிறான் என்பது தெரிந்தது. மருத்துவப் படிப்பு படிக்கும் ஆசை இருக்கும். அந்த பிள்ளைக்கு, அதற்கான பொருளாதார வசதி

இல்லை என்று பள்ளி நிர்வாகம் அறிவித்து, வந்திருந்தவர்களிடம், அவனது படிப்புக்கு உதவி செய்யும்படி சொல்லியபோது, அபிராமிக்கு மனம் கனத்துப் போயிற்று.

இப்படி எத்தனை பிள்ளைகள் அறிவிருந்தும், படிக்கும் ஆர்வமிருந்தும், வசதி இல்லாததால் படிப்பை இழக்கிறார்கள் என்று ஒரு பத்திரிகையில் படித்தது நினைவுக்கு வந்தது. அந்த மாதிரி பிள்ளைகளுக்கு, தன்னால் இயன்ற உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது.

சக்தி தையலகத்தில் இருந்து வரும் தொகையை, சம்பளம், பராமரிப்பு செலவு போக மீதியை, இல்லத்தில் உள்ள பெண்களின் எதிர்காலத்துக்கு என்றுதான் அவர்கள் பெயரிலேயே சேர்த்து வைக்கிறாள். அதை எடுத்து வசதியற்ற பிள்ளைகளின் கல்விச் செலவுக்கு பயன்படுத்தலாம்தான் என்றாலும், புதியதாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி, உதவி செய்ய விருப்பம் இருப்பவரிடம் இருந்து பணத்தைப் பெற்று, இந்த வேலையை செய்யலாம் என்று கற்பகம்தான் யோசனை சொன்னார்.

அதன்படி, நிறைய நிறுவனங்களுக்கு பிள்ளைகளின் தேவையை எடுத்துச் சொல்லி, நிதி உதவி கோரி கடிதம் அனுப்புவதும் அவளது தினசரி வேலைகளில் முக்கியமான ஒன்றாயிற்று. அப்படிச் செய்ததில், பலனும் இருக்கத்தான் செய்தது.

அந்த பலன்களில் ஒன்றுதான், சூர்யா இண்டஸ்ட்ரீஸ் எம்.டி. இங்கே வருகை தருகிறேன் என்று சொன்னது. அவரே நேரில் வருவார் என்று அவரது காரியதரிசி சொன்னபோது, அபிராமிக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

அவரே நேரில் வருவதற்கு என்ன காரணம் இருந் தாலும், குழந்தைகளின் கல்வித் தேவைக்காக அவரிடம் இருந்து ஒரு நல்ல தொகையை, பெற்று விட வேண்டும் என்ற எண்ணமே அவளுக்கு மேலோங்கி இருந்து.

சூர்யா இண்டஸ்ட்ரீஸ் துவங்கி முப்பது ஆண்டு காலம் ஆகி இருந்தது என்றும், அதன் எம்.டி. நல்ல செயல்களைச் செய்வதில் விருப்பமுள்ளவர் என்றும் அவள் கேள்விப்பட்டிருக்கிறாள்.

முப்பது வருட தொழில் அனுபவம் பெற்றவரோடு பேசப் போவது கொஞ்சம் தயக்கத்தைக் கொடுத்திருந் தாலும், தான் ஏற்றிருக்கும் செயலின் முக்கியத்துவத்தை உணர்ந்து தன் தயக்கத்தை உதறி, திரு. சூர்யப்பிரகாசத் திடம் பேசுவதற்கு ஒத்திகை பார்த்தபடி, அவரது வரவுக் காக காத்திருந்தவள், அவர் வந்து நின்றபோது, பேச நினைத்தது எல்லாம் மறந்து போய் ஆச்சரியத்தில் வாய டைத்துப் போய் நின்றாள்.

கண்ணம்மாவின் காதல்

தன் கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள் கண்ணம்மா.

''என்ன அத்தான்? இன்னைக்கும் லேட்டாதான் வருவீங்களா? எவ்வளவு நேரம் காத்திருந்தேன் தெரி யுமா? வெளியில போலாம் என்று காலையிலேயே சொல்லி இருந்தேன்தானே? குழந்தைகள்கூட ஆசையா காத்திருந்திட்டு, கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் தூங்கினாங்க'' என்று முகத்தைத் திருப்பியபடி, திருமண நாள் அதுவுமா, தாமதமாய் வந்த தன் கணவனிடம் குறையுடன் கேள்விகளை அடுக்கினாள் அவனது கண் ணம்மா!

''மெதுவாடா! கொஞ்சம் மூச்சு விட்டுக்கோ'' என்ற கணவன், ''சீக்கிரமே கிளம்பிட்டேன்டா கண்ணம்மா, கிளம்பற நேரத்தில் ஒரு அவசர வேலை வந்திடுச்சு... அதான்'' என்று அருகில் வந்து அவளது தாடையைப் பிடித்து கொஞ்சி சமாதானப்படுத்தினான்.

அவனது வேலையின் முக்கியத்துவம் அறிந்தவள் என்பதால், மனைவியும் அதற்கு மேல் அவனை எதுவும் கேட்கவில்லை.

''குழந்தைங்க ரொம்ப எதிர்பார்த்திட்டு இருக்காங் களா?'' என்ற கணவனின் கேள்விக்கு,

''ம்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் தூங்குச் சுங்க... நான் கோபமா இருந்தேன்னு, அப்பா வேலை பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே அம்மா... இன்னொரு நாள் நாம வெளியே போனால் போச்சு... அப்படின்னு என்னை சமாதானம் செஞ்சுதுங்க... எல்லாரையும் உங்க பக்கம் சேர்த்து வைச்சிருக்கீங்க!'' என்று சிணுங்கலோடு சொன்ன மனைவியின் குரலில் குறை இல்லாமல், பெருமிதமே பொங்கி வழிந்தது.

''எல்லாரையும் என் பக்கம் சாய்ச்சு வைச்சிருந்தாலும், நான் எப்பவும் உன் பக்கம் தானே?'' என்று குழைந் தவன், ''செல்லம்மா, உனக்கு இந்தக் கல்யாண நாளுக் காக ஒரு பரிசு வாங்கி வந்திருக்கேன்!'' என்றான்.

''எனக்குதான் எப்போதோ பரிசு கிடைச்சாச்சே!'' என்றபடி, கணவனையும், தங்கள் இரட்டை குழந்தை களையும் சுட்டியவளின் விரல், எப்போதும் போலத் தன் கணவனின் கன்னக் குழியில் பதிந்தது.

''எப்படி அத்தான் உங்களுக்கு மட்டும் இவ்வளவு அழகா குழி விழுது?'' என்று ஆச்சரியமாக வினவினாள்

''ஹே... இதையே எத்தனை தடவை கேட்பாய்? என்ன பரிசு வாங்கிட்டு வந்தேன்னு கேட்கலாம் இல்லை?''

''எனக்குத்தானே வாங்கிட்டு வந்திருக்கீங்க? கேட்டால்தான் தருவீங்களா என்ன?''

''கள்ளி! என்னனு கேட்க மாட்டாயே!'' என்றபடி ஒரு முத்துமாலையை எடுத்தவன், அவளது சங்கு கழுத்தில் முத்து மாலையோடு, தன் முகத்தையும் சேர்த்து அணிவித்தான்.

''பிடிச்சிருக்கா?'' என்றவனின் கிசுகிசுப்பான குரல் மயக்கத்தைத் தர, ''ரொம்ப!'' என்று மெல்லிய குரலில் மிழற்றினாள்.

அவளது மயக்கத்தை ரசித்தவாறே, ''நான் முத்தத்தைக் கேட்கலைடா கண்ணம்மா... முத்துச் சரத்தைப் பற்றி கேட்டேன்!'' என்றான் கணவன்.

''உங்களை...!'' என்று பல்லைக் கடித்தபடி அவனது தோளில் சாய்ந்திருந்த தன் தலையை நிமிர்த்தியவள்,

''கல்யாண நாள் அதுவுமா, இப்படியா என்னை முறைக்கிறது? பரிசு தரலைன்னா கூட பரவாயில்லை, இப்படி முறைக்காதேடா... உன் அத்தானைப் பார்த்தால் உனக்கு பாவமா இல்லை?'' என்று அப்பாவி போல கேட்கவும்,

''ஹய்யோ... ரொம்பத்தான்!'' என்று உதடு சுழித்தாலும், புன்னகையுடன் தன் கணவனின் கன்னக் குழியில் தன் இதழ்களால் பரிசு கொடுக்கவும் தவறவில்லை!

''கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம்தான் கள்வெறி கொள்ளுதடி...'' என்று பாடியபடியே, அவளது அத்தான் பதில் பரிசு தர, ''ஹே... அது குழந்தைக்காக பாரதி

பாடி இருக்கார்...'' பிழை திருத்தம் செய்தவளிடம், ''நீயும் எனக்கு குழந்தைதானே கண்ணம்மா!'' என்றவன், தன் குழந்தையைச் சீராட்ட ஆரம்பித்தான்.

2

''என்னப்பா இவ்வளவு காலையிலே எங்கே கிளம்பிட்டே?'' என்று பரபரப்பாகக் கிளம்பிக் கொண்டிருந்த சூர்யாவின் பின்னால் வந்த பவானி வினவினார்.

''சக்தி இல்லம் என்று ஒரு ஹோம் அம்மா, அங்கே இருந்து நிதி உதவி கேட்டு கடிதம் வந்து இருந்தது... அதான் நேரிலேயே போய் என்ன தேவை என்று பார்க்கப் போகிறேன்... ஆபீசில் பத்து மணிக்கு ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு... அதுக்கு முன்னாடி இங்கே போய் பார்த்திடலாம் என்றுதான் கிளம்பறேன்.''

''நேற்றே சீக்கிரம் கிளம்பப் போறேன் என்று சொல்லி இருக்கக்கூடாதா? இன்னும் டிபன் வேலையே முடியலை... சரி இரு தோசையாவது ஊத்தறேன்'' என்று வேகமாக சமையல் அறைக்குச் சென்ற, அன்னையின் கையைப் பிடித்து நிறுத்தினான் சூர்யா.

''இல்லைம்மா... நேற்று நான் வந்தபோதே ரொம்ப லேட் ஆயிடுச்சு... நானே சாப்பாடு எடுத்து போட்டுக்குவேன் என்று சொன்னாலும் நீங்க கேட்காம எனக்காகக் காத்திட்டு இருந்தீங்க... காலையில் சீக்கிரம் கிளம்பணும் என்று சொன்னால், எனக்கு டிபன் தரணும் என்று

பரபரப்பா வேலை செய்ய ஆரம்பிச்சிடுவீங்கன்னுதான் சொல்லலை... அங்கே வேலை முடிச்சு ஆபீசுக்குப் போகிற வழியிலே நான் ஏதாவது சாப்பிட்டுக்கிறேன்... இவ்வளவு சீக்கிரம் வேண்டாம்'' என்று உணவை மறுத்தான்.

பிள்ளைக்கு தன் மேல் இருந்த அக்கறை பவானியின் மனதை நெகிழ்த்தியது. ''நீயே நேரில் போய்ப் பார்க்கணுமா ராஜா, வேற யாரையாவது அனுப்ப வேண்டியது தானே?''

''ப்ச்... இந்த கதிரேசன் செஞ்சு வைச்ச வேலைக்கு இனிமேல் எல்லாத்தையும் நான்தான் பார்க்கணும் போல...'' என்று எரிச்சலுடன் சூர்யா சொல்ல, விஷயம் தெரிந்து இருந்திருந்ததால் பவானிக்கும் உள்ளே எரிச்சல் மண்டியது.

முப்பது வருடங்களுக்கு முன்பு சூர்யாவின் தந்தை ராமலிங்கம், தன் தந்தை சூர்யப்பிரகாசத்தின் நினைவாக, அவன் பெயரிலேயே சூர்யா இண்டஸ்ட்ரீஸ் துவங்கினார்.

ராமலிங்கத்துக்கு எப்போதுமே சமூக சேவையில் ஈடுபாடு இருந்தது. ஆண்டுதோறும், தன் நிறுவனத்தின் லாபத்தில் ஒரு பங்கை, சமூக சேவை செய்து வரும் அமைப்புகளுக்கு நன்கொடையாக கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

குறிப்பிட்ட அமைப்பு என்றில்லாமல், நிதியை சமூக சேவை செய்து வரும் பல்வேறு அமைப்புகளுக்கு பகிர்ந்து கொடுப்பார். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை, எப்போதும் கொடுக்கும் அமைப்புகளுக்கு மட்டுமல்லாமல் நிதி உதவி கேட்டு வரும் புதிய

அமைப்புகளுக்கும், நிதி உதவி செய்து அவர்களை ஊக்குவிப்பதும் அவரது வழக்கம்.

இந்த விஷயங்களை, முதலில் நேரடியாக அதைக் கவனித்து வந்தவர், வேலைப்பளுவின் காரணமாகத் தன் பொது மேலாளர் சுந்தரேசனிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்திருந்தார். முதலாளி கொடுத்த பொறுப்பை சுந்தரேசனும், சரியாகவே செய்து வந்தார்.

அவர் இறந்து போன போது, அவர் மேல் இருந்த மதிப்பின் காரணமாக, ஐந்து வருடமாக தங்கள் நிறுவனத்திலேயே வேலை செய்து வந்த அவரது மகன் கதிரேசனுக்கு பொது மேலாளர் பொறுப்பைக் கொடுத்தார் ராமலிங்கம். கதிரேசனும் வேலையில் சமர்த்தனாகத் தான் இருந்தான். ஆனால், தந்தையிடம் இருந்த விசுவாசமும் நேர்மையும் கதிரேசனுக்கு இருக்கவில்லை.

இவ்வளவு பெரிய துறையில் இருந்து கொண்டு பிழைக்கத் தெரியாதவராக தன் தந்தை இருந்திருக்கிறார் என்பது அவனது எண்ணம். தானும் அப்படி இல்லாமல் இருக்க வேண்டும் என்று எண்ணியவன், எந்த இடத்தில் என்ன தில்லுமுல்லு செய்தால், பணம் சுருட்டலாம் என்று யோசிக்க ஆரம்பித்தான். சமூக சேவை நிறுவனங்களுக்கு நன்கொடை கொடுக்கும் விஷயம், அவனது எண்ணத்துக்கு ஒரு வரமாகப் பட்டது. ஆனால், பெரியவரிடம் நம்பிக்கையைச் சம்பாதித்துக் கொண்டே பிறகே தன் வேலையைத் தொடங்க வேண்டும் என்று எண்ணியவன், ஒரு வருடம் சாதுவாக இருந்தான்.

அந்த சமயத்தில், சூர்யா தன் தந்தையின் ஒப்புதலோடு தங்கள் தொழிலை வேற்று மாநிலங்களிலும் விரிவாக்கம் செய்ய ஆரம்பித்தான். அதற்கான

வேலைகளில் அவன் மும்முரமாக இறங்கி இருக்கும் போதுதான், எதிர்பாராத விதமாக ராமலிங்கத்தின் உயிர் ஒரு மாசிவ் ஹார்ட் அட்டாக்கில் பிரிந்தது.

நிலை குலைந்து போய் நின்ற தன் அன்னையின் அருகில் இருப்பதே அப்போதைய முக்கிய கடமையாகத் தோன்ற, சூர்யா தன் அன்னையுடனே அதிக நேரம் செலவழிக்கத் தொடங்கினான். நிறுவன பொறுப்பு முழுவதும் தன் கையில் வந்தவுடன், கதிரேசன் பணத் தாசை பிடித்த மூளை வேலை செய்ய ஆரம்பித்தது.

ராமலிங்கம் உயிரோடு இல்லாதது, சூர்யா முக்கிய பொறுப்புகளைத் தவிர மற்றவற்றைத் தன்னிடம் ஒப் படைத்திருந்தது அவனுக்கு சாதகமாக இருந்தது. சந் தேகம் வராத வகையில் பணம் சுருட்ட நினைத்தவன், பெயருக்கு கொஞ்சம் பணத்தை சமூக சேவை நிறு வனங்களுக்குக் கொடுத்து விட்டு, மீதியை பொய்யான ரசீது கொடுத்து தானே அமுக்கிக் கொண்டான்.

போன வருடம் கொடுத்த தொகையில், பத்தில் ஒரு பங்கு கூட இந்த ஆண்டு கிடைக்கவில்லை என்றானதும், சமூக சேவை நிறுவனங்கள் விசாரித்த போது, எம்.டி. இறந்து விட்டதால், அவரது மகன் பொறுப்பெடுத்துக் கொண்டதாகவும், அவர்தான் நன்கொடை தொகையைக் குறைக்கச் சொல்லியதாகவும் அவருக்கு கதிரேசனிடம் இருந்து விவரம் கிடைத்தது.

அந்த மாதிரி விசாரித்தவர்களில் ஒருவர். ஒரு இடத் தில் சூர்யாவைப் பார்த்தபோது, தனது மன வருத்தத் தைப் பகிர்ந்து கொள்ள, சூர்யாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அடுத்த நாள் அலுவலகத்துக்கு வந்தவன், எல்லா கோப்புகளையும் சரி பார்க்க, எப்போதும் கொடுக்கும் பணத்துக்கே ரசீது இருப்பதைக் கண்டு, குழப்பமுற்று விசாரிக்க, கதிரேசனின் தில்லு முல்லு அம்பலத்துக்கு வந்தது.

சுந்தரேசன் மேல் இருந்த மரியாதையில், மற்றவர் அறியாமல் கதிரேசனை சூர்யா விசாரித்தான். முதலில், தான் அப்படிச் செய்யவே இல்லை என்று சாதித்த கதி ரேசன், சூர்யா எல்லா சான்றுகளையும் காட்டியபோது, உண்மையை ஒத்துக் கொண்டு மன்னிப்பு வேண்டினான்.

அவனுக்கு ஒரு வாரம் விடுப்பு கொடுத்து அனுப்பிய சூர்யா, அலுவலகத்தின் மற்ற கணக்கு வழக்குகளையும் சரி பார்த்தபோது, கதிரேசனின் மற்ற தில்லு முல்லு வேலைகளும் தெரிய வந்தது.

முதலில் நம்பிக்கைத் துரோகம் செய்த கதிரேசனின் மேல் ஆத்திரம் வந்தாலும், ஆரம்ப கட்டத்திலேயே கண்டு பிடித்ததற்கு ஆறுதல் அடைந்த சூர்யா, கதி ரேசனை வேலையில் இருந்து நீக்கியதோடு, அன்று முதல் எல்லா விஷயங்களிலும் நேரடி கவனம் செலுத்த ஆரம்பித்தான்.

வேற்று மாநிலத்தில் தான் செய்யத் துவங்கிய விரி வாக்கத்தை நிறுத்தவும் மனம் வரவில்லை என்றாலும், புதிய வேலையும் சேர்ந்தால், அன்னையிடம் செல விடும் நேரம் குறையுமே என்ற எண்ணமே, அவனை விரி வாக்கத் தொழிலை நிறுத்தி விடலாம் என்ற முடிவுக்கு வர வைத்தது.

அவனது முடிவை அறிந்தபோது, பவானி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அந்த புதிய வேலைக்காக மகன்

போட்டிருந்த உழைப்பை அறிந்தவராயிற்றே! ''எனக்கு ஒண்ணுமில்லை சூர்யா... நான் தைரியமாதான் இருக்கேன்! இந்த வேலைக்காக நீ உழைச்சது வீணாக வேண்டாம்! நீ அந்த வேலையை பார்!'' என்று சொல்லி அவனுக்கு தைரியம் கொடுத்தது பவானிதான்.

அன்னை சொல்லிய போதும், மூன்று மாநிலங்களில் செய்யவிருந்த வேலையில், அதிக நேரம் மற்றும் உழைப்பை விழுங்கி இருந்த ஒரு மாநிலத்தில் மட்டுமே வேலையைத் தொடர்ந்தான்.

ஏற்கனவே நேரம் போகாமல் இருந்தவனுக்கு, இப்போது அதிக வேலைகள் சேர்ந்துவிட, ஒரு நாளில் 24 மணி நேரம் அவனுக்குப் போதவில்லை.

அந்த நேரத்தில், சக்தி இல்லத்தில் இருந்து நிதி கேட்டு வந்திருந்த வேண்டுகோள் அவனது கருத்தைக் கவர்ந்தது.

ஏற்கனவே செய்து வரும் சேவைக்கு அல்லாமல், வேறு விஷயத்துக்கு என்று அவர்கள் நிதி உதவி கோரி இருப்பது அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. எதுவாக இருந்தாலும், நேரில் பார்த்து விசாரித்து விட்டே உதவி செய்வது பற்றி யோசிக்கலாம் என்றுதான். இன்று அங்கே செல்ல வேண்டும் என்று முடிவு செய்திருந்தான்.

''சரிம்மா, நான் கிளம்பறேன்...'' என்று கிளம்பிய மகனை, ''ஒரு நிமிஷம்...'' என்று சொல்லி நிறுத்தினார் பவானி.

''என்னம்மா?''

''நேற்றுகூட அந்த ஜட்ஜ் சிவநாதன் வீட்டில் இருந்து போன் செஞ்சாங்க ராஜா... இன்னைக்கு சீக்கிரம்

வந்தேன்னா, போய் பெண்ணைப் பார்த்துட்டு வந்திடலாம்'' மகனின் முகத்தைப் பார்த்தவாறே நயமாகக் கூறினார் பவானி.

''ஆரம்பிச்சிட்டீங்களா? ப்ளீஸ்மா... ஆபீஸ் வேலையை கவனிக்கவே இப்போ நேரம் போதலை... இதுல கல்யாணத்தைப் பற்றி யோசிக்கக் கூட முடியாது... இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்மா!'' என்று சலிப்புடன் மகன் சொன்னதைக் காதில் வாங்காதவராக பவானி தொடர்ந்தார்.

''பொண்ணு எம்.பி.ஏ. படிச்சிருக்காளாம்... உனக்கு வேலையில் கூட உதவியா இருப்பார் என்று அவள் அப்பா சொன்னார்...'' என்று சொல்லிவிட்டு ஆவலுடன் தன் முகத்தைப் பார்த்த அன்னையின் முகம், எரிச்சலை மீறி புன்னகையை வரவழைக்க, அன்னையின் கையைப் பற்றியவன்,

''இப்போ எனக்குக் கல்யாணம் செஞ்சுக்கிற எண்ணம் தோணலைம்மா... அப்படித் தோணும்போது உங்ககிட்ட சொல்றேன்... அப்ப பொண்ணு பார்க்க ஆரம்பிங்க போதும்... இப்போ நேரம் ஆயிடுச்சு கிளம்பறேன்!'' என்று சொல்லிவிட்டு அன்னை மேலே எதுவும் பேசுமுன் கிளம்பினான்.

இதையே இரண்டு வருடமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் மகனை எண்ணிப் பெருமூச்சு விட்டபடியே தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தார் பவானி.

காரில் சென்று கொண்டிருந்த சூர்யாவின் மனதில், தன் அன்னை திருமணத்தைப் பற்றி பேசியது உலா வந்தது.

திருமணம் என்பது உள்ளம் நிறைய ஆவலுடன் எதிர்கொள்ள வேண்டிய விஷயம் இல்லையா? அதை அன்னையின் வற்புறுத்தலாக செய்து கொள்வதில் அவனுக்கு விருப்பமில்லை. இப்போதைக்கு இதை விட்டு விடலாம் என்று எண்ணியவன், தான் சொல்லப் போகும் சக்தி இல்லத்துக்கு தன் சிந்தனையைத் திருப்பினான்.

ஆதரவற்ற பெண்களுக்கு என்று ஒரு இல்லம் நடத்துவது நல்ல விஷயம்தான். அதை நடத்தும்போதே, வசதி அற்றவர்களின் படிப்புக்கு என்று ஒரு அமைப்பும் துவங்க வேண்டும் என்ற எண்ணம் வருவது பெரிய விஷயம்தான் என்று எண்ணியவன், சக்தி இல்லத்தை நடத்தி வரும் பெண்மணியிடம் கேட்க வேண்டிய விவரங்களை மனதில் வரிசைப்படுத்த ஆரம்பித்தான்.

அரை மணி நேர கார் பயணம் முடிந்து, அவன் காரை விட்டு இறங்கி சக்தி இல்லத்தின் வாயிலை நோக்கிச் சென்றவனை, ''சூர்யப்பிரகாசம் அய்யாவா... நீங்க வந்தவுடனே அபி அம்மா உள்ளே கூட்டியாரச் சொன்னாங்க'' என்று காவலாளி உள்ளே கூட்டிச் சென்றான்.

வெளியே கார் சத்தம் கேட்டதுமே, வந்தவரை வரவேற்பதற்காக தன் அறையின் வாயிலுக்கு வந்த அபிராமி, தான் எதிர்பார்த்தது போல் வயதானவராக இல்லாமல் ஒரு இளைஞன் நிற்பதைக் கண்டதும் திகைத்து நின்றாள்.

சூர்யாவின் நிலையும் அதுவே!

சக்தி இல்லம் நடத்தும் பெண்மணி ஒரு இளம் பெண்ணாக இருப்பாள் என்று அவனும் நினைக்கவில்லை.

என்னதான் வயதை உயர்த்திக் காண்பிப்பதற்காக கொண்டையும், பெரிய சட்டமிட்ட கண்ணாடியும் அணிந்திருந்தாலும், அபிராமியின் மெல்லிய உடலும், பூ முகமும் அவளது உண்மை வயதைக் காண்பிக்கவே செய்தன.

இருவரும் ஒருவரை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது ஒரு நிமிடமே! இந்த மாதிரி ஆச்சரியப் பார்வைகள் இருவருக்குமே பழகியது என்பதால், இருவரும் விரைவிலேயே சமாளித்துக் கொண்டனர்.

''வணக்கம்! வாங்க!'' என்று அபிராமி இரு கரம் குவித்து வரவேற்க, சூர்யாவும் மெல்லிய புன்னகையுடன் கூடிய பதில் வணக்கத்தோடு உள்ளே சென்றான்.

அவனை உட்காரச் சொன்னவள், ''காபி, டீ ஏதாவது குடிக்கிறீர்களா சார்?'' என்று விசாரித்தாள்.

இப்போதைக்கு எதுவும் வேண்டாம் என்று சொன்னவன், விவரங்களைக் கேட்க ஆரம்பிக்க, அபிராமியும் தங்கள் இல்லத்தைப் பற்றி விளக்கிச் சொல்லியதோடு, படிப்புக்கு உதவி தேவைப்படும், மாணவர்களின் விவரங்கள் அடங்கிய கோப்பை அவன் பார்வைக்கு கொடுத்தாள்.

நிதி தேவைப்படும் மாணவர்களுடைய கல்வித் திறமை, தனிப்பட்ட ஒழுக்கம் பற்றிய விவரம், அவர்களது குடும்ப சூழ்நிலை, பொருளாதார நிலை, அவர்களுடைய கனவு படிப்பு, அவர்கள் படித்து முன்னேறினால் அவர்களால் குடும்பத்தில் ஏற்படப் போகும் மாற்றம் என்று ஒவ்வொரு மாணவரைப் பற்றிய முழு விவரங்களும், அபிராமி கொடுத்த கோப்புகளில் அழகாகத் தொகுக்கப்பட்டிருந்தது.

அந்த விவரங்களைப் படித்தவன், ''வாவ்! இவ்வளவு விவரம் சேகரிச்சு வைச்சிருக்கீங்களே மேடம்... எப்படி முடிஞ்சது?'' என்று ஆச்சரியத்துடன் விசாரித்தான்.

''உதவி செய்யறது உண்மையிலேயே அது தேவைப் படுகிறவர்களுக்கு போய்ச் சேர வேண்டும் என்பதில் நாங்க ரொம்ப கவனமா இருக்கோம் சார்... அதுக்கு இந்த விவரங்கள் தேவைப்பட்டது. அதனால்தான் சிரமம் பார்க் காமல் சேகரிச்சோம்'' என்று அபிராமி புன்னகையுடன் சொல்ல, நிதி உதவி செய்ய சரியான இடத்தைத்தான் தேர்ந்தெடுத்து இருக்கிறோம் என்று சூர்யாவுக்குத் தோன்றியது.

''எங்க நிறுவனத்தில் இருந்து, புதிசா சமூக சேவை நிறுவனம் தொடங்கறவங்களுக்கு ஊக்கம் கொடுக்கிற மாதிரி நிதி கொடுக்கிறது வழக்கம்! ஆனால் உங்கள் திட்டத்தை எல்லாம் பார்த்த பிறகு, தொடர்ந்து இந்தக் கல்வி அமைப்புக்கான நிதியைத் தரலாம் என்று முடிவு செஞ்சிருக்கேன்... முதல் கட்டமா எவ்வளவு தேவைப் படும் என்று கணக்கு பார்த்து சொல்லுங்க!'' என்று சூர்யா சொல்லி முடித்ததும் அபிராமி,

''நன்றி சார்... ரொம்ப நன்றி... ரொம்ப ரொம்ப நன்றி!'' என்று தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

''நீங்க ஏன் மேடம் எனக்கு நன்றி சொல்றீங்க? நான் தான் புண்ணியம் சேர வாய்ப்பு கொடுத்ததுக்கு உங் களுக்கு நன்றி சொல்லணும்!'' என்று புன்னகையுடன் சூர்யா சொல்ல, ஆச்சரியத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்த அபிராமி, அவள் நிதி கேட்டு அனுப்பிய கடிதத்தை அவன் மேஜையில் வைக்கவும், விஷயம் புரிந்து தானும் புன்னகைத்தாள்.

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்

ஆலயம் பதினாயிரம் நட்டல்

அன்ன யாவினும் புண்ணியங்கோடி

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்!''

என்று பாரதியின் வரிகளைக் கொண்டுதான், அந்தக் கடிதத்தை அவள் ஆரம்பித்திருந்தாள்.

''மேலே உங்கள் கார்மெண்ட்ஸ் நடக்குதுன்னு சொன் னீங்க இல்லை?'' என்றவனிடம், உங்களுக்கு டைம் இருந்தா இப்போ பார்க்கலாம் சார், ஒன்பது மணிக்கு வேலை ஆரம்பிச்சிடும்!'' என்று அபிராமி சொல்ல,

''இல்லை... இன்னைக்கு வேண்டாம்... முக்கியமான மீட்டிங் இருக்கு... இன்னொரு நாளைக்கு வந்து கண் டிப்பா பார்க்கிறேன்!'' என்று எழுந்து சென்றவன்,

''பண விவரம் உங்க செக்ரட்டரி கிட்ட சொல்லட் டுமா சார்?'' என்ற அபிராமியின் குரலில் திரும்பினான். ''எனக்கே நேரடியா போன் செய்ங்க...'' என்று சொல்லி தன் கைப்பேசி எண்ணைக் கொடுத்தவன், அபிராமியின் கைப்பேசி எண்ணையும் வாங்கிக் கொண்டான்.

''எந்த நேரம் போன் செய்யலாம் என்று சொல்லிட் டீங்கன்னா, பிஸியான நேரத்தில் உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன்!'' என்று அபிராமி சொன்னவுடன்,

மற்றவரின் சௌகரியம் பார்க்கும் அவளது குணத்தை உள்ளுக்குள் மெச்சியவாறே, ''மத்தியான நேரத்தில் கூப்பிடுங்களேன்!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி யவன், அறை வாயிலுக்கு வந்ததும் கொஞ்சம் தயங்கி நின்றான்.

வழி அனுப்பும் முகமாக அவன் கூடவே வந்த அபிராமி, அவன் தயங்கி நின்றதும், ''என்ன சார்?'' என்று வினவ,

''நான் வந்தபோது கொஞ்சம் ஆச்சரியமா பார்த்தீங் களே! ஏன் என்று தெரிஞ்சிக்கலாமா?'' என்ற சூர்யாவின் கேள்விக்குத் தான் சொல்லும் பதிலை அவன் எப்படி எடுத்துக் கொள்வானோ என்று அபிராமி தயங்கினாள்.

ஆனால், அவன் பதிலுக்கு காத்திருப்பதை உணர்ந்த தும், ''இல்லை... சூர்யா இண்டஸ்ட்ரீஸ் எம்.டி. முப்பது வருஷமா தொழில் செஞ்சுகிட்டு இருக்கார் என்று கேள்விப்பட்டிருக்கேன்... இரண்டு வருஷத்துக்கு முன்னாடி ஒரு விழாவில கூட அவரைப் பார்த்திருக் கேன்... அதான் உங்களைப் பார்த்தவுடன் கொஞ்சம் ஆச்சரியமா இருந்தது'' என்று மெல்லிய குரலில் அவள் சொல்லி முடிக்க,

''நீங்க கேள்விப்பட்டது, பார்த்தது எல்லாமே சரிதான்... போன வருஷம் வரை என் அப்பாதான் எம்.டி. ஹி இஸ் நோ மோர் நவ்!'' என்று சூர்யா சொல்லும்போதே ''சாரி!'' என்றாள் அபிராமி.

ஒரு தலை அசைப்புடன், ''நீங்க என் அப்பாவை எதிர்பார்த்து, நான் வந்ததைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்ட தற்கு சாரி சொன்னீங்கன்னா, நானும் சாரி சொல்ல வேண்டி இருக்கும்... ஏன்னா நானும் இந்த மாதிரி ஒரு இல்லம் நடத்தறவங்க, குறைந்தது நடுத்தர வயது பெண்மணியாக இருப்பாங்க என்று நினைச்சிருந்தேன்!'' என்று புன்னகையுடன் சொல்ல, அபிராமிக்கும் மெல் லிய புன்னகை மலர்ந்தது.

''ஓகே மேடம்! உங்களைச் சந்திச்சதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்... நான் கிளம்பறேன்!'' என்று சொல்லி விட்டு அவன் செல்ல, 'ரொம்ப நல்ல மனிதர்!' என்று மனதுக்குள் நினைத்தபடி அபிராமி தன் வேலையைப் பார்க்கச் சென்றாள்.

கண்ணம்மாவின் காதல்

தங்கள் தந்தை வந்ததும், ''ஹய்யா! அப்பா வந் தாச்சு!'' என்று துள்ளி குதித்தபடியே ஓடி வந்த குழந் தைகள் இருவரையும், தன் கைகளில் ஏந்தியபடி இருந்த கணவனைப் பார்த்து சந்தோஷத்துடன் முறுவலித்தபடி அருகில் வந்தாள் கண்ணம்மா!

''என் செல்லங்களுக்கு என்ன வாங்கிட்டு வந்திருக் கேன் என்று சொல்லுங்க பார்ப்போம்?'' என்ற தந்தை யின் கேள்விக்கு, ''டாய்!'', ''சாக்கி!'' என்று போட்டி போட்டுக் கொண்டு பதில் வந்தது குழந்தைகளிடம் இருந்து!

''ம்ஹூம்! என் செல்லங்களுக்கு ரொம்பப் பிடிச்ச ஐஸ் க்ரீம்!'' என்று தந்தை சொன்னதும்,

''ஹய்யா! எனக்கு பிஸ்தா பிளேவர்தானே வாங்கிட்டு வந்திங்கப்பா?'' என்று தன் சின்ன விரலை நீட்டி கேட்ட, தன் இளவரசியின் எழிலில் மயங்கியபடி,

''ஆமாண்டா ராஜாத்தி!'' என்று மொழிந்த தந்தை யின் முகத்தைத் தன் புறம் திருப்பிய மைந்தன், ''எனக்கு ஸ்ட்ரா பெர்ரி தானேப்பா?'' என்று உறுதி செய்து கொள்ள முயன்றான்.

''ஆமாண்டா ராஜா!'' என்ற தந்தையின் பதிலில் சந்தோஷமடைந்த குழந்தைகள், தந்தையிடம் இருந்து

இறங்கி, மேஜை மேல் தங்களுக்கென்று தந்தை வைத்திருந்த ஐஸ்க்ரீமை எடுத்து சுவைக்க ஆரம்பித்தனர்.

''எனக்கு வாங்கிட்டு வரலையா?'' குறையுடன் கேட்ட மனைவியிடம், ''குழந்தைகளுக்கு மட்டும்தான் வாங்கிட்டு வந்தேன்!'' என்றான்.

''ஓஹோ! நீயும் என் குழந்தைதானேன்னு அப்பப்போ சொல்றதெல்லாம் சும்மாவா?'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டவள், குழந்தைகள் உறங்கிய பின்னும் அவனுடன் ஒன்றும் பேசவில்லை. அருகில் படுத்து அவன், அவள் மேல் கை போட்டபோது தட்டி விட்டு தள்ளிப் படுத்துக் கொண்டாள்.

அவன் திரும்பவும் கை போட்டால், சண்டை பிடிக்க வேண்டும் என்று அவள் காத்திருக்க, அவனோ அதற்கான வாய்ப்பை அவளுக்கு தராமல் படுக்கையில் இருந்து எழுந்து சென்றான். ஏமாற்றத்துடன் திரும்பியவளின் முகம், கொஞ்ச நேரத்தில் அவன் கையில் ஏந்தி வந்த தட்டைப் பார்த்ததும் மலர்ந்தது.

வேகமாக எழுந்து கணவனின் அருகே சென்று, ''வாங்கிட்டு வந்திருக்கீங்களா? அப்பவே சொல்லி இருக்கலாம் இல்லை?'' என்று சொல்லியபடியே தட்டை வாங்கிக் கொண்டு அமர்ந்தவள்,

அவன் வாங்கி வந்திருந்த சாக்லேட் ஐஸ்க்ரீமில் பாதியையும், பிஸ்தா ஐஸ்க்ரீமில் பாதியையும் எடுத்து இன்னொரு கிண்ணத்தில் கலந்து வைத்துக் கொண்டு, ''ம்ம்ம்...'' என்று ரசித்தபடி சுவைக்க ஆரம்பித்தாள்.

''அதென்ன டேஸ்டோ? பிஸ்தாவையும் சாக்லேட்டையும் மிக்ஸ் செஞ்சு சாப்பிடறது!'' என்று கேலியாகச்

சொன்னாலும், ஐஸ்க்ரீமை ரசித்து உண்ணும் தன் கண்ணம்மாவை ரசித்துக் கொண்டிருந்தான் கணவன்.

''ரொம்ப நல்லா இருக்கும் அத்தான்! நீங்க வேணா சாப்பிட்டு பாருங்களேன்!'' என்று அவள் ஒரு ஸ்பூன் ஐஸ்க்ரீமை எடுத்து நீட்ட,

கணவனின் பார்வையோ ''அமுதூற்றினை ஒத்த இதழ்களும்...'' என்ற வரிக்கு இலக்கணமாய் இருந்த தன் மனைவியின் இதழ்களில் படிந்தது.

''எடுத்துக்கோங்க அத்தான்!'' என்று மனைவி மீண்டும் சொல்ல, ''ம்ம்...'' என்றபடியே அவன் அவளை நோக்கி குனிந்தான்.

''ஹே! என்ன செய்யறீங்க!'' என்று தலையை பின்னுக்கு நகர்த்தியபடி அவள் வினவ, ''உன் உதட்டில கொஞ்சம் ஐஸ்க்ரீம் இருக்கு பாரு, அதை துடைக்கத்தான்...'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், அவசரமாக தன்னுடைய விரலால், உதட்டில் இருந்த ஐஸ்க்ரீமை துடைத்தாள் அவள்.

''நான்தான் எடுக்க வந்தேனே, அதுக்குள்ளே என்னடி அவசரம்?'' என்று அவன் அதட்ட, உள்ளுக்குள் சிரித்தபடி, ''நீங்க எப்படி எடுப்பீங்கன்னு எனக்குத் தெரியாதாக்கும்!'' என்றாள் அவள்.

மனைவி தன்னை அறிந்து கொண்டாள் என்பதை உணர்ந்து, குறும்புப் புன்னகையுடன், ''எப்படி எடுத்திருப்பேன்? நீதான் சொல்லேன்!'' என்று அவன் அவளை வம்பிழுக்க,

''ஆமாமாம்! உங்களுக்கு ஒண்ணுமே தெரியாது!'' என்று உதட்டைச் சுழித்தவள்,

''அச்சோ! அப்பவே எடுத்துக்கச் சொன்னேன் இல்லை... பாருங்க... இப்போ உருகியே போயிடுச்சு!'' என்று தண்ணீராய் உருகி இருந்த ஐஸ்க்ரீமைப் பார்த்துச் சொல்ல,

அவளைப் பற்றித் தன்னருகே இழுத்தவன், ''இப்போ எடுத்துகிட்டா போச்சு!'' என்றபடி குனிந்து அவளது இதழ் என்னும் அமுதத்தை சுவைக்க ஆரம்பித்தான்.

3

சூர்யா சொன்னபடி, உதவி கேட்டு வந்திருந்த பிள்ளைகளின் படிப்புக்கு முதல் கட்டமாக எவ்வளவு தொகை தேவைப்படும் என்று தான் சேகரித்த விவரங்களின் அடிப்படையில் கணக்கு பார்த்துக் கொண்டிருந்த அபிராமி, கதவு தட்டும் ஒலி கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். முத்து நின்று கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததும் காலையில் சுந்தரி சொன்னது நினைவுக்கு வர, ''வாங்க முத்து... உள்ளே வாங்க!'' என்று அழைத்தாள்.

உள்ளே வந்தவனிடம், ''உட்காருங்க முத்து...'' என்று அவன் தயங்கியும் விடாமல் அமர வைத்தாள்.

''உங்களை எனக்கு மூணு வருஷமா தெரியும்... வரும்போது நீங்க உண்டு உங்க வேலை உண்டு என்று இருப்பீங்க... இப்போ கொஞ்ச நாளா வித்தியாசமா நடந்துக்கறதா பேச்சு இருக்கு...'' என்று அபிராமி, சித்ராவின்

பெயரைச் சொல்லாமல் சொல்ல, அதுவரை கொஞ்சம் தயக்கத்துடன் அமர்ந்திருந்த முத்து நிமிர்ந்து அமர்ந்தான்.

''நான் சித்ராகிட்ட பேச முயற்சி செய்யறதைப் பற்றி தானே மேடம் சொல்றீங்க?'' என்ற முத்துவின் கேள்வியால், அபிராமி திகைத்துப் போனாள். தான் அவனிடம் மறைமுகமாகச் சொல்லி எச்சரிக்கலாம் என்று நினைத்தால், இவன் நேரடியாக விஷயத்துக்கு வருகிறானே என்று ஆச்சரியமாக இருந்த போதும், இதுவும் நல்லதுக்குத்தான் என்று எண்ணியவளாக,

''ஆமா முத்து... அதைத்தான் சொல்றேன்... வேலை விஷயமா பேசறதுன்னு நீங்க சுந்தரி அக்கா கிட்டே பேசலாமே... எதுக்கு சித்ராவை தொந்தரவு செய்யணும்?'' என்றவளின் குரலில் கொஞ்சம் கண்டிப்பு தெரிந்தது.

''வேலை விஷயமா பேசலை மேடம்... சொந்த விஷயமாத்தான் பேச நினைச்சேன்!'' என்று முத்து தைரியமாகச் சொல்ல, அபிராமிக்கு எரிச்சல் வந்தது.

''அவள் கிட்ட பேசறதுக்கு, என்ன சொந்த விஷயம் இருக்கு?'' எரிச்சலை மறைக்காத குரலில் அபிராமி கேட்க, ''என்னைக் கல்யாணம் செஞ்சுக்கிறதைப் பற்றி மேடம்!'' என்று முத்து சொன்ன பதிலில், அபிராமி அதிர்ந்து போனாள்.

''என்ன? என்ன சொன்னீங்க?''

''ஆமா மேடம்! நான் சித்ராவைக் கல்யாணம் செஞ்சுக்க ஆசைப் படறேன்... அதான், அவளோட விருப்பத்தையும் தெரிஞ்சுக்கறதுக்காக அவள் கூட பேச நினைச்சேன்!'' என்று தெளிவான குரலில் முத்து சொல்ல,

அபிராமிக்கு கொஞ்சம் நேரம் என்ன சொல்றது என்று புரியவில்லை.

நிமிர்ந்து அமர்ந்தவள், முத்துவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். அவன் முகம் தெளிவாக இருந்தது. அருகில் இருந்த தண்ணீரை எடுத்து ஒரு மிடறு குடித்து விட்டு, ''உங்களுக்கு... உங்களுக்கு சித்ராவைப் பற்றி எல்லா விவரமும் தெரியுமா?'' என்று அபிராமியின் கேள்விக்கு, ''தெரியும் மேடம்!'' என்று முத்துவிடம் இருந்து பதில் வந்தது.

அபிராமிக்கு ஆச்சரியம் கூடிப் போனது.

அவள் ஆச்சரியத்துடன் முத்துவைப் பார்த்திருக்க, முத்து பேசினான்.

''கல்யாணம் ஆகி மூணு மாசத்திலேயே கணவனைப் பறி கொடுத்திருக்கா! ஆனால், அவள் சின்ன பொண்ணு தானே மேடம்? இன்னொரு வாழ்க்கையை அமைச்சிக் கிறதில என்ன தப்பு இருக்கு? நீங்களே சொல்லுங்க மேடம்!'' என்று முத்து சொல்ல, ஆச்சரியம் நீங்கி, மரியாதையுடன் அவனைப் பார்த்தாள் அபிராமி.

''இருந்தாலும் சொல்ல வேண்டியதை சொல்லி, கேட்க வேண்டியதைக் கேட்டு விட வேண்டும் என்ற எண்ணத்தில், ''உங்க முடிவு உறுதியானதா முத்து? ஏன் கேட்கிறேன்னா, சித்ராவின் மனசுல ஆசையைக் கிளறி விட்டுட்டு நீங்க அப்புறம் மாறிடக் கூடாது!'' என்று அபிராமி சொன்னதும்,

''என் முடிவு உறுதியானது மேடம்... சித்ராவை ரெண்டு வருஷமா பார்த்துட்டு இருக்கேன்... எங்க அம்மா கல்யாண விஷயமா ஆறு மாசத்துக்கு முன்னாடி

பேச ஆரம்பிச்சப்போ, எனக்கு சித்ரா முகம்தான் மேடம் நினைவுக்கு வந்தது... எனக்கே அது ஆச்சரியமாதான் இருந்தது. ஆனால் நாளுக்கு நாள் கல்யாணம் செஞ்சு கிட்டா அவளைத்தான் செஞ்சுக்கணும் என்ற எண்ணம் உறுதி ஆயிட்டேதான் இருக்கு... என் முடிவுல மாற்றம் இருக்காது என்ற எண்ணம் வந்த பின்னாடிதான், அவள் கூட பேச முயற்சி செய்யறேன்... என் அம்மா கிட்டக்கூட பேசிட்டேன் மேடம்...

''அவங்களுக்கும் சம்மதம்தான்... என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும் மேடம்! பெரிசா சொத்து பத்து இல்லைன்னாலும், எங்களுக்குன்னு ஒரு வீடு இருக்கு... அவளை நல்ல படியா வைச்சுக் காப்பாத்துற அளவுக்கு வருமானம் இருக்கு... எங்கம்மாவும் அவளை தன் பொண்ணா பார்த்துப்பாங்க மேடம்... அவங்களும் சின்ன வயசிலேயே கணவனை இழந்தவங்க... அதனால சித்ராவோட மனசு அவங்களுக்கும் புரியும் மேடம்... இப்போ நீங்கதான் எனக்கு ஹெல்ப் செய்யணும் மேடம்...'' என்று தெளிவாக, உறுதியாக முத்து சொல்லி முடிக்க, அபிராமியின் மனம் நெகிழ்ந்தது.

அபிராமி, ''எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு முத்து... ஆனாலும் சித்ராகிட்ட பேசிட்டுதான் முடிவு எடுக்க முடியும்... நான் இன்னைக்கே சித்ரா கிட்ட பேச றேன்...'' என்றதும், ''ரொம்ப தேங்க்ஸ் மேடம்... அப்போ நான் கிளம்பட்டா?'' என்று சொல்லி விட்டு முத்து கிளம்ப,

''முத்து... நான் சித்ரா கிட்ட பேசிட்டு சொல்ற வரை நீங்க அவள் கிட்ட எதுவும் பேசாதீங்க...'' என்று அபிராமி சொல்ல, ''சரி மேடம்... நான் ஒண்ணு சொல்லட்டுமா மேடம்?'' என்றவன், அபிராமி தலை அசைக்கவும்,

''சித்ராவுக்கும் என்னைப் பிடிக்கும் மேடம்... அது எனக்குத் தெரியும்... ஆனால், கல்யாணத்தில கண்டிப்பா தயக்கம் இருக்கும்... அதை நீங்கதான் சரி செய்யணும்...'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

சித்ராவுக்கு இப்படி ஒரு வாழ்க்கை அமைந்தால், எல்லாருக்குமே சந்தோஷமாக இருக்கும் என்று எண்ணிய அபிராமிக்கு, சித்ரா இங்கே வந்தபோது இருந்த நிலை நினைவுக்கு வந்தது.

திருமணம் முடிந்து மூன்று மாதத்தில், கணவன் ஒரு விபத்தில் இறந்து விட, 'கணவனை முழுங்கியவள்' என்ற பட்டத்தோடு புகுந்த வீட்டினரிடம் இருந்து துரத்தப் பட்டவளுக்கு, அடைக்கலம் புக பிறந்த வீடும் இருக்க வில்லை. பைத்தியம் போல மார்க்கெட்டில் திரிந்து கொண்டிருந்தவளை சுந்தரிதான் இங்கே அழைத்து வந்தாள்.

இல்லத்துக்கு வந்த புதிதில் 'நான் அதிர்ஷ்டம் இல் லாதவள்...' என்று தனக்குள் புலம்பிக் கொண்டிருந்த வளை, இல்லத்தில் இருந்த மற்ற பெண்களின் உதவி யோடு இயல்பு நிலைக்குக் கொண்டுவர அபிராமி ரொம்பவே சிரமப்பட வேண்டி இருந்தது.

இந்த ஒரு வருடமாக இயல்பாக இருந்தாலும், அவள் அதிகமாகப் பேசுவதில்லை. சித்ராவிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும் என்று எண்ணிக் கொண்டே, மாடிக்கு வந்த அபிராமி, அனைவரும் உணவு அருந்திக் கொண் டிருப்பதைக் கண்டு, 'உணவு நேரம் ஆகிவிட்டதா? அம்மா காத்திருப்பார்களே!' என்று எண்ணிய நேரம், கைப்பேசி அழைத்தது.

கற்பகம் எதுவும் கேட்கும் முன்னரே, ''இதோ வந்துட் டேன்மா... ஐந்து நிமிஷத்தில் வீட்டில இருப்பேன்!'' என்றபடி அழைப்பைத் துண்டித்தாள்.

இவளைப் பார்த்ததும், முத்து விஷயம் என்னவென்று கேட்க வந்த சுந்தரியிடம், ''நல்ல விஷயம்தான்க்கா அப்புறமா சொல்றேன்... நான் வீட்டுக்குப் போயிட்டு வந்துடறேன்... மூணு மணிக்கு சித்ராவை கொஞ்சம் கீழே வரச்சொல்லுங்க!'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குக் கிளம்பினாள்.

''என்னடா? சாப்பாட்டுக்குக் கூட போன் செஞ்சு சொல்லணுமா... நேரத்துக்கு சாப்பிடக் கூடாதா?'' என்று அக்கறையுடன் கடிந்தபடி உணவை எடுத்து வைத்த கற்பகத்திடம்,

''கொஞ்சம் வேலை இருந்ததும்மா... இன்னைக்கு காலையில சூர்யா இண்டஸ்ட்ரீஸ் எம்.டி. வந்திருந்தார் இல்லை... அவர் பிள்ளைங்க படிப்புக்கு நிதி கொடுக்க ஒத்துக்கிட்டாரும்மா... தொடர்ந்து அதுக்கு உதவி செய்வ தாகவும் சொல்லி இருக்கார்... ரொம்ப நல்ல மனுஷம்மா...'' என்று சந்தோஷத்துடன் பகிர்ந்து கொண்டவள், சித்ரா வின் விஷயத்தையும் சொல்ல, கற்பகம் மிகவும் சந் தோஷப்பட்டார்.

இருவரும் உணவருந்திய பின், வழக்கம் போல கற் பகத்துடன் அபிராமி பேசிக் கொண்டிருக்க, கற்பகத்தின் முகத்தில் யோசனையின் நிழல் தெரிந்தது.

''என்னம்மா? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? மூட்டு வலி ஜாஸ்தியா இருக்கா என்ன?'' கவலையுடன் அபி ராமி விசாரிக்க,

''அதெல்லாம் இல்லை ராஜாத்தி... சித்ரா விஷயம் சொன்னியே... அதைக் கேட்கும் போது எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா... அதே மாதிரி நீயும் உன் வாழ்க்கையைப் பற்றி நல்ல முடிவு எடுத்தால் நான் நிம்மதியா இருப்பேன்'' என்று வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சொல்லும் விஷயத்தையே கற்பகம் இப்போதும் சொல்ல, அபிராமியின் முகம் மாறியது.

''ப்ளீஸ்மா... அதைப் பற்றி எதுவும் பேசாதீங்க என்று எத்தனை முறை சொல்றது? வேற என்ன வேணா சொல் லுங்க... கேட்கிறேன்... இது மட்டும் வேண்டாமே!'' என்று கெஞ்சலாகச் சொன்னாலும், அதில் இருந்த அழுத் தத்தை கற்பகத்தால் உணர முடிந்தது.

''அதையேதான் நானும் சொல்றேன்... இதை மட்டும் கேளு... வேற எதையும் கேட்க வேண்டாம்!'' கிடைத்த வாய்ப்பை விடக்கூடாது என்று அவரும் அழுத்தமாகச் சொல்ல ஆரம்பிக்கையில், அபிராமியின் கைப்பேசி சிணுங்கியது.

கைப்பேசியின் திரையில், 'சூர்யா பிரகாசம்!' என்று ஒளிர்ந்ததைப் பார்த்து ஆச்சரியத்துடன் போனை எடுத்த அபிராமி, ''ஹலோ!'' என்றவுடன், ''நான் சூர்யா பேச றேன்... கணக்குப் பார்த்துட்டீங்களா? எவ்வளவு தொகை தேவைப்படும் என்று சொல்ல முடியுமா?'' என்ற சூர்யா வின் கேள்விக்கு தயக்கத்துடன்,

''இல்லை சார்... பார்த்துட்டு இருக்கேன்... சரியா சொல்லணும் என்றுதான் நேரம் எடுக்குது... இன்னைக்கு ஈவ்னிங் சொல்லிடறேன்... உங்களுக்கு ஈவ்னிங் போன் செய்யலாம்தானே?'' என்று விசாரித்தாள்.

''இல்லை... அவசரமில்லை... நாளைக்கே சொல் லுங்க!'' என்றபடி போனை வைத்தான் அவன்.

''அம்மா... நான் போகணும். வேலை இருக்கு'' என்று சொல்லிவிட்டு அபிராமி கிளம்ப, ''இப்படி பாதியிலேயே பேச்சை விட்டுட்டுப் போனா எப்படி அபி?'' என்று ஆற்றாமையுடன் கேட்ட கற்பகத்திடம்,

''என்னோட பதில் என்னன்னு உங்களுக்கே தெரி யும்மா!'' என்று சொன்னவள், அவரின் முகம் வாடுவதை பார்க்க முடியாமல் அவசரமாகக் கிளம்பினாள்.

அபிராமியிடம் பேசி விட்டு, போனையே பார்த்தபடி அமர்ந்திருந்தான் சூர்யா.

அவளே போன் செய்வதாகச் சொல்லி இருந்தும், தான் ஏன் அவளுக்கு போன் செய்தோம் என்று அவனுக்குப் புரியவில்லை. இந்த ஒரு வருடமாக, ஒரு நிமிடம் இடை வெளி கிடைத்தாலும், மனம் அடுத்து செய்ய வேண்டிய வேலையைப் பற்றி யோசிக்க ஆரம்பித்து விடும்.

ஆனால் இன்று... அபிராமிக்கு போன் செய்யலாமா வேண்டாமா என்று குழப்பத்திலேயே பத்து நிமிடங் களைக் கடத்தி இருந்தான்.

பேசி விட்டால் இந்தக் குழப்பம் நீங்கி விடும் என்று எண்ணித்தான் பேசினான். ஆனால், பேசி முடித்த பிறகும், வேலையில் மனம் செல்லவில்லை.

அபிராமியின் அழகும் கம்பீரமும் நிறைந்த முகம் மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது. இருக்கும் அழகை மேலும் உயர்த்திக் காட்டிக் கொள்ள விரும்பும் காலத்தில், அவள் தனது வயதைக் கூட்டிக் காண்பிப்ப தற்காக போட்டிருந்த கொண்டையும், அந்த கண்ணாடியும்,

அவளது கம்பீரத்தை மேலும் அதிகமாக்கி இருந்ததாகவே அவனுக்குத் தோன்றியது.

இந்த வயதில் இப்படி ஒரு இல்லம் நடத்துவதென்றால், அதற்கு எவ்வளவு நல்ல மனமும், மன உறுதியும் வேண்டும்? இந்த மாதிரி ஒரு பெண்ணை மணந்து கொள்ளப் போகிறவன், அதிர்ஷ்டக்காரன்தான் என்று எண்ணியவன், தனது எண்ணம் போகும் போக்கைப் பார்த்து திகைத்தான்.

வேலை நேரத்தில், வேலையை விட்டு விட்டு, இன்று தான் சந்தித்த பெண்ணைப் பற்றி இவ்வளவு நேரம் யோசித்துக் கொண்டிருப்பது தான்தானா என்ற சந்தேகம் வந்துவிட, 'வித்தியாசமான பெண்ணாக இருக்கவே, இப்படி அவளைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறோம் போலிருக்கிறது!' என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லியபடி, வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.

இல்லத்துக்கு வந்து, தன் வேலையைப் பார்க்கத் துவங்கிய அபிராமிக்கு, கதவைத் தட்டி விட்டு நின்ற சித்ராவைப் பார்த்ததும், காலையில் முத்து பேசியது நினைவுக்கு வந்தது.

''வா சித்ரா... உள்ளே வா...'' என்று அழைத்து அவளை அமரச் சொல்லிவிட்டு, சித்ராவைப் பார்த்த அபிராமிக்கு, சித்ரா கொஞ்சம் டென்ஷனாக இருப்பதாகத் தோன்றியது.

''என்ன சித்ரா? இந்த முத்து உன்கிட்ட தேவை இல்லாமல் வம்பு செய்யப் பார்க்கிறாராமே?'' என்ற அபிராமியின் கேள்வியில், அதிர்ந்து போன சித்ரா, ''அது... அப்படி எல்லாம் எதுவும் இல்லைக்கா!'' என்று அவசரமாகச் சொன்னதை அபிராமி மனதில் குறித்துக் கொண்டாள்.

''இல்லையே... அப்படித்தான் சுந்தரி அக்கா சொன்னாங்க...'' என்ற அபிராமி.

''முத்து வேலை செய்யற கம்பெனியில் சொல்லப் போறேன்... அவர் இப்படி எல்லாம் நடத்துகிறார் என்று... அவங்க ஏதாவது ஆக்ஷன் எடுத்தால்தான் சரி வரும் போல!'' என்று எரிச்சலுடன் சொன்னதும்,

''அதெல்லாம் வேணாம் அக்கா... அவர் எதுவும் வம்பு செய்யலை... அவர் ரொம்ப நல்லவர் அக்கா!'' என்று அவசரமாக சொன்ன சித்ராவின் கண்களில் கெஞ்சுதலைக் கண்டபோது, 'சித்ராவுக்கு என்னைப் பிடிக்கும் மேடம்!' என்று முத்து சொன்னது, அபிராமியின் காதில் எதிரொலித்தது.

மெல்லிய புன்னகையுடன, ''ரொம்ப நல்லவர்தான் இல்லை? அந்த ரொம்ப நல்லவர் உன்னை கல்யாணம் செஞ்சுக்க ஆசைப்படறார்... நீ என்ன சொல்றே?'' என்று நேரடியாக அபிராமி கேட்டு விட, அந்தக் கேள்விக்கு எதிரொலியாக, சித்ராவின் முகத்தில் அதிர்ச்சியை எதிர்பார்த்த அபிராமிக்கு, அவளது கண்ணீர் ஆச்சரியமூட்டியது.

''சித்ரா! என்ன ஆச்சு? ஏன் அழறே?'' என்று அபிராமி அக்கறையுடன் விசாரிக்க ''வேணாம்க்கா... அவரை வேற யாரையாவது கல்யாணம் செஞ்சுகிட்டு சந்தோஷமா இருக்கச் சொல்லுங்க. எனக்கு இந்தக் கல்யாணம் எல்லாம் வேண்டாம்... நான் இங்கேயே இப்படியே இருந்திடறேன்...'' என்று உறுதியாகச் சொல்ல முயன்றாலும், சித்ராவின் குரல் கண்ணீரில் தத்தளித்தது.

''சித்ரா முதல்ல நீ அழறதை நிறுத்து...'' என்று கொஞ்சம் அதட்டலாக அபிராமி சொன்னதும், சித்ரா உதட்டைக் கடித்து அழுகையை நிறுத்த முயன்றாள்.

அவளது அருகில் வந்த அபிராமி அவளது தோளை ஆதரவாகப் பற்றி, ''சித்ரா... இங்கே என்னைப் பாரு... உனக்கு முத்துவைப் பிடிக்கலையா?'' என்று மென்மை யாக விசாரித்தாள்.

''பிடிக்குது... பிடிக்கலை என்று இல்லைக்கா... என் னால யாரோட வாழ்க்கையும் பாழாக வேண்டாம் என்று தான் சொல்றேன்!'' கொஞ்சம் சமாளித்துக் கொண்ட சித்ரா மெல்லிய குரலில் என்றாலும், உறுதியாகச் சொல்ல, அபிராமிக்கு ஒன்றும் புரியவில்லை.

அவளை மெல்ல எழுப்பி, அறையில் இருந்த சோபா வில் அமர்த்தியவள், தானும் அருகில் அமர்ந்து ''என்ன சொல்றே சித்ரா?'' என்று விசாரித்தாள்.

''என்னோட முதல் கல்யாணத்தைப் பற்றி உங்களுக்கே தெரியும் இல்லைக்கா? என்னோட ராசியாலதான் அவ ருக்கு அப்படி ஆயிடுச்சுன்னு அவங்க வீட்டில் சொன் னாங்க... அது என் மனசில ஆழப் பதிஞ்சிடுச்சுக்கா... நான்... நான் ஒரு அதிர்ஷ்டம் கெட்டவள்... என்னைக் கல்யாணம் செஞ்சுகிட்டு இவருக்கும் ஏதாவது ஆயிடு மோன்னு எனக்கு பயமா இருக்கு... வேண்டாமக்கா... நான் இங்கேயே இருந்திடறேன்'' முதலில் சொன்ன தையே, அவள் திரும்பச் சொல்ல ஆரம்பிக்கவும், அபிராமிக்கு பெருமூச்சு கிளம்பியது.

'எவ்வளவு தூரத்துக்கு இவள் மனத்தைக் காயப் படுத்தி இருக்கிறார்கள்!' என்ற எண்ணம், அந்த ஆட் களின் மீது ஆத்திரத்தையும், சித்ராவின் மேல் பரிதாபத் தையும் வரவழைத்து. இந்தப் பெண்ணுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்ற உந்துதலில், அபிராமி பேச ஆரம்பித்தாள்.

''இங்கே பாரு சித்ரா... யாரோ எதோ சொன்னாங்க என்று இன்னும் நீ உன் மனத்தைக் குழப்பிக் கொண்டு இருக்கிறதை விடு... நடந்த எந்த விஷயத்துக்கும் நீ பொறுப்பில்லை... இந்த மாதிரி ஒரு அசட்டுத் தனமான எண்ணத்தை வெச்சுக்கிட்டு, தேடி வர ஒரு நல்ல வாழ்க்கையை வேண்டாம் என்று சொல்லாதே... முத்து ரொம்ப நல்லவர்... உனக்கு ஒரு நல்ல துணையா அவர் இருப்பார் என்று எனக்கு நம்பிக்கை இருக்கு... உன்கிட்ட பேசறதுக்கு முன்னாடி, அவங்க அம்மாகிட்ட கூட சம்மதம் வாங்கி இருக்கார்னா பார்த்துக்கோ'' என்று அபிராமி சொன்னதும், தலை உயர்த்தி பார்த்த சித்ராவின் கண்களில் ஆச்சரியம் தெரிந்தது.

''உனக்கு முத்துவைப் பிடிக்கலன்னா நான் இவ்வளவு தூரம் வற்புறுத்த மாட்டேன்... ஆனால் உனக்கும் அவரைப் பிடிச்சுருக்கு... பிடிச்சிருக்குதானே?'' என்ற அபிராமியின் கேள்விக்கு, பதிலேதும் சொல்லாமல் சித்ரா மௌன மாகவே இருந்தாள்.

பிடிக்கவில்லை என்று அவள் சொல்லவில்லை என்றதும், அபிராமியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''எனக்கு நம்பிக்கை இருக்கு.. முத்துவோட உன்னோட வாழ்க்கையை இணைத்துக் கொண்டால் நீ கண்டிப்பா சந்தோஷமா இருப்பே!'' என்று அபிராமி உறுதியாக சொல்லியும், சித்ராவின் முகத்தில் தெளிவு வரவில்லை.

உடனே முடிவெடுக்கச் சொல்லி வற்புறுத்த வேண் டாம் என்று எண்ணிய அபிராமி, ''அவசரமில்லை... இரண்டு மூன்று நாள் நல்லா யோசி... அப்புறம் உன் முடிவை சொல்லு! அது நல்ல முடிவா இருக்கணும் என்று நான் ஆசைப்படறேன்!'' என்று சொல்லி விட்டு,

''நீ போய் இப்போ வேலையைப் பார்!'' என்று அவனை அனுப்பி வைத்தாள்.

கண்ணம்மாவின் காதல்

''அப்பா! அப்பா! அம்மா எனக்கு ராதை வேஷம் போட்டு விட்டிருக்காங்க பாருங்கப்பா... எப்படிப்பா இருக்கு?'' என்று தன் திராட்சைக் கண்களில் ஆர்வம் மின்ன, கேட்ட தன் பெண்ணின் அழகை ரசித்தபடி,

''என் குட்டிப் பொண்ணு ரொம்ப ரொம்ப அழகா இருக்காளே!'' என்று அவளைத் தூக்கி முத்தமிட்டான் தந்தை.

''இந்த நெத்திசுட்டி?''

''அழகா இருக்குடா குட்டிம்மா...''

''இந்த டிரஸ்?''

''சூப்பரா இருக்குடா...''

ஒவ்வொன்றாக பெண் கேட்ட கேள்விக்கு, புன்னகையுடனே பதில் அளித்துக் கொண்டிருந்த தந்தையின் அருகில் வந்த மகன்,

''எனக்கு அம்மா கண்ணன் வேஷம் போட்டிருக்காங்கப்பா! எனக்கு எப்படிப்பா இருக்கு?''

''உனக்கென்னடா ராஜா? உண்மையிலேயே அந்த கண்ணன் மாதிரியே அழகா இருக்கே!''

''உண்மையாவாப்பா?'' வெட்கம் கொஞ்சம், ஆர்வம் கொஞ்சம் கலந்த குரலில் கேட்ட மகனது அந்த பாவனை நெஞ்சை கொள்ளை கொள்ள, மகனையும் தன் மடியில் அமர்த்திக் கொண்டான் தந்தை.

இருவரையும் அவன் கொஞ்சிக் கொண்டிருந்த நேரத்தில், கண்ணம்மா உள்ளே நுழைந்தாள்.

இள ரோஜா வண்ண பட்டுப் புடவை அணிந்து, மெல்லிய அலங்காரத்துடன், தானே ஒரு ரோஜாவாய்

மலர்ந்திருந்த மனைவியை, விழி எடுக்காமல் பார்த்திருந்தான் கணவன்.

தன் அத்தான், தன்னைப் பார்வையால் விழுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு உள்ளுக்குள் பூரித்தாலும், ''அடடா! வந்தவுடனே பிள்ளைகளை மடியில் தூக்கி வைச்சு கொஞ்ச ஆரம்பிச்சாச்சா? பூஜைக்கு நேரமாகுது அத்தான்... போய் குளிச்சிட்டு வாங்க! போங்க!'' என்று அதட்டியவளைப் பார்த்தபடியே,

''பாருங்கடா செல்லங்களா! அம்மாவுக்கு அவளை மட்டும் கொஞ்சலையேன்னு கோபம் வருது!'' தந்தை சொல்ல, குழந்தைகள் கிளுக்கிச் சிரித்தனர்.

கணவனை முறைத்தபடி, ''குழந்தைகள் எதிர்க்க பேசற பேச்சைப் பாரு!'' என்று மனைவி முணுமுணுத்தது காதில் விழ, அதற்கு மேல் அவளை வெறுப்பேற்றாமல் குளிக்கச் சென்றான்.

பூஜை முடிந்ததும், ''ரொம்ப அழகா குழந்தைகளுக்கு அலங்காரம் செஞ்சிருக்கேடா கண்ணம்மா!'' என்று கணவன் மனைவியைப் பாராட்ட,

''நல்லா இருக்கு இல்லப்பா? தேங்க்யூம்மா!'' என்று மகன் தன் அன்னையின் ஒரு கன்னத்தில் முத்தமிட, மறு கன்னத்தில் முத்தமிட்டாள் மகள்.

''நானும்! நானும்!'' என்று அருகில் வந்த கணவனைக் கையால் தள்ளியபடி ''உதை வாங்கப் போறீங்க!'' என்று முணுமுணுத்தாள் கண்ணம்மா.

வேஷத்தைக் கலைக்க மாட்டோம் என்று அடம் பிடித்த குழந்தைகளை, சமாதானப்படுத்தி, உடை மாற்றி படுக்க வைத்த பிறகு, மனைவியை அணைத்துக்

கொண்டவன், ''என்னடா இன்னைக்கு ரொம்ப அழகா இருக்கே?'' என்று அவளது செவியில் முணுமுணுக்க, இது, தினமும் கணவன் கேட்கும் கேள்விதான் என்றாலும், ''அப்போ! இவ்வளவு நாள் அழகா இல்லையா?'' என்று சிணுங்கினாள் மனைவி.

''ஹே... நான் அப்படியா சொன்னேன்?'' என்றபடி அணைப்பை இறுக்கிய கணவனின் மார்பில் சாய்ந்து கொண்டு, ''அத்தான்! அந்தப் பாட்டைப் பாடுங்களேன்!'' என்ற மனைவியிடம், 'எந்த பாட்டு' என்று கேட்காமல், மெல்லிய குரலில் பாடத் துவங்கினான்.

''சுட்டும் விழிச்சுடர்தான், கண்ணம்மா!

சூரிய சந்திரரோ?''

4

அபிராமி, பிள்ளைகளின் படிப்புக்கு முதல் கட்டமாக எவ்வளவு பணம் தேவைப்படும் என்று சரியாகக் கணக்கிட்டு முடிக்க ஐந்து மணி ஆகிவிட்டது. சூர்யாவுக்கு போன் செய்து சொல்லி விடலாமா என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போது, தீபாவை இன்று செக்-அப்புக்காக மருத்துவமனை அழைத்துச் செல்ல வேண்டும் என்பது நினைவு வந்தது.

தீபா இங்கே வந்து எட்டு மாதம் ஆகிறது. தாய் இல்லத்தில் இருந்துதான் அவளை இங்கே அனுப்பி வைத்தார்கள். தாய் இல்லம் ஆதரவற்ற குழந்தைகளுக்கானது.

பிள்ளைகள் படித்து தங்கள் சுய காலில் நிற்க துவங்குவது வரை அங்கே இருக்கலாம். அப்படி, அங்கே வளர்ந்த தீபா நன்றாக படித்து நல்ல வேலையில் சேர்ந்த பிறகு, விடுமுறை நாட்களில் தாய் இல்லத்துக்குச் சென்று தன்னால் ஆன உடல் மற்றும் பொருள் உதவி செய்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

அவளைப் போலவே தாய் இல்லத்தில் வளர்ந்த சுதாகரும், தீபாவைப் போலவே தாய் இல்லத்துக்கு உதவி செய்ய வர, இருவருக்குள்ளும் ஒரு பிடித்தம் ஏற்பட்டு திருமணம் செய்து கொண்டார்கள்.

தங்களுக்கென்று ஒரு குடும்பம் அமைந்ததில் இருவருக்குமே மட்டற்ற மகிழ்ச்சி, தங்கள் வாழ்வின் சந்தோஷத்தை மேலும் அதிகப் படுத்தவென்று விரைவிலேயே ஒரு குழந்தை உண்டானதும், இருவருமே தங்களுக்குக் கிடைக்காத பெற்றோரின் அன்பை தங்கள் குழந்தைக்குத் தர வேண்டும் என்று ஆசையுடன் திட்டமிடத் துவங்கினார்கள்.

அவர்களது எதிர்காலத் திட்டமெல்லாம், சுதாகர் ஒரு சாலை விபத்தில் இறந்தபோது கனவாகிப் போனது. பித்துப் பிடித்த நிலையில், தற்கொலைக்கு முயன்ற தீபாவை தாய் இல்லத்தின் தலைவி அன்னபூரணி சக்தி இல்லத்துக்கு அனுப்பி வைத்தார்.

சக்தி இல்லத்தில் இருந்த மற்ற பெண்களின் கண்ணீர் கதைகளை எடுத்துச் சொல்லி, குழந்தைக்காகவாவது அவள் வாழ வேண்டும் என்று தீபாவின் மனதைக் கற்பகமும், அபிராமியும் தான் தேற்றினார்கள்.

ஐந்தாவது மாதம் ஸ்கேன் எடுத்து பார்த்தபோது, இரட்டைக் குழந்தைகள் என்றதும் தீபாவுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அந்த நாளில் இருந்து தீபாவும்

கொஞ்சம் உற்சாகமாகவே வளைய வந்தாள். அவளது உற்சாகமான மனநிலை அபிராமிக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.

ஆனால்... தீபாவின் கர்ப்பப்பை இரண்டு குழந்தைகளைத் தாங்கும் அளவுக்கு பலமாக இல்லை என்றும், அவளது பிரசவத்தில் பிரச்சனை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்றும் கூறிய டாக்டர், அவளை நல்லபடியாக பார்த்துக் கொள்ளும்படிச் சொல்லி விட்டு, அவளது உடல் நிலையைத் தேற்ற நிறைய மருந்துகளையும் எழுதிக் கொடுத்திருந்தார்.

தீபாவிடம் முழு பிரச்சனையையும் சொல்லா விட்டாலும், அவள் உடலை நல்லபடியாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால், அபிராமி அவளிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லி இருந்தாள். அதுவே, தீபாவுக்கு பயத்தைக் கிளப்பி இருந்தது.

''குழந்தைகள் நல்லபடியா பிறக்கும் இல்லைக்கா? நான் நல்லபடியா பிழைச்சு வருவேன்தானேக்கா?'' என்று ஆயிரம் முறை அவள் கேட்டதும் தான் சொல்லியதே தவறோ என்று அபிராமிக்குத் தோன்றியது.

ஆனால், அப்படி இல்லை என்று சொன்னார் டாக்டர். ''அவளுக்கு அவளது உடல் நிலை பற்றி தெரிந்திருப்பது நல்லதுதான் அபிராமி... அப்போதான் ஜாக்கிரதையா இருந்துப்பாள்'' என்றார் அவர்.

இன்று டாக்டர் என்ன சொல்லப் போகிறாரோ? என்ற யோசனையில் இருந்த அபிராமி, ''அபிக்கா போலாமா? உங்க வேலை முடிஞ்சிடுச்சா?'' என்று கேட்டபடி வந்த தீபாவின் குரலில் நிமிர்ந்தாள்.

''ம்ம்... கிளம்பலாம் தீபா'' என்று விட்டு, அபிராமி தீபாவை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குக் கிளம்பினாள்.

ஸ்கேன் எடுத்து விட்டு அவர்களைக் கொஞ்ச நேரம் காத்திருக்கச் சொன்ன மருத்துவர் அபிராமியை உள்ளே அழைத்தார்.

''என்ன டாக்டர்? இப்போ ஏதாவது முன்னேற்றம் தெரியுதா?'' மனதில் தோன்றிய கலக்கத்தை மறைத்து அபிராமி வினவ,

''இல்லை அபிராமி... அதே மாதிரி இருக்கு... ரெண்டு குழந்தைகளை நல்லபடியா பெற்று எடுக்கிற அளவுக்கு அவளுக்கு சக்தி இருக்காதுன்னுதான் தோணுது... போதாதற்கு அப்பப்போ வலிப்பு வேற வருதுன்னு சொல்றீங்க... டெலிவரி ரொம்பவே காம்ப்ளிகேட்டடாதான் இருக்கப் போகுது!'' என்று ஒரு பெருமூச்சுடன் டாக்டர் சொல்ல,

''தீபா.. தீபா, குழந்தைகளுக்கு எதுவும் ஆபத்தில்லையே டாக்டர்?'' அபிராமியின் குரல் ரொம்பவும் மெலிந்து வந்தது.

அவளது கேள்விக்கு நேரிடையாக பதில் சொல்லாமல், ''நார்மல் டெலிவரிக்கு வாய்ப்பில்லை... வலி வருவதற்கு முன்னாடியே சிசேரியன் செய்யறதுதான் பெட்டர்... பத்து நாளில் அவளை அட்மிட் செஞ்சுடுங்க அபிராமி...'' என்றார் டாக்டர்.

''சரி டாக்டர்.''

வெளியே வருவதற்கு முன் தன் முகத்தைச் சரி செய்து கொண்ட அபிராமி, புன்னகையுடன் தீபாவை நோக்கிச் சென்றாள்.

''என்னக்கா? டாக்டர் என்ன சொன்னாங்க? மருந்து மாத்திரை எல்லாம் ஒழுங்கா சாப்பிட்டுட்டுதானே இருக்கேன்... எதுவும் பிரச்சனை இல்லையே?'' கவலை யுடன் கேட்டாள் தீபா.

''எதுவும் பிரச்சனை இல்லை தீபா! பத்து நாளில் சிசேரியன் செய்யணும் என்று சொல்லி இருக்காங்க!''

''ட்யூ டேட்டுக்கு இன்னும் இருபது நாள் இருக்கே அக்கா?''

''ஆமாம் தீபா... ஆனால் பத்து நாளில் சிசேரியன் செய்யறதுதான் நல்லதுன்னு சொல்லி இருக்காங்க!''

''ஓ! சிசேரியன் செஞ்சு குழந்தைகளை எடுத்திட்டால் பிரச்சனை எதுவும் இருக்காதுதானே அக்கா? குழந்தைகள் நல்லபடியா பிறக்கும்தானே? நான்... நானும் நான் பிழைச்சுக்குவேன்தானே அக்கா?'' சாதாரணமாக கேட்க முயன்றாலும், தீபாவின் குரலில் நடுக்கம் இருந்தது.

அவளது கேள்வியில் தனக்குமே தோன்றிய நடுக் கத்தை மறைத்துக் கொண்டு, ''என்ன தீபா இது? தைரி யமா இரு! எல்லாம் நல்லபடியாவே நடக்கும்!'' என்ற படி தீபாவின் கையை அழுந்தப் பற்றிக் கொண்டாள் அபிராமி.

ஆட்டோவில் வரும்போது இருவரும் தங்களது யோசனையில் மூழ்கியபடி அமைதியா வர, அபிராமியின் கைப்பேசி சிணுங்கி அந்த அமைதியைக் கலைத்தது.

சூர்யாதான் அழைத்திருந்தான்.

''ஹலோ?'' என்ற அபிராமி, அவன் எதுவும் கேட்கும் முன்னரே,

''சாரி சார்! நான் கணக்கு பார்த்து எடுத்து வைச்சிட் டேன்... நீங்க நாளைக்கு போன் செய்ங்க என்று சொன்ன தால்தான் போன் செய்யலை... இப்போ நான் வெளியில இருக்கேன்... இருபது நிமிஷத்தில் இல்லத்துக்குப் போய் விடுவேன்... போனவுடன் உங்களுக்கு விவரம் சொல் லிடறேன்!'' என்று சொல்ல,

''இட்ஸ் ஓகே அபிராமி... இல்லத்துக்கு போயிட்டே போன் செய்ங்க...'' என்றவன் போனை வைக்காமல் தயங்க,

''என்ன சார்? வேற ஏதாவது சொல்லணுமா?'' என்று அபிராமி வினவினாள்.

''அபிராமி... ஆர் யூ ஆல் ரைட்?''

சூர்யா திடீர் என்று இப்படிக் கேட்டதும் ஒன்றும் புரியாமல் விழித்த அபிராமி, ''எதுக்கு இப்படி கேட்க நீங்க?'' என்று குழப்பத்துடன் விசாரித்தாள்.

''இல்லை... உங்க குரல் ஒரு மாதிரி இருந்த மாதிரி இருந்தது... அதான்!''

டாக்டர் சொன்ன செய்தியைக் கேட்டதில் இருந்து அபிராமிக்கு மனம் சரி இல்லைதான். ஆனால் சூர்யா விடம் இயல்பாகத்தான் பேச முயன்றாள்.

அவளையும் அறியாமல், மனதில் இருந்த கலக்கம் குரலில் வந்து விட்டதோ? குரல் வேறுபாட்டை வைத்தே, ஏதோ பிரச்சனை இருக்கிறது என்று கணிக்கிறானே? இதனால்தான், இவ்வளவு பெரிய நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்த முடிகிறதோ? என்று தனக்குள் வியந்து கொண்டே,

''இல்லை சார்... எதுவும் பிரச்சனை இல்லை... ஐ அயம் ஆல் ரைட்!'' என்று பதில் தர, ''ஓகே!'' என்றபடி அவன் அழைப்பைத் துண்டித்தான்.

அபிராமியிடம் பேசிவிட்டு, தன்னை எண்ணி ஆச் சரியப்பட்டுக் கொண்டிருந்தான் சூர்யா.

'நாளைக்கே போன் செய்யுங்கள் என்று நான்தானே சொன்னேன்?'

அவளிடம் பேசியே ஆக வேண்டும் என்ற உந்து தலை அடக்க முடியாமல்தான் அவளை அழைத்தான்.

அவள் குரலில் லேசாக தென்பட்ட கலக்கம் அவன் மனதில் 'என்ன பிரச்சனையாக இருக்கும்?' என்ற பதட் டத்தை ஏற்படுத்தியது எண்ணி அவனுக்கு ஆச்சரியம்தான்.

அதிலும், அவள் பிரச்சனை எதுவும் இல்லை என்று சொல்ல எடுத்துக் கொண்ட அந்த அரை நிமிடத்தில் அவனது இதயம் துடித்த துடிப்பை நினைத்து அவனுக்கு சிரிப்பு வந்தது.

'ஏதோ ஆயிடுச்சு!' என்று புன்னகையுடன், தனக்குள் பேசிக் கொண்டவனை கைப்பேசியின் சத்தம் ஈர்த்தது.

அபிராமிதான் அழைக்கிறாளோ என்று வேகமாக போனை எடுத்துப் பார்த்தவன், அவளது அழைப்பு இல்லை என்றதும் ஏமாற்றத்துடன் போனை எடுத்து பேசிவிட்டு வைத்தான்.

கொஞ்சம் நேரத்தில் மீண்டும் அழைப்பு வந்தது. அபிராமிதான்!

படபடத்த நெஞ்சை, 'இதென்ன விடலைப் பையன் மாதிரி!' என்று அடக்கி, போனை எடுத்தவன், இயல்பான குரலில் ''ஹலோ?'' என்றான்.

''சாரி சார்! நீங்களே ரெண்டு தடவை போன் செய்யற மாதிரி ஆயிடுச்சு!'' என்றவள், விவரங்களைக் கூறினாள்.

''செக்கை அனுப்புகிறேன்'' என்று சொன்னவனிடம், ''ஒரு சின்ன வேண்டுகோள்!'' என்று சொன்னவள், ஒரு கணம் தயங்கி,

''ரெண்டு நாள் கழித்து அந்தப் பிள்ளைகளை இங்கே இல்லத்துக்கு வரச் சொல்லுகிறேன்... நீங்களே அவங் களுக்கு பணத்தை நேரடியா தர முடியுமா சார்? பணத் தைத் தரும்போது அவங்களை மோடிவேட் செய்யற மாதிரி நீங்க ஏதாவது பேசினால் நல்லா இருக்கும்னு நினைக்கிறேன்... கட்டாயம் இல்லை... உங்களுக்கு டைம் கிடைச்சால்...'' என்று அவள் இழுக்கும்போதே,

சூர்யா, ''நோ ப்ராப்ளம் அபிராமி... நான் வரேன்... டைம் மட்டும் முன்னாடி நாளே சொல்லிடுங்க!'' என்று உடனடியாக ஒப்புதல் தர, நன்றி சொல்லி விட்டு அவள் போனை வைத்தாள்.

சூர்யாவுக்குமே பிள்ளைகளைச் சந்தித்து அவர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் பேசுவது பிடித்திருந்தாலும், தனக்கு நேரம் சவுகரியப்படுமா என்று கூட யோசிக் காமல் ஒப்புதல் சொன்னதற்கு காரணம் அபிராமி என்று அவனது உள் மனதுக்குப் புரிந்துதான் இருந்தது.

இதற்கு மேல் அவளைப் பற்றி யோசித்துக் கொண் டிருந்தால், வேலை செய்ய முடியாது என்று எண்ணியவன், மனதை வேலையின் பக்கம் திருப்பி அதில் வெற்றியும் கண்டான்.

சூர்யாவுக்கு போன் செய்து விவரங்கள் சொல்லி விட்டு அபிராமி, வீட்டுக்குக் கிளம்பினாள்.

இன்று எப்படியாவது பேசி அபிராமியை திருமணம் செய்து கொள்ள சம்மதிக்க வைக்க வேண்டும் என்று எண்ணி கற்பகம் அவளுக்காகக் காத்திருந்த கற்பகம், அவளது சோர்ந்திருந்த தோற்றத்தைப் பார்த்ததும், தான் பேச எண்ணி இருந்ததை மறந்து,

''என்னடா அபி? ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்று விசாரித்தார்.

''தீபாவை இன்று செக்-அப்புக்கு கூட்டிட்டுப் போய் இருந்தேன்மா... டாக்டர் ரொம்ப நம்பிக்கை இல்லாமல் பேசறாங்க!'' என்றவளின் பதில், கற்பகத்துக்கு வருத்தத்தை தந்தது.

''கவலைப்படாதே அபி... எல்லாம் நல்லபடியாவே நடக்கும்!'' என்று ஆறுதல் சொன்னவர், தான் பேச எண்ணி இருந்ததை இப்போதைக்கு வேண்டாம் என்று தள்ளிப் போட்டார்.

உணவு அருந்தி விட்டு இருவரும், அவரவர் எண்ணங்களில் மூழ்கியபடி உறங்கச் சென்றார்கள்.

வேலையில் மூழ்கி இருந்த சூர்யா மணி பார்த்தான். எட்டு மணி ஆகி இருந்தது.

இரவு உணவை அன்னையுடன் சேர்ந்து உண்ணுவது அவனுடைய வழக்கம். ஆனால், ஒரு மாதமாக வீட்டுக்குச் செல்லவே இரவு வெகு நேரமாகி விடுவதால், அந்த வழக்கம் மாறி இருந்தது. இன்றாவது அன்னையோடு உணவு அருந்தலாம் என்று எண்ணியவன், வீட்டுக்குக் கிளம்பினான்.

எட்டரை மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்த மகனை, மலர்ந்த முகமாக ஆச்சரியத்தோடு வரவேற்றார் பவானி.

அன்னையின் முகத்தில் இருந்த சந்தோஷத்தைப் பார்த்த சூர்யா, இனிமேல் எந்த வேலையாக இருந்தாலும் ஒதுக்கி வைத்து விட்டு முடிந்த அளவு சீக்கிரமே வீட்டுக்கு வர வேண்டும் என்று எண்ணினான்.

அன்னையுடன் கதை பேசியபடியே உணவருந்தியவனிடம், ''காலையிலே அந்த இல்லத்துக்குப் போய் இருந்தாயே ராஜா, என்ன ஆச்சு?'' என்று பவானி விசாரித்தவுடன், சூர்யாவின் முகம் மலர்ந்தது.

''உதவி செய்யறதுன்னு முடிவு செஞ்சுட்டேன் அம்மா... அந்த இல்லத்தை நடத்தறது ஒரு இளம்பெண் அம்மா... ரொம்ப ஆர்கனைச்டா செய்யறாங்க... அவங்க இல்லத்துக்கு என்று அவங்க யார் கிட்டயும் எந்த உதவியும் கேட்கிறதில்லை... அங்க இருக்கிற பெண்களுக்கு பயிற்சி கொடுத்து அவங்க தையலகத்திலேயே வேலையும் கொடுத்திருக்காங்க... அந்த இல்லம் இருக்கிற இடம் கூட அவங்களோட சொந்த செலவிலே வாங்கி இருக்காங்க...''

படபடவென்று மகன் பேசிக் கொண்டிருப்பதை ஒரு ஆச்சரியத்துடன் நோக்கினார் பவானி.

எப்போதுமே ஒரு புன்னகை சூர்யாவின் முகத்தில் குடி இருக்கும்.

ஆனால், இந்த ஒரு வருடமாக, எதிர்பாராமல் நேர்ந்த தந்தையின் இழப்பு, அலுவலகத்தில் கதிரேசனால் நேர்ந்த குளறுபடி, அதிகமான வேலை, இவற்றால் நேர்ந்த ஒரு இறுக்கம் அவனது புன்னகையை மறைத்திருந்தது.

இப்போது அவனது முகத்தில் தோன்றிய புன்னகையின் சாயல் அந்த தாய் மனதுக்கு விவரிக்க முடியாத சந்தோஷத்தைத் தந்தது.

அவன் பேசியதை கவனிக்காமல், அவனது புன்னகை நிறைந்த முகத்தையே ரசித்துக் கொண்டிருந்தார்.

தன்னுடைய பேச்சுக்குத் தாயிடம் எந்த எதிரொலியும் இல்லாமல் போகவே, ''என்னம்மா? என்ன ஆச்சு?'' என்று அன்னையின் முகத்தருகே கையை ஆட்டியபடி சூர்யா விசாரிக்க,

''இல்லை ராஜா... நீ இப்படி சிரிச்ச முகத்தோடு பேசறதைப் பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்கு!'' என்று மனதில் இருந்ததை பவானி சொல்ல, சூர்யாவுக்கு மனம் கனிந்தது.

''இனிமேல் நான் சீக்கிரமே வரப் பார்க்கிறேன்மா... நைட் டின்னர் கண்டிப்பா இனிமேல் உங்க கூடத்தான்... நீங்களும் வீட்டிலேயே அடைஞ்சு கிடைக்காமல் வெளியில் போயிட்டு வாங்க... மனசுக்கு கொஞ்சம் மாறுதலா இருக்கும்!'' என்று சூர்யா அக்கறையுடன் சொல்ல, அபிராமி தலையாட்டினார்.

மேலும் சிறிது நேரம் அன்னையிடம் பேசி இருந்து விட்டு, தன் அறைக்கு வந்த சூர்யாவுக்கு, நீண்ட நாளைக்குப் பிறகு மனம் லேசாக இருப்பதாகத் தோன்றியது.

காரணம் என்னவென்று அதிகம் ஆராயாமலேயே புரிந்தது. அபிராமியுடன் நேர்ந்த இன்றைய சந்திப்பு இறுகி இருந்த அவன் மனதுக்கு, தென்றலைப் போல இதம் தந்ததை அவனால் உணர முடிந்தது.

அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் ஆண் அதிர்ஷ்டக்காரன் என்று எண்ணினோமே? தான் ஏன் அந்த அதிர்ஷ்டக்காரனாக இருக்கக் கூடாது? அம்மாவுக்கும் அவளைக் கண்டிப்பாகப் பிடிக்கும் என்று யோசித்துக் கொண்டே சென்றவன், எண்ணங்களின் வேகத்தில் திகைத்து, தலையை உலுக்கிக் கொண்டான்.

ஒரு நாள் சந்திப்பிலேயே திருமணம் வரை யோசிக்க வைத்து விட்டாளே?

அவன் மட்டும் நினைத்தால் போதுமா? அவளுடைய எண்ணம் என்னவென்று எப்படி தெரிந்து கொள்வது என்று யோசிக்க ஆரம்பித்தவனை, மெல்ல உறக்கம் தழுவியது.

கண்ணம்மாவின் காதல்

''அப்பா வந்தவுடனே சொன்னதெல்லாம் மறந்து போய், அவர்கிட்ட பேசக்கூடாது! சரியா?''

வெளியே கூட்டிச் செல்கிறேன் என்ற கணவன், இன்றும் எப்போதும் போல் சொன்ன நேரத்துக்கு வராமல் இருந்ததால் கோபத்துடன் இருந்த கண்ணம்மா, தன் பிள்ளைகளிடம் அவன் வரும்போது பேசக் கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

''சரிம்மா!'' என்று மண்டையை ஆட்டினார்கள் குழந்தைகள் இருவரும்.

''குட்டிம்மா நீ சரியான திருடுடா... போன தரம் இப்படி நல்லா மண்டையை ஆட்டிட்டு அவர் வந்தவுடனே ஓடிப் போய் அவர் காலைக் கட்டிக்கிட்டு கொஞ்ச ஆரம்பிச்சிட்டே!''

''ஆமாம்மா... இவள் எப்பவுமே அப்பா கட்சிதான்!'' கிடைத்த வாய்ப்பை விடாமல் அன்னைக்கு ஜால்ரா அடித்தான் மகன்.

''இல்லைம்மா... இன்னைக்கு நான் கண்டிப்பா பேச மாட்டேன்!''

நல்ல பெண்ணாய் வாக்கு கொடுத்த குழந்தையை, அவள் இன்னமும் சந்தேகத்துடன் நோக்க, ''நிஜம்மா!'' என்று அழுத்திச் சொன்னது குழந்தை.

''எதுடா நிஜம்?'' என்று கேட்டபடியே வந்த தந்தையைக் கண்டு கொள்ளாமல், குழந்தைகள் தாங்கள் வரைந்து கொண்டிருந்ததைத் தொடர, கண்ணம்மாவும் கணவனை ஓரக் கண்ணால் பார்த்தபடி துணி மடித்துக் கொண்டிருந்தாள்.

''என்ன ஆச்சு? என் செல்லங்களுக்கு! என் கூட பேச மாட்டீங்களா?'' பாவமாகக் கேட்டபடி குழந்தைகள் அருகில் வந்தவனைப் பார்க்காமல், குழந்தைகள் திரும்பி அமர்ந்து கொள்ள, இருவரது பாவனையையும் பார்த்தவனுக்கு அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

''ஓகே! எல்லாரும் என் மேல கோவமா இருக்கீங்க போலிருக்கு! அப்போ நான் வாங்கிட்டு வந்த கிப்டை எல்லாம் என்ன செய்யறது?'' என்று அவனுக்குள் பேசிக் கொள்வதைப் போல சொல்ல, குழந்தைகளுக்கு கண்கள் மின்னியது.

கண்களில் அவர்களது ஆர்வத்தைப் பார்த்து, அவன் சிரிப்புடன் திரும்பி சோபாவில் அமர்ந்து கொள்ள, கண்ணம்மாவோ 'போகக் கூடாது!' என்று விரலை நீட்டி, கண்ணை உருட்டினாள்.

''ப்ளீஸ்மா!'' மெல்ல உதட்டசைவில் வேண்டினான் பிள்ளை.

''ம்ஹூம்!'' தலையாட்டி மறுத்தாள் தாய்.

அங்கே நடந்து கொண்டிருந்த நாடகத்தை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே, ''இன்னும் அஞ்சு நிமிஷத்துல என்கிட்டே கிப்டை வாங்கிக்கலன்னா, திரும்பவும் கடையிலேயே கொடுத்திடுவேன்பா!'' என்ற தந்தையின் வார்த்தையில், ஓடிப் போய் அவனது தோளில் சாய்ந்து கொண்டு, ''என்ன கிப்டுப்பா?'' என்று ஆர்வமாய் விசாரித்தாள் மகள்.

'திருட்டுப் பொண்ணு! எப்போதும் போல சொதப்பிட்டாள்!' என்று எண்ணியபடியே, மகனிடம் திரும்பிய கண்ணம்மா, அவனைக் காணாமல் திகைத்துப் போனாள்.

அவனும்தான், தன் சகோதரி ஓடியபோது பின்னாலேயே சென்று விட்டிருந்தானே!

''என்ன கிப்டுப்பா?'' பிள்ளைகள் இருவரும், மாற்றி மாற்றிக் கேட்ட போதும், பதில் சொல்லாமல் தந்தை அமர்ந்திருக்கவும், ''சொல்லுங்க...ப்பா!'' என்று அவனை உலுக்கினார்கள்.

''நீங்க ரெண்டு பேர் மட்டும்தானே பேசி இருக்கீங்க! உங்க அம்மா இன்னும் வரலையே! அவளும் வந்தால்தான் கிப்டு என்னனு சொல்ல முடியும், கொடுக்கவும் முடியும்!'' கெத்தாக தந்தை சொன்னவுடன், குழந்தைகள் அன்னையிடம் ஓடினர்.

''அம்மா! வாங்கம்மா... அப்பா நம்ம மூணு பேருக்கும் கிப்ட் வாங்கிட்டு வந்திருக்காரு!'' ஆசையாய் சொன்ன குழந்தைகளை ஏமாற்ற விரும்பாமல், அவர்கள் இழுத்த இழுப்புக்கு அவர்களுடன் சென்று கணவனின் முன் நின்றாள் கண்ணம்மா.

வெற்றிச் சிரிப்பு சிரித்தவனைக் கண்டு கொள்ளாமல் அவள் நிற்க,

''நீங்க எல்லாரும் கண்ணை மூடிட்டு நில்லுங்க... உங்க கையில கிப்டை வைக்கிறேன்!'' தந்தை சொல்லி முடிக்கு முன்னரே, குழந்தைகள் கண்ணை மூடிக் கொண்டு நிற்க, சட்டென்று தன் மனைவியின் கன்னத்தில் சத்த மில்லாமல் இதழ் பதித்தான் அந்தக் குறும்பு கணவன்.

திகைத்து விழித்த கண்ணம்மா ஏதும் பேசும் முன்னர், குழந்தைகளின் கையில் அவன் பரிசை வைத்து விட, அவர்கள் கண்ணைத் திறந்து பார்த்து தங்கள் பரிசைக் கண்டு குதூகலித்தனர்.

''அம்மாக்கு கிப்ட் இல்லையாப்பா?'' என்ற மகனின் கேள்விக்கு, ''ம்ம்... அம்மாக்கு கூட கிப்ட் கொடுத் தாச்சே!'' என்றான் தந்தை, தான் இதழ் பதித்த மங்கை யின் கன்னத்தைப் பார்த்தபடி!

''அம்மா உங்களோட கிப்ட் என்னம்மா? காட்டுங்க!'' என்று குழந்தைகள் கேட்க, திருதிருவென்று அவள் விழிக்க, பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி மனைவி யின் தடுமாற்றத்தை ரசித்துக் கொண்டிருந்தான் அவளது அத்தான்.

''உங்களை...'' என்று பல்லைக் கடித்தவள், ''அப்பா பொய் சொல்றாரு செல்லங்களா... அம்மாக்கு அப்பா கிப்ட் வாங்கிட்டு வரவே இல்லை!'' என்று பாவம் போல அவள் சொல்ல,

''ஏன்பா அம்மாக்கு வாங்கிட்டு வரலை?'' என்று அதிகாரமாகக் கேட்ட மகனிடம், ''வாங்கிட்டு வந்திருக் கேன்டா கண்ணா... அம்மாதான் வாங்கிக்க மாட்டேங் கிறா!'' என்று புகார் வாசித்தான்.

''நீ ஏன்மா வாங்க மாட்டேங்கிறே?'' மகனின் கேள்வி தந்தையிடம் இருந்து தாயிடம் பாய்ந்தது.

கணவனை முறைத்தபடியே, ''கொடுங்க... வாங்கிக் கிறேன்!'' என்று அவள் வாங்கிக் கொள்ள, பிள்ளைகள் இருவரும், தந்தை வாங்கித் தந்த பரிசுடன் விளையாடத் துவங்கினர்.

கோபமாக இருக்கும் மனைவி பரிசை வாங்கிக் கொள்ள மாட்டாள் என்று தெரிந்து, நாடகம் நடத்திய கணவனை முறைத்துப் பார்த்துவிட்டு முகம் திருப்பிக் கொண்டாள் கண்ணம்மா.

''கண்ணம்மா...''

''....''

''கண்ணம்மா....''

''எதுக்கு என் பேரை ஏலம் போட்டுட்டு இருக்கீங்க!''

அவன் என்ன பதில் சொல்வான் என்று தெரிந்தும் அவள் கேட்க,

''கண்ணம்மா என்ற பேர் சொல்லும் போதிலே...

என்றன் வாயினிலே அமுதூறுதே!'' என்று அவன் பாடினான்.

''சாமர்த்தியசாலி அத்தான் நீங்க! யார் யாரை எப்படிச் சமாளிக்கணும் என்று நல்லா தெரிஞ்சு வைச்சுருக்கீங்க!'' என்றாள் கண்ணம்மா.

''பின்னே... ஒண்ணுக்கு மூணு குழந்தைங்க வீட்டில் இருக்கும்போது சாமர்த்தியமா இல்லைன்னா முடியுமா?'' என்ற கணவனை முறைக்க முயன்று, தோற்றுப் புன்னகை யுடன் அவன் தோளில் சாய்ந்தாள் கண்ணம்மா.

5

அபிராமியின் வேண்டுகோளின் படி, உயர்கல்விக்கு நிதி உதவி பெற்ற பிள்ளைகளிடம் தானே பணத்தைக் கொடுத்து, அவர்களுக்கு நம்பிக்கையும், ஊக்கமும் கொடுக்கும்படியாக பேசினான் சூர்யா.

''ரொம்ப நன்றி சார்! நீங்க அவங்களோட பேசினதில், அந்த பிள்ளைகளோட முகத்தில் பணம் கிடைத்த திருப்தியோடு, ஒரு புதிய நம்பிக்கையும் தெரியுது!''

''படிச்சு முடிச்சவுடன் வேலை என்றாலும் சரி, தொழில் தொடங்கணும் என்றாலும் சரி, உங்களை அணுகலாம் என்று சொன்னீங்களே... அது உண்மையிலேயே பெரிய விஷயம் சார்!''

மனமார நன்றி சொன்ன அபிராமியிடம், ''இட்ஸ் மை ப்ளஷர்!'' என்று புன்னகையோடு சொன்னான் சூர்யா.

ஒரு தலை அசைப்புடன், ''நீங்க என்னை ரொம்பப் பாராட்டறீங்க!'' என்று சொன்ன சூர்யாவின் மனதில், 'இவள் எப்போது இந்த சாரை விடுவாள்?' என்று தோன்றியது.

''இல்லை சார்! பணம் கொடுத்ததோடு, என் வேண்டுகோளை ஏற்று அவங்களோட பேச நேரம் ஒதுக்கி தந்ததுக்கு இந்தப் பாராட்டு குறைச்சல்தான்!'' என்று அபிராமி சொன்னதும்,

''சரி! அப்போ எப்போ வைச்சிக்கலாம் விழாவை'' என்ற சூர்யாவை, 'எந்த விழா?' என்பது போல அபிராமி ஆச்சரியமாகப் பார்க்க,

''இல்லை... இந்த பாராட்டு குறைச்சல் என்று சொன்னீங்களே... அப்போ பெரிய விழா எடுத்துப் பாராட்ட போறீங்களோன்னு...'' என்று சூர்யா இழுக்க, வாய் விட்டுச் சிரித்தாள் அபிராமி.

சிரிக்கும்போது அவளது முகம் மலர்ந்த அழகை, ஒரு கணம் ரசித்துப் பார்த்த சூர்யா, அவள் பார்வை தன் மீது பட்டதும், சட்டென்று திரும்பிக் கொண்டான்.

''மேலே எங்க வேலையைப் பார்க்க வரேன் என்று சொன்னீங்களே சார்... இப்போ நேரம் இருக்கா?'' அபிராமி தயக்கத்துடன் வினவ,

''கண்டிப்பா பார்க்கலாம்!'' என்றவன் மாடிக்குச் சென்று அவர்கள் வேலை செய்யும் விதத்தைப் பார்வை இட்டான்.

''வாவ்! இது ரொம்ப கஷ்டமான பீஸ் ஆச்சே அபிராமி! இதை எப்படி ஜாப் வொர்க் செய்யக் கொடுத்தாங்க?'' என்று வியந்தபடியே, தைத்து முடித்திருந்த ஒரு பீசை எடுத்து பார்த்தவனின் கண்களில் பாராட்டு தெரிந்தது.

''நீட் வொர்க்! என்ன ரேட் தராங்க?'' என்று விசாரித்தவன், அவளது பதிலில் ஆச்சரியமடைந்தான்.

''எவ்வளவு நாளா இந்த வொர்க் செய்யறீங்க?'' என்று கேட்டுத் தெரிந்து கொண்டவனின் கண்களில் கோபம் வந்தது.

''ரொம்ப கஷ்டமான வொர்க்! இவ்வளவு கம்மியா தராங்களே! உங்களை ஏமாற்றுறாங்க என்று நினைக்கிறேன்... நான் உங்களுக்கு வேற கம்பெனியில் இருந்து ஆர்டர் வாங்கி தரட்டுமா?'' என்று கேட்ட சூர்யாவிடம்,

''இல்லை சார்... நாங்க வேலை செய்ய ஆரம்பிச்ச நாளில் இருந்து சப்போர்ட் செய்யறாங்க... சோ, வேற

முடிவு எடுக்கிறதுக்கு முன்னாடி அவங்க கிட்ட நான் பேசிடறேன்!''

ஏமாற்றுகிறார்கள் என்று சொன்ன பிறகும், அவர்கள் முதலில் செய்த உதவியை எண்ணிப் பேசுகிறாளே என்று அபிராமியின் மீது சூர்யாவுக்கு மதிப்பு கூடியது.

''சரி அபிராமி... நீங்க பேசுங்க... அவர் விலை ஏற்றிக் கொடுக்கலை என்றால் சொல்லுங்க... எனக்கும் இந்த கம்பெனி ஆளுங்களைத் தெரியும்... நான் பேசறேன்!'' என்று சொல்லி விட்டு சூர்யா கிளம்ப, அபிராமி மீண்டும் ஒரு முறை நன்றி சொல்லி விடை கொடுத்தாள்.

* * *

அறை வாயிலில் தயக்கத்துடன் நின்ற சித்ராவைக் கண்ட அபிராமி, ''வா சித்ரா... உள்ளே வா... ஏன் அங்கேயே நிற்கிறே? என்ன விஷயம்?'' என்று அவளை உள்ளே அழைத்து விசாரித்தாள்.

''அக்கா! நீங்க அவரைப் பற்றி எதுவும் அவர் கம்பெனியில சொல்லலை இல்லை?''

சித்ரா முத்துவைப் பற்றி கேட்கிறாள் என்று புரிந்தும், ''யாரைப் பற்றி? என்ன சொல்லணும்? என்ன விஷயம்னு தெளிவா சொல்லு சித்ரா!'' என்று ஒன்றும் புரியாதவளாய் அபிராமி விசாரிக்க,

''அவர்... முத்து... அவரைப் பற்றித்தான்...''

''எதுவும் சொல்லலையே? ஏன்?''

''இல்லை... மூணு நாளா அவர் இங்கே வரலையே... அவருக்கு பதிலா வேற ஒருத்தர் வரார்... அதான் கேட்டேன்...'' என்று மென்று விழுங்கிக் கொண்டு சொன்ன சித்ராவைப் பார்த்ததும் அபிராமிக்கு புன்னகை மலர்ந்தது.

''தெரியலை... ஏதோ உடம்பு சரி இல்லை என்று...'' என்று அபிராமி சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

''என்ன? என்ன ஆச்சு?'' என்று சித்ரா பதட்டத்துடன் கேட்க, அபிராமி மெல்ல சிரித்தாள்.

'இந்த அக்கா, இப்போ எதற்கு சிரிக்கிறார்கள்' என்று மனதில் தோன்ற, கொஞ்சம் எரிச்சலுடன் சித்ரா அபிராமியை நோக்க, அவளின் சிரிப்பு மேலும் விரிந்தது.

''அவருக்கு ஏதாவதுன்னா நீ ஏன்மா இப்படி பதறுகிறாய்?'' என்ற அபிராமியின் கேள்வியில், சித்ராவின் தலை கவிழ்ந்தது.

அருகில் வந்து அவளது தலையை நிமிர்த்திய அபிராமி, ''என்ன யோசிச்சியா? என்ன முடிவெடுத்திருக்கே?'' என்று மென்மையாக வினவினாள்.

''வந்து... எனக்கு...'' என்று சித்ரா தடுமாற,

''முத்துவை கல்யாணம் செஞ்சுக்க சம்மதம்! என்ன சரிதானே?'' என்று அபிராமி சந்தோஷத்துடன் கேட்க, மெல்லிய புன்னகையோடு தலையாட்டினாள் சித்ரா.

''ரொம்ப சந்தோஷமா இருக்கு சித்ரா!'' என்று அவளை அணைத்துக் கொண்டாள் அபிராமி.

அதன் பிறகு, அபிராமியும் கற்பகமும் முத்து வீட்டுக்குச் சென்று, அவன் அம்மாவிடம் பேச, ஒரு வாரத்துக்குள் திருமணம் என்று முடிவானது.

கற்பகம், சித்ராவுக்கென்று சில நகைகளை வாங்கிக் கொடுத்தபோது, அவள் கண் கலங்க, ''சந்தோஷமா வாங்கிக்கோ... நீ எனக்கு பொண்ணு மாதிரிதான்!'' என்றார்.

திருமணத்துக்கு ஐந்து நாட்கள் இருக்கும்போது, முத்து சித்ராவுக்கு சில பொருட்கள் வாங்கவென்று,

அவளை வெளியே அழைத்துப் போக விரும்பி அபிராமியிடம் அனுமதி கேட்க, அவளும் ஒப்புதல் தந்தாள்.

வெளியே சென்று விட்டு வந்த சித்ராவின் முகம் மலர்ந்திருந்ததைப் பார்த்த அபிராமிக்கும் நெஞ்சம் நிறைந்தது.

கோவிலில் திருமணம், இல்லத்திலேயே விருந்து என்று ஏற்பாடானது. முத்துவின் பக்கமும் குறைந்த நபர்களே என்பதால், இல்லத்திலேயே ஷாமியானா போட்டு விருந்தை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவானது.

* * *

சூர்யா சொல்லிவிட்டு போன பிறகு, தங்களுக்கு ஜாப் வொர்க் ஆர்டர் தரும் கம்பெனியில் அவள் பேச, அவர்களும் விலையை ஏற்றித் தருவதாக ஒப்புக் கொண்டனர்.

உழைப்புக்கேற்ற நியாயமான ஊதியம் பெற உதவிய சூர்யாவுக்கு போன் செய்து தன் நன்றியைத் தெரிவித்தாள் அபிராமி. இந்த போன் பேச்சுக்களின் வழியே, இருவருக்குள்ளும் ஒரு நட்பு மலர்ந்திருந்தது.

சூர்யா, அந்த கம்பெனியில் பேசி இதற்கு முன் செய்த ஆர்டர்களுக்கும் அதே விலையைப் பெற்றுத் தர ஏற்பாடு செய்திருந்தான். அதற்காக, கணக்கு வழக்குகளை சரி பார்த்துக் கொண்டிருந்த அபிராமி, இன்டர்காம் ஒலிக்கவும் எடுத்துப் பேச,

''அபிம்மா... கே.வி. கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியில் இருந்து உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்திருக்கார்... உள்ளே அனுப்பட்டுமா...?'' என்று செக்யூரிட்டி வினவினார்.

அந்த கம்பெனிக்கு கல்வி அமைப்புக்கான உதவி கேட்டு கடிதம் அனுப்பியது நினைவு வர, ''உள்ளே அனுப்புங்க தாஸ் அண்ணா!'' என்றாள் அபிராமி.

''நான் கே.வி. கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியின் மேனேஜர்... நீங்க உதவி கேட்டு அனுப்பின கடிதத்தைப் பார்த்துட்டு போய் என்ன உதவி வேணும்னு பார்த்துட்டு வான்னு அய்யா அனுப்பி வைச்சார்...'' என்று ஆர்ப்பாட்டமாக சொல்லியபடியே வந்த மனிதரை, உள்ளே அழைத்து அமரச் சொன்னாள் அபிராமி.

''உட்காருங்க சார்... டீ, காபி ஏதாவது சாப்பிடறீங்களா?'' என்று உபசரித்து விட்டு, அவர் எதுவும் வேண்டாம் என்றதும், கல்வி அமைப்பைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்ல முயன்றவளைத் தடுத்து,

''கண்டிப்பாக எங்க தலைவர் உதவி செய்வாரும்மா... அப்போ நீங்க இன்னைக்கு ஒரு ஒன்பது மணிக்கு மேல அய்யாவோட கெஸ்ட் ஹவுசுக்கு வந்துடுங்க! இந்தாங்க அட்ரஸ்...'' என்று ஒரு விசிட்டிங் கார்டை கொடுத்து விட்டு வந்தவர் எழ,

''யாரு சார் தலைவர்? உங்க முதலாளியா?'' என்று விசாரித்தாள் அபிராமி.

'இது கூடத் தெரியாதா?' என்பது போல அவளைப் பார்த்த அந்த ஆள், ''எங்க முதலாளி யார்னு உங்களுக்குத் தெரியாதா? எம்.எல்.ஏ. பாண்டியன்தான்மா, கே.வி. கன்ஸ்ட்ரக்ஷன் முதலாளி!'' என்று அவர் சொன்னதும் ''ஓஹோ! அப்படியா?'' என்றாள் அவள்.

''என்னம்மா... உங்களை அய்யாவுக்குத் தெரிஞ்சிருக்கு... உங்களுக்குத் தெரியலையா?''

''இல்லை சார்... எனக்கு அவரைத் தெரியாது!''

''சார் உங்களை ஒரு விழாவில பார்த்திருக்காராம்... உங்ககிட்ட இருந்து உதவி கேட்டு கடிதம் வந்தவுடன் உடனே உதவி செய்யறதுன்னு முடிவு செஞ்சிட்டார்... கரெக்டா ஒன்பது மணிக்கு வந்துடுங்கம்மா...'' என்ற வரை இடைமறித்த அபிராமி,

''சாரி சார்... நான் மாலை ஆறு மணிக்கு மேலே வெளியில் எங்கேயும் போறதில்லை... நாளைக்குக் காலையில அவரைப் பார்க்க முடியுமா?''

''என்னம்மா நீங்க... இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் காலையில வரேன்னு சொல்றீங்களே... அய்யா ரொம்ப பிஸியா இருப்பாரு!''

''சரி, அவர் எப்போ ப்ரீயோ அப்போ சொல்லுங்க... ஆனால், நைட் மட்டும் வேண்டாம் சார்!'' என்று அபிராமி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, புருவம் சுருக்கிய அந்த ஆள், ''புரிஞ்சுதான் பேசறீங்களா?'' என்று கேள்வி கேட்க, அபிராமி குழம்பினாள்.

'இதில் புரியாமல் பேசுவதற்கு என்ன இருக்கிறது?' என்று அவள் யோசிக்கும்போதே, அந்த ஆள் திரும்பவும் இருக்கையில் அமர்ந்து மெல்லிய குரலில் பேசத் துவங்கினான்.

''நைட் வந்தீங்கன்னா, காதும் காதும் வைச்ச மாதிரி விஷயம் நடந்திடும்... அது புரியாமல் பேசறீங்களே!'' என்று அந்த ஆள் கோணல் சிரிப்புடன் சொன்னவுடன், அபிராமிக்கு அதுவரை புரியாமல் இருந்தது எல்லாம் நொடியில் விளங்கி, ஆத்திரத்தில் நெஞ்சு படபடத்தது. முயன்று தன் ஆத்திரத்தை கட்டுக்குள் கொண்டு வந்து,

''மரியாதையா எழுந்து வெளியே போங்க!'' என்று அமைதியாகச் சொல்ல முயன்றாள்.

ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தவன், ''என்னம்மா, மரியாதை குறையுது!'' என்று அதிகாரமாக கேட்க,

''மரியாதை! இதுக்கு மேலே நீ ஒரு வார்த்தை பேசினே, உன் பேச்சுக்கு தகுந்த மரியாதை கொடுத்து அனுப்ப வேண்டி இருக்கும்!'' என்று அபிராமி வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள்.

''ஓ! நீ அவ்வளவு பெரிய ஆளா? ஒரே ஒரு கம்ப்ளைண்ட்... நீ இங்கே இத்தனை பொண்ணுங்களை வச்சு என்ன பண்றேன்னு கொடுத்தேன்னு வைய்யு...'' என்று அவன் பேசத் தொடங்கியதும்,

அதற்கு மேல் ஆத்திரத்தை அடக்க முடியாமல் எழுந்து நின்ற அபிராமி, ''இப்போ நீயா போறீயா? இல்லை கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளணுமா?'' என்று அடிக்குரலில் உறும,

அவள் குரலும் பார்வையும் அவனைக் கொஞ்சம் மிரளச் செய்ததோ?

''உன்னை கவனிக்க வேண்டிய விதத்தில கவனிச்சிக்கறேன்!'' என்று அவசரமாகச் சொல்லி விட்டு, கிளம்பினான்.

அவன் சென்றதும், தொப்பென நாற்காலியில் அமர்ந்த அபிராமிக்கு நெஞ்சு கொதித்துக் கொண்டிருந்தது.

'ச்சே... என்ன மாதிரி மனுஷங்க... உதவி செய்யலை என்றாலும் பரவாயில்லை... இப்படியா கீழ்த்தரமா நடந்துப்பாங்க... இவங்களை எல்லாம் நினைச்சாலே...' என்று அவள் உள்ளூர கொதித்துக் கொண்டிருக்கையில்,

''நெஞ்சு பொறுக்குதில்லையே... இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்'' என்று அறை வாயிலில் மழலையான குரல் கேட்டது.

சட்டென்று நிமிர்ந்து பார்த்த அபிராமிக்கு, அங்கே பாரதியின் வேஷத்தில் நின்ற மணிகண்டனைப் பார்த்ததும், அந்த பாரதியேதான் நேரில் வந்து விட்டாரோ என்று தோன்றியது. ஒரு வாரம் முன்பு, மணிகண்டன், பள்ளியில், பாரதியின் கவிதைகளை, பாரதி வேடமணிந்து பாடும் போட்டி இருக்கிறது என்று சொல்லி இருந்தது நினைவுக்கு வந்தது.

அதற்குள் மணியும் உள்ளே வந்தான்.

''எப்படி இருக்கு அக்கா பாரதியார் வேஷம்?'' என்று கொஞ்சம் கூச்சத்துடன் கேட்ட சிறுவனைப் பார்க்கும் போது, கொஞ்ச நேரம் முன்பு இருந்த இறுக்கம் தளர்ந்து அபிராமியின் இதழில் புன்னகை மலர்ந்தது.

''ரொம்ப நல்லா இருக்கு! இந்த வெட்கத்தை எல்லாம் விட்டுட்டு இன்னும் கொஞ்சம் நிமிர்ந்து நின்னா இன்னும் அழகா இருக்கும்... பாரதி ரொம்ப வீரமானவராக்கும்!'' என்று அபிராமி சொன்னதும், சிறுவன் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்து சிரித்துவிட்டு, ''நீங்க சொன்ன அந்த பெரிய பாட்டு கூட மனப்பாடம் செய்திட்டேனே! சொல்லட்டுமா அக்கா?'' என்று ஆர்வத்துடன் வினவ, சம்மதமாய் தலையாட்டினாள் அபிராமி.

''தேடிச் சோறு நிதந்தின்று – பல

சின்னஞ்சிறு கதைகள் பேசி – மனம்

வாடித் துன்பமிக உழன்று – பிறர்

வாடப் பலசெயல்கள் செய்து – நரை

கூடிக் கிழப்பருவம் எய்த – கொடுங்

கூற்றுக் கிரையெனப்பின் மாயும் – பல

வேடிக்கை மனிதரைப் போலே – நான்

வீழ்வேனென்று நினைத்தாயோ?''

தன் மழலைக் குரலில், உரிய ஏற்ற இறக்கத்துடன் சிறுவன் கவிதையைச் சொன்னதும், அந்த எம்.எல்.ஏ. வின் ஆள் பிரச்சனை கிளப்புவானோ என்று கொஞ்சம் கலக்கமுற்று இருந்த அபிராமியின் உள்ளக் கலக்கம் மறைந்து, புதிதாய் பிரச்சனையை சமாளிக்கும் ஒரு உத்வேகம் பிறந்தது.

''எப்படி சொன்னேன் அக்கா?'' என்று ஆவலுடன் தன் முகத்தைப் பார்த்துக் கேட்ட மணியின் முன் மண்டியிட்டு அமர்ந்த அபிராமி, அவன் கன்னத்தில் முத்தமிட்டு, ''உனக்குத்தான் இன்னைக்கு முதல் பரிசு கிடைக்கப் போகுது மணி!'' என்று வாழ்த்த, சிறுவனுக்கு முகம் மலர்ந்தது.

''அப்போ நான் ஸ்கூலுக்குக் கிளம்பறேன்!'' என்று சொல்லிவிட்டு மணி கிளம்ப, அறை வாயிலில் நின்று கொண்டிருந்த சூர்யா, குனிந்து மணியின் கையைப் பற்றிக் குலுக்கினான்.

''வாவ்! ரொம்ப அழகா சொன்னே மணி! நாளைக்கு நான் வரும்போது, கண்டிப்பா உனக்கு ஒரு பரிசு வாங்கிட்டு வரேன்!'' என்று சூர்யா சொல்ல, சிறுவன் மகிழ்ச்சியுடன், ''தேங்க்யூ சார்...'' என்று சொல்லி விட்டுப் போனான்.

அபிராமியிடம் திரும்பிய சூர்யா, ''என்ன ஆச்சு அபிராமி? ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?'' என்று

அக்கறையான குரலில் வினவ, அவனை ஆச்சரியத் துடன் நோக்கியவள், ''ஒண்ணுமில்லை!'' என்றாள்.

''ஏதாவது பிரச்சனையா? என்கிட்டே சொல்லக் கூடாதா?'' என்று அவன் மேலும் துருவ, ''பெரிசா ஒண்ணு மில்லை சார்!'' என்று விஷயத்தைச் சொல்லாமல் அபிராமி மழுப்ப,

''அப்போ ஏதோ இருக்குதான் இல்லையா? ஒரு பிரண்ட் என்ற முறையில நான் அதைத் தெரிஞ்சிக்கக் கூடாதா?'' என்று கொஞ்சம் குறையுடன் சூர்யா வினவ, ''அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை!'' என்ற அபிராமி, சற்று முன் நடந்த விஷயத்தை சொல்ல, சூர்யாவின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது.

கை முஷ்டியை மடக்கியபடி அவன் பேசாமல் நாற் காலியில் அமர, அவன் முகத்தைப் பார்த்த அபிராமி, தண்ணீர் பாட்டிலை எடுத்து அவன் அருகில் வைத்தாள். அவனுக்கும் அது தேவையாக இருக்கவே, எடுத்து அரை பாட்டில் தண்ணீரைக் குடித்தவன், ''அவனை சும்மாவா விட்டீங்க?'' என்று வினவினான்.

''வேற என்ன செய்யறது? அவன் சகதி வாரி அடிக் கிறானேன்னு நாமளும் அதையே செய்ய முடியுமா? அதுவும் இல்லாமல், இங்கே தேவையில்லாமல் எந்தப் பிரச்னையும் வேணாம்னு நினைச்சேன்!'' என்று மெல்லிய குரலில் சொல்லிய அபிராமி,

''இந்த இல்லம் ஆரம்பிச்ச காலத்தில் இருந்து நிறைய இடையூறுகளைச் சந்திச்சிருக்கேன்... இப்பவும் அந்த ஆள் ஏதாவது பிரச்சனை செய்தால் அதைச் சமாளிக்க முடியும் என்ற தைரியமும், நம்பிக்கையும் இருக்கு... இருந்தாலும் வீணான பிரச்சனைகள், இங்கே இருக்கிற

பெண்களோட மனதை பாதிக்கக் கூடாதேன்னு கொஞ்சம் கவலையா இருக்கு...'' என்று தன் கவலையை வெளியிட்டாள்.

''நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க! நான் பார்த்துக் கிறேன்...'' என்ற சூர்யா கிளம்ப எத்தனிக்க, ''என்ன விஷயம் சார்? திடீர்னு வந்திருக்கீங்க?'' என்று அபிராமி கேட்ட கேள்விக்கு,

புன்னகையுடன், ''பக்கத்தில கொஞ்சம் வேலையா வந் தேன்... சரி உங்களையும் பார்த்துட்டு போலாமேன்னுதான் இங்கே வந்தேன், சரி கிளம்பறேன்! கொஞ்சம் முக்கியமான வேலை இருக்கு!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

கண்ணம்மாவின் காதல்

''அத்தான்...''

''..........''

''அத்....தான்...''

''சொல்லுடா கண்ணம்மா!'' குழந்தைகளுடன் சேர்ந்து பட்டம் விட்டுக் கொண்டிருந்த கணவன், பட்டத் தில் கவனமாக இருந்தபடி சொன்னதும், அமைதியாக இருந்தாள் கண்ணம்மா.

பதில் ஏதும் வராமல் போகவே, திரும்பி பார்த்தவன், கண்களில் ரசனையுடன் மனைவி தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், குழந்தைகளிடம் இருந்து விலகி, மனைவியிடம் வந்து அருகில் அமர்ந்தபடி, ''என் னடா? இங்கே வைச்சு இப்படி ஒரு பார்வை பார்த்தா என்ன அர்த்தம்?'' என்று அவளது செவியருகில் கிசுகிசுக்க,

''ஏன்? ஏதாவது இருந்தாதான் நான் என் புருஷனைப் பார்க்கணுமா என்ன? நீங்க மட்டும் என்னை சைட் அடிச்சது இல்லையாக்கும்!'' என்றாள் மனைவி.

''வாவ்! என்னடா கண்ணம்மா இன்னைக்கு செம விருந்துதான் போல அய்யாவுக்கு!'' என்று குறும்புடன் சிரித்தவனுக்கு பதிலாக, கண்ணம்மாவின் கன்னங்கள் சிவந்தது.

ஆசையுடன் அவளது கன்னத்தை அவன் வருட, அவளும் மயக்கத்துடன் அவனது தோளில் சாய,

''அப்பா... நூல் அறுந்திடுச்சுப்பா... வாங்கப்பா!'' என்று குழந்தைகள் அழைத்தனர்.

சுற்றுலா வந்த இடத்தில, குழந்தைகள் எல்லாவற்றையும் ஆச்சரியத்துடன் ரசிக்க, அவர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்லியே இருவரும் ஓய்ந்து போனார்கள்.

நாள் முழுவதும் அலைந்த அலைச்சலில் குழந்தைகள் உறங்கி விட, இருவரும் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு தாங்கள் தங்கி இருந்த விடுதிக்கு வந்து சேர்ந்தனர்.

அயர்ந்து தூங்கிய குழந்தைகளைப் பார்த்தபடி, ''ஒரு நிமிஷம் நடக்கலையே! எப்பவும் ஒரே ஓட்டம்தான்... இப்போ பாருங்க எப்படி அடிச்சு போட்ட மாதிரி தூங்குதுங்க!'' என்று கண்ணம்மா சொல்ல,

''பரவாயில்லை விடு... நேற்று நைட் புது இடம் என்று தூங்காம ரெண்டும் செய்த அட்டகாசத்துக்கு இது தேவலை! இன்னைக்கும் நம்ம கச்சேரி அம்பேலோன்னு நான் பயந்திட்டே இருந்தேன்!'' என்று கண்ணடித்தான் கணவன்.

கணவனின் தோளில் சாய்ந்தபடி, ''ரொம்ப தேங்க்ஸ் அத்தான்!' என்றாள் கண்ணம்மா.

''எதுக்குடா?''

''இல்லை... உங்க வேலை எல்லாத்தையும் ஒதுக்கி வைச்சிட்டு நான் கேட்டேன்னு இங்கே கூட்டிட்டு வந்தீங்களே அதுக்கு!''

''எனக்கே உங்க கூட நேரம் செலவு செய்ய முடியலையேன்னு வருத்தமா இருந்ததுடா... இங்கே வந்ததில் எனக்கும் சந்தோஷம்தான்... குழந்தைங்ககூட எவ்வளவு சந்தோஷமா இருக்காங்க இல்லை? இனிமேல் இப்படி அடிக்கடி எங்கேயாவது போகணும்!''

''உங்க வேலையோட முக்கியத்துவம் தெரிஞ்சும், உங்களை அடிக்கடி இம்சை செய்யறேனே... அப்போ என்மேல உங்களுக்குக் கோபம் வருமா அத்தான்?''

''நீ என்னைக்கும் என்னைத் தொந்தரவு செஞ்சது கிடையாதேடா! நான் என் வேலையை நல்லபடியா பார்க்க முடியுதுன்னு அதுக்கு நீதான்டா காரணம்!'' ஆத்மார்த்தமாக சொன்ன கணவனிடம்,

''நிஜம்மா!'' என்று விழி விரித்துக் கேட்ட மனைவியின் குழந்தைத் தனத்தை மனதில் சீராட்டிக் கொண்டு,

''ஹே! கேள்வி பதில் போதும்! வேலையைக் கவனிப்போம் வா!'' என்று விட்டு அவளை அணைத்து முத்தமிட்டான்.

6

நாளை சித்ராவின் திருமணம் என்ற நிலையில், விருந்துக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த

அபிராமியின் கண்களில், அந்த எம்.எல்.ஏ.வின் மேனேஜர் செக்யூரிட்டியிடம் பேசிக் கொண்டிருப்பது பட்டது. அந்த ஆள் வந்தால், உள்ளே விடக்கூடாது என்று செக்யூரிட்டியிடம் அபிராமி சொல்லி இருந்தாள்.

தன் அறைக்கு வந்தவள், இன்டர்காமில் செக்யூரிட்டியிடம் விசாரிக்க, ''உங்களைப் பார்த்துட்டுதான் போவேன் என்று அடம் பிடிக்கிறார் அபிம்மா...'' என்றார் அவர்.

ஒரு கணம் யோசித்த அபிராமி, எந்த பிரச்சனை என்றாலும் சந்தித்துதானே ஆக வேண்டும் என்று எண்ணி, அந்த ஆளை உள்ளே விடுமாறு சொன்னாள்.

முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் அமர்ந்திருந்தவள், உள்ளே வந்தவன் சட்டென்று அவள் காலில் விழவும் பதறிப் போய் எழுந்தாள்.

''என்னை மன்னிச்சிடுங்கம்மா... ஏதோ தெரியாமல் தவறு நடந்து போச்சு... உங்களுக்கு எந்த உதவி வேண்டுமானாலும் சொல்லுங்கம்மா... நாங்க செய்யறோம்!'' என்று அவன் சொல்ல,

''நீங்க இந்த பக்கம் வராமல் இருப்பதுதான் ரொம்பப் பெரிய உதவி!'' என்று சொல்லி அவனை வெளியே அனுப்பினாள் அபிராமி.

அந்த ஆள் சென்றதும், மனதில் பாரம் அகன்றது போலிருந்தது.

நாளை திருமண விருந்து நடக்கும் வேளையிலோ, இல்லை இன்னும் இரண்டு நாட்கள் கழித்து தான் தீபாவுடன் மருத்துவமனைக்குச் செல்லும் நாளிலோ, இந்த ஆள் எதாவது பிரச்சனை கிளப்பினால் என்ன

செய்வது என்ற அச்சம் உள்ளுக்குள் இருந்து கொண்டு தான் இருந்தது. இப்பொழுது அந்த அச்சம் தீர்ந்தவுடன், இந்த ஆள் வந்து மன்னிப்பு கேட்டதற்கான காரணத்தை ஆராய்ந்தவளுக்கு, விஷயம் தெளிவாக விளங்கியது.

போனை எடுத்தவள், சூர்யாவுக்கு டயல் செய்தாள்.

முதல் மணியிலேயே அவன் போனை எடுக்க, ''தேங்க் யூ சார்! தேங்க் யூ சோ மச்! உங்களை மாதிரி ஒருத்தரோட நட்பு கிடைச்சதை நினைச்சு நான் ரொம்ப சந்தோஷப்படறேன் சார்!'' என்று மகிழ்ச்சிடன் அபிராமி சொல்ல, சூர்யா அமைதியாக இருந்தான்.

அவனிடம் இருந்து எந்த பதிலும் வராமல் போகவே, ''ஹலோ? சார்... லைன்ல இருக்கீங்களா?'' என்று விசாரித்தாள் அவள்.

சிறிது நேர மௌனத்துக்குப் பின், ''நீங்க உண்மையிலேயே என்னை ஒரு நண்பனா நினைக்கிறீங்களா அபிராமி?'' என்று சூர்யா வினவ,

''கண்டிப்பா!'' என்று உறுதியுடன் வந்தது அபிராமியின் பதில்!

''அப்போ... நீங்க எனக்கு இவ்வளவு நன்றி சொல்ல வேண்டியதில்லை... அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம்...'' என்று சொல்லிவிட்டு சூர்யா நிறுத்த,

''என்ன சார்?'' என்றாள் அவள்.

''இதுதான்... இந்த சார்... இதை கொஞ்சம் நிறுத்திட்டு என்னை பேர் சொல்லி கூப்பிடுங்க ப்ளீஸ்!''

''இவ்வளவுதானா? நீங்க கொடுத்த பில்ட் - அப்ல நான் என்னவோ ஏதோன்னு நினைச்சேன்!'' என்றவள், ''இனிமேல் நீங்களே கேட்டாலும் சார் போட

மாட்டேன்... ஓகேவா சூர்யா?'' என்று புன்னகையுடன் சொல்ல,

அவளது புன்னகை நிறைந்த முகம் மனதில் தோன்ற, நிறைவுடன் ''தேங்க்ஸ்...'' என்றான்.

''இப்போதான் எதோ தேங்க்ஸ் எல்லாம் சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டு இருந்தீங்க?'' என்று அவள் அவனை மடக்க, மனம் நிறைந்து சிரித்தான் அவன்.

அவளுடன் பேசும் ஆவலில், ஆனால் என்ன பேசுவது என்று தெரியாமல், ''என்ன செஞ்சுட்டு இருக்கீங்க?'' என்று விசாரித்த சூர்யாவிடம், சித்ராவின் திருமணத்தைப் பற்றி அபிராமி சொல்ல,

''வாவ்! ரொம்ப நல்ல விஷயம்! ஏன் அபிராமி, உங்க இல்லத்தில் ஒரு நல்ல விஷயம் நடக்குது... எனக்கு அழைப்பு இல்லையா?'' என்று கேட்டவனிடம் என்ன சொல்வது என்று புரியாமல் ஒரு கணம் யோசித்த அபிராமி, ''அழைக்கக் கூடாது என்று ஒண்ணுமில்லை சூர்யா... உங்களுக்கு டைம் இருக்கும் பட்சத்தில் நீங்க கண்டிப்பா வரலாம்... யூ ஆர் மோஸ்ட் வெல்கம்!'' என்றாள்.

''நாளைக்கு சன்டேதான்... அம்மாவோட வரேன்... அவங்களும் உங்களைப் பார்க்கணும் என்று சொல்லிட்டு இருந்தாங்க!''

''கண்டிப்பா கூட்டிட்டு வாங்க சூர்யா...!'' என்று சொல்லிவிட்டுப் போனை வைத்த அபிராமி, மதிய உணவுக்காக வீட்டுக்குக் கிளம்பினாள்.

அபிராமியைப் பார்த்ததும் ஒரு நிம்மதிப் புன்னகை பூத்த கற்பகத்திடம், ''என்னம்மா?'' என்று விசாரித்தார்.

''இல்லைடா... நேற்றில் இருந்து உன் முகம் சரியாவே இல்லை... இப்போதான் தெளிவா இருக்கு... அதான்...'' என்றவரிடம்,

''பெரிசா ஒண்ணுமில்லைம்மா... ஒரு சின்ன பிரச்சனை... உங்ககிட்ட சொன்னால் வருத்தப் படுவீங்கன்னு தான் சொல்லலை... இப்போ அது சால்வ் ஆயிடுச்சு...'' என்றவள், அந்த எம்.எல்.ஏ.வின் மேனேஜர் பிரச்சனையையும், சூர்யாவால் அந்த பிரச்சனை தீர்ந்ததையும் எடுத்து சொல்ல, கற்பகம் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

''ரொம்ப நல்லவரா இருக்காரே அந்த தம்பி!'' என்று கற்பகம் சூர்யாவைப் பாராட்ட,

''ம்ம்... ரொம்ப நல்லவர்!'' என்று புன்னகையுடன் பதில் தந்த அபிராமி, ''சித்ராவோட திருமண விருந்தில் கலந்துக்க, சூர்யாவும் அவங்க அம்மாவும் நாளைக்கு நம்ம இல்லத்துக்கு வராங்க...'' என்று சொன்னதும்,

''அப்படியா? ரொம்ப சந்தோசம்... நீங்க தம்பியைப் பற்றி சொல்லும் போதெல்லாம் எனக்கு அவரைப் பார்க்கணும் போலவே இருந்தது!'' என்று ஆர்வத்துடன் கற்பகம் சொல்ல,

''அவரைப் பார்க்க இவ்வளவு ஆர்வமா? நாளைக்கு வருவார்... பார்த்துக்கோங்க!'' என்று சொல்லி விட்டு அபிராமி இல்லத்துக்குக் கிளம்பினாள்.

* * *

உணவு முடிந்த பின் அன்னையிடம் பேசிக் கொண்டிருந்த சூர்யா, ''அம்மா... அபிராமியை பார்க்கணும்னு சொல்லிட்டே இருந்தீங்க இல்லை.. நாளைக்கு நாம அவங்களோட இல்லத்துக்குப் போறோம்! அங்கே ஒரு திருமண விருந்து இருக்கு!'' என்று சொன்னவுடன்,

''திருமணமா? யாருக்கு?'' என்று ஆச்சரியத்துடன் பவானி விசாரிக்க, சூர்யா சித்ராவின் விஷயத்தைப் பற்றிச் சொல்ல, பவானிக்கு அபிராமியைப் பார்க்கும் ஆவல் அதிகமானது.

அபிராமியைப் பற்றிப் பேசும்போது, மகனின் முகத்தில் தெரியும் பிரகாசம், அவளைப் பார்க்கும் ஆவலைத் தூண்டி இருந்தது என்றால், இப்போது அவள் இல்லத்தில் இருக்கும் பெண்களின் நலனில் கொண்டுள்ள அக்கறை, அந்த ஆவலை அதிகமாக்கியது.

சூர்யாவுக்கு அந்த பெண்ணின் மேல், காதல் என்று ஏதாவது வந்திருக்குமோ என்று அவருக்கு சந்தேகமாக இருந்தது. அவளைப் பற்றி பேச்சு வந்தால் உற்சாகமாகி விடுகிறானே தவிர, இவனும் வேறொன்றும் சொல்வதில்லை, என்று பவானி யோசித்துக் கொண்டிருக்க, சூர்யாவின் மனமும் அபிராமியைப் பற்றிய யோசனையில் தான் இருந்தது.

முதல் நாளே சூர்யாவிடம் அபிராமி ஏற்படுத்திய பாதிப்பு, அவளைப் பார்க்கும், அவளிடம் பேசும் ஒவ்வொரு நாளும் அதிகமாகிக் கொண்டே இருந்தது. ஆனால், அவள் இப்போதுதான் தன்னை ஒரு நண்பனாய் ஏற்றுக் கொண்டு பெயர் சொல்லி அழைக்க ஆரம்பித்திருக்கிறாள் என்ற நிலையில், தன் மனதை வெளியிடும் நேரம் இன்னும் வரவில்லை என்றே அவனுக்குத் தோன்றியது.

''ராஜா! அபிராமி பார்க்க எப்படி இருப்பா?'' தன் சிந்தனையில் மூழ்கி இருந்த சூர்யாவை அன்னையின் கேள்வி தன்னிலைக்கு மீட்டு வந்தது.

''ம்ம்... எப்படின்னா? நீங்கதான் நாளைக்குப் பார்க்கப் போறீங்களே அம்மா!'' என்று மகன் தடுமாற்றத்துடன் உரைக்க,

அவனது தடுமாற்றம் பவானியின் சந்தேகத்தை உறுதி செய்ய, அவனை அதற்கு மேல் துருவாமல் அமைதியாக இருந்தார்.

* * *

''எனக்காக அபி... இன்னைக்கு ஒரு நாள்... இந்த பட்டுப் புடவையைக் கட்டிக்கோ...'' என்று கற்பகம், பட்டுப் புடவை கட்ட மாட்டேன் என்று மறுத்துக் கொண்டிருந்த அபிராமியிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்.

''என்னம்மா இது? இதுவே நல்லாதானே இருக்கு?'' என்று மறுத்துக் கொண்டிருந்தவள், ''ஆமாம்... ரொம்ப நல்லா இருக்கு... வயசுக்கேத்த மாதிரி ட்ரஸ் செய்யாம, எப்ப பாரு காட்டன் புடவையும், கொண்டையும்! பத்தாததற்கு இந்தக் கண்ணாடி வேற!'' என்று கற்பகம் சலித்துக் கொண்டதும்,

''அம்மா ப்ளீஸ்! ஆரம்பிக்காதீங்க... இப்போ என்ன... இந்த புடவையைக் கட்டிக்கணும்! அவ்வளவுதானே? கொடுங்க!'' என்று அவரிடம் இருந்து படவையை வாங்கி, கட்டிக் கொண்டு வந்தவளைப் பார்க்க, கற்பகத்தின் மனம் நெகிழ்ந்து, கண்களில் நீர் கோர்த்தது.

அவரது மனம் புரிந்தவளாய், ''என்னம்மா இது? நீங்க கண்ணீர் விடற அளவுக்கு அசிங்கமாவா இருக்கேன்?'' என்று அபிராமி அவரை கேலி செய்ய,

அவள் தன்னைக் கேலி செய்ததைக் கண்டு கொள்ளாமல், ''இப்படி உட்கார்!'' என்றவர், அவளது நீண்ட

கூந்தலை தளர்வாகப் பின்னி, பூ வைத்துவிட்டு, கன்னத்தை வழித்து திருஷ்டி எடுத்தார்.

இல்லத்தில் இருந்தவர்களும், அவளது இந்த மாற்றத்தை ரசித்துப் பாராட்ட, அபிராமி ஒரு மெல்லிய புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டாள்.

கோவிலில் திருமணம் முடிந்து, மதிய விருந்துக்கென இல்லத்தில் எல்லாரும் கூடி இருந்தார்கள்.

அன்னையுடன் உள்ளே நுழைந்த சூர்யாவைப் பார்த்ததும், அபிராமி, ''அம்மா... அங்கே பாருங்க... அவர்தான் சூர்யா... அவங்க அம்மாவும் வந்திருக்காங்க... வாங்க!'' என்று கற்பகத்தை அழைத்து சூர்யாவை வரவேற்கச் சென்றாள்.

உள்ளே நுழைந்ததுமே அபிராமியைத் தேடிய சூர்யா வின் பார்வையில், பட்டுப் புடவையில், மெல்லிய அலங்காரத்துடன் இருந்த அபிராமி பட, அவன் பார்வை அவளை விட்டு வேறெங்கும் நகர மறுத்தது. அவளது எளிய தோற்றத்திலேயே அவளை ரசித்துக் கொண் டிருந்தவனுக்கு, இந்த இனிய மாற்றம் இன்பமான அதிர்ச்சியாய் இருந்தது.

''அபிராமி எங்கே?'' என்று கேட்க நினைத்து மக னிடம் திரும்பிய பவானி, அவன் சிலையாய் நின்றிருக் கவும், அவனது பார்வை பதிந்திருந்த இடத்திற்கு தன் பார்வையைத் திருப்ப, வேதனையாய் நின்றிருந்த அபிராமி தென்பட்டாள். அவருக்கும் மனம் நிறைந்தது.

அதற்குள், அபிராமி ஒரு பெண்மணியோடு தங்களை நோக்கி வருவதைக் கண்டவர், ''ராஜா! நம்மகிட்ட வராளே.. அதுதான் அபிராமியா?'' என்று கேள்வி கேட்டு, மகனை சுய நினைவுக்குக் கொண்டு வந்தார்.

''ம்ம்ம்... ஆமாம் அம்மா!'' என்றவன் தன்னை சமாளித்துக் கொண்டு, அபிராமியிடம் பவானியை அறிமுகம் செய்து வைத்தான்.

''வாங்க ஆன்ட்டி! நீங்க வந்ததில எங்களுக்கு ரொம்ப சந்தோசம்!'' என்று விட்டு, கற்பகத்தை அவர்கள் இரு வருக்கும் அறிமுகம் செய்து வைக்க, கற்பகமும் இரு வரையும் புன்னகையுடன் வரவேற்றார்.

தாங்கள் வாங்கி வந்திருந்த பரிசை, புது மணத் தம்பதியருக்கு கொடுத்துவிட்டு, முத்துவிடம் பேசிக் கொண்டிருந்த சூர்யா, எந்த உதவி வேண்டுமானாலும், தன்னைக் கேட்குமாறு சொல்ல, அதைக் கேட்டிருந்த கற்பகத்துக்கு சூர்யாவின் மேல் மரியாதை கூடியது.

அங்கே இருந்த முழு நேரமும், தன் பார்வையால் அபிராமியை வருடிக் கொண்டிருந்த சூர்யாவைக் கண்ட பவானிக்கு உள்ளம் நிறைந்தது. திருமணம் பற்றிய எண்ணமே இல்லாமல் இருக்கிறானே என்று வருந்திக் காண்டிருந்தவர், சூர்யாவின் மன மாற்றத்தில் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

பவானியைத் தவிர, சூர்யாவைக் கண்டு கொண்ட இன்னொரு ஜீவன் கற்பகம்! அபிராமியை காணும் போதெல்லாம் மலரும் சூர்யாவையும், அவனிடம் இயல்பாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்த அபிராமியை யும் பார்த்த கற்பகத்தின் மனதில் ஒரு ஆசை தோன்ற, அந்த ஆசை நிறைவேற கடவுளைப் பிரார்த்தித்தது அவரது உள்ளம்!

இவர்களது எண்ணம் எதையுமே உணராமல், இயல் பாக வளைய வந்து கொண்டிருந்த அபிராமியின் கண் களில் தீபா பாட, வேகமாக அவளருகில் சென்றாள்

''தீபா! என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்று அபிராமி பதட்டத்துடன் விசாரிக்க,

''லேசா இடுப்பு வலிக்கிற மாதிரி இருக்கு!'' என்றவளின் பதிலில் அபிராமியின் பதட்டம் கூடியது.

'கடவுளே! வலி வருவதற்கு முன்னாடி சிசேரியன் செய்யணும் என்று டாக்டர் சொல்லி இருந்தாங்களே... ட்யூ டேட்டுக்கு இன்னும் நாள் இருக்கே!'' என்று எண்ணியவளின் விரல்கள், கைப்பேசியில் டாக்டரின் நம்பரை அழுத்தியது.

''டாக்டர்! நான் அபிராமி பேசறேன்... தீபா... தீபா வலி இருக்கிற மாதிரி இருக்குன்னு சொல்றாள் டாக்டர்!'' என்று பதட்டத்துடன் மொழிய,

''ஓ! மை காட்! நாளைக்குத்தானே அவளை அட்மிட் செய்யச் சொல்லி இருந்தேன்... இப்பவே வலி வந்திருச்சா?'' என்ற டாக்டர்.

''அபிராமி! இது பால்ஸ் பெயினா இருக்கலாம். இருந்தாலும் சீக்கிரம் ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டு வந்திடுங்க... நானும் உடனே கிளம்பி வரேன்!'' என்றார்.

வீட்டுக்குக் கிளம்பலாம் என்று அபிராமியிடம் சொல்லிக் கொள்ள வந்த சூர்யா, அவளது பதட்டமான முகத்தைப் பார்த்ததும், ''அபி! என்ன ஆச்சு?'' என்று விசாரிக்க, நிலைமையைச் சொன்ன அபிராமி, கால் டேக்சியை அழைக்க எண்ணி போனை எடுத்தாள்.

''வேண்டாம் அபி... என் கார்லேயே கூட்டிட்டுப் போகலாம்!''

அன்னையை அழைத்தவன் விவரத்தைச் சொல்லி விட்டு, ''அம்மா... நீங்க நம்ம டிரைவரை வரவழைச்சு

வீட்டுக்குப் போய்டுங்க... நான் இவங்களோட ஹாஸ்பிடலுக்குப் போறேன்'' என்றவன், அதற்கு மேல் தாமதிக்காமல் இருவரையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

கண்களில் பயத்தோடு இருந்த தீபாவின் கைகளைப் பற்றிக் கொண்டு தைரியம் தரும் வார்த்தைகளை சொல்லிக் கொண்டு வந்தாள் அபிராமி.

மருத்துவமனையை அடைவதற்குள், தீபாவுக்கு வலி அதிகமாகி இருந்தது.

இவர்கள் போவதற்குள், டாக்டரும் வந்திருக்க, தீபாவை உடனடியாக சிகிச்சை அறைக்குள் கொண்டு சென்றார்கள்.

எப்போதும் கம்பீரமாய் பார்த்திருந்த அபிராமியை, பதட்டத்துடன் பார்த்த சூர்யாவுக்கு வருத்தமாக இருந்தது.

''பதட்டப்படாதீங்க அபி...'' என்று ஆறுதல் சொன்ன சூர்யாவிடம், தீபாவைப் பற்றிய முழு விவரங்களையும், இப்போதைய நிலையையும் எடுத்துச் சொல்ல, அவனுக்கும் மனம் கனத்துப் போனது.

சிறிது நேரத்தில் டாக்டர் வெளியே வர, ''டாக்டர்... என்ன ஆச்சு டாக்டர்?'' என்று அபிராமி தடுமாற்றத்துடன் கேட்டாள்.

''என்ன சொல்றதுன்னே தெரியலை அபிராமி... இதுக்குதான் ட்யூ டேட்டுக்கு பத்து நாள் முன்னாடியே ஆபரேஷன் செய்யலாம்னு சொல்லி இருந்தேன்... பட் இவ்வளவு சீக்கிரம் வலி வரும் என்று நானே எதிர்பார்க்கலை... இப்போ தீபாவோட நிலைமை ரொம்ப மோசமா இருக்கு... இப்போ ஒண்ணும் சொல்ல முடியாது

அபிராமி... குழந்தைகளை பத்திரமா எடுக்க ட்ரை செஞ்சுட்டு இருக்கோம்... எங்க சீனியரை வரச் சொல்லி இருக்கேன்... முடிந்தவரை மூணு பேரையும் காப்பாற்ற முயற்சி செய்யறோம்!'' என்று பெரிதாக நம்பிக்கை அளிக்காத வண்ணம் சொல்லியவர், உள்ளே வந்து கொண்டிருந்த மற்றொரு டாக்டரை அழைத்துக் கொண்டு சிகிச்சை அறைக்குள் நுழைய, கண்கள் கலங்க சோர்வுடன் வெளியே இருந்த நாற்காலியில் அமர்ந்தாள் அபிராமி.

கண்ணம்மாவின் காதல்

''சாப்பிடுங்கடா செல்லங்களா!'' சாப்பிட அடம் பிடித்த தன் மக்கட்செல்வங்களிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள் கண்ணம்மா!

''ம்ஹூம்... இன்னைக்கு அப்பா வந்து ஊட்டி விட்டா தான் சாப்பிடுவேன்...'' என்று அவர்கள் அடம் பிடித்தது கோபத்தை வர வைத்தாலும், எங்கே அம்மா வாயில் உணவை வைத்து விடுவாளோ என்று அழுந்த மூடிக் கொண்டு இருந்த இருவரையும் பார்க்க சிரிப்புதான் வந்தது.

''அப்பா வர லேட்டாகுமே! அது வரைக்கும் சாப்பிடாமல் இருந்தா குட்டி தொல்லைக்கு வலிக்குமே!''

பசி தாங்காத தன் பிள்ளையின் வயிற்றைத் தொட்டு கண்ணம்மா சொல்ல, அவன் அம்மாவிடமே உணவை வாங்கிக் கொள்ளலாமா என்று யோசிக்கும் வேளையில்,

''இன்னைக்கு அப்பா சீக்கிரமே வரேன் என்று சொல்லிட்டுப் போய் இருக்கார் இல்லை?'' என்று தன் சகோதரனை அதட்டினாள் தங்கை.

''இந்த வயசில என்ன அதிகாரம் பார்!'' என்று எண்ணினாலும், அந்த பேச்சும் அன்னைக்கு புன்னகையைத் தான் வரவழைத்தது.

உள்ளே சப்தமில்லாமல் நுழைந்து இங்கே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த தந்தையைக் கவனித்த பெண், ''ஹய்யா! நான் சொன்னேன் இல்லை? அப்பா சீக்கிரம் வந்துடுவார்னு!'' என்று சொல்லிக் கொண்டே போய் அவனது கால்களைக் கட்டிக் கொள்ள, ஆசையுடன் குழந்தையைத் தூக்கிக் கொண்டான் தந்தை.

''அப்பா, என்னையும் தூக்குங்க!'' என்று ஓடி வந்த மகனையும் தூக்கிக் கொண்டான்.

''ஹப்பா வந்துட்டீங்களா? உங்க கிட்டதான் சாப்பிடுவோம் என்று ரெண்டு பேரும் ஒரே அடம்!'' என்று சலித்தபடி கணவனை வரவேற்றவள்,

''நீங்க போய் குளிச்சுட்டு வாங்க... எல்லாருமே சாப்பிடலாம்'' என்றாள்.

''இதோ வந்துடறேன்! நாம மொட்ட மாடிக்கு போய் நிலாச்சோறு சாப்பிடலாமா குட்டீஸ்?'' என்று தந்தை கேட்டவுடன்,

''ஹய்யா ஜாலி!'' என்று குதித்தனர் குழந்தைகள் இரவரும்.

''ஓகே! அம்மா கூட எல்லாத்தையும் மேலே எடுத்துட்டுப் போக ஹெல்ப் பண்ணுங்க... போங்க... போங்க!'' என்று சொல்லிவிட்டு குளியலறைக்குச் சென்றான்.

கதை பேசியபடியே தன் மூன்று குழந்தைகளுக்கும் அவன் ஊட்டி விட, ''நீங்களும் சாப்பிடுங்க அத்தான்!'' என்றாள் மனைவி.

''நான் மட்டும் உங்களுக்கு ஊட்டி விடணும்! நீங்க எனக்கு ஊட்டி விட மாட்டீங்களா?'' என்று அவன் கேட்டு முடிப்பதற்குள், ''நான் ஊட்டறேன்பா...'' என்று

மகனும், ''நான்தான் ஊட்டுவேன்'' என்று மகளும், தங்கள் சொப்பு கைகளால் தந்தைக்கு ஊட்டி விட ஆரம்பித்தனர்.

''இன்னைக்கு சாப்பாடு ரொம்ப நல்லா இருக்கில்லப்பா? அம்மா நல்லா செஞ்சுருக்காங்க!'' என்று மகன் பாராட்ட,

''அம்மா எப்பவும் போல சுமாராதன் சமச்சிருக்கா கண்ணா... அப்பா ஊட்டி விடறேன் இல்லை, அதான் நல்லா இருக்கு!'' என்று மனைவி தனக்கு ஊட்டி விடவில்லை என்ற குறையில் கேலி செய்தான் கணவன்.

தன்னுடைய முறைப்பைக் கண்டு கொள்ளாமல் ஊட்டி விட்ட கணவனது விரல்களை நறுக்கென்று கடித்து பதில் கொடுத்தாள் மனைவி.

''ஆ...''

''என்னப்பா?'' என்று குழந்தைகள் பதற,

''ம்ம்ம்... உங்க அம்மாவுக்கு நான் கொடுத்த சாப்பாடு போதலையாம்... என் விரலையும் சேர்த்து சாப்பிட பார்க்கிறா...'' என்றான் தந்தை.

குழந்தைகள் உறங்கியதும், தனது விரல்களை நீவிக் கொண்டிருந்த கணவனிடம், ''ரொம்ப வலிக்குதா என்ன?'' என்று கவலையுடன் விசாரித்தாள் கண்ணம்மா.

''பின்னே... இன்னும் கொஞ்சம் கடிச்சிருந்தே... கட் ஆயிருக்கும்!''

''சாரி அத்தான்!'' என்றபடி கணவனது விரல்களை அவள் மென்மையாக நீவி விட,

''ம்ஹூம்... இப்படி எல்லாம் செஞ்சா வலி போகாது!'' என்ற கணவனை அவன் கேள்வியாக நோக்க,

''கடிச்ச இடத்தில்தான் வலிக்கு மருந்தும் இருக்கு!'' என்று அவன் குறும்பு புன்னகையுடன் சொன்னதும், முகத்தில் முறுவல் மலர, அவனது விரல்களில் மென்மையாக தன் இதழ்களைப் பதித்தாள் மனைவி.

''டோஸ் கம்மியா இருக்கே, நானே எடுத்துக்கவா?'' என்று கிறக்கமான குரலில் கேட்டபடி தன் மனைவியை நோக்கி குனிந்தான் அவளது அத்தான்.

7

''பட்டுக்குட்டி, செல்லக்குட்டி, எதுக்கு அழறீங்க? இவ்வளவு நேரம் உங்களை கொஞ்சலை என்று அழறீங்களா? அழக்கூடாது... இங்கே பாருங்க.. இங்கே பாருங்க... இப்போ பாப்பாவை மட்டும்தான் கொஞ்ச போறேன்... பாப்பா அழக்கூடாதாம்... எங்க பாப்பா சமத்து ஆச்சே!''

சம்மணமிட்டு அமர்ந்து மடியில் குழந்தையை வைத்துக் கொண்டு, குழந்தையிடம் ராகம் போட்டுக் கொஞ்சிக் கொண்டிருந்தாள் அபிராமி.

இவ்வளவு நேரம் அழுது கொண்டிருந்த குழந்தைக்கு, அவளது கொஞ்சல் தாலாட்டாக இருந்ததோ? அழுகையை நிறுத்திவிட்டு, மெல்ல கண்ணுறங்கத் துவங்கியது.

குழந்தையின் பட்டுக் கன்னத்தில் இருந்த கன்னக் குழியை, பூவிதழை வருடுவதைப் போல வருடிக் கொடுத்தாள் அபிராமி. அந்த சின்ன வருடல் கூட

பொறுக்காமல், குழந்தை சிணுங்கத் துவங்க, மெல்ல தட்டிக் கொடுத்து உறங்க வைத்தாள்.

குழந்தை ஆழ்ந்து உறங்கத் தொடங்கியதும், தூக்கிக் கொண்டு வந்து, ஏற்கனவே தூங்கிக் கொண்டிருந்த குழந்தையிடம் இருந்து கொஞ்சம் இடைவெளி விட்டு, படுக்கையில் கிடத்தியவள், படுக்கையின் ஓரத்தில் அமர்ந்து, கண்களில் கனிவுடன் குழந்தைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'தூங்கறப்போ குழந்தைகளை உத்து உத்து பார்க்கக் கூடாது!' என்று கற்பகம் சொன்னது நினைவு வர, பார்வையைக் குழந்தைகளிடம் இருந்து திருப்பியவளின் மனதில், ஒரு மாதத்துக்கு முன்னர் நடந்தது படமாய் விரிந்தது.

* * *

தீபாவுக்கு சிகிச்சை நடக்கும் அறைக்குள் மருத்துவர் சென்றதும், ''உங்களுக்கு வேலை இருந்தால் கிளம்புங்க சூர்யா!'' என்ற அபிராமியை விட்டு விட்டு போக சூர்யா வுக்கு மனம் வரவில்லை.

''இல்லை இருக்கட்டும்! ஏதாவது தேவைன்னா உத விக்கு ஆள் இருக்கிறது நல்லது!'' என்றவன், அவளை விட்டு நகரவில்லை.

மூன்று மணி நேரம் கழித்து, வெளியே வந்த டாக் டரை, பயம் கலந்த ஆர்வத்தோடு எதிர்கொண்ட அபிராமி யிடம்,

''குழந்தைகளை ஒரு வழியா நல்லபடியா எடுத்திட் டோம் அபி... தீபா... அவளுக்காகத்தான் ஓவர் ப்ளீடிங் ஆகுது... மயக்கத்தில்தான் இருக்கா... எங்களால் முடிந்த

எல்லாம் செஞ்சிருக்கோம்... பிட்ஸ் வராம இருந்தால், பிழைக்க கொஞ்சம் வாய்ப்பு இருக்கு... இல்லைன்னா...'' அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் டாக்டர் நிறுத்த, திரையிட்ட கண்களை வேகமாகத் துடைத்த அபிராமி,

''வேற... வேற எதுவும் செய்ய முடியாதா டாக்டர்?'' என்றபோது, கட்டுப்பாட்டை மீறி குரல் நடுங்கியது.

''முன்னாடியே சொன்னதுதான் அபி... குழந்தைகளை நல்லபடியா எடுக்க முடிஞ்சதே பெரிய விஷயம்!''

இப்போது அவளையும் அறியாமல், கண்ணீர் கரை கடந்து வழிந்தது.

''என்ன... என்ன குழந்தைகள் டாக்டர்?''

''ஒரு பொண்ணு! ஒரு பையன்! உள்ளே வந்து பாரு!'' என்றார் டாக்டர்.

'நான் நல்லபடியா பிழைச்சுக்குவேன்தான் அக்கா?' என்று வரும் வழியில் தீபா வினவியது, நினைவுக்கு வர, குழந்தைகளைப் பார்க்கும் ஆவல் இருந்தாலும் அபிராமி தயங்கி நின்றாள்.

அவளது தயக்கத்தைப் புரிந்து கொண்ட டாக்டர், ''குழந்தைகளை வேற ரூமுக்கு மாத்தியாச்சு!'' என்றார்.

குழந்தைகள் இருந்த அறைக்குள் சென்றதும் இனம் புரியாத உணர்வு அவள் மனதை அழுத்தியது.

படபடத்த நெஞ்சை ஒரு கையால் அழுத்தியபடி, குழந்தைகளின் அருகில் சென்றவளுக்கு, ஏனோ உடல் நடுங்கியது.

நிற்க முடியாமல், படுக்கையின் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தவள், நடுங்கும் விரல்களால்

குழந்தைகளின் பாதங்களை வருட, அவள் தேகமெங்கும் ஒரு சிலிர்ப்பு ஓடி மறைந்தது.

கண்களை மூடி அந்த சிலிர்ப்பை உணர்ந்தவளின் கண்களில், கண்ணீர் நிறைந்து கன்னத்தில் வழிந்தது.

'கடவுளே! இதென்ன இன்றைக்கு இவ்வளவு உணர்ச்சி வசப்படுகிறேன்!'' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டவளுக்கு, காரணமும் விளங்கவில்லை. தன் உணர்ச்சிப் பெருக்கை அடக்கும் வழியும் தெரியவில்லை.

எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்திருந்தாளோ, குழந்தையின் அழுகுரல் சுய நினைவுக்கு மீட்டு வந்தது.

குழந்தையின் அழுகுரல் மனதைப் பிசைய, அருகில் இருந்த நர்சிடம், ''குழந்தை அழுது, நர்ஸ்! கொஞ்சம் சீக்கிரம் என்னன்னு பாருங்களேன்!'' என்று பதறினாள்.

விசித்திரமாக அவளைப் பார்த்த அந்த நர்ஸ், ''ம்ம்ம்... பால் குடுக்கணும்!'' என்றபடி குழந்தையை கவனிக்க ஆரம்பித்தாள்.

தாய்ப்பால் குடிக்க வேண்டிய நேரத்தில், பவுடர் பால் குடித்துக் கொண்டிருந்த குழந்தைகளின் நிலையை எண்ணி, வேதனையுடன் நின்று இருந்தவளை, ''மேடம் உங்களைக் கூப்பிடறாங்க!'' என்ற இன்னொரு நர்சின் குரல் அழைக்க, அவசரமாகத் திரும்பி குழந்தைகளை ஒரு முறை பார்த்த அபிராமி பதட்டத்துடன் டாக்டரைக் காணச் சென்றாள்.

டாக்டரின் முகமே விஷயத்தைச் சொல்லி விட, 'என்ன ஆச்சு டாக்டர்?' என்று கேட்க நினைத்த வார்த்தைகள் தொண்டையை விட்டு வெளியே வர மறுத்தது.

''சாரி அபி! எவ்வளவு முயற்சி செய்தும் தீபாவைக் காப்பாற்ற முடியலை!''

வேதனையுடன் ஒலித்த டாக்டரின் வார்த்தைகளை ஏற்க முடியாமல், நம்பப் பிடிக்காமல் நின்று இருந்த அபிராமியின் செவியில், 'நானும் சுதாவும் எங்க குழந்தை கிட்ட எப்படி எல்லாம் பாசமா இருக்கணும்னு சொல்லிட்டு இருப்போம் தெரியுமாக்கா? இப்போ அவர் இல்லை... இந்த பிரசவத்தில் நானும் போயிட்டா, எங்களை மாதிரியே எங்க குழந்தைகளும் அனாதையாதான் வளருவாங்களா அக்கா?' என்று தீபா அவ்வப்போது கலக்கத்துடன் கேட்பது ஒலித்தது.

தன்னை அறியாமல் காதுகளைப் பொத்திக் கொண்ட, அபிராமியின் மூடிய இமைகளுக்குள், கொஞ்ச நேரம் முன்பு பார்த்திருந்த பச்சிளம் குழந்தைகள் தோன்ற, வாய் விட்டு அழ ஆரம்பித்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த சூர்யாவுக்கே மனம் கலங்கி போய் இருந்தது.

அபிராமி அழுவதை வேதனையுடன் பார்த்தவன், அவள் அழுகை இப்போதைக்கு நிற்பதாக இல்லை என்றதும்,

''அபி.. ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர்செல்ப்!'' என்று கனிவுடன் தேற்றினான்.

மருத்துவமனைக்கு வந்த தாய் இல்லத்தின் நிர்வாகி அன்னபூரணி குழந்தைகளை எடுத்துச் செல்கிறேன் என்றபோது, ''இல்லை மேடம்! நானே கூட்டிட்டுப் போறேன்!'' என்று சொல்லி விட்டாள் அபிராமி.

''நீ எப்படி அபி இவ்வளவு சின்ன குழந்தைகளைப் பார்த்துக்க முடியும்... எங்க இல்லத்தில் என்றால் ஆளுங்க இருக்காங்க!'' என்று அவர் தயங்க,

''ப்ளீஸ்... கொஞ்ச நாளைக்காவது! முடியலைன்னா நானே உங்க இல்லத்தில் விட்டுடறேன்!'' என்று அபிராமி இறைஞ்ச, அவரும் ஒப்புக் கொண்டார்.

* * *

பழைய நினைவில் ஆழ்ந்திருந்த அபிராமியை, ''என்ன அபி? குழந்தைகள் தூங்கிட்டாங்க இல்லை? வந்து சாப்பிடு!'' என்ற கற்பகத்தின் குரல் நடப்புக்கு கொண்டு வந்தது.

''இதோ வரேன்மா!'' என்ற அபிராமி, புன்னகையுடன் குழந்தைகளைப் பார்த்துவிட்டு, உணவருந்த சென்றாள்.

உணவருந்தும் நேரம் முழுவதும், வாய் ஓயாமல் குழந்தைகளைப் பற்றியே பேசிக் கொண்டிருந்த அபி ராமியை புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தாலும், கற்பகத்தின் மனதில் சஞ்சலமும் எழுந்தது.

இந்த ஒரு மாதமாய், இல்லத்து வேலைகளைக் கூட குறைத்துக் கொண்டு குழந்தைகளிடமே அதிக நேரம் செலவிட்டுக் கொண்டிருந்தாள் அபிராமி.

இந்த ஐந்து வருடங்களாக, எதற்கும் பதட்டப்படாமல் அமைதியாக எல்லாவற்றையும் கையாளுகிறவள், இப்போது குழந்தைகளுக்கு விக்கல் வந்தால் கூட பதறிப் போகிறாள்.

யாரையும் தொந்தரவு செய்யாத குணமுடையவள், குழந்தைகளுக்காக டாக்டரை அடிக்கொரு தரம் அழைத்து சந்தேகம் கேட்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக் கிறாள்.

குழந்தைகளின் மேல் இப்படி அதீத அன்பு வைப்பது, அவளுக்கு நல்லதில்லை என்று கற்பகத்துக்கு தோன்றியது.

அவள் உண்ணும் வரை அமைதியாக இருந்த கற்பகம், ''குழந்தைகளைப் பற்றி என்ன முடிவு செஞ்சிருக்கே அபி?'' என்று வினவ, ஒன்றும் புரியாமல் விழித்தாள் அபிராமி.

''என்னம்மா? என்ன முடிவு செய்யணும்?''

''இல்லை... நாமே ரொம்ப நாளைக்கு வைச்சிட்டு இருக்க முடியாது... தாய் இல்லத்தில் விடணுமே? அன்னபூரணி அம்மா கூட அப்படித்தானே சொல்லி இருக்காங்க?''

கற்பகத்தின் கேள்வியில், அபிராமியின் மனதில் கலவரம் மூண்டது.

''எதுக்கும்மா அங்கே விடணும், இங்கேயே இருக்கட் டுமே?''

பரிதவிப்புடன் அவள் வினவ, அவளது தவிப்பைப் பார்க்க வருத்தமாக இருந்தாலும், சொல்ல வேண்டி யதை சொல்லித்தானே ஆக வேண்டும் என்றெண்ணிய கற்பகம்,

''தாய் இல்லத்தில் விட்டால்தானே, அந்த குழந்தை கள் ஒரு நல்ல குடும்பத்துக்கு தத்துக் குழந்தைகளா போக முடியும்?'' என்றார்.

கற்பகத்தின் கேள்வியில் நிலை குலைந்து நின்றாள் அபிராமி.

அபிராமியின் திகைத்த தோற்றத்தைக் கண்ட கற் பகத்துக்கு அவளது மனநிலை புரிந்தது.

அதிகப் பாசம் வைத்த பிறகு, குழந்தைகளைப் பிரிவது அபிராமிக்கு இன்னமும் கடினமாக இருக்கும் என்று எண்ணியவர், அதிர்ந்து போய் நின்று கொண்டிருந்த அபிராமியின் கரங்களைப் பற்றிக் கொண்டு,

''அபி... இந்த குழந்தைகள் ஒரு நல்ல குடும்பத்தில வளர்ந்தாதானே தீபாவோட ஆன்மாவுக்கும் சாந்தி கிடைக்கும்! அன்னபூரணி அம்மா போன் செய்திருந் தாங்க... ரெண்டு மூணு பேர் நல்ல குடும்பத்தில இருந்து, சின்னக் குழந்தைகளை தத்து எடுக்க வராங்களாம்! அப்படிப்பட்ட ஆட்கள் வரும்போதே, இந்த குழந்தை களுக்கு வழி செய்திடலாம் என்று சொன்னாங்க!'' என்று மென்மையாக எடுத்துக் கூற, சிலையாய் நின்றிருந்த அபிராமிக்கு உணர்வு வந்தது.

பார்த்த நாள் முதல், இந்த ஒரு மாதமாய் தன் குழந்தை களாகவே எண்ணி இருந்த குழந்தைகளைப் பிரிவது சாத்தியமே இல்லை என்பது அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

தன்னைத் தாயாய் உணர வைக்கும் குழந்தைகளைப் பிரிவதா?

அந்த எண்ணமே, மனதில் வலியை ஏற்படுத்த, ஒரு தீர்மானத்தோடு நிமிர்ந்தவள், ''அம்மா! குழந்தைகள் இங்கேயே இருக்கட்டும்... நான் அவங்களை தாய் இல் லத்தில் விடப் போறதில்லை!'' என்று அறிவித்தாள்.

அபிராமியின் வார்த்தைகளில் திகைத்து நின்ற கற்பகம் சமாளித்துக் கொண்டு, ''அபி... அந்த குழந்தை களுக்கு ஒரு நல்ல குடும்பம் அமையறதை நாம ஏன் தடுக்கணும்?'' என்று வேகத்துடன் வினவினார்.

''ஏன் வேற குடும்பத்தில் வளரணும் என்று நினைக் கறீங்க அம்மா? நம்ம குடும்பத்திலேயே வளரலாமே?'' என்ற அபிராமியை, கற்பகம் அதிர்ச்சியுடன் நோக்க, அவரை நேராகப் பார்த்த அபிராமி,

''நான் இந்த குழந்தைகளைத் தத்து எடுக்கப் போறேன்!'' என்று உறுதியான குரலில் மொழிந்தாள்.

இப்போது நிலை குலைந்து போய் நிற்பது கற்பகத்தின் முறையாயிற்று.

நம்ப முடியாமல் அவளை நிமிர்ந்து பார்த்தவரின் கண்களில், அபிராமியின் உறுதி தென்பட்டு, மனதைப் பதற வைத்தது.

''அபி? என்ன சொல்றேன்னு புரிஞ்சுதான் சொல்றீயா? நான் உனக்கு ஒரு வாழ்க்கை அமையணுமேன்னு தினமும் வேண்டிக்கிட்டு இருக்கேன்... நீ... நீ என்ன டான்னா?'' என்று தடுமாறியவர்,

''இதுக்கு நான் கண்டிப்பா ஒத்துக்க மாட்டேன்!'' என்று அவளை விட உறுதியாகச் சொல்ல,

''அப்போ... இந்த விஷயத்தில நான் உங்க பேச்சை மீறி நடக்க வேண்டி இருக்கும்!'' என்று சொன்ன அபிராமி, அதற்கு மேல் எந்தப் பேச்சுக்கும் இடம் கொடுக்காமல், குழந்தைகளிடம் விரைய,

''நில்லு அபி...'' என்ற கற்பகத்தின் அழுத்தமான அழைப்பு நிறுத்தியது.

''இத்தனை நாள் கல்யாணத்தைப் பற்றிப் பேசும் போது, நீ பிடி கொடுக்காமல் பேசிட்டு இருந்தே சரி... நானும் உன்னோட இஷ்டத்துக்கு விட்டுட்டு இருந்தேன்... ஒரு நாள் இல்லை ஒரு நாள் உன் மனசு மாறும் என்று காத்திட்டு இருந்தேன்... இப்போ என்னடான்னா இந்தக் குழந்தைகளை தத்தெடுக்கப் போறேன்னு சொல்றே... இன்னைக்கு நான் உன்னைவிடப் போறதில்லை... உன் மனசில என்னதான் நினைச்சிட்டு இருக்கே... என்னோட

கருத்துக்கு மதிப்பே கிடையாதா?'' அழுத்தமாக ஆரம் பித்தாலும், ஆதங்கத்தில் வந்து முடிந்தது கற்பகத்தின் வார்த்தைகள்!

''இதைப் பற்றி நான் ஏற்கனவே நிறைய முறை பேசி னதுதான்... நீங்க திரும்ப கேட்கறதால சொல்றேன்... கல்யாணத்தைப் பற்றி நீங்க என்கிட்டே பேசறது இதுவே கடைசி முறையா இருக்கட்டும்... என்னால கல்யாணத்தைப் பற்றி நினைச்சுக்கூடப் பார்க்க முடியாது... இந்தக் குழந்தைகள் என் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தை கொடுத்திருக்கிறதா நான் நினைக்கிறேன்... இனிமேல் என் தனிப்பட்ட வாழ்க்கை இந்த குழந்தை களை மையப்படுத்தி மட்டும்தான் இருக்கும்...'' என்று அழுத்தமாக மொழிந்த அபிராமி, கற்பகத்தின் கரத்தைப் பற்றிக் கொண்டு,

''அம்மா... ப்ளீஸ்! இந்த பேச்சை இத்தோட விட்டு டுங்க... உங்க வார்த்தையை எதிர்த்து எதிர்த்துப் பேசற நிலைமையை எனக்குத் தராதீங்க... உங்களை கெஞ்சிக் கேட்டுக்கறேன்...'' என்று கண் கலங்கச் சொல்ல,

''இல்லை அபி... உனக்குன்னு ஒரு வாழ்க்கை அமைஞ்சு நீ சந்தோஷமா வாழறதைப் பார்க்க எனக்கு ஆசை இருக்காதா?'' என்றபோது கற்பகத்தின் கண்களிலும் கண்ணீர் நிறைந்தது.

அவரது கண்ணீரை மென்மையாகத் துடைத்த அபிராமி, ''இப்போ எனக்கென்னம்மா குறைச்சல்... எப்பவும் என் கூட நீங்க இருக்கீங்க... நம்மால் நாலு பேருக்கு நல்ல செய்ய முடியுது... நான் இப்பவே ரொம்ப சந்தோஷமா இருக்கேன்மா... இந்த குழந்தைகள் வந்த பிறகு என் சந்தோஷம் இன்னும் அதிகமாகிருக்கு...

அதனால நீங்க என்னைப் பற்றிக் கவலைப்படாம இருங்க... அது போதும்!'' என்றாள்.

''அதெல்லாம் சரி... ஆனால் அபி...'' என்றபடி கற்பகம் ஏதோ பேச ஆரம்பிக்க, குழந்தைகள் அழும் ஒலி கேட்டது.

''குழந்தைங்க அழறாங்க, பசி நேரம் வந்திடுச்சு!'' என்ற அபிராமி, குழந்தைகளைக் கவனிக்க விரைந்தாள்.

கண்ணம்மாவின் காதல்

இன்று குழந்தைகளின் பிறந்த நாள்!

பிறந்த நாள் கொண்டாட்டம் முடிந்து குழந்தைகள் அசதியுடன் உறங்கி இருந்தனர்.

கண்ணம்மாவுக்கு மனம் நிறைவாக இருந்தது. அகத் தின் அழகு முகத்தில் பிரதிபலித்து முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

''என்னடா கண்ணம்மா? பயங்கர சந்தோஷமா இருக்கே போலவே?'' என்று விசாரித்த கணவனின் கன்னக் குழியில் விரல் பதித்து விளையாடிக் கொண்டே,

''என் சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்? அன்பான கணவன், அழகான அறிவான குழந்தைகள்! இதெல் லாம் எல்லாருக்கும் வாய்ச்சிடுமா என்ன?'' என்றவளின் குரலில் பெருமிதம் நிரம்பி வழிந்தது.

''அதென்ன வெறும் அன்பான கணவன், எங்களுக்கு மட்டும் அழகும் அறிவும் இல்லையா என்ன?'' என்று போலியாக கோபித்துக் கொண்ட தன் அத்தானிடம்,

''ஹய்யோ! என் அறிவுக் கொழுந்து அத்தான்... நம்ம குழந்தைகிட்ட இருக்கிற அழகும் அறிவும் உங்க கிட்ட இருந்து வந்ததுதானே?'' என்றாள் அவனது கண்ணம்மா.

''அப்படியா சொல்றே? அறிவு ஓகே... அழகு உன் கிட்ட இருந்துதான் வந்திருக்கு!'' என்றவனிடம்,

''அப்படின்னா என்கிட்டே அழகு மட்டும்தான் இருக்கு, அறிவு இல்லைன்னு சொல்றீங்களா?'' இந்த முறை கோபித்துக் கொண்டது அவன் மனைவி.

''அச்சோ! நான் எங்கே அப்படிச் சொன்னேன்?'' என்றவன், ''நீயேதான் உண்மையை ஒத்துக்கறே!'' என்று முணுமுணுத்தது சரியாக காதில் விழாமல்,

''என்ன சொன்னீங்க?'' என்றாள் மனைவி.

''ஒண்ணுமில்லை... உன் அறிவுக்கென்ன குறைச்சல் என்று சொன்னேன்...''

''இல்லை... நீங்க பொய் சொல்றீங்க!'' என்று சிணுங்கினாள் அவளது அன்பு மனைவி.

''நல்ல நாள் அதுவுமா இப்படி சண்டை போட்டு நேரத்தை வீண் அடிக்கலாமா? இப்படி வைச்சிக்கலாம்! நம்ம ரெண்டு பேரோட அழகும் அறிவும் நம்ம குழந்தை கிட்ட வந்திருக்கு! ஓகேவா?'' என்றவனது கேள்விக்கு பதில் இல்லாமல் போகவே, குளித்து தன் மார்பில் தலை சாய்த்திருந்த மனைவியின் முகத்தை நோக்கினான் கணவன்.

கொஞ்ச நேரம் முன்பிருந்த மகிழ்ச்சி மறைந்து அங்கே வாட்டம் தென்படவே, ''என்னடா இது... சும்மா ஒரு கேலிதானே? அதுக்கு போய்...'' என்றபடி, மனைவியின் முகத்தை நிமிர்த்த, அவள் கண்களில் திரையிட்டிருந்த கண்ணீர், அவனைப் பதற வைத்தது.

''என்னடா கண்ணம்மா?'' என்று அவன் அவளது கண்ணீரைத் துடைக்க முயல, அவனது கையைப் பற்றி கன்னத்தில் அழுத்திக் கொண்டவள்,

''என்னோட இந்த சந்தோஷம் நீடிக்கும்தானே அத்தான்? என்னவோ இப்போ எல்லாம் கொஞ்சம் பயமாவே இருக்கு!'' என்றாள்.

''பைத்தியம்!'' என்றபடி மனைவியை மென்மையாக அணைத்துக் கொண்டு, ''நான் இருக்கும்போது என்ன பயம்? ம்ம்? இது மாதிரி அசட்டுத்தனமா ஏதாவது யோசிச்சிட்டு இருக்காதே!'' என்றவன்,

''உன்னை யோசிக்க விடறதே தப்பு! உன் பயத்தைப் போக்கறதுக்கு என்கிட்டே ஒரு சூப்பர் வைத்தியம் இருக்கு! பார்க்கறீயா?''

அவனது எதிர்பார்ப்பைப் பொய்யாக்காமல் கண்ணம்மாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''ம்ம்ம்... இதுதான் அழகா இருக்கு! வைத்தியத்தைப் பற்றி சொன்னதுக்கு எவ்வளவு எபக்ட் பார்த்தியா? முழுசா செஞ்சுடலாமா?'' என்று கேட்டுக் கொண்டே, மனைவியின் சிவந்த கன்னங்களில் தன் இதழைப் பதித்து, தன் வைத்தியத்தை ஆரம்பிக்கத் தயாரானான்.

8

''சூர்யா! என்ன இந்த நேரத்தில்?'' ஆச்சரியமாக வினவிய அபிராமியிடம்,

''இன்னைக்கு குழந்தைகளுக்கு தடுப்பூசி போட வேண்டிய நாள் என்று நீங்க நேற்று போன்ல பேசும் போது சொன்னீங்க இல்லை? நானும் இந்தப் பக்கம்

வந்தேன்... அப்படியே உங்களை ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போயிடலாம்னு நினைச்சேன்...''

கற்பகத்திடம் ஏற்பட்ட வாக்குவாதத்தால் சோர்வாய் இருந்த அபிராமிக்கு, சூர்யாவின் வரவும், வார்த்தைகளும் ஆறுதலாக இருந்தது.

இன்று மருத்துவமனைக்கு செல்லும் நாள். எப்போதும் மருத்துவமனைக்கு குழந்தைகளை கூட்டிச் செல்லும்போது கற்பகமும் கூட வருவார். இன்று நடந்த பேச்சு வார்த்தைக்குப் பிறகு, அவர் சோர்வுடன் அமர்ந்திருக்க, அபிராமி சுந்தரியைக் கூட்டிச் செல்லலாம் என்று எண்ணி இருந்தாள்.

சூர்யாக்கு எதற்கு தொல்லை தர வேண்டும் என்றெண்ணி, ''எதுக்கு உங்களுக்குச் சிரமம் சூர்யா? நானே போய்ப்பேனே!'' என்றாள்.

அவள் சொன்னதைக் காதில் வாங்காதவனாய், அவளிடம் இருந்து அழுது கொண்டிருந்த குழந்தையை வாங்கியவன், ''குட்டி பையன் ரொம்ப வளர்ந்துட்டாரே! அப்புறம் எதுக்கு அழறாரு? ஊசி போடப் போறாம்னு அழறீங்களா? டாக்டர் கிட்ட வலிக்காமல் ஊசி போடச் சொல்லலாமா?'' என்று குழந்தையை கையில் வைத்து ஆட்டியபடியே குழந்தையை கொஞ்ச ஆரம்பித்தான்.

குழந்தையை அவன் கொஞ்சுவதை ஒரு ஆச்சரியமான புன்னகையுடன் அபிராமி பார்த்துக் கொண்டிருக்க, அரவம் கேட்டு வெளியே வந்த கற்பகத்துக்கு மனம் கசிந்தது.

'எவ்வளவு அன்பான பிள்ளை! இவனைத் திருமணம் செய்து கொண்டு இவள் வாழ்ந்தால் எவ்வளவு நன்றாக

இருக்கும்?' என்று உள்ளுக்குள் பெருமூச்செறிந்தபடியே, ''வாங்க தம்பி... நல்லா இருக்கீங்களா? அம்மா எப்படி இருக்காங்க?'' என்று அவனை வரவேற்று, விசாரித்தார்.

''நல்லா இருக்கேன்... அம்மாவும் நல்லா இருக்காங்க... நீங்க எப்படி இருக்கீங்க?'' என்று பதிலுக்கு விசாரித்தவன், அவரது சோர்ந்த முகத்தைப் பார்த்துவிட்டு, ''கொஞ்சம் தலைவலியா இருக்கு... உங்க ஸ்பெஷல் காபி கிடைக்குமா?'' என்று கேட்டான்.

''இதோ... எடுத்துட்டு வரேன்!'' என்று கற்பகம் உள்ளே சென்றார்.

''என்ன ஆச்சு? ரெண்டு பேர் முகமும் சரி இல்லை? என்ன விஷயம்?'' என்று சூர்யா அபிராமியிடம் விசாரிக்க,

''ஹப்பா... போன ஜென்மத்தில் துப்பறியும் சிங்கமா பிறந்திருப்பீங்க போல! முகத்தை வைச்சே எல்லாத்தையும் தெரிஞ்சிக்கறீங்க!'' என்று விளையாட்டாய் கேலி செய்தாலும்,

''ஒண்ணுமில்லை சூர்யா! ஒரு சின்ன வாக்குவாதம்! சரி ஆயிடும்!'' என்று விஷயத்தைச் சொல்லாமலேயே முடித்தாள் அபிராமி.

இந்த ஒரு மாதமாக, நட்புடன் பேசினாலும், அவன் சொல்வதை எல்லாம் காது கொடுத்துக் கேட்டாலும், தன் விஷயம் என்று எதையும் அபிராமி பகிர்ந்து கொள்வதில்லை.

'இவள் எப்போது என் மனதை புரிந்து கொள்ளப் போகிறாள்?' என்று ஏக்கமாக மனதில் நினைத்தாலும், சூர்யாவுமே அவளிடம் நட்பு என்று எல்லைக் கோட்டைத்

தாண்டிப் பேசியதில்லை. அவளிடம் ஏதாவது சொல்லி, இருக்கும் நட்பை கெடுத்துக் கொள்ளக் கூடாதே என்று ஒரு பயம் இருந்ததே அதற்குக் காரணம்!

அதற்குள், கற்பகமும் காபியுடன் வந்துவிட, அதைக் குடித்துவிட்டு இருவரும் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு கிளம்பினார்கள்.

இருவரும் குழந்தைகளோடு செல்வதை ஒரு ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு நின்றார் கற்பகம்.

வரும் வழி எல்லாம் குழந்தைகளைப் பற்றிப் பேசியபடியே அபிராமி வர, சூர்யாவும் அவளது பேச்சை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவனுக்குமே இந்த ஒரு மாதத்தில், அந்த குழந்தைகள் மீது ஒருவித பாசம் உண்டாகி இருந்தது.

ஊசி போடும்போது குழந்தைகள் அழ, அபிராமிக்கும் கண்கள் கலங்கியது.

''ஹே... என்ன இது? உங்களுக்கு ஊசி போட்ட மாதிரி அழறீங்க?'' என்று சூர்யா கேலி செய்ய,

''நான் ஒண்ணும் அழலை!'' என்று வீராப்புடன் சொன்னாலும், ''இந்தக் குழந்தைகள் வந்த பிறகு நான் ரொம்ப உணர்ச்சி வசப்பட ஆரம்பிச்சிட்டேன்!'' என்று வெளிப்படையாகப் பேசியவளை ஆச்சரியத்துடன் பார்த்தான் சூர்யா.

'இன்று இவளிடம் மனம் திறந்து பேசிவிட்டால் என்ன?' என்று தோன்றியது. எப்படி ஆரம்பிப்பது என்று அவன் யோசித்துக் கொண்டே வர,

''என்ன ஆச்சு சூர்யா? எதுவும் பேசாமல் வரீங்க?'' என்ற அபிராமியின் குரல் அவனது சிந்தனையைக் கலைத்தது.

''ஒண்ணுமில்லை...'' என்றவன், சம்மந்தமே இல்லாமல் ''சித்ரா எப்படி இருக்காங்க?'' என்று விசாரித்தான்.

''ரொம்ப நல்லா இருக்கா... அவள் முகத்தைப் பார்க்கவே சந்தோஷமா இருக்கு...'' என்று சந்தோஷமாக அபிராமி சொல்ல,

''முத்துவைத்தான் பாராட்டணும்... பிடிவாதமா இருந்து ஜெயிச்சிட்டார்!'' என்ற சூர்யாவுக்கு.

''ம்ம்... அதுதான் காதலுக்கு இருக்கிற சக்தி!'' என்று ரசனையுடன் அபிராமி சொன்னது ஆச்சரியத்தைத் தர, சட்டென்று அவள் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

குழந்தைகளை வருடிக் கொண்டிருந்த அவளது முகத்தில் படர்ந்திருந்த மந்தகாச புன்னகை அவனை மயக்கியது. ஒரு ஹாரன் சப்தத்தில் தன்னிலைக்கு வந்தவன், சாலையில் கவனம் பதித்தான்.

ஏனோ மனம் வானத்தில் பறப்பதைப் போலிருந்தது.

அவளிடம் காதல், கல்யாணம் என்றெல்லாம் பேசுவதில் இருந்த தயக்கம் விலகியதைப் போலிருந்தது.

தன் விருப்பத்தைச் சொன்னால் என்ன சொல்வாளோ என்ற பயம் நீங்கி, சாதகமான பதில் வரும் என்ற நம்பிக்கை பிறந்தது.

சூர்யா தன் யோசனையில் ஆழ்ந்திருக்க, ''சூர்யா! வேற வழியில போற மாதிரி இருக்கு!'' என்ற அபிராமியின் குரல் அவனை நடப்புக்கு மீட்டு வந்தது.

அசடு வழிந்தபடி காரைத் திருப்பியவன், அவளை வீட்டில் விட்டு விட்டு உற்சாகமான மனநிலையோடு தன் வீட்டுக்குக் கிளம்பினான்.

அடுத்த நாள் எப்படியும் தன் மனதை அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியவனுக்கு, அடுத்த நாளே அவசர அலுவலக வேலையாக வெளியூர் செல்ல வேண்டி இருந்தது.

வேலை முடிந்து வந்தவுடன், அபிராமியிடம் பேசுவது தான் முதல் வேலை என்று முடிவு செய்து கொண்டு வெளியூர் சென்றவனுக்கு, அவளிடம் தன் மனதைத் தெரிவிக்கும் சந்தர்ப்பமே வாய்க்கப் போவதில்லை என்று அப்போது தெரிந்திருக்கவில்லை.

* * *

திருமணப் பேச்சு நடந்து பதினைந்து நாள் ஆகியும், கற்பகம் அபிராமியிடம் இயல்பாகப் பேசவில்லை. மனமும் முகமும் வாட்டமாகவே இருந்தது. கற்பகத்தின் வாட்டம் மனதுக்கு வருத்தமாக இருந்தாலும், அவரிடம் சமாதானமாகப் பேசி அவரது வாட்டத்தைப் போக்க வேண்டும் என்று தோன்றினாலும், மீண்டும் அவர்களுக் குள் வாக்குவாதம் வேண்டாம் என்று எண்ணிய அபி ராமி, அவரிடம் முடிந்தவரை இயல்பாகப் பேசிக் கொண் டிருந்தாள்.

குழந்தைகளைத் தத்தெடுக்கப் போகிறேன் என்று ஒரு உணர்ச்சி வேகத்தில் சொல்லி விட்டாள், கொஞ்ச நாள் தானும் அமைதியாக இருந்தால், அவளது முடிவு சரியானதில்லை என்று அவளுக்கே புரிந்து விடும் என்று கற்பகம் எண்ணி இருக்க, அபிராமியோ குழந்தைகளைத் தத்தெடுக்க சட்டப் பூர்வமாக என்ன செய்ய வேண்டும் என்று அறிந்து கொள்ளும் முயற்சியில் இறங்கி இருந் தாள்.

சூர்யாவைப் பார்த்த நாளில் இருந்து, அபிராமிக்கு நல்ல காலம் பிறந்து விடும் என்று தோன்றி இருந்த நம்பிக்கை பொய்த்து விடுமோ என்று எண்ணி அவர் மனம் கலங்கிக் கொண்டிருந்தது.

சித்ராவின் கல்யாணத்தில் பார்த்த அன்றிலிருந்து கற்பகத்துக்கும், பவானிக்கும் இடையே ஒரு நல்ல சிநேகம் உருவாகி இருந்தது.

பவானியும் அபிராமியை அடிக்கடி பார்க்க வருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். அவர், அவளிடம் பேசும் முறையில், அவரது உள்ளத்திலுமே, தன் மனதில் இருக்கும் ஆசை இருக்கிறது என்பதை கற்பகத்தால் உணர முடிந்தது.

எல்லாம் கூடி வரும் நேரத்தில், இந்தப் பெண் இப் படி செய்கிறாளே என்று அவரது மனம் குமுறிக் கொண் டிருந்தது.

மனக் குமுறலோடு அமர்ந்திருந்த கற்பகத்தை தொலை பேசி அழைத்தது.

அழைப்பை எடுத்து சோர்வுடன் ''ஹலோ?'' என்றவ ரிடம், ''என்ன ஆச்சு கற்பகம்? ஏன் குரல் ஒரு மாதிரி இருக்கு?'' என்று அக்கறையுடன் விசாரித்தார் பவானி.

அக்கறையுடன் ஒருவர் கேள்வி கேட்டதும், கற்பகமும் தன் மனக்குமுறலை அவரிடம் வெளியிட்டார்.

''கல்யாணம் செஞ்சுக்க வேண்டிய வயசில, ரெண்டு குழந்தைகளை தத்து எடுத்துக்கப் போறாளாம்! நான் ஒத்துக்க மாட்டேன்னு சொன்னால், என் பேச்சை இந்த விஷயத்தில் மதிக்க மாட்டாளாம்!''

யாரிடமும், எதற்காகவும் அபிராமியை விட்டுக் கொடுக்காமல் பேசும் கற்பகம், குமுறலாக அபிராமியைக் குறை கூற,

அந்தப் பக்கம், பவானியுமே பேச வார்த்தைகள் இன்றி திகைத்துப் போய் இருந்தார்.

அவரிடம் இருந்து எந்த பதிலுமே வராமல் போகவே, ஆத்திரத்தில் அறிவிழந்து போய் உளறி விட்டோமே என்று தன்னைத் தானே கடிந்து கொண்ட கற்பகம், ''மன்னிச்சுக் கோங்க... நீங்க எதுக்கோ போன் செய்ய, நான் என் புலம்பலை சொல்லிட்டு இருக்கேன்... என்ன விஷயமா போன் செஞ்சீங்க?'' என்று பவானியிடம் விசாரித்தார்.

''ஒண்ணும் இல்ல! சும்மாதான் போன் செஞ்சேன்! நான் அப்புறம் பேசறேன்!'' என்றபடி அழைப்பைத் துண்டித்த பவானியின் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

வெளியூருக்குச் சென்று பதினைந்து நாள் கழித்து வந்த சூர்யா, தன்னிடம் ஒரு வழக்கமான நல விசாரிப்புக்குப் பிறகு எந்தப் பேச்சும் இல்லாமல் அமைதியாக இருந்த அன்னையை அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இருவரும் உணவு அருந்தி முடித்தும் அவர் யோசனையுடன் இருக்கவே, ''என்னம்மா? என்ன ஆச்சு? எதோ தீவிர யோசனையில் இருக்கிற மாதிரியே இருக்கீங்க?'' என்று வினவ,

பவானி, ''ராஜா! நீ அபியை விரும்பறது அவளுக்குத் தெரியுமா?'' என்று விசாரித்தார்.

அன்னையிடம் இந்த கேள்வியை எதிர்பார்க்காதவன், ''இல்லைம்மா... நான் இதுவரைக்கும் எதுவும் சொல்லலை...

உங்களுக்கே அந்தக் கல்யாணத்துக்குப் போய் விட்டு வந்த அன்னைக்குதானே சொன்னேன்... நாளைக்கு கண்டிப்பா அபிகிட்ட பேசிடணும்னு தான் இருக்கேன்!'' என்று வெட்கத்துடன் சொல்ல, சூர்யாவை யோசனையுடன் பார்த்த பவானி,

''ராஜா! இன்னைக்கு கற்பகம் அம்மாகிட்ட பேசினேன்... அப்போ ஒரு விஷயம் சொன்னாங்க!'' என்று தயங்கி நிற்க,

''என்னம்மா? நீங்க எதுவும் என் விஷயம் பேசிட்டீங்களா என்ன?'' என்று பதட்டப்பட்டான்.

''இல்லை... உன்கிட்ட சொல்லாமல் எப்படிப் பேசுவேன்? இது வேற விஷயம்! அபி... அபி அந்த குழந்தைகளைத் தத்து எடுத்துக்கப் போறாளாம்!''

சட்டென்று நிமிர்ந்த சூர்யாவின் கண்களில், அதிர்ச்சியும் ஆச்சரியமும் தோன்றியது.

மகன் எதுவும் பேசாமல் நிற்கவே, ''எனக்கென்னவோ அபிக்கு கல்யாணம் செஞ்சுக்கிற எண்ணமே இல்லை என்று தோணுது... இல்லன்னா இந்த வயசில கல்யாணத்துக்கு முன்னாடி இந்த மாதிரி ஒரு முடிவை எடுக்க முடியுமா?'' என்று குழப்பத்தோடு பவானி வினவ,

சூர்யாவுக்குமே அந்த எண்ணம் தோன்றிய அதே நேரத்தில், முத்துவின் நல்லெண்ணத்தைப் புகழ்ந்து பேசிய சூர்யாவிடம், ''அதுதான் காதலுக்கு இருக்கிற சக்தி!'' என்று அவள் புன்னகையுடன் சொன்னது நினைவுக்கு வந்தது.

காதல், கல்யாணத்தில் எல்லாம் நம்பிக்கையும், பிடிப்பும் இல்லா விட்டால் அப்படிச் சொல்லி இருக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்தது.

தன் எண்ணங்களில் மூழ்கி இருந்த சூர்யாவை, அன்னையின் குரல் தன்னிலைக்கு மீட்டு வந்து, அதிர்ச்சியையும் கொடுத்தது.

''அபி அந்தக் குழந்தைகளை தத்து எடுத்துக்கிற பட்சத்தில் நீ எப்படி அவளைக் கல்யாணம் செஞ்சுக்க முடியும் ராஜா?''

திகைப்புடன் அன்னையை நோக்கியவன், ''ஏன்மா? ஏன் அப்படிச் சொல்றீங்க?'' என்றான்.

புரியாமல் கேள்வி கேட்ட மகனை அழுத்தமாகப் பார்த்தவர், ''என்ன ஏன்னு கேட்கறே? அவள் தத்து எடுத்துக்கப் போற குழந்தைகளை நம்ம குடும்பத்து வாரிசா ஏற்றுக்கச் சொல்றீயா?'' என்று ஒரு மாதிரி குரலில் கேட்க, அன்னையின் எண்ண ஓட்டம் புரிந்து, அவர் அருகில் அமர்ந்தவன், அவரது கையைப் பற்றிக் கொண்டான்.

''அம்மா! அபி அந்தக் குழந்தைகளை தத்து எடுத்துக் கொண்டால், அந்தக் குழந்தைகள் எனக்கும் குழந்தைகள்தாம்மா... என்னோட குழந்தைகள் உங்களோட பேரக் குழந்தைகள் இல்லையா?'' என்று மகன் ஆத்மார்த்தமாகக் கேட்ட கேள்வி, அந்த தாய் உள்ளத்தை அசைத்துப் பார்த்தது.

''ஏன்? எதற்காக?'' என்று கூட யோசிக்காமல், அபிராமியின் முடிவை ஆதரிக்கிறான் என்றால், அபிராமியின் மேல் அவன் வைத்திருந்த நேசத்தின் அளவை அவரால் உணர முடிந்தது.

திருமணம் பற்றிய எண்ணமே இல்லாமல் இருந்த மகனின் மனம் மாறக் காரணமாய் இருந்தவள் என்பதோடு, அபிராமியின் பழகிய இத்தனை நாட்களில்,

அபிராமியும் பவானியின் மனத்தைக் கவர்ந்திருந்தாள். அபிராமி தங்கள் வீட்டுக்கு மருமகளாய் வரும் நாளை, அவர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

அபிராமி குழந்தைகளைத் தத்தெடுக்கும் விஷயமும், அவருக்கு அவள் மேலிருந்த மதிப்பை உயர்த்தித்தான் இருந்தது. ஆனாலும், தன் பிள்ளை மூலம் தன் குடும்பத்துக்கு வாரிசு வர வேண்டும் என்று எந்தத் தாய்க்கும் தோன்றும் எண்ணமே அவரைத் தயக்கம் கொள்ள வைத்தது.

தன் அன்னை யோசிப்பதைக் கண்ட சூர்யா, ''நீங்க நல்லா யோசிச்சு சொல்லுங்கம்மா... உங்க சம்மதம் எனக்கு ரொம்ப ரொம்ப முக்கியம்!'' சொல்லிவிட்டு அவனறைக்குள் வந்தான்.

நாளைக் கண்டிப்பாக அபிராமியிடம் பேசி விட வேண்டும் என்று ஆவலுடன் வந்தவனுக்குள், இப்போது ஒரு ஏமாற்றம் தோன்றியது.

அபிராமி குழந்தைகளைத் தத்தெடுக்கப் போகிறாள் என்ற விஷயம் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தாலும், அவளது எண்ணம் அதுவானால், அதற்கு தன்னால் இயன்றவரை உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம்தான் மேலோங்கி இருந்தது.

ஆனால் திருமணம்? அது அவனது அன்னையின் முழு சம்மதத்தோடு நடக்க வேண்டும் என்பதிலும் அவன் உறுதியாக இருந்தான்.

அன்னையின் முழு சம்மதம் கிடைக்கும் வரை, அபிராமியிடம் இது பற்றி பேசக்கூடாது என்று முடிவெடுத்தான்.

அடுத்து வந்த நாட்களில் அபிராமியை சந்தித்தாலும், அவன் தன் மனதை வெளிப்படுத்தவில்லை. அதே சமயம், அன்னையின் மனதை மாற்ற முயற்சிக்கவு மில்லை. மாற்றம் இயல்பாக வருவதே நல்லது என்று எண்ணினான்.

பவானியும் தனிமையில் எப்போதும் யோசித்த படியே இருந்தார்.

மகனுடைய சந்தோஷம்தானே தன்னுடைய சந் தோசம் என்று எண்ணியவருக்கு, அவனது சந்தோஷத் துக்கு குறுக்கே நிற்க விருப்பம் இருக்கவில்லை.

மகன் அந்த குழந்தைகளை தன் குழந்தைகளாக ஏற்றுக் கொண்டால், அவன் சொல்வது போல் அவர்கள் தங்கள் குடும்பத்தின் வாரிசுதானே?

இரு ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுக்க நினைக் கும் அபிராமியும், அவள் மேல் கொண்ட நேசத்தின் காரணமாக அவர்களைத் தன் குழந்தைகளாக ஏற்க நினைக்கும் சூர்யாவும், அவருக்கு பெரியவர்களாகத் தோன்றினர்.

இந்த சிறு வயதில் இந்த பிள்ளைகளிடம் இருக்கும் மன முதிர்ச்சி தனக்கில்லாமல் போனதை எண்ணி வருத்தப்பட்ட பவானி, ஒரு முடிவெடுத்து தன் மகனின் வருகைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தார்.

வீட்டுக்கு வந்த சூர்யாவுக்கு, அன்னையின் முகத்தில் தெரிந்த தெளிவு உற்சாகமூட்டியது.

எதுவாக இருந்தாலும், அன்னையே சொல்லட்டும் என்று நினைத்தவன் அமைதியாக இருந்தான்.

உணவருந்திய பின் சூர்யாவின் அருகில் வந்து அமர்ந்த பவானி, ''ராஜா! அபியைப் பற்றிய உன் முடிவு உறுதியானதுதானே?'' என்று விசாரிக்க,

அன்னையின் கேள்வியில் அவரை வியந்து நோக்கி, ''ரொம்ப உறுதியானதும்மா...!'' என்ற சூர்யாவின் முகத் தில் ஆவல் படர்ந்தது.

மகனின் பதிலில் திருப்தியுற்ற பவானி, ஆவலாய் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மகனைப் பார்த்து புன்னகைத்தார்.

அன்னை ஏற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கை இருந் தாலும், கொஞ்சம் பயத்தோடு அவருடைய முகத் தையே பார்த்திருந்த சூர்யாவின் முகம், அன்னையின் முறுவலில் மலர்ந்தது.

''அம்மா!?'' என்று ஆவலுடன் அவன் அழைக்க,

''நாளைக்கே போய் நான் கற்பகம் அம்மாகிட்ட பேசட்டுமா?'' என்று கனிவுடன் கேட்டவர்,

''அம்மா!'' என்ற மகனின் ஆச்சரியமான அழைப்புக்கு பதிலாக,

''நீயா அபிகிட்ட சொல்லுவேன்னு காத்திருந்தால், எனக்கு எப்போ மூணாவது பேரக் குழந்தை கிடைக் கிறது? ம்ம்?'' என்று புருவம் உயர்த்தி கேலியுடன் சொல்ல,

''என் செல்ல அம்மா!'' என்று மகிழ்ச்சியுடன் தன் அன்னையை அணைத்துக் கொண்டான் சூர்யா.

கண்ணம்மாவின் காதல்

''அப்பா! அப்பா! இன்னொரு முறை அப்பா!'' அன்று ஆசையுடன் கைகளைத் தூக்கியபடி கொஞ்சலுடன்,

கெஞ்சிய மகளை வாஞ்சையுடன் நோக்கினான் தந்தை.

''பாப்பாவை நிறைய முறை தூக்கிப் போட்டு விளையாடிட்டேன் இல்லை? அண்ணனோட விளையாடவே இல்லையே! இப்போ அண்ணனைத் தூக்குவேனாம்! அப்புறம் பாப்பாவைத் தூக்கறேன்... சரியா?''

முகம் வாடினாலும் 'சரி' என்பதாய் தலை அசைத்தாள் மகள்.

ஆசை இருந்தாலும் எடுத்துச் சொன்னால், புரிந்து கொள்ளும் குழந்தையை பெருமிதத்தோடு நோக்கியபடி கண்ணம்மா அமர்ந்திருக்க,

''இருக்கட்டும்பா... பாப்பாவை இன்னொரு முறை தூக்கி விளையாடிட்டே என்னைத் தூக்குங்க!'' என்று சொல்லி, அவளது பெருமிதத்தை மேலும் அதிகமாக்கினான் மகன்.

''இல்லைப்பா... அண்ணனையே தூக்குங்க!'' என்று தன் பங்குக்கு அவளது அன்பை வெளிப்படுத்தினாள் தங்கை.

போட்டி போட்டுக் கொண்டு தங்கள் அன்பை வெளிப்படுத்திக் கொள்ளும், குழந்தைகளோடு சந்தோஷமாக விளையாடியபடி இருந்தவனின் பார்வை, மந்தகாசப் புன்னகையோடு அமர்ந்திருந்த மனைவியின் மேல் படிந்திருந்தது.

குழந்தைகள் உறங்கிய பின்னர், ''என்னடா அப்படி பார்த்துட்டு இருந்தே?'' என்று விசாரித்தான் கணவன்.

''எவ்வளவு அறிவு இல்லை இந்த குழந்தைங்க... சில சமயம் பிடிவாதம் பிடிச்சாலும், எடுத்துச் சொன்னால் புரிஞ்சுகிட்டு எவ்வளவு அறிவா நடந்துக்குதுங்க!'' தாய்க்கே உரிய பெருமையுடன் கண்ணம்மா சொல்ல,

''பின்னே என் அறிவைக் கொண்டு பிறந்திருக்காங்களே!'' என்று சொன்னவன் நாக்கைக் கடித்துக் கொண்டு, ''இல்லை... இல்லை... உன்னை மாதிரியே இருக்காங்கன்னு சொல்ல வந்தேன்!'' என்று திருத்திவிட்டு, அவளது சிணுங்கலை எதிர்பார்த்து அவளது முகம் பார்க்க, மனைவியோ, அவனை புன்னகையுடன் நோக்கி விட்டு, ''அவங்க உங்களை மாதிரி இருக்கணும் என்பது தான் என்னோட ஆசை, அத்தான்!'' என்று ஆத்மார்த்தமாகச் சொல்லியபடி, அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்.

''அச்சச்சோ! என்னடா இது? இப்படி சப்புன்னு ஆக்கிட்டே? நீ கோச்சிக்கிட்டால் சமாதானப்படுத்த என்று புது புது டெக்னிக் எல்லாம் யோசிச்சு வைச்சிருந்தேனே!'' என்று பாவமாக சொன்னவனிடம்,

''ஏன்? சமாதானம் செய்யத்தான் டெக்னிக் இருக்க உங்ககிட்ட? சமாதானமா இருக்கும்போது யூஸ் செய்யற மாதிரி எந்த டெக்னிக்கும் இல்லையா?'' என்று கிசுகிசுப்பாகக் கேட்டு விட்டு, அவனது மார்பிலேயே தன் முகத்தை அழுந்த புதைத்துக் கொண்டாள் அவனது கண்ணம்மா!

''ஹே! சூப்பர்டா.. இதை... இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்!'' என்று துள்ளலாகச் சொல்லிவிட்டு, இருவரது எதிர்பார்ப்பையும் சரிவர பூர்த்தி செய்யும் வேலையில் சந்தோஷமாக இறங்கினான் கண்ணம்மாவின் கணவன்!

௯

பவானியிடம் போனில் புலம்பியதிலிருந்து, இந்த ஒரு வாரமாய் அமைதியின்றி தவித்துக் கொண்டிருந்தார் கற்பகம்.

அபிராமியின் மனதை மாற்றும் வேலையை விட்டு விட்டு, பவானியிடம் அபிராமி குழந்தைகளைத் தத்தெடுக்கப் போகும் விஷயத்தை சொல்லிய தன் முட்டாள்தனத்தை நொந்து கொண்டிருந்தவருக்கு, தான் சொன்ன விஷயம் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சம் பிறந்தது.

பவானியிடம் பேசி அவரது மனநிலையை அறிந்து கொள்ளலாம் என்று நினைத்தாலும், போன் செய்யத் தயக்கமாகவே இருந்தது.

அச்சமும் தவிப்புமாய் போராடிக் கொண்டிருந்தவரின் காதில், தொலைபேசி அடித்துக் கொண்டிருந்தது கூட விழவில்லை. சிறிது நேரம் கழித்தே, தொலைபேசி அழைப்பதை உணர்ந்தவர் அவசரமாக எழுந்து வந்து அழைப்பை எடுத்தார்.

எடுத்தவுடனேயே, ''நல்லா இருக்கீங்களா கற்பகம்? நாளைக்கு ஒரு நல்ல விஷயம் பேசணும், வீட்டுக்கு வரேன்!'' என்று பவானி சொல்ல, ஒரு கணம் என்ன சொல்வதென்றே கற்பகத்துக்குப் புரியவில்லை.

பவானி மீண்டும் ஒரு முறை பெயர் சொல்லி அழைக்கவும், தன்னிலைக்கு வந்து, ''வாங்க... கண்டிப்பா வாங்க...'' என்றவர் அவர் வரும் நேரத்தை விசாரித்துக் கொண்டு அழைப்பைத் துண்டித்தார்.

இந்த ஒரு வார தவிப்பு விலகி, ஒரு ஆர்வமான பரபரப்பு மனதை ஆட்கொண்டது.

உடனே, பூஜை அறைக்குள் சென்றவர், ''முருகா! எல்லாம் நல்ல படியா நடக்க அருள் செய்!'' என்று மனமார வேண்டிக் கொண்டு, ஒரு வாரத்துக்குப் பின் அமைதியாக உறங்கச் சென்றார்.

காலையில் கற்பகத்தின் புன்னகை படிந்த முகத்தைப் பார்த்த அபிராமிக்கு நிம்மதியாக இருந்தது. இருபது நாட்களாய், கற்பகத்தின் முகவாட்டத்தைக் கண்டு கொள்ளாதது போல இருந்தாலும், அவரது வாட்டம் அவளுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்திருந்தது.

கற்பகத்துக்கு சமையலறையில் உதவி செய்தபடி, ''அம்மா... இன்னைக்கு புது ஆர்டர் சம்மந்தமா வெளியே போக வேண்டி இருக்கு... மதியம் சாப்பாட்டுக்குக் கூட வர முடியுமா என்று தெரியலை...'' என்று சொல்லி விட்டுத் தயங்கி நின்றாள் அபிராமி.

குழந்தைகள் வீட்டுக்கு வந்த நாளாய், கற்பகமும் கண்ணுக்கு கண்ணாகத்தான் அவர்களைப் பார்த்துக் கொண்டார்.

ஆனால், அபிராமி தத்தெடுக்கப் போவதாகச் சொன்ன நாளில் இருந்து, குழந்தைகளிடம் அவர் ஒருவித ஒதுக்கத்தை காண்பிப்பதை அபிராமி கண்டிருந்தாள். அவர்களைக் கவனிப்பதில் குறை வைக்கா விட்டாலும்,

முன் போலக் கொஞ்சுவதில்லை என்பதில் அவளுக்கு கொஞ்சம் வருத்தம்தான்.

இன்று முழு நாளும், கற்பகத்திடம் விட வேண்டி இருந்ததால், குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லத் தயக்கமாக இருந்தது.

அபிராமி தயக்கத்துடன் நிற்பதைக் கண்ட கற்பகம், ''என்னடா? ஏன் இப்படி நிற்கிறே? குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படாதே... நான் பார்த்துக்கறேன்... நீ பத்திரமா போயிட்டு வா!'' என்று வழி அனுப்பி வைக்க, சந்தோஷமாக தலை ஆட்டி விட்டு அபிராமி கிளம்பிச் சென்றாள்.

அவள் சென்றதும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார், கற்பகம்.

பவானி அம்மா வரும்போது இவள் இங்கே இருக் காமலிருப்பதே நல்லது என்று தோன்றியது.

பவானி அம்மா வருவதாகச் சொன்ன நேரத்திற்குள் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, குழந்தைகளின் தேவைகளை கவனித்துவிட்டு, அவர்களை உறங்க வைத்து விட்டு பவானியின் வருகைக்காக காத்திருக்க ஆரம்பித்தார்.

* * *

அம்மா இன்று கற்பகத்திடம் திருமண விஷயம் பேசப் போகிறார் என்றதும், சூர்யாவுக்கு மனம் பரபரப்புற்று இருந்தது.

காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் அலுவலகத் துக்கு ஓடி விடுபவன், இன்று அன்னையின் பின்னேயே அலைந்து கொண்டிருந்தான்.

''நீங்க கற்பகம் அம்மாகிட்ட பேசினால், அபி அவள் கிட்ட நான் எதுவுமே சொல்லலை என்று கோபித்துக்க மாட்டாளா அம்மா?'' என்பதுதான் அவனது முக்கிய கவலையாய் இருந்தது.

என்ன சொன்னாலும், மகன் அந்தக் கேள்வியிலேயே வந்து நிற்க,

''சரி... நான் போய் பேசலை... நீயே அபிகிட்ட பேசிடறீயா?'' என்று பொறுமை இழந்து பவானி சொன்ன பிறகுதான் அவன் வாயை மூடினான்.

பவானி, ''இங்கே பாரு ராஜா... நானே அவளைப் பெண் கேட்டுப் போற மாதிரிதான் போகப் போறேன்... இதில அவள் உன்னை தப்பா நினைக்க எதுவுமில்லை... கல்யாண வயசில ஒரு பொண்ணு இருந்தால், இது சகஜம்தானே? உங்க அம்மா நல்ல படியா பேசிட்டு வரு வேன் என்று உனக்கு நம்பிக்கை இல்லையா?'' என்றதும்,

''என்னம்மா இது? உங்க மேல எனக்கு முழு நம் பிக்கை இருக்கும்மா!'' என்று உறுதியுடன் சொன்ன மகனை வாஞ்சையுடன் நோக்கிய பவானியின் உள்ளத் தில் சஞ்சலம் இல்லாமல் இல்லை.

அபிராமிக்கு திருமணம் செய்து கொள்வதில் விருப்பம் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை. தன்னுடைய சந்தேகத்தைச் சொல்லி மகனது சந்தோஷத்தைக் கெடுக்க அவர் விரும்பவில்லை.

அபிராமிக்கு திருமணம் செய்து கொள்வதில் எதாவது பிரச்னை இருக்கும் பட்சத்தில், அதற்கு காரணத்தைத் தெரிந்து கொண்டு அவளை எப்படியாவது சம்மதிக்க

வைக்க வேண்டும். என்று எண்ணித்தான் கற்பகத்தைத் தனிமையில் சிந்திக்க வேண்டும் என்று அவர் முடிவு செய்திருந்தார்.

பவானி காரில் வந்து இறங்கியதும், பரபரப்புடன் வாசலுக்கு வந்த கற்பகத்தின் கண்களில், பவானி ஏந்தி வந்த தாம்பூலத் தட்டு தென்பட்டு மனதை நிறைத்தது.

''வாங்க... வாங்க...'' என்று கற்பகம் வரவேற்க, புன்னகையுடன் பவானி உள்ளே நுழைந்தார். அவர் பின்னே வந்த டிரைவர் சில சாமான்களை ஹாலில் வைத்து விட்டுப் போனார்.

கேள்வியாக நோக்கிய கற்பகத்திடம், ''குழந்தைகளுக்காக சில பொருட்கள் வாங்கி வந்தேன்!'' என்ற பவானி, உள்ளறைக்குள் சென்று குழந்தைகளைப் பார்த்துவிட்டு வந்தார்.

தான் எதிர்பார்த்த விஷயத்துக்கு தான் பவானி வந்திருக்கிறார் என்று புரிந்தாலும், குழந்தைகள் விஷயம் மனதில் இருந்து கொண்டே இருந்ததால், கற்பகத்தின் முகத்தில் புன்னகையையும் மீறி பதட்டம் தெரிந்தது.

''உட்காருங்க கற்பகம்! நான் எதுக்கு வந்திருக்கேன் என்று உங்களுக்கே தெரியும்! இருந்தாலும் நானே சொல்றேன்... என்னோட ஒரே பையன் சூர்யாவுக்கு உங்க பெண் அபிராமியை பெண் கேட்டு வந்திருக்கேன்!'' என்று புன்னகையுடன் பவானி அறிவிக்க, கற்பகத்தின் கண்களில் நீர் நிறைந்தது.

''அட! என்ன நீங்க? நல்ல விஷயம் சொல்லும்போது கண் கலங்கிகிட்டு?'' என்று அருகில் வந்து அவரது கையைப் பற்றிக் கொண்ட பவானி அக்கறையுடன்

அதட்ட, அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்டார் கற்பகம்.

''உங்களுக்கு சம்மதம்தானே?'' என்ற பவானியின் கேள்விக்கு,

'ரொம்ப ரொம்ப சந்தோஷம் பவானி... இந்த நாளுக்காகத்தான் நான் ரொம்ப வருஷமா காத்திட்டு இருக்கேன்... இருங்க உள்ளே போய் உங்களுக்கு சாப்பிட ஏதாவது எடுத்திட்டு வரேன்!'' என்று எழுந்த கற்பகத்தை,

''அப்புறம் சாப்பிடறேன்... இப்போ உட்காருங்க... உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் கேட்கணும்!'' என்று பவானி தடுக்க, கற்பகத்தின் முகத்தில் மீண்டும் பதட்டம் ஒட்டிக் கொண்டது.

பவானி ஏதும் கேட்கும் முன்னரே, ''அன்னைக்கு ஏதோ ஒரு குழப்பத்துல, குழந்தைகள் விஷயத்தைப் பற்றி சொல்லிட்டேன்... நீங்க கவலைப்படாதீங்க... நான் அபி கிட்டே பேசி அவளுக்குப் புரிய வைக்கிறேன்!'' என்று கற்பகம் சொல்ல, பவானி புன்னகைத்தார்.

''அபி கிட்டே நீங்க எதுவும் பேச வேண்டாம்... குழந்தைகளை அவள் தத்தெடுக்கிற விஷயத்தில எனக்கும், சூர்யாவுக்கும் எந்த ஆட்சேபனையும் இல்லை...'' என்ற பவானியை நம்ப முடியாமல் பார்த்த கற்பகம்,

''நீங்க... நீங்க என்ன சொல்றீங்க?'' என்று தடுமாற்றத்துடன் வினவினார்.

''உண்மையாகத்தான் சொல்றேன்... அபி எந்த அளவுக்கு சந்தோஷமா மருமகளாய் ஏத்துக்கப் போறேனோ, அதே சந்தோஷத்தோட இந்த குழந்தைகளையும் ஏன் பேரப் பிள்ளைகளா ஏத்துக்கப் போறேன்...'' என்ற

பவானி தனக்கும் சூர்யாவுக்கும் இடையில் நடந்த பேச்சைப் பற்றிக் கூற, கற்பகத்துக்கு மனம் நெகிழ்ந்து போனது.

'என்ன மாதிரி மனிதர்கள்! இந்த திருமணத்துக்கு அபிராமியை சம்மதிக்க வைக்கும் வலிமையை எனக்கு தா!' என்று அவரது மனம் இறைவனை வேண்டியது.

''நான் கேட்க வந்த விஷயம் அது இல்லை! உங்களுக்கு இந்த சம்மந்தத்தில் சந்தோஷம் என்று எனக்கு புரியுது... ஆனால் அபியோட சம்மதம் ரொம்ப முக்கியமில்லையா?'' என்று பவானி வினவ,

அந்தக் கேள்வியில் ஒரு கணம் முகம் மாறிய கற்பகம், உடனே சமாளித்துக் கொண்டு, ''அவளுக்கும் கண்டிப்பா பிடிக்கும்.... சூர்யா மாதிரி ஒரு நல்ல பிள்ளையை யாருக்குத்தான் பிடிக்காது?'' என்றார்.

அவரை ஒரு முறை தீர்க்கமாக பார்த்த பவானி, ''நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க! எனக்கென்னமோ அபிக்கு கல்யாணம் செஞ்சுக்கிற எண்ணமே இல்லை என்று தோணுது... இல்லன்னா, என்னதான் குழந்தைகள் மேல் அன்பிருந்தால், கல்யாண வயசில் இந்த முடிவை எடுக்க முடியுமா?'' என்று அழுத்தமாகக் கேட்க, என்ன சொல்வதென்று புரியாமல் திகைத்து நின்றார் கற்பகம்.

கற்பகத்தின் கரத்தை மெல்ல அழுத்தி பவானி, ''உங்க பெண் விஷயம் உங்களுக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை... ஏதோ விஷயம் இருக்கு என்று என் மனசுக்கு தோணுது... சொல்லக் கூடிய விஷயம் என்றால் சொல்லுங்க!'' என்று கனிவுடன் வினவ, அதுவரை அமைதியாக இருந்த கற்பகத்தின் கண்கள் மீண்டும் குளம் கட்டியது.

அவரது கண்ணீரைக் கண்ட பவானிக்கு மனதுக்கு வருத்தமாக இருந்தது.

''உங்களுக்கு வருத்தமா இருக்கும் என்றால் சொல்ல வேண்டாம்!'' இதமாக அவர் சொல்ல, கண்ணீரைத் துடைத்துக் கொண்ட கற்பகம்,

''இல்லை... இதை சொல்லித்தான் ஆகணும்... நீங்க நினைக்கிற மாதிரி அபிக்கு கல்யாணம் செஞ்சுக்கிற எண்ணம் இல்லைதான்... ஆனால், அவள் மனசை மாத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கு... சூர்யா மேல் அவளுக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கு... அது அவள் மனசு மாற உதவியா இருக்கும்...'' என்றவர்,

''அதுக்கு முன்னாடி உங்ககிட்ட சில விஷயங்களை நான் சொல்லணும்! அப்புறமா யார் மூலமோ நீங்க கேள்விப்படறதை விட நானே சொல்றதுதான் நல்லது!'' என்று சொல்ல,

அவரைக் குழப்பத்துடன் ஏறிட்ட பவானி, ''எதுவா இருந்தாலும் சொல்லிடுங்க கற்பகம்... எந்த பிரச்சனை என்றாலும் அதுக்கு ஒரு தீர்வு இருக்கும்... நீங்க சொல்லப் போற எந்த விஷயமும் உங்க பொண்ணு என் மருமகளாய் வரப் போறதைத் தடுக்க முடியாது!'' என்று உறுதியுடன் சொன்னார் பவானி.

அவரை நிறைவுடன் பார்த்த கற்பகம், ''உங்களைப் பார்த்ததுக்கப்புறம் எனக்கு ரொம்ப நம்பிக்கை வந்திருக்கு... இனிமேல் அபியோட வாழ்க்கை நல்லா இருக்கும் என்று!'' என்று சொல்லிவிட்டு, ஒரு கணம் தயங்கியவர்,

''நீங்க நினைக்கிற மாதிரி அபி என்னுடைய பெண் இல்லை... என்னுடைய மருமகள்!'' என்றார்.

எதை எதையோ எதிர்பார்த்து வந்திருந்தாலும், கற்பகம் சொன்னதைக் கனவில் கூட நினைத்து பார்த்திராத தால், அதிர்ச்சியில் பவானி பேச்சிழந்து நின்றார்.

கண்ணம்மாவின் காதல்

அன்று நால்வரும் கடற்கரைக்கு வந்திருந்தார்கள்.

பாதங்கள் நீரில் நனைந்தபடி நின்று கொண்டு, பெரிய அலையை நோக்கிச் செல்வதும், அது அருகில் வரும் போது பின்னே ஓடுவதுமாக, குழந்தைகள் ஆசையும் பயமுமாக விளையாடிக் கொண்டிருக்க,

''பாருங்க அத்தான்... குழந்தைங்க பயப்படுதுங்க! நீங்க போய் கூட நில்லுங்க!'' என்று தன் அருகில் அமர்ந்து இருந்த கணவனை எழுப்பி குழந்தைகளிடம் அனுப்பினாள் கண்ணம்மா.

''பயப்படாதீங்க.. அப்பா கையைக் கெட்டியா பிடிச்சுக்கோங்க... பெரிய அலை வரும்போது நனையலாம்! என்ன?'' என்று ஆசை காட்டியபடி, குழந்தைகளின் கைகளைப் பற்றிக் கொண்டு தண்ணீரில் விளையாட்டு காட்ட ஆரம்பித்தான் தந்தை.

தந்தையின் கைகளைப் பற்றிக் கொண்டு ஒரு பெரிய அலையில் நனைந்த குழந்தைகள், உற்சாகத்துடன் ''இன்னும் கொஞ்சம் முன்னே போகலாம்பா!'' என்று தைரியமாகச் சொல்ல, அவர்கள் அலைகளில் விளையாடுவதை ரசித்துக் கொண்டிருந்தாள் கண்ணம்மா!

தண்ணீரில் ஆசை தீர விளையாடிய குழந்தைகள், மணல் வீடு கட்ட வேண்டும் என்று சொல்ல, அவர்களுக்கு கற்றுக் கொடுக்க ஆரம்பித்தான் தந்தை.

''நாங்களே செய்யப் போறோம்பா...'' என்று ஆர்ப்பரித்து விட்டு குழந்தைகள் மணலில் விளையாட ஆரம்பிக்க, கண்ணம்மாவின் கணவன் தண்ணீரில் நின்று கொண்டு கடலைப் பார்த்தபடி நின்றான். குழந்தைகள், தாங்களாக விளையாட ஆரம்பித்ததும், கணவன் தன்னருகில் வந்து அமர்வான் என்று எண்ணி இருந்த கண்ணம்மா, அவன் கடலைப் பார்த்தபடி நின்றிருக்கவும், பின்னால் சென்று தன் கைகளால் அவன் கண்ணைப் பொருத்தினாள்.

''ஹே! கண்ணம்மா! என்னடா?'' என்று அவளது கையைப் பற்றியபடி கணவன் திரும்ப,

''என்ன, என்னடா? பொண்டாட்டி கூட வந்து பேசாமல், கடலையும் மேகத்தையும் வெறிச்சுப் பார்த்துட்டு இருக்கீங்க? அங்கே அப்படி என்னதான் தெரியுதாம்?''

போலி கோபத்துடன் கேட்டவளை, சமாளிக்கத் தெரியாதவனா அவளது அத்தான்?

''நெரித்த திரைகடலில் நின்முகங் கண்டேன்;
நீல விசும்பிடை நின்முகங் கண்டேன்;
திரித்த நுரைஇடை நின்முகங் கண்டேன்;
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்;
பிரித்துப் பிரித்துநிதம் மேகம் அளந்தே
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன் றில்லை;
சிரித்த ஒலியினிலுன் கைவிலக்கியே,
திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்.''

கண்களில் குறும்புடன், பாரதியின் பாடலை மெல்ல பாடிய தன் அத்தானின் குரலில் இருந்த எல்லை இல் லாத காதல், மனதை மயக்க, அந்தக் காதலில் தன்னைக் கரைத்துக் கொள்ள விரும்பியவளாக கணவனது தோளில் சாய்ந்தாள் கண்ணம்மா!

10

கற்பகம், அபிராமி தன் மகள் இல்லை என்றதும், அதிர்ச் சியில் வாய் அடைத்துப் போய் நின்றிருந்த பவானி, மெல்ல தன்னை சமாளித்துக் கொண்டு கற்பகத்தை ஏறிட்டார்.

கற்பகத்தின் கண்களில் இருந்த வேதனை, அவரது மனதைப் பிசைய, ''நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாம் கற்பகம்!'' என்று சொல்ல வாயெடுக்க, கற்பகம் பேசத் துவங்கினார்.

''ஆமாம்... அபி என்னுடைய பெண் இல்லை... என் நாத்தனாரின் மகள்... என் கணவரின் தங்கை மகள்!''

''ஐந்து வருஷத்துக்கு முன்னால் வரை நாங்கள் எங்கள் சொந்த ஊரான தஞ்சாவூரில் இருந்தோம்!'' என்ற கற்பகம் தங்களின் கடந்த காலத்தை சொல்லத் துவங்கினார்.

இங்கே கற்பகம் பவானியிடம் தங்கள் கடந்த காலத் தைப் பற்றி சொல்ல ஆரம்பித்த நேரம், புதிய ஆர்டர் சம்பந்தமாக ஒரு நிறுவனத்துக்கு செல்ல வேண்டி காரில்

கண்களை மூடியபடி அமர்ந்திருந்த அபிராமியின் மனதிலும், அவளையும் மீறி தன் கடந்த கால வாழ்வு பவனி வந்தது!

* * *

கற்பகத்தின் கணவர் சோமசேகர் ராணுவத்தில் பணி புரிந்தவர். அந்தக் காலத்திலேயே பொறியியல் படிப்பு படித்திருந்தும், நாட்டுக்கு சேவை செய்யும் வேலையில் இருக்க விருப்பப்பட்டு, தங்கள் பெற்றோரின் மறுப்பை யும் மீறி ராணுவத்தில் சேர்ந்தவர்.

திருமணம் செய்து கொள்வதில் நாட்டமில்லாமல் இருந்த சோமசேகர் ஒரு விடுமுறையில் வந்திருந்த போது, அவரது பெற்றோர் வற்புறுத்தி பெண் பார்க்க அழைத்துச் சென்றனர். அந்தப் பெண்ணின் அத்தைப் பெண்தான் கற்பகம். தாய் தந்தை இல்லாத நிலையில் அத்தையின் வீட்டில் இடி சோறு உண்டு கொண்டு இருந்த காலம் அது.

விருப்பமில்லாமல் பெண் பார்க்கச் சென்றிருந்த சோமசேகருக்கு, முதலில் பார்வையில் பட்டது கற்பகம் தான். அவளைத் தான் பெண் பார்க்க வந்திருக்கிறோம் என்று எண்ணியவருக்கு, திருமண ஆசை எழுந்தது விதியின் செயல்தான்.

தான் பார்க்க வந்த பெண் கற்பகம் இல்லை என்றதும், தன்னுடைய பெற்றோரிடம் அவர், திருமணம் என்றால் அது கற்பகத்தோடு மட்டும்தான் என்று சொல்லி விட, கற்பகத்தின் அத்தை ஆடிய ஆட்டத்தையும் மீறி இவர் களது திருமணம் நடந்தது.

திருமணம் வேண்டாம் என்று இருந்த மகன், ஒத்துக் கொண்டு விட்டான் என்றதே அவரது பெற்றோருக்கு

கற்பகத்தின் மேல் அன்பாய் இருக்க போதுமானதாக இருந்தது.

பிறந்ததில் இருந்தே அத்தையின் வீட்டில் அடைக்கலம் என்ற பெயரில் கொடுமைகளை அனுபவித்த கற்பகத்துக்கு, புகுந்த வீட்டினரின் அன்பு, எல்லை இல்லாத சந்தோஷத்தைக் கொடுத்து, அவர்கள் மேல் பன்மடங்கு அன்பைக் காண்பிக்க வைத்தது.

சோமசேகரின் தங்கை சங்கீதாவுக்கு அண்ணி என்றால், கொள்ளை இஷ்டம். அத்தை மகளிடம் இருந்து என்றுமே நட்பை அறிந்திராத கற்பகத்துக்கு சங்கீதாவின் நட்பு ஆறுதலை அளிக்க, தன்னை விட ஐந்து வயது சிறியவளான சங்கீதாவை தன் சகோதரியாக பாவிக்கத் துவங்கினார்.

திருமணமான அடுத்த வருடமே, அவர்களுக்கு சக்தி பிறந்தான். திருமணம் வேண்டாம் என்கிறானே மகன், எங்கே தங்கள் குடும்பத்துக்கு வாரிசே இல்லாமல் போய் விடுமோ? என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்த சோமசேகரின் பெற்றோரின் கவலை நீங்கியது. தங்களது குடும்பத்தின் வாரிசைப் பெற்றெடுத்த கற்பகத்தை இன்னமும் அதிகமாகக் கொண்டாடினார்கள்.

கற்பகமும் அவர்களுக்கு மருமகளாய் மட்டுமன்றி மகளாகவும் நடந்து கொண்டார். ராணுவத்தில் பணி புரியும் கணவர் என்பதால், அவர் ஊரில் இருக்கும் நேரம் அரிது. கணவனின் அருகாமைக்காக ஏங்கும் நேரத்திலும் கற்பகத்தால் சந்தோஷமாக இருக்க முடிந்தது என்றால், அது புகுந்த வீட்டினரின் அன்பினால்தான்.

சக்தி அழகும் அறிவும் நிரம்பியவனாக அமைந்திருக்க, சங்கீதா அவனைத் தன் மடியில் இருந்து இறக்கவே மாட்டாள்.

''இவனை மருமகனா ஆக்கிக் கொள்வதற்காகவே நான் பொண்ணாதான் பெத்துக்கப் போறேன் அண்ணி...'' என்று அடிக்கடி ஆவள் ஆசையுடன் சொல்வதுண்டு.

சங்கீதாவுக்கு பெண் பார்க்கும் படலம் தொடங்கியது.

பார்க்கும் வரனை எல்லாம், அவள் தட்டிக் கழிக்க, வயதான பெற்றோர் சோர்ந்து போனார்கள். 'அவளுக்கு நல்ல புத்தி சொல்லி திருமணத்துக்கு சம்மதிக்க வை!' என்று மருமகளிடம் பொறுப்பை ஒப்படைத்தனர்.

சகோதரியாய் எண்ணிய நாத்தனாரிடம் பேசும்போது தான், கற்பகத்துக்கு அவள் காதல் வலையில் விழுந் திருப்பது தெரிய வந்தது. விசாரித்துப் பார்த்ததில் பையனும் நல்ல குடும்பத்தில் இருந்து வந்தவன் என்று புரிந்தது.

கணவருக்கு விஷயத்தைத் தெரிவித்து கலந்தா லோசித்த கற்பகம் சங்கீதாவிடம், ''பையனை பெரியவர் களைக் கூட்டிக் கொண்டு வந்து பெண் கேட்க சொல்லு சங்கீ...'' என்றபோதுதான், பையனின் வீட்டில் இந்த காதலுக்கு கடும் எதிர்ப்பு சொல்லி அழுதான் அவள்.

இதற்கு மேல் மறைக்க முடியாது என்று கற்பகம், தன் மாமனாரிடம் விஷயத்தைச் சொல்ல, மகளின் காதல் அதிர்ச்சியாய் இருந்தாலும், தங்கள் செல்ல மகளின் எதிர்கால சந்தோஷத்தை மனதில் கொண்டு திருச்சியில் இருந்த பையன் வீட்டுக்குச் சென்று சம்மந்தம் பேசச் சென்றார் அந்தப் பெரியவர்.

சோமசேகரின் குடும்பமும் ஊரில் நிலம், நீச்சு என்று வசதி உள்ள குடும்பம்தான் என்றாலும், சங்கீதா மணக்க விருப்பப்பட்ட சிவராமனின் வீட்டுக்குச் சென்ற

சங்கீதாவின் தந்தை அவர்களது வளத்தைப் பார்த்து மிரண்டுதான் போனார்.

ஊர் விட்டு ஊர் வந்து படிக்க வந்த தங்களது மகளை, பணத்துக்கு ஆசைப்பட்டு, தங்கள் பெண்ணை வைத்துக் கவிழ்க்க நினைக்கிறார்கள் என்று சிவராமனின் வீட்டில் தரக் குறைவாகப் பேசி வெளியேற்றிவிட, ஊரில் பெரிய மனிதரான தர்மலிங்கம் அவமானத்துடன் தங்கள் ஊருக்கு வந்தார்.

வந்தவர், ஆவலாய் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த தன் மகள் சங்கீதாவிடம், ''நாங்கள் வேண்டுமானால் அவனை மறந்து விடு!'' என்று ஒற்றை வரியில் சொல்லி விட்டு, தீவிரமாக வேறு மாப்பிள்ளை பார்க்கத் துவங்கினார்.

தந்தை தனக்காகப் பேசப் போய் அவமானப்பட்டு வந்திருக்கிறார் என்றறிந்த சங்கீதாவும் தந்தையின் ஏற்பாட்டுக்கு சம்மதித்தாள். சம்மதித்தாள் என்றுதான் எல்லாரும் நம்பினார்கள்.

திருமணத்துக்கு முந்தின நாள், சங்கீதா தன் காதலனுடன் வீட்டை விட்டு ஓடிப்போக, சிவராமன் வீட்டில் இருந்து ஒரு படையே திரண்டு வந்தது.

ஏற்கனவே மகளின் செயலால் மனம் நொந்து போய் இருந்த தர்மலிங்கத்தின் மனதை, சிவராமன் வீட்டினர் பேசிய தரக்குறைவான வார்த்தைகள் மேலும் நொந்து போகச் செய்ய, அன்றிரவே அவரது உயிர் பிரிந்தது.

நாற்பது ஆண்டுகளாய், ஒருயிர் ஈருடலாய் அவரோடு வாழ்ந்து வந்த அவரது தர்மபத்தினியும், கணவரின் இறுதி யாத்திரையில் தன்னையும் இணைத்துக் கொள்ள, கற்பகமும் சோமசேகரும் தனித்து விடப்பட்டனர்.

திருமணமான இந்த ஆறு வருஷமாய், விடுமுறை முடிந்து மீண்டும் இந்திய எல்லைக்குத் திரும்பும்போது, மனைவியையும், பெற்றோரையும் சகோதரியையும் பிரிந்து செல்கிறோம் என்ற வருத்தம் சோமசேகருக்கும் இருக்கும். ஆனால், அவர்கள் ஒருவருக்கொருவர் துணையாக இருக்கிறார்கள் என்ற நிம்மதி இருக்கும். இந்த முறை, தன் வேலைக்குச் செல்லும்போது அவரால், நிம்மதியாக இருக்க இயலவில்லை.

ஐந்து வயதுக் குழந்தையை வைத்துக் கொண்டு தன் மனைவி தன்னந்தனியாக என்ன செய்வாள் என்ற எண்ணம் இருந்த போதும், தாய் மண்ணின் சேவைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்ள நினைத்தவருக்கு தன் வேலையையும் விட முடியவில்லை.

கணவரின் மனக் குழப்பத்தை அறிந்த கற்பகம்தான், ''நான் தைரியமா இருந்துப்பேன் அத்தான்!'' என்று கணவருக்கு தைரியம் சொல்லி அனுப்பி வைத்தார். அற்புதமான குடும்பத்தைக் கொடுத்த கணவருக்கு, தன்னால் ஒரு மன வருத்தம் இருக்கக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

மனைவி கொடுத்த தைரியத்தில் குழப்பம் நீங்கியவராக, நிலம் நீச்சை எல்லாம் விற்று எடுத்துக் கொண்டு தங்கள் கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து, தஞ்சாவூர் டவுனில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி, தங்கள் சொந்தத்தில் ஒரு அத்தையை கற்பகத்துக்குத் துணையாக இருத்தி விட்டு தன் வேலையைப் பார்க்கக் கிளம்பினார்.

திருமணமாகி வந்த ஆறு வருடங்களாய், அன்பான மாமனார் - மாமியார், நாத்தனார் என்று ஒரு பெரிய வட்டத்துக்குள் வாழ்ந்து வந்த கற்பகத்துக்கு, இப்போது

தனிமையில் தன் குழந்தையோடு இருப்பது கடினமாக இருந்தாலும், எதையும் நல்ல விதத்தில் ஏற்றுக் கொள்ளும் பக்குவமுடையவர் என்பதால், தஞ்சாவூரில் அவரது வாழ்க்கையும் சீராகச் செல்ல ஆரம்பித்தது.

அவ்வப்போது, தன்னுடன் தோழமையுடன் இருந்த நாத்தனாரின் நினைவும் வரத்தான் செய்தது. திருமணத் துக்கு முதல் நாள், பெற்றவர்களைத் தலை குனியச் செய்துவிட்டு அவள் சென்ற விதம் வருத்தம்தான் என் றாலும், செல்லமாய் வளர்ந்த பெண் எப்படி இருக் கிறாளோ, என்னவோ என்று அவரது மனம் குடைந்து கொண்டுதான் இருந்தது.

ஒரு வருடம் கழித்து சங்கீதாவிடம் இருந்து வந்த கடிதம், அவரது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

''அன்புள்ள அண்ணி...

என் மீது மிகுந்த கோபமாய் இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்...

மனதுக்குப் பிடித்தவரோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றாலும், அம்மா, அப்பாவின் மறைவுக்கு நான்தான் காரணம் என்ற குற்ற உணர்வு என்னை தினம் தினம் கொன்று கொண்டுதான் இருக்கிறது...

உங்களை வந்து பார்க்கும் ஆவல் இருந்தாலும், அங்கே நாங்கள் வருவது தெரிந்தால், இவரது வீட்டில் இருந்து உங்களுக்கு ஏதாவது பிரச்சனை வரும் என்று எண்ணியே என் மனத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டிருக்கிறேன்...

உங்களது இந்த முகவரியைக் கண்டு பிடிப்ப தற்கே நான் பெரும்பாடு பட வேண்டி இருந்தது.

ஒரு சந்தோஷமான விஷயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பியே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்...

உங்களுக்கு மருமகள் பிறந்திருக்கிறாள் அண்ணி... நம் சக்திக்கு ஏற்ற மாதிரியே அழகாகவும் இருக்கிறாள்...

என்றைக்கு இருந்தாலும் அவள் உங்கள் மருமகள் தான் அண்ணி...

அதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடன்,

சங்கீதா.''

கடிதம் வந்த நாளில் இருந்து கற்பகத்துக்கு, சங்கீதா வையும் அவள் குழந்தையையும் பார்க்க வேண்டும் என்று மனம் துடித்துக் கொண்டிருந்தது.

சென்னையில் இருந்து கடிதம் வந்திருக்கிறது என்பதை அஞ்சல் முத்திரையை வைத்து அறிந்து கொள்ள முடிந்ததே தவிர, சங்கீதா தன் முகவரியை அந்தக் கடிதத் தில் தெரிவித்திருக்கவில்லை.

அந்த நாளில் இருந்து, சக்தியின் ஒவ்வொரு பிறந்த நாள் போதும், சங்கீதாவிடம் இருந்து வாழ்த்து அட்டை யும், ஒரு பரிசுப் பொருளும் மட்டும் வந்து கொண் டிருக்கும்.

கற்பகத்தின் விருப்பத்தின் பெயரில், விடுமுறைக்கு வரும் சோமசேகரும் தன் தங்கையின் இருப்பிடத்தைத் தேட முயற்சி செய்தும், பலன் கிட்டவில்லை.

தன் பிரியமான நாத்தனாரைச் சந்திக்க வேண்டும் என்று எண்ணம் எப்போது நிறைவேறுமோ? என்று

ஆதங்கத்தோடு காத்திருந்த கற்பகத்தின் வாழ்வில் எதிர்பாராத, துயரமான ஒரு நிகழ்வு நடந்தது.

என்னை தாக்குதலில் தன் நாட்டுக்காக தன் உயிரையே தியாகம் செய்திருந்தார் சோமசேகர்.

கணவன் அருகில் இல்லை என்றாலும், நாட்டின் ஒரு மூலையில் உயிரோடு இருக்கிறார் என்று எண்ணத்தோடு தைரியமாக வாழ்ந்து வந்த கற்பகத்தின் வாழ்வில் இடி விழுந்ததைப் போல இருந்தது. சக்திக்கு அப்போது பத்து வயதுதான் ஆகி இருந்தது.

செய்தி வந்ததில் இருந்து அழுது கரைந்து கொண்டிருந்த அன்னையைப் பார்த்த சக்திக்கு, தந்தை இனி மேல் விடுமுறைக்குக் கூட வர மாட்டார் என்பது புரிந்தது. அன்னைக்கு இனிமேல் தான்தான் துணையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அந்த பிஞ்சு வயதிலேயே அவன் மனதில் ஆழப் பதிந்தது.

விடுமுறைக்கு வரும்போதெல்லாம், தன் தந்தையுடன் விளையாடும் சக்திக்கு, தந்தையின் உருவத்தில் கம்பீரத்தில் எப்போதுமே ஒரு மயக்கம்!

எட்டு வயதாக இருக்கும்போது ''பெரியவன் ஆனதும் என்னவாக விரும்புகிறீர்கள்?'' என்று ஆசிரியை கேட்க, பெருமையுடன் ''என் தந்தையை போலவே ராணுவ வீரர் ஆகி நாட்டுக்கு சேவை செய்யப் போகிறேன்!'' என்று சக்தி உரைத்ததை தன்னுடன் அந்த ஆசிரியை பகிர்ந்து கொண்ட போது, கற்பகத்தின் நெஞ்சில் கலக்கம் எழுந்தது.

என்னதான் தன் கணவர் ஒரு ராணுவ வீரர் என்பதில் அவருக்கு பெருமை இருந்தாலும், அவர் ஒவ்வொரு

முறை விடுமுறை முடிந்து கிளம்பும்போது, மனதுக்குள் அச்சம் எழுவது வழமையே! இதில் மகனுக்கும் அதே ஆசை இருப்பதை உணர்ந்தபோது அந்த தாய் உள்ளத்துக்கு அச்சம் பிறந்ததும் இயற்கையே!

ஆனால், பள்ளி இறுதி படிப்பு முடிந்து, சக்தி மருத்துவம் படிக்கப் போகிறேன் என்று சொன்னபோது, உள்ளுக்குள் சந்தோஷமாக உணர்ந்தாலும், தயக்கத்துடன் அவனது ராணுவ ஆசையைப் பற்றி கற்பகம் விசாரிக்கத் தவறவில்லை.

''அப்பா மாதிரியே நாட்டுக்கு சேவை செய்யணும் என்பதுதான் என்னோட ஆசைம்மா... ஆனால் அதை ராணுவத்துக்கு போய்தான் செய்யணும் என்று இல்லை... நான் மருத்துவம் படிச்சு, அதன் வழியாவும் சேவை செய்யலாமே... அதுவுமில்லாமல் எந்த சேவை செய்தாலும், என் அம்மாவை கவனிச்சிக்கறதுதான் என்னோட முதல் கடமை என்று நினைக்கிறேன்!'' என்று மகன் சொன்னபோது, தனக்காகவே தன் மகன் முடிவை மாற்றி இருக்கிறான் என்பதை உணர்ந்த கற்பகத்தின் மனம் எல்லை இல்லாத சந்தோஷத்தில் ஆழ்ந்தது. இந்த வயதில் அவனுக்கிருக்கும் மனப் பக்குவத்தை எண்ணி பெருமிதமும் அடைந்தது அவரது உள்ளம்.

ஆண்டுதோறும் தன் பிறந்த நாளன்று பரிசுப் பொருள் அனுப்பும் அத்தையைப் பற்றியும் தன் அன்னையிடம் இருந்து அறிந்து வைத்திருந்தான் சக்தி.

''சென்னையில இருந்துதான் வருதும்மா... கண்டு பிடிக்கணும் என்றால் கண்டு பிடிக்கலாம்!'' என்று சக்தி சொன்னபோது,

''இருக்கட்டும் சக்தி... அவளாவே ஒரு நாள் அவ ளோட இருப்பிடத்தைத் தெரியப்படுத்துவா பாரு!'' என்று கற்பகத்தின் வாக்கு பலித்தது. ஆனால், தன் வாக்கு பலித்து விட்டது என்றெண்ணி கற்பகத்தால் சந்தோஷப் பட முடியவில்லை.

ஏனென்றால், ''என் வாழ்வின் இறுதிக் காலம் நெருங்கி விட்டது... என் மகளுக்கு நீங்கள்தான் அடைக்கலம் கொடுக்க வேண்டும்!'' என்ற தந்தியோடு, சங்கீதா தன் முகவரியை கற்பகத்துக்கு தெரிவித்திருந்தாள்.

தந்தி வந்ததும் பதறிப் போன தாயை, ஆறுதல் வார்த்தை சொல்லி சக்திதான் சென்னைக்கு அழைத்துப் போனான்.

கிழிந்த நாராய் படுக்கையில் இருந்த தன் அன்பு நாத்தனாரைப் பார்த்ததும், கற்பகத்துக்கு வேதனையை அடக்க முடியவில்லை.

''எவ்வளவு துறுதுறுப்போடு இருந்த பெண்?'' என்ற வேதனை மனதை அரிக்க அவளது அருகில் சென்ற வருக்கு, சங்கீதாவின் கழுத்தில் மாங்கல்யம் இல்லாதது தென்பட, ''சங்கீ!?'' என்று அதிர்ச்சியோடு கேட்டவருக்கு, கண்ணீரோடு ''ஆறு மாசம் ஆச்சு!'' என்று வந்த சங்கீதா வின் பதில் அதிர்ச்சியை அளித்தது.

''எப்படி?'' காற்றாகத்தான் வந்தது கற்பகத்தின் குரல்.

''ஒரு விபத்து!'' என்ற சங்கீதாவுக்கு மூச்சு வாங்கியது.

''சொல்லவே இல்லையே!'' ஆதங்கத்தோடு வந்த கற்பகத்தின் கேள்விக்கு ஒரு விரக்தியான புன்ன கையைத் தந்தாள் சங்கீதா.

''நானே தேடிகிட்ட வாழ்க்கை... அதுல வர கஷ்ட நஷ் டத்தையும் நானே சமாளிக்கணும்னுதான் இருந்தேன்... அண்ணன் இறந்தபோதுகூட உங்களுக்கு பக்கத்தில இருக்கலையே நான்... இப்போ எனக்குன்னு வரும்போது மட்டும் எப்படி வர முடியும்? ஆனால்... இப்போ உங் களைத் தான் மலை போல நம்பி இருக்கேன் அண்ணி... விபத்துல எங்க ரெண்டு பேருக்குமே அடி பட்டது... அவர் அப்பவே...'' என்றவளுக்கு குரல் அடைத்தது.

மெலிந்திருந்த அவள் கரங்களை ஆதுரத்துடன் கற்பகம் வருட, அந்த வருடலில் ஏற்பட்ட ஆறுதலை உணர்ந்து சங்கீதா மேலே பேசினாள்.

''அம்மா அப்பாவை தலை குனிய வைச்சிட்டு வந்த தப்புக்குத்தான் இந்த தண்டனை கொடுத்திருக்கார் போல கடவுள்...'' என்ற சங்கீதாவின் கரங்களை ஆதர வுடன் பற்றிக் கொண்ட கற்பகம்,

''அப்படி எல்லாம் சொல்லாதே... எல்லாம் விதி... யாரை குற்றம் சொல்ல முடியும்?'' என்று இதமாக சொன்னார்.

''எனக்கு ரொம்ப முடியாமல் போயிடுச்சு அண்ணி.. என் பொண்ணை அவங்க தாத்தா கிட்ட விடலாம்னு போனேன்... பிள்ளையே இல்லைன்னு இருக்கோம்... இதில பேத்திக்கு இங்கே என்ன இடம்? அப்படின்னு சொல்லிட்டாங்க... உங்களைத் தொந்தரவு செய்யக் கூடாதுன்னு தான் இருந்தேன் அண்ணி... ஆனால் இப்போ நிலைமை ரொம்ப மோசம் ஆயிடுச்சு... என் பொண்ணை உங்ககிட்ட பத்திரமா சேர்த்திட்டு போக ணும்னுதான் உயிரைக் கையில் பிடிச்சிட்டு இருக்கேன் அண்ணி... என் பொண்ணை கைவிட்டுட மாட்டீங் களே?'' என்று எஞ்சி இருந்த உயிரைக் கண்களில்

தேக்கியபடி சங்கீதா வினவியபோது, கற்பகத்தால் கண்ணீரை அடக்க முடியவில்லை.

“என்ன பேச்சு பேசறே சங்கீ... அவள் என் மருமகள்! அவள் பொறுப்பு என்னோடது... நீ ஒண்ணும் கவலைப் படாதே... உன்னையும் நல்ல படியா குணப்படுத்திடலாம்...” என்று அக்கறை கலந்த கண்டிப்புடன் கற்பகம் சொல்ல, நிம்மதியுடன் கண்களை மூடித் திறந்த சங்கீதாவின் கண்களில், சக்தி நின்றிருப்பது அப்போது தான் தெரிந்தது.

“சக்தி! நம்ம சக்தியா?” என்று கண்களில் ஒளியுடன் கேட்டவாறே, அவள் அவன் புறம் கையை நீட்ட, அருகில் வந்த சக்தியும் அவளது கையைப் பற்றிக் கொண்டான்.

“நல்லா வளர்ந்துட்டான் இல்லை?” என்று பெருமிதத்தோடு தன் அண்ணியிடம் சொன்னவள், “என்ன படிக்கிறே சக்தி?” என்றாள்.

“டாக்டருக்குப் படிக்கிறேன் அத்தை!” என்று சக்தி சொன்னதும், அவனது அத்தை என்ற அழைப்பில், சங்கீதாவின் கண்களில் கண்ணீர் திரண்டது.

“என் மருமகள் எங்கே சங்கீ?” என்று ஆவலுடன் கற்பகம் வினவ, “மூச்சிறைப்பு ஜாஸ்தி ஆயிடுச்சுன்னு டாக்டரைக் கூப்பிடப் போயிருக்கா!” என்று சங்கீதா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அறை வாசலில் நிழலாடியது.

வட்ட வடிவ முகத்தில் இருந்த பெரிய கண்களில் பயமும் கண்ணீரும் போட்டியிட, டாக்டருடன் உள்ளே நுழைந்த சிறுமியைப் பார்த்த கற்பகத்துக்கு, தான் திருமணமாகி வந்தபோது கண்ட சங்கீதாவைத் திரும்பப் பார்ப்பதைப் போலிருந்தது.

டாக்டர் சங்கீதாவை சோதித்துப் பார்த்துவிட்டு, ஒரு ஊசியையும் ஏற்றி விட்டு விட்டு, “அதிகம் பேசாதீங்க!” என்று சொல்லிவிட்டுப் போனார்.

அவரது பின்னாலேயே சக்தி சென்று விட, கற்பகம் கண்களில் கனிவுடன் சங்கீதாவின் கன்னத்தை ஆசையாக வருடினார். பயத்துடன் ஒரு அடி பின்னே நகர்ந்த பெண்ணைப் பார்த்த சங்கீதா, அவளை அருகில் அழைத்தாள்.

“அபிக்கண்ணு... இது உன் அத்தை... இனிமேல் நீ அவங்க கூடத்தான் இருக்கப் போறே... அத்தை சொல்றபடி கேட்டு சமர்த்தா நடந்துக்கணும் என்ன?” என்று மெல்லிய குரலில் சொல்ல, அன்னையின் கூற்றில் இருந்த பொருள் புரிபட, சிறுமிக்கு அழுகையில் உதடு பிதுங்கியது.

“சங்கீ... குழந்தையை பயமுறுத்தாதே... இங்கே இருந்து நல்லபடியா உன்னையும் கூட்டிக்கிட்டுதான் போகப் போறோம்!” என்ற கற்பகத்தை நன்றியோடு நோக்கினாள் அபிராமி.

11

கற்பகம் அபிராமியை தஞ்சாவூருக்கு அழைத்து வந்து ஒரு மாதம் ஆகி இருந்தது.

“நீங்க வர வரைக்கும் உயிரை கையில் பிடித்து வைத்திருந்தேன்!” என்று சங்கீதா சொன்னதை மெய்ப்பிப்

பதைப் போல அவளது உயிர், மகளுக்கு நல்ல அடைக் கலம் கிடைத்ததை எண்ணி நிம்மதியுடன் தன்னை கூட்டை விட்டுப் போய் இருந்தது.

அன்னையின் இழப்பைத் தாங்க முடியாமல் அழுது கொண்டே இருந்த அபிராமியைக் கண்ட கற்பகத்துக்கு, தன் சிறு வயது ஞாபகம் வந்தது. தாய் தந்தை இறந்த பின், அடைக்கலமாக அத்தை வீட்டுக்கு வந்து, தான் பட்ட கொடுமைகளை எண்ணியவருக்கு, அபிராமியை கண்ணுக்குள் வைத்து பார்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் தோன்றியது.

அபிராமிக்கு, அப்படியே தன் அன்னையின் ஜாடை தான். அதே வட்ட முகம், பெரிய கணகள்!

ஆனால், சங்கீதாவின் கண்களில் எப்போதும் குறும் பும், துறுதுறுப்பும் நிறைந்து இருக்கும். அபிராமியின் விழிகளில், சோகமும் பயமுமே நிறைந்திருந்தது.

அவளது சோகத்தைப் புரிந்து கொள்ள முடிந்த கற்பகத் தால், அவள் கண்களில் எப்போதும் குடி இருந்த பயத் தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவரும், கோவிலுக்கு அழைத்துச் செல்வது, அழகழ கான அணிமணிகளை வாங்கித் தருவது என்று அவளை உற்சாகப் படுத்த என்ன என்னவோ செய்தும், அபிராமி யின் பயத்தைப் போக்க முடியவில்லை. காரணம் புரிந் தால் அல்லவா, அதைப் போக்க முயலும்?

இந்த ஒரு மாதத்தில் அழுகை குறைந்து அமைதியாக இருந்தாள் என்றாலும், சகஜமாகப் பேசிப் பழகவில்லை என்பதோடு அவளை சகஜமாகப் பேச வைக்க கற்பகம் எடுத்த முயற்சிக்கும், அவளிடம் எந்த எதிரொலியும் இருக்கவில்லை.

அபிராமியின் இந்த போக்கு கற்பகத்துக்கு மனவருத் தத்தைத் தந்தது. அவர், தன் வருத்தத்தை சக்தியிடம் பகிர்ந்து கொண்டார்.

''நானும் கவனிச்சிக்கிட்டுதான் இருக்கேன்மா... அவள் மனசை ஏதோ ஒரு விஜயம் பாதிச்சிருக்குன்னு நினைக் கிறேன்... அதைத் தெரிஞ்சிக்க முயற்சி செய்யணும்... இந்த வயசிலேயே இந்த மாதிரி கூட்டுக்குள்ள அடைஞ்சுக் கறது அவளுக்கு நல்லதில்லை!'' என்றான் மகன்.

மகன் சொன்னதைக் கேட்ட கற்பகம் யோசனையில் ஆழ்ந்தார். சிறிது நேரத்துக்குப் பிறகு, ஏதோ முடிவு செய்தவராக, படிப்பதாய் பாவனை செய்து கொண் டிருந்த அபிராமியின் அருகில் வந்து அமர்ந்தார்.

அருகில் அசைவு தெரிந்ததும், திடுக்கிட்டு நிமிர்ந்த அபிராமி, அங்கே கற்பகத்தைக் கண்டதும், எழுந்து செல்ல முயன்றாள்.

''அபி... உட்காரேன்... உன்கிட்ட ஒரு விஷயம் கேட் கணும்!''

கற்பகத்தின் வார்த்தைகளைக் கேட்டதும், அபிராமி யின் கண்களில் இருந்த பயம் கூடியது.

அதைக் கண்டும் காணாதவராய், ''இந்த அத்தையை உனக்குப் பிடிக்கலையா அபி?'' என்றார் கற்பகம்.

''இல்லை... அப்படி எதுவும் இல்லை!''

அவசரமாக பதில் வந்தது அபிராமியிடம் இருந்து.

''பின்னே... ஏன் என்கிட்டே பேசவே மாட்டேங்கிறே?''

குனிந்திருந்த தலையை நிமிர்த்தி கற்பகத்தை நோக்கி விட்டு, மீண்டும் அவள் தலையை குனிந்து கொள்ள, அவளது முகத்தை நிமிர்த்திய கற்பகம்,

''இங்கே பாரு... உன்னோட கவலை எனக்குப் புரியுது... இந்த வயசில உனக்கு ஏற்பட்டது பெரிய இழப்புதான்... இல்லை என்று சொல்லை... ஆனால் அதுக்காக நீ இப்படி யார் கிட்டயும் பழகாமல் ஒரு கூட்டுக்குள்ளேயே இருக்கறது நல்லதில்லைடா ராஜாத்தி... இங்கே உன்னை நான் கண்ணுக்குக் கண்ணா பார்த்துக்கணும்னு ஆசைப் படறேன்... நீயும் மற்ற குழந்தைகளைப் போல சந் தோஷமா இருக்கணும்னு ஆசைப்படறேன்...''

ஆதங்கத்துடன் கற்பகத்திடம் இருந்து வந்த வார்த்தைகள் அபிராமிக்கு கண்ணீரை வரவழைத்தது.

அவளது கண்ணீரைக் கண்ட கற்பகம், ''அழாதேடா... உனக்கு நாங்க இருக்கோம்... அழக் கூடாது!'' என்று அவளது கண்ணீரைத் துடைத்து விட்டார்.

''நான் இங்கேயே இருக்கலாம்தானே? என்னை எங்கேயும் அனுப்பிட மாட்டீங்களே?''

பயத்துடன் கேட்டவளை ''என்ன கேள்வி இது?'' என்று கடிந்து கொண்ட கற்பகம், ஏதோ தோன்ற, ''ஏன்டா அப்படிக் கேட்கிறே?'' என்று கனிவுடன் வினவினார்.

''இல்லை.... அந்த அத்தை அப்படிதான் சொன் னாங்க... நான் அதிர்ஷ்டம் கெட்டவளாம்... எங்கே போனாலும், என்னை வைச்சுக்க முடியாமல் துரத்திடுவாங் களாம்!''

அபிராமி சொன்னதைக் கேட்டதும், அதிர்ச்சியில் திகைத்து நின்ற கற்பகம், சமாளித்துக் கொண்டு ''யார் அப்படிச் சொன்னாங்க?'' என்றார்.

''அப்பா இறந்த பிறகு, அம்மாவுக்கு ரொம்பவும் முடி யலை... என்னை தாத்தா கிட்டே விடணும்னு திருச்சிக்கு

கூட்டிட்டுப் போனாங்க!'' என்று சொல்ல ஆரம்பித்த அபிராமிக்கு, அன்றைய நாள் கண் முன் படமாய் விரிந்து கண்களில் நீர் கோர்த்தது.

* * *

திருச்சிக்கு தாத்தா வீட்டுக்குப் போகிறோம் என்று சொல்லி அபிராமியை அழைத்து வந்திருந்தாள் சங்கீதா. உடல் நிலை மோசமாக இருந்த போதிலும், தனக்கு ஏதாவது ஆகி விட்டால், மகள் திக்கற்ற நிலைக்கு ஆளாகி விடக்கூடாது என்ற எண்ணத்தில், தன் உடல் நிலையைக் கூடப் பொருட்படுத்தாமல் வந்திருந்த வளுக்கு, வீட்டின் உள்ளே நுழையக் கூட அனுமதி கிடைக்கவில்லை.

மாமனாரின் பெயரைச் சொல்லி, அவரைப் பார்க்க வேண்டும் என்று அவள் காவலாளியிடம் கெஞ்சிக் கொண்டிருக்க,

''என்ன இங்கே கலாட்டா?'' என்று வேலையாளை அதட்டலாகக் கேட்டுக் கொண்டே, வெளியே வந்தார் ஒரு பெண்மணி.

தன் கணவரின் ஜாடையில் இருந்த பெண்மணியைப் பார்த்ததுமே, அவர் கணவரின் மூத்த சகோதரி என்று சங்கீதாவுக்குப் புரிந்து போயிற்று.

''பெரிய அய்யாவைப் பார்க்கணும் என்று சொல் றாங்கம்மா...'' என்று காவலாளி சொன்னதும், வந்தவர் களை உற்று நோக்கிய அந்தப் பெண்மணி, என்ன நினைத்தாரோ, ''உள்ளே வரச் சொல்லு!'' என்று அதிகார மாகச் சொன்னார்.

''என்னம்மா? என்ன விஷயம்?'' என்று அதட்டலாகக் கேட்டவரிடம், ''நான் சங்கீதா... உங்க தம்பியுடைய

மனைவி!'' என்று சங்கீதா சொன்னதுதான் தாமதம்! அந்த பெண்மணியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''தம்பியா... எனக்கு அப்படி யாரும் இல்லை... எங்க அப்பாவுக்கு நான் ஒரே பெண்!'' என்று அவர் முகத்தில் அடித்தது போலச் சொல்ல, சங்கீதாவின் முகத்தில் இருள் படர்ந்தது.

''அப்படி எல்லாம் சொல்லாதீங்க... நாங்க உங்களை எல்லாம் மீறி கல்யாணம் செஞ்சுகிட்டது தப்புதான்... அதுக்காக அவர் உங்க தம்பி இல்லை என்று ஆகிடுமா?'' மெல்லிய குரலில் சங்கீதா கேட்க,

''அந்த கதை எல்லாம் இருக்கட்டும்... இப்ப எதுக்கு இங்கே வந்தீங்க?''

''அவர்... அவர் இறந்து போன விஷயத்தை உங்களுக்கு தெரியப்படுத்தி இருந்தேனே!'' வேதனையுடன் சங்கீதா சொல்ல, அந்த பெண்மணியின் முகத்தில் பெயரளவுக்குக் கூட இளக்கம் தோன்றவில்லை.

''ஹ்ம்ம்... அவன்தான் எங்களைப் பொறுத்தவரை பதினைந்து வருஷத்துக்கு முன்னாடியே செத்துப் போயிட்டானே!''

இரக்கமற்று வந்த அந்த வார்த்தையில், கண்ணீர் வந்தாலும், அடக்கிக் கொண்டு,

''எனக்கு உடம்பு முடியலை... இன்னும் கொஞ்ச நாள் தான் என்று டாக்டர் சொல்லிட்டார்... அதான்... அதான் எங்க பொண்ணை அவங்க தாத்தா கிட்ட ஒப்படைச்சிட்டு போலாம்னு வந்தேன்...''

திக்கித் திணறி சங்கீதா சொல்லி முடிக்க, ஏளனத்துடன் அந்த பெண்மணியின் பார்வை அபிராமியிடம் படிந்தது.

''இது உன் பொண்ணா? நீ அவனை எங்க கிட்டே இருந்து பிரிச்சிட்டு போனே... இவள் இந்த வயசிலேயே அப்பனை முழுங்கிட்டாளா? அவனே இல்லைன்னு ஆனதுக்கப்புறம் இங்கே எதுக்கு வந்தீங்க? மீதி இருக்கிறவங்க உயிரைப் பறிக்கவா? உங்களை இந்த வீட்டுப் படி மிதிக்க விடக் கூடாது என்று அப்பா சொல்லி இருக்காரு... அவர் வெளியே போய் இருக்கார்... அவர் வரதுக்குள்ளே ரெண்டு பேரும் இடத்தைக் காலி செய்யுங்க!''

மிரட்டலாக வந்த வார்த்தையில் மிரண்டு போய் அபிராமி, அன்னையின் பின் மறைந்து நின்று கொண்டாள்.

''அப்படி எல்லாம் சொல்லாதீங்க... மாமா வந்தவுடன் அவரைப் பார்த்துப் பேசி இவளை இங்கே ஒப்படைத்து விட்டு நான் போயிடறேன்!'' என்ற சங்கீதாவின் வேண்டுகோளில், அந்த பெண்மணியின் முகம் மாறியது.

''ஏன்... வேற நாதி இல்லன்னா இங்கே கொண்டு வந்து விட நாங்க என்ன இங்கே அநாதை இல்லமா நடத்தறோம்? உனக்கு ஒரு அண்ணன் இருந்தானே அங்கே கொண்டு போய் விட வேண்டியதுதானே? அவங்களும் இந்த அதிர்ஷ்டம் கெட்ட பொண்ணை வைச்சிக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்களா? இங்கே பாரு... இப்பவே போனால் உனக்கு மரியாதை... இல்லைன்னா...'' என்று அந்தப் பெண்மணி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அபிராமி அன்னையின் கரத்தைப் பற்றி இழுத்து, நடக்கத் தொடங்கி இருந்தாள்.

''ஏய் வாட்ச் மேன்! இனிமேல் இந்த மாதிரி ஆளுங்க வந்தால், கேட்டைக் கூடத் திறக்காதே!''

அந்த பெண்மணியின் குரல் அவள் காதில் நாராசமாய் ஒலித்தது.

* * *

அழுகையினூடே நடந்ததை அபிராமி சொல்ல, கேட்டுக் கொண்டிருந்த கற்பகத்துக்கு மனம் ஆறவில்லை. அறையின் வாயிலில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த சக்திக்கும் மனம் கொதித்தது.

'ச்சே... என்ன மாதிரி மனிதர்கள்! இரண்டும் கெட்டான் வயதில் இருக்கும் ஒரு குழந்தையின் எதிரே என்ன பேச்சு பேசி இருக்கிறார்கள்!'

அத்தகைய பேச்சுதானே, இந்த இடமும் தனக்கு நிலைக்குமா என்ற பயத்தை இந்த பிஞ்சு இல்லத்தில் விதைத்திருக்கிறது.

அழுது கொண்டிருந்த அபிராமியின் கண்ணீரை துடைத்த கற்பகம், நிதனமாக பேசத் துவங்கினார்.

''இங்கே பாரு அபி... இது உன் வீடு... உன் தாத்தாவின் பணத்தில் வாங்கிய வீடு... இங்கே சக்திக்கு எவ்வளவு உரிமை இருக்கோ... அதே அளவு உனக்கும் உரிமை இருக்கு... இங்கே இருந்து உன்னை அனுப்பற அதிகாரம் யாருக்கும் இல்லை... புரியுதா? அதனால மனசில எந்த பயத்தையும் வைச்சிக்காமல் சந்தோஷமா இரு!''

''அவங்க சொன்ன மாதிரி உங்க அப்பா இறந்து போனதுக்கும் உனக்கு எந்த சம்மந்தமும் இல்லை... அவங்க சொல்லிட்டாங்க என்று அதையே நினைச்சுக் குழப்பிக்காதே!''

கற்பகத்தின் பேச்சில் அபிராமியின் மனமும் தெளிவடைந்தது.

மனதின் பாரத்தை கொட்டி விட்டதாலோ என்னமோ, கற்பகத்திடமும் இயல்பாக அவளால் பேசிப் பழக முடிந்தது.

சக்தியிடம் காட்டிய அன்பை விட அதிகமாகத் தன்னிடம் அன்பு காட்டிய கற்பகம் அத்தையிடம் மரியாதை தோன்றி, அவளை அவரிடம் நெருங்க வைத்தது.

அவரும், அவளை 'குழந்தை... குழந்தை' என்று கொண்டாடினார்.

சக்தி கூட, ''அந்த குழந்தை வந்ததில் இருந்து இந்த குழந்தையை நீங்க கண்டுக்கவே மாட்டேங்கறீங்க!'' என்று கேலி செய்வான்.

''ரொம்பவும் குழந்தை என்று மடியில் தூக்கி வச்சுக் காதீங்கம்மா... அவளை கொஞ்சம் வளரவும் விடுங்க!'' என்று கேலியாக அவன் சொன்னதைக் கேட்க நேர்ந்த அபிராமிக்கு, ஏனோ சக்தியின் மேல் எரிச்சல் மூண்டது.

கற்பகம் அத்தை தன் மேல் பாசமாக இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லையோ என்ற எண்ணம் தோன்ற, அவனிடம் இருந்து விலகியே இருக்கத் தொடங்கினாள்.

பத்தாம் வகுப்புத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து அபிராமி தேர்ச்சி பெற, பிளஸ் ஒன்னில் உயிரியல் படிப்பை எடுத்து படித்தால் மருத்துவம் படிக்கலாம் என்று கற்பகம் சொல்ல, அபிராமி மறுத்தாள்.

''ஐயோ... வேண்டாம் அத்தை... தவளை எல்லாம் அறுக்க சொல்லுவாங்களாம்!''

அருவெறுப்பு கலந்த பயத்துடன், அவள் மறுக்க,

''சரி... கம்ப்யூட்டர் சயின்ஸ் க்ரூப் சேருகிறாயா?'' என்ற கற்பகத்தின் கேள்விக்கும் ஏதோ ஒரு காரணம் சொல்லி மறுப்பு சொன்னாள் அபிராமி.

அத்தையும் மருமகளும் பேசிக் கொள்வதில், கொஞ்ச நேரம் தலை இடாமல் கேட்டுக் கொண்டிருந்த சக்தி,

அபிராமி எல்லாவற்றுக்கும் காரணம் சொல்லவும், எரிச்சலுற்று இடை புகுந்தான்.

''சரி... அப்போ வீட்டிலேயே உட்கார்ந்துக்கறீயா?''

எரிச்சலுடன் வந்த சக்தியின் கேள்வியில், திடுக்கிட்டு நிமிர்ந்த அபிராமி, கற்பகத்தின் பின்னால் ஒளிந்து கொள்ள,

''இங்கே வா!'' என்றழைத்தான் சக்தி.

''கூப்பிடறான் இல்லை... போ!'' என்று கற்பகம் சொல்ல, மெல்ல அவனருகில் வந்தாள் அபிராமி.

''உனக்கு ஏதாவது ஒரு பாடத்துல ஆசை இருக்கும் தானே... அதை சொன்னால் அந்த க்ரூப்லேயே சேர்ந் துக்கலாம்... அதை வெளிப்படையா சொல்றதை விட் டுட்டு எதுக்கு எல்லா பாடத்துக்கும் ஒரு குறை சொல் லிட்டு இருக்கே?''

சக்தியின் வெளிப்படையான கேள்வியில், அவனை சற்றே ஆச்சரியத்தோடு நோக்கிய அபிராமி, உடனே தலை குனிந்து கொண்டு, ''எனக்கு எங்க அப்பா மாதிரி அக்கௌண்ட்ஸ் படிக்கணும்னு ஆசை!'' என்று தயக்கத் துடன் சொல்ல, அவன் விருப்பப்படியே அந்தப் பாடப் பிரிவிலேயே சேர்க்கப்பட்டாள் அபிராமி.

அபிராமியின் விஷயத்தில் கற்பகத்துக்கு இன்னொரு மனக் கலக்கமும் இருந்தது.

பன்னிரண்டாம் வகுப்பில் அடியெடுத்து வைத்தும், அபிராமி பூப்படையவில்லை என்பதே கற்பகத்தின் கலக் கத்துக்குக் காரணம். எல்லாம் காலா காலத்தில் நடந் தால்தான் நல்லது என்பது அவரது எண்ணம். அதற்காக கடவுளிடம் வேண்டுதல் வைப்பது அவருக்கு வழக்க மாயிற்று.

அன்று, பக்கத்துக்கு வீட்டில் இருந்த பெண்ணுக்கு, பக்கத்துக்கு ஊரில் அவர்களது குல தெய்வ கோயிலில் திருமணம் என்று அவர்களுடனே வேனில் சென்றிருந் தார் கற்பகம்.

காலையில் எழுந்து சக்திக்கும், அபிராமிக்கும் உணவை சமைத்துவிட்டுக் கிளம்பி இருந்தார் அவர்.

சக்தி அப்போது தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில், ஐந்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தான். ஏதோ விடுமுறை என்று அவன் வீட்டில் இருக்க, அபிராமி பள்ளிக்குச் சென்றிருந்தாள்.

மதியம் இரண்டு மணி அளவில், கதவு தட்டப்பட, எழுந்து சென்று கதவைத் திறந்த சக்தி, அங்கே அபி ராமியைக் காணவும் திகைத்து நின்றான்.

'நான்கு மணிக்குத்தானே பள்ளி முடியும்?' என்று யோசித்தவன், அபிராமியின் பக்கத்தில் ஒரு பெண்மணி நிற்பதை அப்போதுதான் கண்டவனாக, ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தான்.

''வீட்டில் பொம்பளைங்க யாரும் இல்லையா தம்பி?'' என்று அவர் பதிலுக்கு விசாரிக்க, இவர் எதற்கு இதை விசாரிக்கிறார் என்று எண்ணிய சக்தி, அபிராமியின் புறம் திரும்ப, அவளோ முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

''இல்லை... அம்மா ஒரு கல்யாணத்துக்குப் போய் இருக்காங்க... சாயந்திரம்தான் வருவாங்க!'' என்று சக்தி சொன்னதும்,

''அப்படியா? சரி... இந்த பொண்ணு பெரிய மனுஷி ஆயிடிச்சு... மேடம் வீட்டுக்கு போன் செஞ்சாங்க... உங்க

போன் வேலை செய்யலை போல... இந்த பொண்ணுக்கு வேற வயித்து வலி ஜாஸ்தியா இருக்கு... அதான் வீட்டுல கொண்டு வந்துவிடச் சொன்னாங்க! எனக்கு ஸ்கூல்ல வேலை இருக்கு... நான் போகணும்!'' என்ற பெண்மணி கிளம்ப, அவர் பள்ளியில் வேலை பார்க்கும் ஆயா என்பது சக்திக்கு புரிந்தது.

இப்போது என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குப் புரியவில்லை.

அபிராமியை நோக்கியவனுக்கு, அவளது கண்களில் இருந்த சிவப்பு, அவள் அழுதிருக்கிறாள் என்பதை உணர்த்தியது.

அம்மா இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று எண்ணியவன்,

''சாப்பிட்டியா?'' என்று அபிராமியிடம் விசாரித்தான்.

''ம்ம்...'' மெலிதாய் பதில் வந்தது அபிராமியிடம் இருந்து.

சந்தேகத்துடன் அவளது பையில் இருந்து டிபன் பாக்சை எடுத்துப் பார்த்தவனுக்கு, கற்பகம் வைத்திருந்த புளியோதரையில் ஒரு வாய்தான் இவள் சாப்பிட்டு இருப்பாள் என்று தோன்றியது.

சமையலறைக்குச் சென்றவன், ப்ரிட்ஜில் இருந்த மாவை எடுத்து தோசை வார்த்தான். தொட்டுக்கொள்ள சர்க்கரை வைத்து எடுத்துக் கொண்டு வந்தவன், ''சாப்பிடு!'' என்று சொல்லி அவளிடம் கொடுக்க, அவள் தயங்கினாள்.

''சாப்பிடு... வெறும் வயிற்றில் இருந்தால் இன்னமும் வலி ஜாஸ்தியா தெரியும்!''

நல்ல பசியில் இருந்த அபிராமியும், அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் வாங்கி உண்டாள்.

வயிற்றுக்கு ஈந்தவுடன் வலி கூட மட்டுப்பட்ட மாதிரி தோன்றியது.

பள்ளியில் ஆசிரியர், ''அம்மா இல்லையா?'' என்று கேட்டதும் தோன்றி இருந்த வலியோடு வீட்டுக்கு வந்தவளுக்கு, அத்தையும் வீட்டில் இல்லாமல் போகவே, அழுகையாய் வந்தது.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த சக்தியை அவள் கண்ணீர் எதோ செய்ய, அவளருகில் அமர்ந்தவன், ''ரொம்ப வலிக்குதா?'' என்று மென்மையாக வினவினான்.

அந்த மென்மையான குரல், அபிராமியை மேலும் பலவீனப் படுத்த, கண்ணீரோடு ''வலி இல்லை... ஆனால்... என்னவோ... பயமா இருக்கு!'' என்றாள் அவள்!

அவள் கையை மென்மையாகப் பற்றிக் கொண்ட சக்தி, ''எதுக்கு பயம்? இது ஒண்ணும் பயப்படற விஷயமில்லை! இது நீ ஆரோக்கியமா இருக்கிறாய் என்பதற்கான அடையாளம்! அவ்வளவுதான்!'' என்று கனிவுடன் சொல்ல, 'இவனுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?' என்ற ஆச்சரியத்தோடு அவனை நோக்கினாள் அபிராமி.

அவளது கண்களிலேயே அவளது கேள்வியைப் படித்தவன், ''நான் டாக்டருக்கு படிக்கிறேன்! தெரியுமில்லை?'' என்று கெத்தாக சொல்ல, அபிராமியின் முகத்திலும் ஒரு புன்னகை வந்தது.

''ம்ம்ம்... குட் கேர்ள்! இப்படியே இரு... கொஞ்ச நேரம் வேணும்னா படுத்துக்கோ!'' என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றவனை 'இவ்வளவு மென்மையாகக் கூட

இவனால் பேச முடியுமா?' என்று வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அபிராமி.

12

அபிராமி வணிகவியல் இளநிலை படிப்பு கடைசி ஆண்டில் படித்துக் கொண்டிருந்தாள். ஆள் வளர்ந்ததைப் போலவே, அவளுடன் அவளது பயமும் வளர்ந்து கொண்டு தான் இருந்தது. என்னதான் கற்பகம் தைரியமூட்டினாலும், எந்த விஷயத்தையும் தனியாக செய்வதென்றால், அவளுக்கு இன்னமும் பயம்தான்.

சக்தி மருத்துவத்தில் மேல்நிலைப் படிப்பு விட்டு, தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணி புரிந்ததோடு, தனியாக கிளினிக் வைத்து ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவ சேவையும் செய்து கொண்டிருந்தான்.

சக்தி எப்போதுமே, அபிராமியிடம் ஒரு கண்டிப்புடன் தான் நடந்து கொள்வான் என்றாலும், இந்த ஒரு வருடமாக எதற்கெடுத்தாலும், தன்னுடன் கண்டிப்பு தொனியிலேயே பேசியது அபிராமிக்கு அவள் மேல் எரிச்சலையும் கோபத்தையும் அதிகப்படுத்தி இருந்தது.

அவன் சொல்வது எல்லாமே தன் நலன் கருதித்தான் என்றாலும், அவன் சொல்லும் தொனியிலேயே அதை கேட்கக் கூடாது என்று அவளுக்குத் தோன்றும்.

கற்பகத்திடம், அவனைப் பற்றி குறை கூறினாலும், சக்தியின் எதிரில் அவள் வாயைத் திறப்பதில்லை.

ஏதாவது சொன்னால், அதற்கும் சேர்த்து பாட்டு வாங்க வேண்டுமே என்ற சலிப்பில், அவன் என்ன சொன்னாலும் தலையாட்டுவதே அவளது வழக்கமாயிற்று.

''வாயைத் திறந்து என்று சொல்ல மாட்டாயா?'' என்று அதற்கும் சில நேரங்களில் அவள், அவனிடம் இருந்து வாங்கிக் கட்டிக் கொள்வதுண்டு.

''எதுக்குடா சும்மா சும்மா குழந்தையை அதட்டிகிட்டே இருக்கே?'' என்று கற்பகம்தான் அவளுக்காக பரிந்து கொண்டு வருவார்.

''ஆமாம்... நீங்க அவளை குழந்தை, குழந்தை என்று மடியில் தூக்கி வைச்சிகிட்டு இருக்கிறதாலதான், அவளுக்கு தைரியம் என்று ஒன்னு வளராமலே இருக்கு... நேற்று அவள் கூட படிக்கிற சுஜா வரலையாம்... மேடம் நம்ம ஸ்டாப்பிங் எதுன்னு கூட தெரியாம, அடுத்த ஸ்டாப்பிங்ல இறங்கி திரு திருன்னு முழிச்சிட்டு இருக்காங்க!'' என்று அவன் சொன்னதும்,

கற்பகம் 'அப்படியா?' என்பது போல அவளைப் பார்க்க, நேற்று பஸ் ஸ்டாப்பில் நின்று விழித்துக் கொண்டிருந்ததைப் போலவே இப்போதும் விழித்துக் கொண்டு நின்றாள்.

அன்னை அவளை பார்வையாலே விசாரணை செய்வதைப் பார்த்தவன், ''என்ன? நான் சொன்னால் நம்ப மாட்டீங்களா? நான் ஒரு வேலையா அங்கே போய் இருந்தேன்... என்னடா இவள் இங்கே நிற்கிறாளே என்று விசாரித்தால், மேடம் அப்போதான் விஷயத்தை சொல்றாங்க!'' என்று பொரிந்தவன்,

''இன்னைக்கு எதுக்கு மேடம் லீவு போட்டிருக்காங்க தெரியுமா?'' என்று வினவ,

''குழந்தைக்கு ஒரே தலைவலியா இருக்காம்பா!'' என்று கற்பகம் வருத்தத்துடன் சொன்னார்.

''அதெல்லாம் எதுவும் இல்லை! இன்னைக்கும் அந்த சுஜா லீவ்... அதான் தனியா போக பயந்துகிட்டு மேடம் லீவ் போட்டுட்டாங்க!'' என்று விஷயத்தைப் போட்டு உடைக்க, 'எப்படித்தான் எல்லாத்தையும் கண்டுபிடிக் கிறானோ?'' என்று தோன்றிய எரிச்சலை, வெளியே காட்டாமல் மறைத்து அமைதியாக நின்றாள் அபிராமி.

''சரி... அவள்தான் பயப்படறான்னு தெரியுதில்லை? இன்னைக்கு ஒரு நாள் குழந்தையை காலேஜில கொண்டு போய் விட்டுட்டு வாயேன்!'' என்ற அன் னையை முறைத்துப் பார்த்தான் மகன்.

''அவளை நீங்க வளரவே விட மாட்டீங்க அம்மா!'' என்று எரிச்சலுடன் மொழிந்து விட்டு அபிராமியின் பக்கம் திரும்பினான் சக்தி.

''மூணு வருஷமா போயிட்டு வர வழிதானே... அதுல போக என்ன பயம் உனக்கு? நான் எந்த ஸ்டாப்பிங்ல இறங்கணும், எந்த பஸ் பிடிக்கணும் எல்லாம் ஒரு தரம் சொல்றேன்... கேட்டுட்டு ஒழுங்கா இன்னைக்கு காலே ஜுக்கு போயிட்டு வா!'' என்று அதட்டலுடன் அவன் சொன்னதும், மறுக்க பயந்து கொண்டு சரி என்று தலை யாட்டினாள் அபிராமி.

அவள் தலையை உருட்டிய தினுசில் வந்த சிரிப்பை அடக்கி கொண்ட சக்தி, பொறுமையாக வழியை எடுத்துச் சொல்ல, அவளும் அக்கறையுடன் கேட்டுக் கொண்டாள்.

மறுத்தாலும் விட மாட்டான் என்றதோடு, கல்லூரிக்கு விடுப்பு எடுத்து பாடத்தை தவற விடுவதில்

அவளுக்குமே விருப்பம் இருக்கவில்லை. இருந்தாலும், தனியாகப் போய் வர வேண்டும் என்ற பயம் இருந்து கொண்டேதான் இருந்தது.

அவளது கண்களில் பயத்தை உணர்ந்தவன்,

''அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே

உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதிலும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே''

''பாரதியார் பாட்டு... படிச்சால் மட்டும் போதாது... கொஞ்மாவது அதை பின்பற்றணும்!'' என்று சக்தி அழுத் தத்துடன் சொல்ல, தான் நேற்று பாரதியார் கவிதைகள் புத்தகத்தை அவனது அறையில் இருந்து எடுத்து வந்து இந்த பாட்டை பாடிக் கொண் டிருந்தது அவளுக்கு நினைவு வந்தது.

'ஒரு விஷயம் இவன் கணகளில் இருந்து தப்பாது போல!' என்று மனதுக்குள் நினைத்தவள்,

'எதற்கெடுத்தாலும் பாரதியாரின் கவிதை ஒன்றை மேற்கோள் காட்டி பேசறதே வேலையா போச்சு! மனசுக் குள்ள பெரிய பாரதியார்னு நினைப்பு! முறுக்கு மீசையும் முண்டாசும் இல்லாததுதான் பாக்கி!' என்று எண்ணி, கற்பனையில் சக்திக்கு முறுக்கு மீசையும், முண்டாசும் வைத்து பார்க்க, கண்களில் சிரிப்பு தோன்றியது.

''என்ன?''

அவன் குரல் கேட்டதும் நடப்புக்கு வந்தவள், ''ஒண்ணு மில்லை!'' என்று அவசரமாக தலையாட்டினாள்.

''பத்திரமாகப் போயிட்டு வா!'' என்று கொஞ்சம் மென்மையான குரலில் சொல்லி விட்டு சக்தி திரும்ப,

''ம்க்கும்... இவ்வளவு நேரம் அப்படி போட்டு மிரட்டிட்டு, இப்போ ரொம்ப சாப்டா சொல்றாராம்!' என்று மனதுக்குள் அவள் கழுத்தை நொடிக்கும்போது, சக்தி சட்டென்று அவள் புறம் திரும்பினான்.

''ஏதாவது சொன்னாயா என்ன?'' என்ற அவன் கேள்வியில்,

அபிராமிக்கே, 'நினைத்ததை வாய் விட்டே சொல்லி விட்டேனா என்ன?' என்ற சந்தேகம் தோன்றியது.

''ஒண்ணும் சொல்லலையே...'' என்று மெல்லிய குரலில் அவள் சொல்ல,

''இல்லை... ஏதோ சொன்ன மாதிரி இருந்தது... அதான் கேட்டேன்!'' என்று சொல்லி விட்டு அவன் திரும்ப நடக்க, நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் அபிராமி.

'எமகாதகன்! மனசில நினைக்கிறதை கூட கண்டு பிடிச்சாலும் கண்டுபிடிச்சுடுவான்!' என்று நினைத்தவள், சக்தி மீண்டும் அவள் பக்கம் திரும்பிப் பார்க்கவும், அவன் மீண்டும் ஏதாவது கேட்பதற்குள், அந்த இடத்தில் இருந்து ஓடினாள்.

மாலை அவள் வீட்டுக்கு வந்ததும், தொலைபேசி அடித்தது.

''அத்தை போன் அடிக்குது!'' என்று சொல்லிவிட்டு அபிராமி செய்து கொண்டிருந்த வேலையைத் தொடர, கற்பகம் வந்து போனை எடுத்தார்.

''சொல்லு சக்தி... ம்ம்ம்... சரியான நேரத்துக்கே வந்திட்டாள்... இல்லை பார்த்துதான் இறங்கினாளாம்...'' என்று சொல்லி விட்டு அவர் போனை வைக்க, சக்தி தான் தன்னைப் பற்றி விசாரிக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

அவள் மேல் அக்கறை இருக்கிறதுதான்... ஆனால் ஏன் எப்போதும் ஒரு கண்டிப்புடனே நடந்து கொள்கிறான் என்றுதான் புரியவில்லை.

✱ ✱ ✱

இரவு, தன் கிளினிக்கில் நோயாளிகளைப் பார்த்து விட்டு ஒன்பது மணிக்கு மேல் வீட்டுக்கு வருவது சக்தியின் வழக்கம். அன்று ஏனோ, பத்தரை மணி ஆகியும் அவன் வரவில்லை. தாமதமாக வருவேன் என்று போன் செய்து ஏற்கனவே சொல்லி இருந்ததால், கற்பகமும் அவன் வரும் வரை படுத்திருக்கலாம் என்று எண்ணி உள்ளே சென்று படுத்து விட்டார்.

சக்தி வீட்டுக்கு வந்தபோது, அபிராமி தனக்குப் பிடித்த படம் போட்டிருக்கிறான் என்று டி.வி.யில் படம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன தூங்கலையா? இந்த நேரத்தில என்ன டி.வி?'' என்று அவன் கொஞ்சம் அதட்டலாகக் கேட்டதும், அபிக்கு எரிச்சல் வந்தது.

''இல்லை... எனக்குப் பிடிச்ச படம்... அதான் பார்த்துட்டுத் தூங்கலாம்னு...'' என்று அவள் இழுக்கும்போதே,

''நாளைக்கு காலேஜ் இல்லையா? லேட்டா படுத்தால், காலையில எழுந்துக்க கஷ்டமா இருக்கும் இல்லை? அவன் விளம்பரம் போட்டு படத்தை முடிக்கிறதுக்கு பன்னிரண்டு மணி ஆறிடும்... போய் படு!'' என்று அவன் சொன்னதும், மனதுக்குள் திட்டிக் கொண்டே தொலைக் காட்சியை அணைத்து விட்டுப் படுக்கப் போனவள்,

''சாப்பாடு எடுத்து வைச்சிட்டு போகட்டுமா?'' என்றதும், அவன் முகத்தில் மெல்லிய புன்னகை மலர்ந்த மாதிரி தோன்றியது அவளுக்கு.

'இப்போ எதுக்கு சிரிக்கிறான்?' என்று யோசித்தபடி, ''இல்லை... அத்தை தூங்கிட்டாங்க போல... எதுக்கு அவங்களை எழுப்பணும்னுதான்...'' என்று சொல்ல,

''இருக்கட்டும்... நானே எடுத்துப் போட்டுக்கறேன்... நீ போய் படு!'' என்றவன், குளியலறைக்குள் சென்று விட, பாதி படத்தைப் பார்க்க முடியவில்லையே என்ற எரிச்சலுடன் வந்து படுத்தாள் அபிராமி.

ஆனால், அந்த சனிக்கிழமை காலையில் அவள் சாப்பிட அமர்ந்தபோது, அவள் பார்க்க நினைத்த படத்தின் குறுந்தகடு சாப்பாட்டு மேஜையில் அழகாக வீற்றிருந்தது.

ஆச்சரியத்துடன் அதை அவள் எடுக்கும்போதே, ''சக்திதான் வாங்கிட்டு வந்தான் அபி... அன்னைக்கு பாதி படத்தைப் பார்க்க முடியலையேன்னு புலம்பிகிட்டு இருந்தாயே!'' என்றார் கற்பகம்.

''அது... அன்னைக்குப் பார்க்க தோணுச்சு... இப்போ பார்க்கணும்னு தோணலை!'' என்று சக்தியின் காதில் விழ வேண்டும் என்று அவள் வேண்டுமென்றே சப்தமாகச் சொல்ல, அது புரியாமல், ''விளம்பர தொல்லை இல்லாமல் பார்க்கலாம் இல்லை அபி...'' என்றார் கற்பகம் அப்பாவியாக.

இருவரின் பேச்சு வார்த்தை காதில் விழுந்தாலும், எதுவும் சொல்லாமல் ஒரு புன்னகையுடன் மருத்துவமனைக்குக் கிளம்பிச் சென்றான் சக்தி.

அந்தப் பேச்சு பேசியவள், அவன் சென்றதுமே, அந்த படத்தைப் போட்டுப் பார்க்க, ''என்னடா? இப்போ அந்த படத்தைப் பார்க்கத் தோணலைன்னு சொன்னே?'' என்று கற்பகம் கேலியுடன் வினவ,

''என்ன செய்யறது... ஹிட்லர் காசு கொடுத்து வாங்கிட்டு வந்துட்டாரே? பார்க்கலன்னா காசு வீணா போயிடுமில்லை? அப்புறம் அதுக்கு வேற திட்டினாலும் திட்டுவாரு..'' என்று அபிராமி கண் சிமிட்டி சிரித்தாள்.

கற்பகமும், ''என் எதிர்க்கவே என் பிள்ளையை கேலி செய்யறீயா?'' என்று செல்லமாக மிரட்டியபடி அவளுடன் சிரிப்பில் இணைந்தார்.

மற்ற நாட்களில் காலையில் சேர்ந்து அமர்ந்து சாப்பிட முடிவதில்லை என்பதால், ஞாயிறு அன்று மூவரும் சேர்ந்து உண்பது அவர்கள் வீட்டில் வழக்கம்.

அன்று அப்படி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, ''இன்னும் இரண்டு இட்லி வைச்சுக்கோ அபி... வளருகிற பொண்ணு... இப்படி குழந்தை மாதிரி சாப்பிட்டால் எப்படி?'' என்று கற்பகம் சொல்ல,

''போதும் அத்தை... எப்பவும் போல மூணு இட்லி சாப்பிட்டு விட்டேனே...''

சக்தி வீட்டில் இருக்கிறான் என்பதால், அவள் மெல்லிய குரலில் சொன்னாலும், அவள் சொன்னது சக்திக்கும் காதில் விழவே செய்தது.

''இந்த வயசுக்கு மூணு இட்லிதான் சாப்பிடறதா? ம்ம்ம்... ஒழுங்கு இன்னும் இரண்டு இட்லி வைச்சு சாப்பிடு...'' என்று சக்தி போட்ட அதட்டலில், அமைதியாக மேலும் இரண்டு இட்லிகளை அவள் சாப்பிட,

''ம்ம்... சக்தி அதட்டினால்தான் வேலைக்கு ஆகுது... நானும் எத்தனை நாள் சொல்லி இருப்பேன்... நாளையில இருந்து சாப்பிடறேன் என்று எனக்கு போக்குக் காட்டிகிட்டே இருப்பே இல்லை?'' என்று கற்பகம் சொல்ல ஆரம்பித்ததும்,

'போதுமே...' என்று அவரிடம் கண்களினாலேயே வேண்டினாள் அபிராமி. எப்போதும் போல, அவளை விட்டுக் கொடுக்க முடியாமல், அத்தோடு அமைதியாக இருந்தார் கற்பகம்.

மதியம் தெருவில் சென்ற ஐஸ் வண்டிக்காரனிடம் அவள் குச்சி ஐஸ் வாங்க வேண்டும் என்று கற்பகத்திடம் சொல்லிக் கொண்டிருக்க, அங்கு வந்த சக்தி,

''எதுக்கு கண்ட கண்ட ஐஸ் க்ரீம் எல்லாம் வாங்கி தரீங்க? போன தடவையே அவளுக்கு அது ஒத்துக்கலை இல்லை?'' என்று சொல்லி விட்டான்.

'எதுக்கெடுத்தாலும் தடை போடறதே வேலையா போச்சு! சரியான ஹிட்லர்!'' என்று எப்போதும் போல் மனதுக்குள் அவனை வைதாள் அபிராமி.

ஆனால், அன்று மாலை வெளியே சென்று வந்தவன் கையில் அவளுக்குப் பிடித்த பிஸ்தா ஐஸ்க்ரீமும், சாக்லெட் ஐஸ்க்ரீமும் இருந்தது.

''பாரு! நீ கேட்டேன்னு வாங்கி வந்திருக்கான்!'' என்றபடி கற்பகம் கொடுத்தவுடன்,

''இப்போ ஐஸ்க்ரீம் சாப்பிட பிடிக்கலை!'' என்றாள் அவள், சக்தியை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே!

அவனோ, ஒன்றும் சொல்லாமல், ஒரு நமட்டு சிரிப்புடன் சோபாவில் அமர்ந்திருந்தான்.

'ஓவரா பந்தா செஞ்சிட்டேனோ?' என்று நினைத்தவளுக்கு, கண்கள் ஐஸ்க்ரீம் மேலேயே இருந்தது.

சாப்பிட பிடிக்கலை என்று சொல்லி விட்டு இப்போ எப்படி சாப்பிடறது?' என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, சோபாவில் இருந்த எழுந்த சக்தி,

''அம்மா... நான் கொஞ்சம் வெளியில போயிட்டு வரேன்!'' என்று கிளம்பினான்.

அவன் சென்றதுமே, வேகமாக வந்து ஐஸ்க்ரீமை எடுத்தவள், ஒரு தனி கிண்ணத்தில், இரண்டு ப்ளேவர் ஐஸ்க்ரீமையும் கலந்து வைத்துக் கொண்டு உண்ணத் துவங்கினாள்.

அன்று இரவு உணவுக்குப் பின், ''அம்மா... அந்த ஐஸ்க்ரீமை கொடுங்க... அபிதான் சாப்பிடலை இல்லை... நானாவது சாப்பிடறேன்!'' என்று சக்தி சொன்னதும்,

''அது... அப்பவே அவள் சாப்பிட்டு விட்டாளே சக்தி... உனக்கும் சேர்த்து வாங்கிட்டு வர வேண்டியதுதானே?'' என்று அவன் கேட்டதின் அர்த்தம் புரியாமல், கற்பகம் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க, அபிராமி ஓசை எழுப்பாமல் தன் அறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

அன்று ஞாயிறு!

சக்தி வீட்டில் இருக்கும் நாள் என்பதால், கவனத்துடன் எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தாள் அபிராமி.

அன்று மாலை, சக்தியுடன் படித்த சங்கர் வீட்டுக்கு வந்திருந்தான்.

அவர்கள் இருவருக்கும் ஏதோ சாப்பிட கொடுத்து விட்டு, கற்பகமும் அபிராமியும் கோவிலுக்கு சென்றார்கள்.

கோவிலுக்குச் சென்று விட்டு வீட்டுக்கு வரும் வழியில், கற்பகத்தை ஒரு பெண்மணி பிடித்துக் கொண்டு விட, சலிப்புடன் அருகில் நின்று கொண்டிருந்த அபிராமியை ''நீ போ அபி... நான் பேசிட்டு வரேன்!'' என்று கற்பகம் அனுப்பினார்.

வீட்டுக்குள் வந்த அபிராமிக்கு,

''நீதான் மேல் படிப்புக்கும் யூ.எஸ். வர மாட்டேன் சொல்லிட்டே... இங்கே படிச்சதை அங்கே படிச்சிருந் தால் அங்கேயே வேலை கிடைச்சிருக்கும்... உன்னை மாதிரி திறமை இருக்கறவங்களுக்கு ரொம்ப மவுசுப்பா அங்கே... நல்லா சம்பாதிக்கலாம்...'' என்ற நண்பனின் கேள்விக்கு பதிலாக, சக்தியிடம் இருந்து வந்த பதில், அவன் மேல் ஒருவித மரியாதையைத் தோற்றுவித்தது.

''இல்லை சங்கர்... வெளிநாட்டுக்கு போனால் நல்லா சம்பாதிக்கலாம்தான்... நான் நல்லா சம்பாதிக்கணும் என்று நினைச்சு மருத்துவம் படிக்கலை... நான் படிச்சா படிப்பு மூலம் மக்களுக்கு சேவை செய்யணும் என்ற எண்ணத்தில்தான் படிச்சேன்...''

''நம்ம நாட்டில் இருக்கிற மருத்துவர் நோயாளியோட ரேஷியோவுக்கும், யூ.எஸ்ல இருக்கிற ரேஷியோவுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கு தெரியுமா? நம்மோட தேவை எங்கே உண்மையிலேயே இருக்கோ, அங்கேதான் நாம இருக்கணும் என்று நான் நினைக்கிறேன்... இங் கேயே எல்லா வசதியோட ஏழைகளுக்காக ஒரு நல்ல மருத்துவமனை கட்டணும் என்பதுதான் என்னோட கனவு சங்கர்....''

''கேட்க சந்தோஷமா இருக்கு சக்தி... நீ நினைச்சது நல்லபடியா நடக்கட்டும்!'' என்று நண்பன்,

''அப்புறம் கல்யாணத்தைப் பற்றி என்ன ப்ளான்?'' என்று விசாரித்தான்.

உள்ளே நுழைய நினைத்த அபிராமி, திருமணத்தைப் பற்றி சக்தி என்ன சொல்லப் போகிறான் என்பதை அறி யும் ஆவலில் வாயிலேயே நின்றாள்.

''கல்யாணமே செஞ்சுக்கக் கூடாதுன்னுதான் இருந்தேன் சங்கர்... ஆனால், இப்போ கொஞ்ச நாளா..'' என்று சொல லிக் கொண்டிருந்த சக்தி, எதேச்சையாக திரும்ப, அபிராமியை அங்கே கண்டதும், ''ஹே... ஏன் அங்கேயே நின்னுட்டே? உள்ளே வா!'' என்று அழைத்தான்.

''சங்கர்... இது அபிராமி... என்னோட அத்தைப் பொண்ணு!''

''அபி... இவன் சங்கர்... என் கூடப் படிச்சவன்!'' என்று இருவருக்கும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து வைத்தான்.

''ஓ... அத்தை பொண்ணா! அதைத்தான் சொல்ல...'' என்று சங்கர் எதோ சொல்லத் துவங்க, சக்தி அவனைப் பார்வையால் அடக்கினான்.

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, சங்கர் கிளம்பி விட, கற்பகமும் வீட்டு வந்து சேர்ந்தார்.

அன்று இரவு, உணவு முடிந்ததும் சக்தி தான் இரண்டு வாரம் மருத்துவ முகாமுக்காக வெளியூர் செல்லும் தகவலைத் தான் தாயிடம் பகிர்ந்து கொண்டான்.

அவன் முகாமுக்குச் செல்கிறான் என்று சொன்னதும், அபிராமியின் முகத்தில் மலர்ச்சி தோன்றியது.

'இரண்டு வாரம், ஹிட்லரின் அதட்டல் இல்லாமல் இருக்கலாம்!' என்ற விடுதலை உணர்வே அந்த மலர்ச் சிக்கு காரணம்!

சக்தி அடிக்கடி இந்த மாதிரி மருத்துவ முகாமுக்கு செல்வது வழக்கம்தான்.

இப்போதெல்லாம் அவன் தன்னிடம் ரொம்பவே கண்டிப்பு காட்டுவதாகத் தோன்றி இருந்த காரணத்தால்,

இரண்டு வாரம் நிம்மதியாக, சுதந்திரமாக இருக்கலாம் என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

ஆனால், அவன் நினைத்ததற்கு மாறாக, அந்த இரண்டு வார காலத்தில் வேறொரு மாற்றம்தான் நிகழ்ந்தது.

13

அடுத்த நாள் காலையில், சக்தி மருத்துவ முகாம் செல்லுவதற்காக கிளம்பிக் கொண்டிருந்தான்.

அவன் கிளம்புவது தெரிந்தும், வெளியே வராமல் உள்ளேயே இருந்து போக்குக் காட்டிக் கொண்டிருந்தாள் அபிராமி.

வெளியே வந்தால், எப்போதும் போல அறிவுரை மூட்டையை அவிழ்த்து விடுவானே இந்த அத்தான்!

இவள் உள்ளேயே இருக்கட்டும் என்று விட்டு விடுவானா சக்தி?

கொஞ்ச நேரத்தில், ''வா அபி... சக்தி கிளம்பறான்... உன்னை கூப்பிடறான்!'' கற்பகம் வந்து அவளை அழைத்தார்.

'அதானே பார்த்தேன்!' என்று மனதுக்குள் எண்ணிய படி, அமைதியாக வந்து அவன் எதிரில் நின்றாள் அபிராமி.

''இரண்டு வாரம் நான் வீட்டில் இருக்க மாட்டேன்... சமர்த்தா நடந்துக்கணும் என்ன? ஒழுங்கா சாப்பிடு,

பத்திரமா காலேஜுக்குப் போயிட்டு வா... அம்மா கூட உட்கார்ந்து வம்பு வளர்க்காம, இன்னும் இருபது நாள்ல எக்ஸாம்ஸ் வருதில்லை? ஒழுங்கா உட்கார்ந்து படி... அம்மாவையும் பார்த்துக்கோ!''

தான் சொன்ன ஒவ்வொரு வார்த்தைக்கும், தலையை உருட்டிய வண்ணம் இருந்தவளைப் பார்க்க சக்திக்கு சிரிப்பு வந்தது.

''வாயைத் திறந்து சரின்னு சொன்னால்தான் என்ன?'' என்று அவன் அதட்ட,

''சரி அத்தான்!'' என்று அவசரமாக மொழிந்தாள் அபிராமி.

''போயிட்டு வரேன்மா!'' என்று அன்னையிடம் சொன்னவன், பொருள் விளங்காத ஒரு பார்வையை அபிராமியிடம் வீச, 'ஏன் இப்படி பார்க்கிறான்!' என்று விழித்தபடி நின்றவளுக்கு,

''வரேன் அபி!'' என்று அவன் மென்மையாகச் சொன்னது ஆச்சரியத்தைத் தர, விழி விரித்து அவனை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அவன் கிளம்பிச் சென்று விட்டான்.

அவன் தலை மறைந்ததும், ''ஹப்பாடா! ரெண்டு வாரம் ஹிட்லர் கிட்ட இருந்து விடுதலை!'' என்று நிம்மதிப் பெருமூச்சுடன் சொன்ன அபிராமி,

''விடுதலை! விடுதலை! விடுதலை!'' என்று கையை உயர்த்திப் பாட, அதைக் கண்டு சிரித்த கற்பகம், ''பாட்டா பாடுற? இரு... இரு... அவன் வந்த உடனே போட்டுக் கொடுக்கிறேன்'' என்று சொல்லி சிரித்தார்.

வேகமாக அவர் அருகில் வந்து ''வேண்டாம் அத்தை வேண்டாம்! இந்த சின்னஞ்சிறு பறவை ரெண்டு வார

காலமாவது சுதந்திரமாக சிறகடித்து பறப்பதைக் காண வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?'' என்று வசனம் பேசினாள்.

''வாலு! இந்த வாயெல்லாம், சக்தியைப் பார்க்கும் போது எங்கே இருக்கு?'' என்று கேலியுடன் கற்பகம் விசாரிக்க,

''அத்தான் எதிர வாயைத் திறக்கிறதாவது! அவர் சொல்றதுக்கெல்லாம் 'சரி! சரி!' என்று மண்டையை ஆட்டத்தானே சரியா இருக்கு!'' என்று அப்படியும் இப் படியுமாக மண்டையை உருட்டியபடி சலித்துக் கொண் டாள் அபிராமி.

''ஏன்டா? அவன் உன் நல்லதுக்குத்தானே சொல்றான்!'' என்று கற்பகம் தன் மகனுக்குப் பரிந்து கொண்டு வர, ''உங்க பிள்ளையை நீங்க விட்டுக் கொடுப்பீங்களா?'' என்று கேலி பேசியவள்,

''எனக்குமே அத்தான் சொல்றது எல்லாம் நல்லதுக் குத்தான் என்று புரியுது அத்தை! அதை என் அப்படி கடுகடுன்னு சொல்லணும்? கொஞ்சம் அமைதியா சிரிச்சிட்டே சொல்லலாம் இல்லை?'' என்று குறை யுடன் சொல்ல,

அவருக்குமே அந்த மாதிரி எண்ணம் இருக்கும் போது, இதற்கு என்ன பதில் சொல்ல முடியும் அவரால்? எல்லாரிடமும் அமைதியாகவும், இன்முகமாகவும் பேசும் பிள்ளை, அபிராமியிடம் கொஞ்சம் கண்டிப்புடனே பேசுவது அவருக்குமே வருத்தமாகத்தான் இருந்தது.

ஒரு முறை அதை அவனிடம் சொல்லப் போக, ''நீங்க தான் அவளை இடுப்பில் தூக்கி வைச்சு கொஞ்சறீங்

களே? இதுல நான் வேற சேர்ந்துக்கணும்மா?'' என்றதோடு சக்தி முடித்து விட்டான்.

இந்த முறை கேம்பில் இருந்து மகன் வந்தவுடன், தன் மனதில் இருக்கும் ஆசையைச் சொல்லி, அவனது எண்ணத்தை அறிந்து விட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார் கற்பகம்.

சக்தி கேம்புக்குக் கிளம்பிய அடுத்த நாள், வழக்கம் போல ஐந்தரை மணிக்கு விழிப்பு வந்து விட்ட பிறகும், வேண்டுமென்றே அரை மணி நேரம் தாமதமாக எழுந்த அபிராமி, மெதுவாகக் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

கடைசி நேரத்தில் நேரமாவது தெரிந்து அரக்க பறக்க என்று கிளம்பினாள். மூன்று இட்லிகளை விழுங்கிய பின், அத்தை வைக்கப் போன இரண்டு இட்லிகளை ''போதும்... இன்னும் ரெண்டு வாரத்துக்கு என் இஷ் டம்தான்!'' என்று சொல்லி மறுத்தாள்.

கல்லூரிக்குப் போய் மூன்றாவது பாட நேரத்தின் போதே, பசி வயிற்றைக் கிள்ளியது. 'ச்சே... இன்னும் ரெண்டு இட்லியை சாப்பிட்டு விட்டே வந்திருக்கலாம்!' என்று மனம் அடித்துக் கொண்டது.

மாலை வீட்டுக்கு வந்ததும், கொஞ்ச நேரம் அத்தை யுடன் வளவளத்து விட்டு, படிக்க வேண்டிய பாடங் களைப் படித்தவள், சாப்பிட்டு விட்டு, டி.வி. பார்க்க அமர்ந்தாள்.

அவளுக்குப் பிடித்த படம் எதோ மூவீஸ் சானலில் ஓடிக் கொண்டிருக்க, பதினோரு மணி வரை அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கற்பகம் வந்து போய் படுக்கும்படி சொன்னபோது கூட, ''அத்தை இந்த

ரெண்டு வாரம் எனக்கு முழு சுதந்திரம்!'' என்று கெத்தாக அறிவித்து விட்டு, முழு படத்தையும் பார்த்து விட்டே படுக்கைக்குச் சென்றாள்.

இரவு நீண்ட நேரம் விழித்து இருந்ததில், காலை எழும்போதே சோர்வாக இருந்தது. இன்னும் கொஞ்ச நேரம் படுக்கலாம் என்று நினைத்துப் படுத்தவள், அசதியில் நன்றாக உறங்கி விட, கற்பகம்தான், ''அபி... எவ்வளவு நேரமா எழுப்பறது? இன்னைக்கு காலேஜ் போகலையா?'' என்று குரல் கொடுத்து எழுப்பினார்.

இன்னமும் சோர்வு நீங்காமல், சோம்பல் முறித்தபடியே எழுந்தவள், நேரத்தைப் பார்த்தவுடன், ''அச்சோ.. இவ்வளவு நேரமா தூங்கிட்டேன்?'' என்று சொல்லிக் கொண்டே படுக்கையில் இருந்து துள்ளி எழுந்தாள்.

அவசரமாகக் குளித்துத் தயாராகி, காலைச் சாப்பாடு வேண்டாம் என்று சொன்னவள், கற்பகத்தின் ''உதை வாங்குவே! ஒழுங்கா சாப்பிட்டு போ!'' என்று அதட்டலுக்குப் பணிந்து, சாப்பிட்டேன் என்று பேர் செய்து, ஓட்டமாக பேருந்து நிலையத்துக்கு வந்தபோது, நல்ல வேளையாக சுஜா அங்கே நின்றிருந்தாள்.

கல்லூரிக்கு நேரமாகி விடும் என்பதோடு, சுஜா போய் இருந்தால், தான் தனியாகச் செல்ல வேண்டி இருக்குமே என்பதுதான் அபிராமியின் பயம்!

''என்ன ஆச்சு அபி? எப்பவுமே எனக்கு முன்னாடி வந்து நின்னுகிட்டு இருப்பே? என்ன இன்னைக்கு இவ்வளவு லேட்?'' என்று சுஜா கேட்கும்போதே பேருந்து வந்துவிட, இருவரும் பேருந்தில் ஏறி அமர்ந்தார்கள்.

''நேற்று டி.வி.ல படம் பார்த்துட்டு லேட்டா படுத்தேன்பா... காலையில எழுந்துக்க லேட் ஆயிடுச்சு...

அதான்... நல்ல வேளை, நீ எங்கே போய் இருப்பியோன்னு பயந்துகிட்டே வந்தேன்!'' என்று நெஞ்சில் கை வைத்தபடி பெருமூச்சுடன் அபிராமி சொல்ல, சுஜா சிரித்தாள்.

''எப்படி அவ்வளவு நேரம் படம் பார்த்தே? உங்க அத்தான் எதுவும் சொல்லலையா?'' என்ற சுஜாவின் கேள்விக்கு, ''சக்தி அத்தான் மெடிக்கல் கேம்புக்கு போய் இருக்கார்... ரெண்டு வாரம்! சரி அவர் இல்லையேன்னு ஜாலியா படம் பார்க்கலாம்னு நினைச்சதுக்கு, நல்ல பலன்! காலையில எழுந்து அத்தைக்கு கூட எதுவும் ஹெல்ப் செய்யாமல் வந்துட்டேன்!'' என்று குற்ற உணர்வுடன் அபிராமி சொல்ல,

''சோ, ரெண்டு வாரம் முழு சுதந்திரம்னு சொல்லு!'' என்று சுஜா சொன்னதும், அபிராமி யோசனையில் ஆழ்ந்தாள்.

நேற்று தான் கூட இப்படி அத்தையிடம் சொன்னது நினைவுக்கு வந்தது. ஆனால், அத்தான் சொல்லுவது இவளது நன்மைக்குத்தானே! இதோ... ஒரு நாள் லேட்டாக எழுந்ததில் எவ்வளவு பிரச்சனை, அத்தைக்கு உதவி செய்யவில்லை. சரியாக சாப்பிடவில்லை. ஓடி ஓடி பேருந்து நிலையத்துக்கு வந்திருக்கிறாள். எவ்வளவு டென்ஷன்?

அன்று இரவு வழக்கமான நேரத்துக்குப் படுக்கப் போனாள்.

அடுத்த நாள் சாப்பிடும்போது, மூன்று இட்லிகளை சாப்பிட்டு விட்டு எழாமல் ''அத்தை இன்னும் ரெண்டு இட்லி வைங்க! வளருகிற பொண்ணு ஒழுங்கா சாப்

பிடணும்னு எதாவது அக்கறை இருக்கா உங்களுக்கு?'' என்று கற்பகத்தை விம்பிழுத்துச் சிரித்தாள்.

''எனக்கு அக்கறை இல்லையா? அது சரி! நீதானே ரெண்டு வாரம் எல்லாம் உன் இஷ்டம்னு சொல்லிட்டு இருந்தே?'' என்று வினவ,

''அப்படின்னா... இவ்வளவு நாள் சக்தி அத்தான் ஹிட்லர் மாதிரி அதிகாரம் செஞ்சிட்டு இருந்தார்னு சொல்றீங்களா? இருங்க! இருங்க! அத்தான் வந்தவுடன் சொல்றேன்!'' என்று ஒரு விரல் நீட்டி கண்களை உருட்டியவளைப் பார்த்த கற்பகத்துக்கு சிரிப்பு வந்தது.

''எல்லாத்தையும் நீ சொல்லிட்டு, இப்போ நான் சொல்றதா சொல்றீயா? என் பையன்கிட்ட போட்டு கொடுக்கப் போறீயா? தாராளமா செய் ராஜாத்தி! நானும் நீ சொன்னதையெல்லாம் அவன்கிட்ட சொல்றேன்!'' என்று கற்பகம் புன்னகையுடன் சொல்ல,

''சரி! சரி! நாம பேசினது நமக்குள்ளேயே இருக்கட்டும்!'' என்று கெத்தாக சொல்லிவிட்டு அவள் கிளம்ப, கற்பகமும் புன்னகையுடன் விடை கொடுத்தார்.

இரண்டு நாள், சக்தியின் பேச்சை மீறி சுதந்திரமாக நடந்து கொள்வதாக நினைத்து எல்லாவற்றையும் செய்து டென்சனை ஏற்றிக் கொண்ட அபிராமி, அத்தான் சொல்வது தன் நன்மைக்குத்தான் என்று உணர்ந்து அடுத்த இரண்டு நாள் அவன் சொல்லி இருந்தபடியே நடந்து கொண்டாள்.

நான்கு நாட்கள் இப்படி கழிந்துவிட, ஐந்தாவது நாள் ஞாயிறு விடிந்தது.

ஞாயிறு எப்போதும் சக்தி வீட்டில்தான் இருப்பான். அவசரத் தேவை என்றால்தான் மருத்துவமனைக்கு போவான்.

வீட்டை சுத்தம் செய்வது, அம்மாவுக்கு சமையலில் உதவுவது, டி.வி. பார்ப்பது, மாலையில் மூவரும் சேர்ந்து கோவிலுக்குப் போவது என்று பொழுது போகும்.

அன்று காலையில் எழுந்ததில் இருந்தே, சக்தி வீட்டில் இல்லை என்பதை அபிராமி அதிகமாக உணர்ந்தாள்.

சக்தி அத்தான் இருந்திருந்தால் அதை செய்திருப்பார். இதை செய்திருப்பார், இப்படி சொல்லி இருப்பார், அப்படிச் சொல்லி இருப்பார் என்று அன்று முழுவதுமே அபிராமி, சக்தி புராணம் பாடிக் கொண்டிருக்க, கற்பகம் ஆச்சரியத்துடன் அவளை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

அவன் கேம்புக்கு போனதும், 'விடுதலை! விடுதலை!' என்று இந்தப் பெண் குதித்ததென்ன? இப்பொழுது அவனைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதென்ன? என்று நினைத்தவருக்கு, மனம் மகிழ்ச்சியில் துள்ளியது.

இவர்கள் இருவருக்கு திருமணம் செய்த வைக்க வேண்டும் என்பது கற்பகத்தின் ஆசை!

சக்தி இவளிடம் கொஞ்சம் கடினமாகவே நடந்து கொள்வதையும், இவளும் அவனைக் கண்டாலே ஒதுங்கிப் போவதையும் பார்த்து அவருக்கு கொஞ்சம் வருத்தம் இருக்கத்தான் செய்தது.

அதிலும், ஜாடையாக ஒரு முறை அவர் திருமணத்தைப் பற்றி சக்தியிடம் பேசும்போது, ''எனக்கு நிறைய கனவுகள் இருக்கும்மா... அதெல்லாம் நிறைவேறணும் என்றால் கல்யாணம் செஞ்சுக்காமல் இருக்கிறதுதான் நல்லதுன்னு தோணுது!'' என்று சொல்லி, வயிற்றில் புளியைக் கரைத்திருந்தான்.

திருமணம் செய்து கொள்ள வேண்டாம் என்று அவன் சொல்லும்போது, அபிராமியைப் பற்றி பேச வேண்டாம்

என்று அவர் நினைத்திருந்தார். அவளும் படிப்பை முடிக்கட்டும், பிறகு ஒரு நாள் நேரம் பார்த்து மகனிடம் பேச வேண்டும் என்று எண்ணி இருந்தார்.

இப்பொழுது அபிராமி சக்தியைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவருக்கு கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. சக்தி ஊரில் இருந்து வந்தவுடன் கண்டிப்பாக இவர்கள் விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்று ஏற்கனவே எடுத்திருந்த தீர்மானம் மேலும் உறுதியாகியது.

இதை எதையும் அறியாத அபிராமி, தன் போக்கில் சக்தியைப் பற்றிய பேச்சும், எண்ணமுமாக அன்றைய பொழுதைக் கழித்தாள்.

இரவு படுக்கும்போது, எப்போதும் போல அன்றைய நிகழ்வுகளை எண்ணிப் பார்த்தவளுக்கு, இன்று முழுவதும் தான் சக்தியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது.

கற்பகம் ஒரு புன்னகையுடன் தன் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்ததும் சேர்ந்து நினைவுக்கு வர, அவளுக்கு வெட்கமாக இருந்தது.

'அச்சோ! அத்தை என்ன நினைத்திருப்பார்கள்?' என்று இப்பொழுது எண்ணியவளுக்கு, சக்தியைப் பற்றி பேசும்போது தனக்கு அந்த எண்ணமே தோன்றாது ஆச்சரியத்தை வரவழைத்தது.

தான் ஏன் அவனைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம் என்று ஆராய்ந்தவளுக்கு சரியான விடைதான் கிடைக்கவில்லை.

எப்பொழுதும் வீட்டில் இருந்தவன், இப்போது கொஞ்ச நாட்களாக இல்லாததால் அவனைப் பற்றி நினைக்கிறோம் போல! வேறு எதுவும் இருக்காது! என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு உறங்க முயன்றவளுக்கு தூக்கம் வர மறுத்தது.

இப்படி எப்போதாவது தூக்கம் வராமல் இருந்தால், வாக்மேனில் கொஞ்ச நேரம் பாட்டு கேட்பது அவள் வழக்கம். அதன் படி பாட்டுக் கேட்டவளுக்கு, எப்போதும் தான் ரசித்துக் கேட்கும் எந்த பாட்டும் இப்போது ரசிக்கவில்லை.

'என்னடா இது வம்பாப் போச்சு?' என்று நினைத்தவள், மேசை மேல் இருந்த பாரதியாரின் கவிதைப் புத்தகத்தை எடுத்து, கை போன போக்கில் புரட்டியவளுக்கு, அப்போதும் சக்தியின் நினைவுதான் வந்தது.

வீட்டில் இருக்கும் நேரத்தில், பாரதியார் கவிதைகளைப் படிக்கும் சக்தியை, ''அத்தான் மருத்துவ புத்தகங்களைப் படித்ததை விட, பாரதியார் புத்தகம் தான் அதிகம் படிச்சிருப்பார் அத்தை!'' என்று அபிராமி நிறைய முறை கேலி செய்திருக்கிறாள்.

'அப்படி என்னதான் இருக்கு இந்த புத்தகத்தில்?' என்று அவனிடம் இருந்து எடுத்து வந்து படித்தவளும், பாரதியாரின் கவிதைகளுக்கு விசிறியாகிப் போனாள்.

அத்தானைப் பற்றிய எண்ணத்தோடு, பக்கங்களைப் பரட்டியவளின் கண்களில், ஒரு கவிதை தென்பட்டு, அவளைத் திகைக்க வைத்தது.

''பாலும் கசந்ததடி சகியே

படுக்கையும் நொந்ததடி

கோலக்கிளி மொழியும்

செவியில் குத்தல் எடுத்ததடி.''

காதலனைப் பிரிந்த காதலியின் நிலையை எடுத்துரைக்கும் இந்த பாடல் தனக்கும் பொருந்துகிறது என்றால் என்ன அர்த்தம்? என்று யோசித்தவளுக்கு, இன்று மாலை நடந்த விஷயம் நினைவுக்கு வந்தது.

''இன்னைக்கு பால் கொழுக்கட்டை செய்றீங்களா அத்தை?'' என்று ஆசையாக கேட்டவளுக்கு, கற்பகமும் செய்து கொடுத்தார்.

இரண்டு வாய் கொழுக்கட்டையை ருசித்து உண்டவள், ''அத்தானுக்கு இது ரொம்பப் பிடிக்குமில்லை?'' என்று கற்பகத்தைக் கேட்க, அவரும் புன்னகையுடன் தலையாட்டினார்.

''கேம்புக்குப் போன இடத்தில சரியான சாப்பாடு கிடைக்குமா?'' என்று கவலையுடன் கற்பகத்தைக் கேட்டவளுக்கு, அதற்கு மேல் பால் கொழுக்கட்டையின் ருசி தெரியவில்லை. அத்தை தனக்காக செய்தார்களே என்று வலுக்கட்டாயமாக விழுங்கினாள்.

தன்னை முழுமையாக ஆராய்ந்து பார்த்தவளுக்குக் கிடைத்த விடை, அவளுக்குக் காரணமில்லாமல், கண்ணீரையும் சிரிப்பையும் ஒருங்கே வரவழைத்தது.

இந்த காதல் எப்போது வந்திருக்கக் கூடும் என்று யோசித்தவளுக்கு, எவ்வளவு யோசித்தும் விடை புலப்படவில்லை.

'எப்போது வந்திருந்தால் என்ன? இந்த கணம் நான் அத்தானை நேசிக்கிறேன்!' என்று மனதுக்குள் சொலலிக் கொண்டவள், பாரதியின் மற்ற காதல் பாடல்களையும் படித்து, மெல்லிய குரலில் பாடி பார்த்து, தன் காதல் உணர்வு தந்த சந்தோஷத்தை அனுபவித்தபடியே, மெல்ல உறங்கிப் போனாள்.

அடுத்த இரண்டு நாளும், தரையில் கால் படாமல் கனவில் நடப்பவளைப் போலவே, நடமாடிக் கொண்டிருந்த அபிராமியைப் பார்த்த கற்பகத்துக்கு ஒன்றும் புரியவில்லை. கேட்ட கேள்விகளுக்கும், அவளிடம் இருந்து சரியான பதில் வராமல் போகவே, அவரும் அமைதியாகி விட்டு விட்டார்.

அன்று மாலை, கற்பகம் இரவு உணவுக்கான வேலையில் ஈடுபட்டிருக்க, அவருக்கு உதவியபடி அபிராமியும் சமையலறையில் நின்று கொண்டிருந்தாள்.

ஹாலில், தொலைபேசி மணி அடித்தது. எப்போதும், மணி அடித்தால், சக்திக்கோ இல்லை அத்தைக்கோதான் அழைப்பு வரும் என்று எப்போதும் அபிராமி எடுக்க மாட்டாள்.

ஆனால், இன்று மணி அடித்ததும், 'நேரம் கிடைத்தால் பேசறேன்மா!' என்று சக்தி சொல்லிச் சென்றது நினைவுக்கு வர, வேகமாக சென்று போனை எடுத்தவள், ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாள்.

''என்ன அபி?'' என்று கற்பகம் விசாரிக்க, ''எதோ ராங் கால்!'' என்று சொல்லியபடி அவள் வேலையைத் தொடர, கொஞ்ச நேரத்தில் திரும்ப மணி அடித்தது.

வேகத்துடன் எடுக்கப் போன அபிராமி, ''ப்ச்...'' என்று சலிப்புடன் நின்று விட, கற்பகம் சென்று போனை எடுத்தார்.

''சக்தி! சொல்லு கண்ணா! எப்படி இருக்கே?'' என்று உற்சாகத்துடன் அத்தையின் குரல் ஒலிக்க, போனை எடுக்காமல் இருந்ததற்கு தன்னை நொந்தவாறே, வேகமாக ஹாலுக்கு வந்த அபிராமி, போனில் சக்தியுடன்

பேசிக் கொண்டிருந்த அத்தையை கண்களில் ஏக்கத் துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

கொஞ்ச நேரம் பேசிய பிறகு, ''அபியா? நல்லா இருக்கா! பக்கத்தில்தான் இருக்கா, நீயே பேசேன்...'' என்று கற்பகம் அபிராமியைக் கையால் அழைத்து, போனைக் கொடுக்க, ''ஹலோ!'' என்று சக்தியின் குரல் கேட்டதும், அபிக்கு கண்கள் கலங்கியது.

இவள் தன்னை சமாளித்துக் கொண்டு பேசுவதற்குள், அங்கே யாரோ 'சக்தி' என்று அழைப்பது காதில் விழுந்தது.

'இதோ வந்திட்டேன்!' என்று குரல் கொடுத்த சக்தி, ''ஹலோ அபி?'' என்று திரும்ப அழைக்க, ''ஹலோ!'' என்று சொல்ல முயன்ற அபிராமிக்கு, வார்த்தைக்கு பதில் காற்றுதான் வந்தது.

தொண்டையை செருமிக் கொண்டு, ''ஹலோ!'' என்ற வளுக்கு அங்கே, அதற்குள் அவசரமாக யாரோ சக்தியை இன்னொரு முறை அழைப்பதும், சக்தி போனை வைக் கும் சத்தமும் தான் கேட்டது.

கண் கலங்கியபடி நின்றிருந்த அபிராமியின் தோளைப் பற்றிய கற்பகம், ''என்னடா?'' என்று விசாரிக்க, ''போன் கட் ஆயிடுச்சு!'' என்று சொல்வதற்குள், கண்களில் கண்ணீர் நிறைந்து, கன்னத்தில் வழிந்தது.

''ப்ச்... அதுக்கு போய் ஏன் அழறே? லூசுப் பொண்ணே! இன்னொரு தரம் பேசும்போது நீயே எடுத்து பேசு, சரியா?'' என்று கற்பகம் சமாதானம் செய்தார்.

சக்தியிடம் பேசவில்லை என்றாலும், ஒரு வாரம் கழித்து அவன் குரலையாவது கேட்க முடிந்ததே என்று

தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டு அபி ராமியும் உற்சாகமாகவே வளைய வந்தாள்.

இன்னும் ஆறு நாள்தான், ஐந்து நாள் தான் என்று சக்தியின் வருகையை எதிர்பார்த்தபடியே அபிராமி நாட் களைக் கடத்தினாள்.

* * *

இன்று இரவு சக்தி வருகிறான் என்ற எண்ணம், அபிராமியின் முகத்தில் பிரகாசத்தைக் கூட்டி இருந்தது.

இவள் முகம் மலர்ந்திருந்ததைப் பார்த்த சுஜா, ''என் னப்பா? உன் முகத்தில் இவ்வளவு ப்ரைட்டா லைட் எரியுது?'' என்று கேலியாக விசாரிக்க,

இவ்வளவு வெளிப்படையாகவா தன் சந்தோசம் தெரிகிறது என்று வியந்த அபிராமி, ''ஒண்ணுமில்லை சுஜா!'' என்று சமாளிக்க, ''ஹே! எதோ மறைக்கிறே? சரி, பார்க்கலாம்! எவ்வளவு நேரம் சொல்லாமல் இருக் கேன்னு!'' என்றாள்.

வகுப்புக்குச் சென்றதும், ஒரு வாரமாக விடுமுறை யில் இருந்த மாலினியைச் சுற்றி எல்லாரும் நின்று கொண்டிருக்க, அவள் கண்ணீருடன் எதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

''மாலினி வந்திட்டால் போல் இருக்கு! ஏன் ஒரு வாரமா வரலைன்னு தெரியலையே?'' என்று சொல்லிக் கொண்டே சுஜா மாலினி இருந்த இடத்திற்கு செல்ல, அபிராமியும் அவளைத் தொடர்ந்து சென்றாள்.

''என்ன ஆச்சு மாலு'' என்று சுஜா, மாலினியை விசா ரிக்க, ''என் அண்ணன் போன வாரம் விஷம் குடிச்சிட் டான்பா... ரொம்ப சீரியஸ் ஆயிடுச்சு... நேற்றுதான்

ஹாஸ்பிடல்ல இருந்து வீட்டுக்கு கூட்டிட்டு வந்தோம்!'' என்று மாலினி கவலையுடன் சொல்ல,

''ஏன்பா?'' என்று அதிர்ச்சியுடன் அபிராமி வினவ, மாலினி பதில் சொல்லு முன்னர், விரிவுரையாளர் வந்துவிடவே, பேச்சு அத்தோடு நின்றது.

மாலை கல்லூரியில் இருந்து வரும்போது சுஜா விஷயத்தைச் சொன்னாள்.

''பாருப்பா இந்த மாலினியோட அண்ணன் செஞ்ச வேலையை! யாரோ ஒரு பொண்ணை இவன் லவ் பண்ணி இருக்கானாம், அந்த பொண்ணு இவன் காதலை ஏத்துக்கலைன்னு இவன் விஷம் குடிச்சிட்டானாம்! இடியட்! இவன் லவ் செய்றான்றதுக்காக அந்தப் பொண்ணும் ஒத்துக்கணும் என்று எதிர்பார்க்கிறது எவ்வளவு முட்டாள்தனம்? அவங்க அவங்களுக்கு ஒரு ஆசை, எண்ணம் இருக்கும் இல்லை? அதைக் கூட புரிஞ்சிக்காத இவன் எல்லாம் என்னதான் லவ் பண்றானோ?'' என்று சுஜா சலித்துக் கொள்ள, அபிராமியின் மனதிலும் ஒரு கேள்வி எழுந்தது.

இந்த ஒரு வாரமாக சக்தியின் மீது தான் கொண்ட காதலை எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறாளே தவிர, அவனும் தன்னை விரும்புகிறானா என்பதைப் பற்றி அவள் யோசிக்கவே இல்லையே? என்று நினைத்தவளுக்கு, காலையில் இருந்து இருந்த சந்தோசம் மறைந்து மனதில் சஞ்சலம் எழுந்தது.

சக்தி தன்னை எதற்காக விரும்ப வேண்டும்? என்று யோசித்தவளுக்கு, தான் அவனுக்கு தகுதியானவள் தானா என்ற சந்தேகம் எழுந்தது.

அழகு, அறிவு, குணம், படிப்பு எல்லாவற்றிலும் தன்னை விட பல மடங்கு உயர்ந்த நிலையில் சக்தி, இருப்பது கருத்தில் பதிந்தது.

அவனுக்கு ஏற்ற பெண்ணைத்தானே அவன் விரும்புவான் என்ற எண்ணம் தோன்ற, கண்களில் கண்ணீர் கரித்துக் கொண்டு வந்தது.

அனாதையான தன்னை அக்கறையுடன் இவ்வளவு நாள் அத்தையும், அத்தானும் கவனித்துக் கொண்டதே அதிகம் என்றும் தோன்ற, மற்றவர்கள் பார்க்கிறார்கள் என்ற எண்ணம் கூட இல்லாமல் கண்ணீருடன் நடந்து வந்தாள்.

தன்னுடைய யோசனையிலேயே மூழ்கியபடி வந்தவள், தான் வீட்டுக்குள் நுழைந்ததைக் கூட உணராமல் நடந்து கொண்டிருக்க, கற்பகம் அவளது தோளைப் பற்றி நிறுத்தினார்.

''என்ன அபி? ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்ற அவரின் அக்கறையான விசாரிப்பு, அவளது கண்ணீரை அதிகப்படுத்தியது.

அவள் கண்ணீரைக் கண்டதும் பதறிப் போன கற்பகம், ''என்னடாம்மா? என்ன ஆச்சு?'' என்று பதட்டத்துடன் விசாரிக்க, அவசரமாக கண்ணீரைத் துடைத்தவள்,

''ஒண்ணுமில்லை அத்தை... ரொம்ப தலைவலியா இருக்கு!'' என்று சொல்லிவிட்டு குளியலறைக்கு சென்று முகத்தைக் கழுவ, அடக்க மாட்டாமல் கண்ணீர் வழிந்த வண்ணம் இருந்தது.

''அபி... என்னடா பண்றே? தலை வலிக்குதுன்னு சொன்னியே, வந்து காபி குடி!'' என்று கற்பகம் குரல்

கொடுத்ததும், மீண்டும் ஒரு முறை, முகத்தில் குளிர்ந்த நீரை அடித்துக் கழுவி கொண்டு வெளியே வந்தாள்.

அவளது சிவந்திருந்த கண்களைப் பார்த்த கற்பகம், ''என்னடா ரொம்ப வலிக்குதா?'' என்று வினவ, பேச முடியாமல் தலையை மட்டும் ஆட்டினாள்.

''சரி சீக்கிரம் சாப்பிட்டு விட்டு மாத்திரை போட்டுக்கிட்டு படு!'' என்று கற்பகம் சொல்ல, அவர் சொன்னபடி உணவை முடித்து விட்டு அறைக்கு வந்த அபிராமிக்கு, மனம் சோர்ந்து போய் இருந்தது.

இந்த ஒரு வாரமாய், தன் காதலை எண்ணி சந்தோஷத்தில் திளைத்திருந்தவளுக்கு, சக்திக்கு தான் ஏற்றவள் இல்லை என்ற எண்ணம் தோன்றி மனம் வேதனையில் உழன்றது.

சக்தியுமே அவளிடம் எப்போதுமே ஒரு கண்டிப்புடன் தானே நடந்த கொண்டிருக்கிறான்? மனதில் காதல் இருந்தால், அப்படி நடந்து கொள்வானா? என்றெல்லாம் எண்ணி மனதை மேலும் வருத்தி கொண்டவளுக்கு, இந்த ஒரு வாரமாக சக்தி தன்னிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வதற்கு காரணம், தன் மேல் அவனுக்கிருக்கும் அக்கறைதான் என்று தான் எண்ணியதெல்லாம் மறந்து போனது.

இத்தனை வருத்தத்திலும், சக்தியை இரண்டு வாரம் கழித்துப் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணம் சந்தோஷத்தைக் கொடுக்காமல் இல்லை.

இப்போதிருக்கும் மனநிலையில், அவனைப் பார்க்கவும் துணிவின்றி, சக்தி வந்து விட்டான் என்று தெரிந்த போதும், அவனைப் பார்க்கத் துடித்த மனத்தைக்

கட்டுப்படுத்திக் கொண்டு அறையிலேயே இருந்தவள், அன்றிரவை கண்ணீரிலேயே கழித்தாள்.

14

அபிராமியின் மீது மிகுந்த கோபத்தில் இருந்தான் சக்தி.

நேற்று ஆசை ஆசையாய் அவன், அவளைப் பார்க்கும் ஆவலோடு வந்ததென்ன? இந்தப் பெண் தலைவலி என்று அறையிலேயே இருந்ததென்ன?

அவன் ஊருக்கு போகும் என்று கூட, அப்படித்தானே அறையிலேயே புகுந்து கொண்டிருந்தாள்!

முகாமுக்கு சென்ற ஒரு வாரத்துக்குப் பிறகு, அவ்வளவு ஆவலோடு, அவளது குரலைக் கேட்க போன் செய்திருந்தான்? ஆனால், ஒரு ஹலோ கூட சொல்லாமல் அவள் இருந்ததே, அவனுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்திருந்தது.

இப்போதும் கூட காலையில் இருந்து வெளியே வராமலே, போக்குக் காட்டிக் கொண்டிருந்தவளை எண்ணி அவனுக்கு எரிச்சல் அதிகமானது.

நேற்று அவளைப் பார்க்க முடியாத ஆதங்கத்தில் அவனுக்கு உற்சாகம் கூட வரவில்லை. அதிகாலையில் தான் அவன் தூங்கவே ஆரம்பித்தான். இவன் எழுவதற்குள், அவள் கல்லூரிக்குக் கிளம்பி விடப் போகிறாளே என்று இவன் அரக்க பறக்க எழுந்து வெளியே வந்தால்,

இன்னமும் அவள் தன் அறையில் இருந்து வெளியே வந்திருக்கவில்லை.

மகாராணி இன்னமும் கல்லூரிக்குச் செல்ல கூடத் தயாராகவில்லை போலும்!

அவளது அறை வாயிலேயே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த மகனைப் பார்த்த கற்பகத்துக்கு புன்னகை மலர்ந்தது. இந்த இரண்டு வாரத்தில் அபிராமியின் மனம் தெளிவாகப் புரிந்திருந்தது.

நேற்று வந்தவுடனே அபிராமியைப் பார்க்க முடிய வில்லை என்பதால் மகன் முகத்தில் தோன்றிய வாட்ட மும், இன்று அபிராமியை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்ததும், சக்தியின் மனதையும் அவருக்கு உணர்த்தியது.

மகனுடைய முகத்தில் இருந்தே அவனுடைய மனதை யும் படித்த கற்பகத்துக்கு மனம் நிறைவாக இருந்தது.

இவர்கள் இருவரின் மனநிலைக்கு நேர் எதிரான மனநிலையோடு தன் அறையில், கல்லூரிக்குச் செல்ல கிளம்பிக் கொண்டிருந்தாள் அபிராமி.

அடுத்த வாரம் இறுதியாண்டு இறுதி தேர்வு நடக்கப் போகிறது என்பதால், அவளது துறையில் இருந்த ஜூனியர்கள், இன்று இறுதி ஆண்டு படிப்பவர்களுக் கென்று ஒரு பிரிவு உபசார விழாவை ஏற்பாடு செய் திருந்தார்கள்.

அந்த விழாவுக்கு கட்டவென்று, போன வாரம் இள நீல நிறத்தில் ஒரு டிசைனர் புடவையை கற்பகத்தோடு சென்று வாங்கி வந்திருந்தாள் அவள்.

அத்தான் வரும் நாளுக்கு அடுத்த நாள் விழா என்பதால், கூடுதல் அக்கறையோடு, அந்த புடவைக்கு

இணையான அணிகலன்களைப் பார்த்து பார்த்து வாங்கி னாள்.

இந்தப் புடவையில் தன்னைப் பார்க்கும்போது சக்தி என்ன சொல்வான் என்று இனிய கற்பனையில் ஒரு வாரமாக இருந்தவளுக்கு, இன்று அதை அணியக் கூட மனம் இல்லை.

அத்தைக்கும் இன்று விழா என்பது தெரியும். விழா வுக்கென்று வாங்கியதை அணியாமல் இருந்தால், அத்தை யிடம் இருந்து கேள்வி வரும் என்று எண்ணியவளாக அதைக் கட்டிக் கொண்டாள்.

காலையில் எழுந்ததில் இருந்தே சக்தியைப் பார்க்க துடித்த மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த வளுக்கு, எப்படியும் வெளியே போய்த்தானே ஆக வேண் டும் என்று தோன்றி விட மெதுவாக வெளியே வந்தாள்.

அவள் மேல் கோபமும் எரிச்சலுமாக அமர்ந்து கொண் டிருந்த சக்திக்கு, அவனுக்குப் பிடித்த இள நீல புடவை யில் தேவதையாய் வந்து நின்ற அபிராமியைப் பார்த்த தும், கோபமெல்லாம் வடிந்தது.

இமைக்கவும் மறந்து அவன் அவளைப் பார்த்துக் கொண்டிருக்க, அவளோ குனிந்த தலை நிமிராமல் நின்று கொண்டிருந்தாள்.

"அடி என் ராஜாத்தி! ரொம்ப அழகா இருக்கு அபி! என் கண்ணே பட்டுடும் போல!'' என்று அவளருகில் வந்து கன்னத்தை வழித்த கற்பகத்துக்கு, அபிராமியின் கண்களில் இருந்த சிவப்பு தென்பட,

''என்னடா? இன்னும் தலைவலி போகலையா? முகமே வாடி இருக்கே!'' என்று கவலைப் பட்டவர்,

''சுஜா போன் செஞ்சிருந்தா... அவங்க பாட்டிக்கு உடம்புக்கு முடியலையாம்... அதனால இன்னைக்கு அவள் காலேஜுக்கு வரலையாம்! நீ வந்து சாப்பிடு. நான் சக்தியை உன்னை காலேஜில விட சொல்றேன்!'' என்று சொன்னதும்,

''இல்லை... வேண்டாம்! நானே போயிக்கறேன்!'' என்று அவசரமாக பதில் வந்தது அபராமியிடம் இருந்து.

அதுவரை அவளைப் பார்வையால் வருடிக் கொண்டிருந்த சக்திக்க, அவளது அவசர பதிலில், வடிந்திருந்த கோபம் மீண்டும் பொங்கியது.

வெளியே வந்து தன்னை ஒரு பார்வை பார்க்கவில்லை! ஒரு வார்த்தை பேசவில்லை!

அம்மா சொல்லியும், தனியாக போய்க் கொள்வேன் என்கிறாளே!

''ஆமாமா... அவளே போகட்டும்... எனக்கு வேற வேலை இருக்கு... டிரைவர் வேலை பார்க்கிற அளவுக்கு எனக்கு டைம் இல்லை!'' எரிச்சலுடன் அவன் மொழிய, அபிராமியின் கண்களில் அதோ இதோ என்று போக்குக் காட்டிக் கொண்டிருந்த கண்ணீர் சட்டென்று வழிந்து கன்னத்தில் இறங்கியது.

அவளது கண்ணீரைக் கண்ட கற்பகம், ''ப்ச்... என்ன சக்தி இது? அவளுக்கு நேற்றில் இருந்து உடம்புக்கு முடியலையேன்னு உன்னைக் கூட்டிட்டுப் போகச் சொன்னேன்!'' என்று கடிந்து கொள்ள, அவனை நிமிர்ந்தும் பாராமல் சாப்பிட அமர்ந்திருந்த அபிராமியைக் கண்ட சக்திக்கும் கோபம் குறைவதாயில்லை.

அவசரமாக சாப்பிட்டு விட்டு அவள் கிளம்ப, மகனைப் பார்த்த கற்பகம், அவன் எழுவதாயில்லை

என்றதும், ''பார்த்துப் போயிட்டு வா அபி! மதியமே வந்துடுவே இல்லை?'' என்று உறுதிப் படுத்திக் கொண்டார்.

அவள் அந்தப் பக்கம் சென்றதும், மகனைக் கோபத்துடன் பார்த்தவர், ''ஏன்டா அந்தக் குழந்தை கிட்ட எரிஞ்சு எரிஞ்சு விழறே?'' என்று எரிச்சலுடன் வினவ,

அவன் பதில் பேசாமல் அமைதியாக இருப்பதைக் கண்டதும்,

''நான் வேற பைத்தியக்காரி மாதிரி உங்க ரெண்டு பேர் பற்றியும் கற்பனை செஞ்சு வச்சிருக்கேன்!'' என்று ஆதங்கத்துடன் மொழிந்தார்.

''நீங்களும் நானும் கற்பனை செஞ்சு வைச்சிருந்தா மட்டும் போதாது! அவளுக்கும் அந்த மாதிரி எண்ணம் இருக்கணும்!''

மகனிடம் இருந்து எரிச்சலுடன் வந்த வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியத்துடன் அவனை நோக்கிய கற்பகம்,

''நீயுமா?'' என்று நமட்டுச் சிரிப்புடன் வினவ,

''என்ன? நீயுமா-ன்னு ஒரு கேள்வி?'' என்றவனுக்கும் சிரிப்பு வரத்தான் செய்தது.

''இல்லை கண்ணா! உன்கிட்ட கல்யாணத்தைப் பற்றி மூணு மாசத்துக்கு முன்னாடி பேசினேனே! அப்போ என்னமோ கல்யாணமே செஞ்சுக்காம இருக்கப் போறதா சொன்னாயே?'' என்று அவர் மேலும் துருவ,

''ஆமாம்... அப்போ சொன்னேன்! ஏன்? அப்பாவுக்கு உங்களைப் பார்த்ததும் கல்யாண ஆசை வரலையா? அதே மாதிரி எனக்கும் அபியைப் பார்த்து வரக்கூடாதா?'' என்று தோரணையாக சொல்ல முயன்றாலும், அவன்

முகத்தில் வெட்கம் படர்வதைக் கண்ட கற்பகம், மனம் நிறைந்து சிரித்தார்.

''வரட்டும்! வரட்டும்! வரணும் என்பதுதானே என் னோட ஆசை!'' என்று அவர் புன்னகையுடன் சொல்ல,

பர்சை மறந்துவிட்டு அதை எடுக்க வந்த அபிராமியின் காதல், சக்தி சொன்னது விழுந்து அவளை சந்தோஷத்தில் திக்கு முக்காட வைத்தது.

பர்சை மறந்து சென்றதற்கு அவனிடம் திட்டு வாங்கப் போகிறோம் என்று எண்ணி பயந்து கொண்டே வந்தவளுக்கு, காதில் தேன் பாய்ந்த மாதிரி இருந்தது. மனமும் உடலும், ஒரு நிலையில் இல்லாமல் படபடத்தது.

உள்ளே செல்ல முயன்றவளுக்கு, கால்கள் ஒத்துழைக்கவில்லை. கண்ணில் பெருகிய ஆனந்தக் கண்ணீரோடு நின்று கொண்டிருந்தவளுக்கு, சக்திக்கும் கற்பகத்துக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தை மேலும் சந்தோஷத்தைக் கொடுத்தது.

''சரி! உன்னோட எண்ணம் மாறினதில் எனக்கு ரொம்ப சந்தோசம்! ஆனால் அவளுக்கு அந்த மாதிரி எண்ணம் இல்லை என்று ஏன்பா நினைக்கிறே?'' என்று கற்பகம் வினவ, சக்தியின் முகம் வாடியது.

''பின்னே! நேத்து ரெண்டு வாரம் கழிச்சு உங்களை எல்லாம் பார்க்கப் போறேன்னு நான் எவ்வளவு ஆசையா வந்தேன்? அவளுக்கு அந்த ஆசை இருந்தா இப்படி ரூமுக்குள்ளேயே இருந்திருப்பாளா?''

ஆதங்கத்துடன் கேட்ட சக்தியைக் கனிவுடன் பார்த்த கற்பகம், ''அவளுக்கு உண்மையிலேயே நேத்து உடம்புக்கு முடியலைப்பா... நேற்று காலேஜில இருந்து வரும்போதே குழந்தை வாட்டமாதான் இருந்தாள்!'' என்று அபிராமிக்கு ஆதரவாகப் பேச,

''ஆமாம்... நீங்க எப்பவுமே உங்க குழந்தைக்குத்தான் சப்போர்ட்! அன்னைக்கு எவ்வளவு ஆசையாய் போன் செஞ்சேன்... நீங்க கூப்பிட்டுக் கொடுத்த பிறகும் அவள் என்கிட்டே ஒரு வார்த்தை கூட பேசலை தெரியுமா?'' என்று குறையுடன் அவன் சொல்ல,

''போடா! அன்னைக்கு லைன் கட் ஆயிடுச்சு என்று அவள் அரை மணி நேரம் அழுதது எனக்குத்தான் தெரியும்!'' என்றார் கற்பகம்.

''நெஜமாவா அம்மா?'' ஆவலுடன் வினவிய சக்தியை, புன்னகையுடன் பார்த்தவர்,

''பெரிய டாக்டர்! ஒரு பொண்ணோட மனசு புரியலை!'' என்று கேலி செய்துவிட்டு,

''உடனே... இன்னைக்கு காலையில் இருந்து ஏன் பார்க்கலை என்று ஆரம்பிச்சிடாதே! முதல் முதல்ல புடவை கட்டி இருக்கா... நீ அவளைப் பார்த்த பார்வையை நானும்தான் பார்த்தேனே... அவளுக்கு வெட்கமா இருக்காதா?'' என்று கற்பகத்தை மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டான் சக்தி.

''இன்னும் ஒண்ணும் சொல்றேன் கேட்டுக்கோ! அன்னைக்கு அந்த புடவை எடுக்கும்போது, உனக்கு லைட் ப்ளூ பிடிக்கும் என்று அலைஞ்சு திரிஞ்சு எடுத்தாள் தெரியுமா?'' என்று கற்பகம் சொல்ல, சக்தியின் முகம் மலர்ந்து கொண்டே போனது.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் தன்னை நிலைப் படுத்திக் கொண்ட அபிராமி, உள்ளே நுழைந்தாள்.

அவளைக் கண்டதும், இருவரும் ஆச்சரியத்துடன் நோக்க, ''பர்சை மறந்து வைச்சுட்டு போயிட்டேன் அத்தை, அதை எடுக்கத்தான் வந்தேன்!'' என்று சொல்லி விட்டு, தன் அறைக்குள் சென்று பர்சை எடுத்துக் கொண்டு வேகமாக செல்ல முயல,

''அபி... இரு... நான் கொண்டு போய் விடறேன்!'' என்றான் சக்தி.

''இல்லை... யாரும் எனக்கு டிரைவர் வேலை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை!'' என்று தோரணையாக மொழிந்தவள், வேகமாக அங்கிருந்து செல்ல, விழித்துக் கொண்டு நின்றான் சக்தி.

மகன் திகைப்புடன் விழித்துக் கொண்டிருப்பதைக் கண்ட கற்பகத்துக்கு சிரிப்பு வந்தது.

''நல்லா திருப்பி கொடுத்தாளா என் மருமகள்? எத்தனை தரம் அவளை அதட்டி மிரட்டி இருக்கே!'' என்ற அன்னையை பாவமாக பார்த்து,

''அம்மா! இது ரொம்ப அநியாயம்! பெற்ற பிள்ளைக்கு சப்போர்ட் செய்யாமல், என்னையே கிண்டல் வேலை செய்யறீங்களா?'' என்றான் சக்தி.

''பின்னே! மனசில இவ்வளவு ஆசையை வைச்சிகிட்டு, எப்ப பாரு அவளை அதட்டிகிட்டே இருக்கிற மாதிரி நாடகம் போட்டுட்டு இருந்தே இல்லை? இப்போ அவள் மிரட்டட்டும்! அனுபவி!'' என்று மேலும் அன்னை கேலி செய்ய,

''போதும்மா.. போதும்! நீங்களே அவளுக்கு சொல்லிக் கொடுப்பீங்க போல!'' என்றவன், அன்னையின் அருகில் வந்து,

''இன்னைக்கு மதியம் நானே அவளைப் போய் காலேஜில கூப்பிட்டுக்கறேன்.... கொஞ்சம் பேசிட்டு நாங்க சாயந்திரமா வரோம்!'' ஓகேவா?'' என்றான்.

புன்னகையுடன் தலையாட்டிய கற்பகம், ''எப்போதும் போல அவளை மிரட்டிட்டு இருக்காதே கண்ணா!'' என்று சொல்ல,

''இனிமேல் அவள்தான் என்னை மிரட்ட போறா போல! பார்த்திங்க இல்லை? மேடம் எவ்வளவோ தோரணையா போனாங்க என்று?'' என்று புன்னகையுடன் சொன்னவன்,

''ரொம்ப பயப்படாதீங்க! உங்க குழந்தையை பத்திரமா கூட்டிட்டு வந்திடறேன்!'' என்று விட்டு மருத்துவமனைக்குக் கிளம்பினான்.

பேருந்தில் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்த அபிராமிக்கு, சந்தோஷத்தில் கண்ணீரும் புன்னகையும் மாறி மாறி வந்து கொண்டிருந்தது.

சக்தி அத்தானும் அவளை விரும்புகிறான்!

தன் நேசத்துக்கு அவனிடம் எதிரொலி இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சத்தில் நேற்றெல்லாம் கண்ணீர் வடித்தவளுக்கு, அவனும் தன்னை விரும்புகிறான் என்று தெரிந்ததும், இறக்கை இல்லாமல் வானத்தில் பறப்பதைப் போன்ற உணர்வு தோன்றியது.

யாரும் தன்னைக் கவனிக்கிறார்களா என்று எண்ணம் கூட இல்லாமல், தனக்குள்ளே சிரித்துக் கொண்டே வந்தவள், சரியாக அவளது கல்லூரி நிறுத்தத்தில் இறங்கியது அவளுக்கே ஆச்சரியம்தான்!

விழா முடிந்ததும், வீட்டுக்கு போகும் சந்தோஷத்துடன் அவள் வந்து கொண்டிருந்த போதுதான் ரமேஷ் அவளை நோக்கி வந்தான். ரமேஷ் அவளுடைய சீனியர்.

'ஹய்யோ, இவன் எதுக்கு இங்கே வரான்? சுஜா கூட இல்லையே!' என்று எண்ணியபடி நடையை எட்டிப் போட்டவளின் அருகில் வந்த ரமேஷ், ''ஹாய் அபிராமி!'' என்றான்.

''ஹாய்!'' என்று பதிலுக்கு சொல்லிவிட்டு அவள் நடக்க ஆரம்பிக்க, ''ஒரு நிமிஷம்! உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்!'' என்று அவன் நிறுத்த,

''என்ன?'' என்பது போல அவனைப் பார்த்தாள் அபிராமி. உள்ளுக்குள் ஏனோ ஒரே பதட்டமாக இருந்தது. கல்லூரியில் சுஜாவைத் தவிர வேறு யாரிடமும் சகஜ மாக பழகியதில்லை என்பதால், ஒரு பையன் வந்து பேசும்போது அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

''ஹே! எதுக்கு இவ்வளவு நெர்வஸா இருக்கே?'' என்ற ஆச்சரியப்பட்ட ரமேஷ், ''என் தங்கை கவிதா உன் கிளாஸ்தான் படிக்கிறாள். தெரியுமில்லை? அவளுக்கு ஒரு வாரமா உடம்புக்கு முடியலை... அதான் காலேஜ் வரலை.. லாஸ்ட் மினிட் நோட்ஸ் எல்லாம் அவள் கிட்ட இல்லை! அதான் உன் வீட்டுக்கு வந்து நாளைக்கு வாங் கிக்கலாமா என்று கேட்க சொன்னாள்! உங்க ஏரியால தான் நாங்களும் இருக்கோம்!'' என்றான்.

''ஓ! தாராளமா வரச் சொல்லுங்க! அட்ரஸ் தெரி யுமா? இல்லை எழுதி தரவா?'' என்று கேட்டு விட்டு, அவன் முகவரி வேண்டும் என்றதும், தன் முகவரியை எழுதி கொடுத்தாள் அபிராமி.

''தேங்க்ஸ்!'' என்று விட்டு அவன் செல்ல, பதட்டம் வடிந்து, ''இட்ஸ் ஓகே!'' என்று புன்னகையுடன் சொல்லி விட்டு திரும்பியவளின் புன்னகை, அங்கே, கல்லூரி வாயிலுக்கு எதிரே தன்னையே பார்த்தபடி நின்று

கொண்டிருந்த சக்தி அத்தானைப் பார்த்ததும் மேலும் விரிந்தது.

'இவன் எப்படி இங்கே வந்தான்?' என்று எண்ணிக் கொண்டே அவன் அருகில் வந்தவள், ''என்ன அத்தான்? இங்கே நிக்கறீங்க?'' என்று விசாரித்தாள்.

''ம்ம்ம்.. உங்க காலேஜ் பிகர் எல்லாம் சூப்பரா இருக் கும்னு சொன்னாங்க! அதான் சைட் அடிக்க வந்தேன்!'' என்று சக்தி கிண்டலாக சொன்னதும், அவளுக்கும் அவளது இயல்பான குறும்பு தலை தூக்கியது.

''அதுக்கு இந்த நேரத்தில் வந்தால் சரியா இருக்காது அத்தான்! சாயந்திரமா தான் வரணும்... அப்போதான் நிறைய பேரை பார்க்க முடியும்! அத்தோட, அடுத்த வாரத்தில் இருந்து எக்ஸாம்ஸ் என்பதால் இன்னையில் இருந்து காலேஜ் லீவ்! நீங்க சரியான டைமை சூஸ் செய்யலை!'' என்று கேலியுடன் அவள் திருப்ப, ஆச் சரியத்துடன் அவளைப் பார்த்தான் சக்தி.

அபிராமியின் குறும்பை அறியாதவனில்லை அவன்!

எத்தனையோ நாள் தான் இல்லை என்று எண்ணிக் கொண்டு, அவள் தன் அன்னையிடம் தன்னைப் பற்றி கேலி பேசுவதை அறையில் இருந்தபடி ரசித்திருக்கிறான்.

ஆனால், அவனிடம் நேரிடையாக அவள் தன் குறும் பைக் காட்டியதில்லை என்பதால், இந்த உரிமையான கேலிப் பேச்சு, காலையில் தனக்கும் தன் அன்னைக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தையை அவள் கேட் டிருப்பாளோ என்ற சந்தேகத்தை தோற்றுவித்தது.

''சரி வா... வந்தது வந்திட்டேன்! உன்னை வீட்டுக் காவது கூட்டிட்டு போறேன்!'' என்று சொல்லி, நிறுத்தி வைத்திருந்த வண்டியை நோக்கி சென்றான்.

தங்கள் பேச்சை கேட்டிருக்கிறாள் என்று சக்திக்கு தெளிவானது.

''பெரிசா ஒண்ணுமில்லை... உன் கல்யாணத்தைப் பற்றிதான் பேசிட்டு இருந்தோம்.. அம்மா நீ யூ.ஜி. முடிச்சதுமே கல்யாணம் செய்யலாம் என்று சொன்னாங்க... நான்தான் அவள் பி.ஜி. படிக்கட்டும்மா என்று சொல்லிட்டு இருந்தேன்... இப்போ என்னடா பார்த்தா... யாரோ ஒருத்தன் உன்னை கல்யாணம் செஞ்சுக்க ஆசைப்படறான்னு நீயே சொல்றே.. சோ, அம்மா சொன்னபடியே இப்பவே கல்யாணம் செஞ்சுடலாமா? அவன், அதான் அந்த ரமேஷோ ராஜேஷோ எப்போ வீட்டுக்கு வரேன்னு சொல்லி இருக்கான்?'' என்று சக்தி விசாரிக்க, அபிராமி திகைத்து நின்றாள்.

அவனை வம்பிழுக்க என்று எண்ணித் தான் சொல்லப் போக, இவன் என்னடாவென்றால், உண்மையிலேயே வேறு யாருக்கோ தன்னை திருமணம் செய்து வைப்பதில் குறியாக இருக்கிறானே?

சக்தி காலையில் தன் அன்னையிடம் சொல்லிக் கொண்டிருந்ததை சரியாகத்தான் கேட்டோமா? என்ற சந்தேகம் தோன்ற, அதுவரை இருந்த குறும்பான மனநிலை மாறி, அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது.

வந்த அழுகையை அடக்கிக் கொண்டு, ''யாரோ ஒருத்தன் ஆசைப்பட்டா, உடனே அவனுக்கு கல்யாணம் செஞ்சு வைச்சுடுவீங்களா?'' ஆத்திரத்துடன் அவள் கேட்ட கேள்வியில், முதலில் திகைத்து பின் சமாளித்துக் கொண்ட சக்தி,

''இல்லை அபி... அவனை பற்றி விசாரிப்போம்... உனக்கும் இஷ்டம் இருந்தா...'' என்று சொல்லிக் கொண்டு போக,

''நீங்க ஒரு மண்ணும் விசாரிக்க வேண்டாம்!'' என்று வெடித்தாள்.

''அத்தை கிட்ட காலையிலே நீங்க சொன்னதென்ன? இப்போ என்கிட்டே சொல்றது என்ன?'' என்று உதடு துடிக்க கேட்க, அவள் எதிரே அமர்ந்திருந்த சக்தி எழுந்து அவளருகில் சென்று அமர்ந்தான்.

''ஷ்... மெதுவா! எதுக்கு சத்தம் போடறே? சோ, தி கேட் இஸ் அவுட் ஆப் தி பேக்! நாங்க பேசினதை எல்லாம் கேட்டே தானே நீ? அப்புறம் எதுக்கு என்னை வம்பிழுத்தே? ம்ம்?'' என்று சொல்லி சிரித்தான்.

அவன் தன்னைக் கண்டு கொண்டே வம்பிழுத்திருக்கிறான் என்று புரிந்தாலும், நேற்று அவள் பட்டபாடு அவளுக்கு இன்னமும் மறக்கவில்லை என்பதால், மனதை மயக்கிய அந்த சிரிப்பில் அவளால் இணைய இயலவில்லை.

அவள் முகம் வாடியே இருப்பதைக் கண்ட சக்தி, ''ஹே... கண்ணம்மா! என்னடா? இப்போதான் என் கண்ணம்மா இந்த போடு போடறாளேன்னு சந்தோஷப்பட்டேன்! அதுக்குள்ளே ஏன் டல்லா ஆயிட்டே?'' என்று மென்மையாக வினவ,

அவனது கண்ணம்மா என்ற அழைப்பில் முகம் மலர்ந்து விகசிக்க, ''அதென்ன கண்ணம்மா?'' கண்களில் ஆர்வத்துடன் அவள் கேட்டதும்,

''ம்ம்ம்... அதுவா?'' என்று எதிர் கேள்வி கேட்டவன், பதில் சொல்ல அவசரம் காட்டவில்லை.

மாறாக, அவளது கண்களை ஊடுருவிப் பார்த்தவனின் கரம், அவளது நெற்றியில் புரண்ட முடிக்கற்றையை

ஒதுக்கி விட உயர, தன்னிச்சையாக அபிராமியின் முகம் பின்னுக்கு நகர்ந்தது.

புன்சிரிப்புடன் அவளது கழலை மென்மையாக ஒதுக்கியவனின் கரம், அவளது கன்னத்தை மென்மையாக வருட,

கண்களில் தவிப்புடன் தன்னை நோக்கியவளை அதற்கு மேல் சோதிக்காமல், ''பாரதிக்கு செல்லம்மா மாதிரி... இந்த சக்திக்கு என் அபிதான் கண்ணம்மா!'' என்று காதலுடன் சொல்லி விட்டு அவன் பார்த்த பார்வையில், அவள் தலை தானாக கவிழ்ந்தது.

அவளது கன்னங்களில் பூத்திருந்த ரோஜாக்கள் மனதை மயக்க, ''அபி...'' என்று தாபத்துடன் அழைத்து அவளருகில் மேலும் நெருங்கி அமர்ந்தவன், சர்வர் தங்களை நோக்கி வருவதைக் கண்டதும் ஒரு பெருமூச்சுடன் விலகி அமர்ந்தான்.

அதன் பிறகு, ஒருவரை ஒருவர் பார்வையால் விழுங்கியபடி, அவர்கள் உண்ட உணவில் சுவை மிகுந்திருப்பதைப் போலத் தோன்றியதில் ஆச்சரியமில்லைதானே?

15

''நீங்க எப்போ அத்தான் என்னை விரும்ப ஆரம்பிச்சீங்க?''

பூங்காவில் வந்து அமர்ந்த அரை மணி நேரமாக இந்த கேள்வியையே வெவ்வேறு விதமாக கேட்டுக்

கொண்டிருந்த அபிராமியைப் பார்த்து வாய் விட்டு சிரித்தான் சக்தி.

அவனது கன்னக் குழியில் தொலைந்து போகத் துடித்த மனதை அடக்கிக் கொண்டு, ''சொல்லுங்க அத்தான்!'' என்று சலுகை கொண்டாடினாள் அவள்.

''எப்போ காதல் வந்தது என்று எனக்கு தெரியலைடா கண்ணம்மா... அம்மா மூணு மாசம் முன்னாடி கல்யாணத்தைப் பற்றி பேசும் வரையில் கூட என் மனசே நானே புரிஞ்சிக்கலை... இன்னும் சொல்லப் போனாக் கல்யாணமே செஞ்சுக்க வேண்டாம்னுதான் நான் நினைச்சுட்டு இருந்தேன்!'' என்ற அவனது பதிலில் அவள் முகம் லேசாக வாட,

''ஹே! அது அப்போதைய நினைப்புடா!'' என்று அவளைத் தேற்றியவன், தொடர்ந்து சொன்ன விஷயங்கள், அவளை மலரச் செய்தது.

''ஒரு நாள் பக்கத்து வீட்டு ஆன்ட்டி உன் கல்யாணத்தைப் பற்றி அம்மா கிட்ட பேசும்போது தான் என் மனசு எனக்கு தெளிவா புரிஞ்சுது!'' என்றவன் அன்று நடந்ததை அவளிடம் பகிர்ந்தான்.

அன்று, இரண்டு நாட்களாக மருத்துவமனையில் இரவும் பகலும் வேலை செய்ய வேண்டி இருந்ததால், கற்பகத்தின் வேண்டுகோளின் பேரில் சக்தி விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டில் இருந்தான்.

அபிராமி கல்லூரி சென்றிருந்தாள். அப்போதான் பக்கத்து வீட்டில் வசிக்கும் பார்வதி கற்பகத்தைக் காண வந்திருந்தார்.

கற்பகம் அவரை வரவேற்று அமர வைத்து பேச ஆரம்பிக்க, தண்ணீர் குடிக்க வந்த சக்தியின் காதில்

அவர்கள் பேச்சில் அபிராமியின் பெயர் அடிபடவே, தன்னையும் அறியாமல் அதை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தான்.

''கற்பகம் அக்கா, அபிக்கு எப்போ கல்யாணம் செஞ்சு வைக்க போறீங்க?''

''செய்யணும் பார்வதி... எனக்கு மனசில ஒரு ஆசை... சக்திகிட்ட அதைப் பற்றி பேசினேன்... ஆனால், அவன் கல்யாணமே செஞ்சுக்க வேண்டாம்னு நினைக்கிறேன்மா என்று சொல்றான்! அதான் ஒரே யோசனையா இருக்கு!'' என்று கற்பகம் ஆதங்கத்துடன் சொல்ல,

''அப்படியா? அதைப் பற்றிதான் அக்கா நான் கேட்க வந்தேன்... இப்போ தான் உறவுக்குள்ள கல்யாணம் செஞ்சுக்கக் கூடாது என்று சொல்றாங்களே! சக்தி வேற டாக்டர்.. அதுக்கும் அப்படி ஒரு நினைப்பு இருந்தால், அபியை என் நாத்தனார் பையனுக்கு கேட்கலாம்னு நினைச்சேன்... பையன் டெல்லியில் நல்ல வேலைல இருக்கான்... என் நாத்தனார் போன வாரம் இங்கே வந்திருந்தா இல்லை? அப்போ நம்ம அபியைப் பார்த்துட்டு, நீங்க கேட்டு பாருங்க அண்ணி என்று சொல்லிட்டு போய் இருந்தாள். என் நாத்தனாரைப் பற்றி உங்களுக்கும் தான் தெரியுமே அக்கா... ரொம்ப நல்ல மாதிரி... அபியை நல்லபடியா வைச்சுப்பாங்க!'' என்றார் பார்வதி.

''இல்லை பார்வதி... எனக்கென்னவோ சக்தி மனசு மாறும்னுதான் தோணுது... எப்படியும் அபிக்கு இன்னும் மூணு நாலு மாசம் படிப்பு இருக்கு... அதை முடிச்சதும் திரும்ப சக்திகிட்ட பேசறேன்... அபி அம்மாவுக்கும் சக்திக்கு கட்டிக் கொடுக்கணும் என்றுதான் ஆசை...

அப்பவும் சக்தி ஒத்துக்கலைன்னா.. நீ சொன்ன மாதிரி யோசிக்கலாம்.. நாம என்ன நினைச்சாலும், மேலே இருக்கிறவன் கணக்கு படி தானே நடக்கும்!'' என்று கற்பகம் முடித்துவிட,

பார்வதியும், ''சரிக்கா! அபிக்கு வெளியே பார்க்கிற துன்னு முடிவாயிட்டால் நான் சொன்னதை மறந்துடாதீங்க!'' என்று விடை பெற்றுக் கொண்டு போனார்.

அவர் சென்றதும், ஏனோ சக்திக்கு எரிச்சலாக வந்தது.

இவங்க யார் அபிக்கு மாப்பிள்ளை பார்க்க? என்று தோன்றிய எரிச்சல், அன்று முழுவதும் தொடர, தன்னுடைய எரிச்சலுக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தவனுக்கு, அபியை யாருக்கும் தன்னால் விட்டுத்தர முடியாது என்பது தெளிவாக புரிந்தது.

அவனது நேசத்தை உணராமலே, அன்னையிடம் திருமணமே வேண்டாம் என்று சொன்ன தன் மடத்தனத்தை நொந்து கொண்டவனுக்கு, இப்போது தானாக சென்று அன்னையிடம் பேசவும் வெட்கமாக இருந்தது.

எப்படியும் அன்னை, அபியின் படிப்பு முடிந்ததும், தன்னோடு பேசப் போவதாக சொன்னது கொஞ்சம் நிம்மதியைத் தரவே, இப்போதைக்கு எதுவும் பேச வேண்டாம் என்று முடிவெடுத்தான்.

கற்பகம், எப்போதுமே அபிராமியைக் குழந்தையாக கொண்டாட, சக்தி அவளிடம் கண்டிப்புடந்தான் நடந்து கொள்வான்.

தன் காதலை அறிந்த நாளில் இருந்து, அவளைப் பார்த்தாலே தன் வசம் இழப்பதை உணர்ந்தவன், அதை மறைக்கவே மேலும் அவளிடம் கண்டிப்பு காட்ட

ஆரம்பித்தான். படிக்கும் பெண்ணின் மனதில் வீணான சஞ்சலங்களை உருவாக்க வேண்டாம் என்பதும், அவனது அந்த செயலுக்கு காரணமாயிற்று.

ஆனால், தன் நேசத்தை அறிந்த பிறகான இந்த இரண்டு வார பிரிவு, அவனை முழுவதுமாய் மாற்றி இருந்தது.

தனக்கும் அன்னைக்கும் இருக்கும் ஆசையைப் போலவே, அவளுக்கு இருக்குமா என்று யோசித்தவனின் மனம், அவள் எப்போதும் அவனிடம் ஒதுக்கம் காட்டுவதை எண்ணி வருந்தியது.

தன்னுடைய கண்டிப்பே அவளுடைய ஒதுங்கலுக்கு காரணம் என்று அறிவுக்கு புரிந்தாலும், ஊரில் இருந்து வந்தவுடன், அவளது மனதை அறிந்து கொள்ளா விடில், மண்டையே வெடித்து விடும் போன்ற உணர்வு தோன்றிய போதுதான், தான் எந்த அளவு அவளை நேசிக்கிறோம் என்பது அவனுக்கு தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

முகாமில் இருந்து அவன் பேசிய போது, அவள் பேசவில்லை என்றதும், அவனுக்கு ஏற்பட்ட வருத்தத்தின் அளவை வார்த்தையால் சொல்ல முடியாது. அன்றே ஊருக்கு ஓடி வரத் துடித்த மனதை, தான் வந்திருந்த வேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அடக்கி கொள்ள அவன் பட்ட பாடு அவனுக்குத்தான் தெரியும்!

ஊரில் இருந்து வந்த அன்றும், அவள் தன்னைப் பார்க்க வராமல் அறையில் அடங்கி கிடந்த போது, தன்னுடைய நேசத்துக்கு அவளிடம் எதிரொலி இல்லையோ என்று அவன் வேதனைப்பட்டதை அபிராமியிடம் சொல்லியவன்,

''இரண்டு வாரம் வேற ஊரில் இருந்து கொண்டு உன்னைப் பார்க்காமல் இருந்ததை விட.... நேற்று நைட் நீ பக்கத்து ரூமில் இருந்தும் பார்க்க முடியாமல் இருந்தது எவ்வளவு வேதனையா இருந்தது தெரியுமா அபி! எனக்கு தூக்கமே வரலை!'' என்று நேற்றைய தவிப்பை அவளிடம் பகிர்ந்து கொள்ள,

தன் நேசத்துக்கு சற்றும் குறைவில்லாமல், சக்தியும் தன்னை விரும்புகிறான் என்ற சந்தோஷத்தில், அபிராமிக்கு கண்களில் நீர் கோர்த்தது.

அவளின் கண்ணீரைப் பார்த்ததும், ''கண்ணம்மா! என்னடா?'' என்று சக்தி பதற, அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்டாள் அபிராமி.

அவன் விடுவதாயில்லை!

''எதுக்கு இப்போ அழுதே?'' என்று அவன் துருவ,

''அச்சோ! அழலை அத்தான்! அது ஆனந்தக் கண்ணீர்!'' என்று புன்னகையுடன் அவள் சொல்ல,

''அப்படியா? கண்ணீர் வர அளவுக்கு என்ன ஆனந்தம்?'' என்று அவன் மேலும் துருவவும்,

''சொல்லாமல் விட மாட்டீங்களே!'' என்றவள், ''நேற்று நீங்க வரீங்க என்று நான் எவ்வளவு சந்தோஷமா இருந்தேன் தெரியுமா?'' என்றாள்.

''ஆமாம்! அதான் அப்படியே நான் வரும்போது வழி மேல் விழி வைத்து வாசலிலேயே நின்னுட்டு இருந்தாயா?''

கேலியாக கேட்டாலும், நேற்று அவன் வரும்போது அவளைப் பார்க்க முடியாத வருத்தத்தின் காரணமாக குரலில் எரிச்சலும் கலந்திருந்தது.

''நானும்தான் உங்களைப் பார்க்க ஆசையாய் இருந்தேன்... ஆனால்..'' என்றவள், தன் வகுப்புத் தோழி மாலினியின் அண்ணன் காதலைப் பற்றியும், அதைத் தொடர்ந்து 'தான் அத்தானுக்கு தகுதியானவள்தானா?' என்ற சந்தேகப்பட்டதையும் எடுத்துச் சொல்ல, சக்தியின் முகம் சுருங்கியது.

''அதான்... உங்களைப் பார்க்கவே எனக்கு நேத்து தெம்பே இல்லை!'' என்று சொல்லி முடித்ததும், சட்டென்று எழுந்த சக்தி,

''வா அபி! வீட்டுக்கு போகலாம்!'' என்றான்.

''என்ன அத்தான்? இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாமே?'' என்று ஏக்கத்துடன் கேட்டவளிடம்,

''வீட்டுக்கு போகலாம்.. உன்கிட்ட கொஞ்சம் பேசணும்!'' என்றவனின் குரலில் இருந்த இறுக்கம், அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தாலும், அதற்கு மேல் ஒன்றும் பேசாமல், அவனோடு கிளம்பினாள்.

இருவரும் வீட்டுக்கு வந்த போது, கற்பகம் வீட்டில் இருக்கவில்லை. பக்கத்து வீட்டு பார்வதியோடு வெளியே கொஞ்சம் வேலையாக செல்ல வேண்டி இருப்பதை, சக்தியிடம் காலையிலேயே சொல்லி இருந்தார் கற்பகம்.

வீட்டுக்கு வரும் நேரம் முழுவதும் எதுவும் பேசாமல் சக்தி வரவே, தான் ஏதாவது தவறாக பேசி விட்டோமோ என்று அபிராமிக்கு கலக்கமாக இருந்தது.

வீட்டுக்குள் நுழைந்ததும் சோபாவில் அமர்ந்த சக்தி, அவளையும் அருகே வந்து அமருமாறு சொல்ல, தயக்கத்துடன் வந்து அமர்ந்தாள்,

''இந்த வீட்டில் நீ அதிகப்படி ஆள் என்று நினைக்கும்படி நானோ இல்லை அம்மாவோ நடந்து இருக்குமா அபி?''

திடீரென்று வந்த இந்த கேள்வியில் திகைப்படைந்து, பின் சமாளித்துக் கொண்டு, ''என்ன அத்தான் இப்படி எல்லாம் கேட்கறீங்க?''

'இந்த கேள்வியே தப்பு!' என்ற பாவனையில் அபிராமி பதில் சொல்ல, சக்தியின் இறுக்கம் சற்று தளர்ந்தது.

''பின்னே? அம்மா என்னையும் உன்னையும் பிரிச்சு பார்த்ததே இல்லையே! இன்னும் சொல்லப் போனா, என்னை விட உன்கிட்ட தான் அதிகமா ஒட்டுதலா இருக்காங்க! அப்படி இருக்கும்போது, உனக்கு தகுதி இருக்கா என்று பிரச்சனை எங்கிருந்து வந்தது அபி? உன் மனசில இப்படி ஒரு தாழ்வு மனப்பான்மை வர என்ன காரணம்?'' சக்தியின் கூர்மையான கேள்வியில், அபிராமிக்கு கண்ணீர் வரப் பார்த்தது.

அவளது கரங்களை ஆதரவாகப் பற்றிக் கொண்டவன்,

''சொல்லுடா!'' எனவும், சிறிது நேரம் மௌனமாக இருந்த அபிராமி, 'சொல்லாமல் விட மாட்டேன்' என்ற பாவனையில் சக்தி அமர்ந்திருப்பதைக் கண்டு சொல்லத் துவங்கினாள்.

''அந்த அத்தை... அதான் என் அப்பாவோட அக்கா... என்னை அதிர்ஷ்டம் கெட்டவள் என்று சொன்னது எனக்கு மனசில பதிஞ்சிடுச்சு அத்தான்... அதுக்கேற்ற மாதிரியே அம்மாவையும் அப்பாவையும் இழந்துட்

டேனா... அவங்க சொன்னதை மறக்கணும் என்று முயற்சி செஞ்சாலும், சில சமயம் என்னையும் மீறி அது நினைவுக்கு வந்து என் மனசில ஒரு எதிர்மறை எண்ணம் தோணுது அத்தான்!'' என்று தயங்கி தயங்கி அபிராமி தன் மனக்கலக்கத்தை சொல்ல, சக்திக்கு அந்த அத்தையை அடித்து நொறுக்க வேண்டும் போன்ற ஆத்திரம் ஏற்பட்டது.

இப்போது முகம் தெரியாத ஒரு பெண்மணியிடம் ஆத்திரம் கொள்வதை விட, அபிராமியின் மனக்கலக்கத்தைப் போக்குவதே பிரதானமாகப் பட்டது.

முகம் கலங்கி நின்றவளை ஆறுதலாக அணைத்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்றிய உந்துதலை அடக்கியவன், அவளை ஆழ ஒரு முறை பார்த்து விட்டு,

''தகுதியே இல்லாதவங்க சொன்ன வார்த்தைக்கெல்லாம் மதிப்பு கொடுக்க தெரிஞ்சிருக்கு... ஆனால் உன் மேல் உயிரையே வைச்சிருக்கிற அம்மா, 'அவங்க சொன்னதைப் பற்றி நினைச்சு கலங்கக் கூடாது!' என்று சொன்னதை மதிக்கலை இல்லை நீ?'' என்று கடினமான குரலில் சொல்ல,

''இல்லை அத்தான்... அப்படி இல்லை!'' என்று அவள் இடையிட்டதை கண்டு கொள்ளாமல், ''மனசை புண்படுத்தணும் என்றே ஒருத்தங்க சொல்றதுக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்கலாமா அபி?'' என்றவன் குரலில் இப்போது கோபத்தை விட ஆற்றாமையே இருந்தது.

''தப்புதான்! ஆனால் அது என்னையும் மீறி நடக்குது என்று சொல்றேனே அத்தான்!'' என்றவள் கொஞ்சம் இடைவெளி விட்டு,

''ஆனாலும் அத்தான்.. நான் தகுதி குறைந்தவள் இல்லை என்றாலுமே, நீங்க என்னை விட எல்லா விதத்திலுமே உயர்வுதானே அத்தான்... அழகு, படிப்பு, குணம்! அதுவும்தான் நீங்க என்னை விரும்புவீங்களோ இல்லையோ என்ற என் பயத்துக்கு காரணம்!'' என்று சொல்லி விட்டு அவள் வாட்டத்துடன் தலையைக் குனிந்து கொள்ள,

அபிராமியின் வாடிய முகத்தைப் பார்த்த சக்திக்கு, அவளது இந்த மனக்கலக்கத்தை இப்போதே போக்கி விட வேண்டும் என்று தோன்றியது.

''கண்ணம்மா.. இங்கே பாரு... நிமிர்ந்து ஒழுங்கா என்னைப் பாரு!'' என்று ஒரு அழுத்தத்துடன் சக்தி சொன்னவுடன் அவளும் நிமிர்ந்து அமர்ந்து அவனை நோக்கினாள்.

''காதல் தகுதி பார்த்து வருவது இல்லைடா... கல்யாணத்தில் இணையறவங்க ரெண்டு பேரும் ஒரே மாதிரி தகுதியோட, எண்ணங்களோட இருக்கணும் என்ற அவசியம் இல்லை! பரஸ்பரம் ரெண்டு பேரும் மற்றவரோட உணர்வை, எண்ணங்களை மதிச்சாலே போதும்... அதுதான் ஒரு சந்தோஷமான வெற்றிகரமான திருமண வாழ்க்கைக்கு அடிப்படை!'' என்றவன், அபிராமியின் முகம் கொஞ்சம் தெளிவாவதை உணர்ந்து, தன் பேச்சைத் தொடர்ந்தான்.

''அப்புறம் நீ சொன்ன விஷயம் எல்லாத்தையும் எடுத்துக்கலாம்... அழகு, படிப்பு, குணம்! இதில எது உனக்கு குறைச்சலாம்?'' என்று கேட்டவன்,

''இந்த படிப்புதான் உயர்வானது அப்படின்னு எதுவும் கிடையாது அபி... அதை எப்படி நாம பயன்படுத்தறோம் என்பதில்தான் அதோட உயர்வே இருக்கு!''

''குணம்... அது உங்க அத்தை கிட்ட போய் கேளு... பெரிய பாராட்டுப் பத்திரம் வாசிப்பாங்க!'' என்று கேலியாக சொன்னாலும், அவன் குரலில் பெருமிதமே இருந்தது.

அவள் அருகில் நெருங்கி அமர்ந்து ''அப்புறம் என்ன சொன்னே? அழகு!'' என்றபடி அவன் கண்களில் ரசனையுடன், அவள் முகத்தை தன் கைகளில் ஏந்த, அந்த சின்ன ஸ்பரிசத்திலேயே, அபிராமியின் கன்னங்கள் சூடாகி சிவந்தது.

''நீ எவ்வளவு அழகுன்னு உனக்கே தெரியலை! அதை உணராமல் நீ இருக்கிறது கூட ஒரு அழகுதான் தெரியுமா?'' என்றவனின் ஒரு விரல், அவளது இதழ்களின் வடிவை அளக்க, உதடுகளோ மென்மையான குரலில் பாடியது.

''நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி – கண்ணம்மா

தன்னையே சகியென்று சரணம் எய்தினேன்''

சக்தியின் அந்த செய்கையில் அபிராமிக்கு உடல் சிலிர்த்தது.

அவனிடம் இருந்து விலகி எழுந்து நின்றவாறே, ''நான்.. நான் போறேன்... படிக்கணும்!'' என்று தடுமாற்றத்துடன் உரைத்தாள்.

அவளது தடுமாற்றத்தை ரசித்தவாறே எழுந்து நின்ற சக்தி, ''உன்கிட்ட ஒரே ஒரு குறை இருக்கத்தான் செய்யுது!'' என்று இழுக்க, 'என்ன?' என்பது போல, அவனை நிமிர்ந்து நோக்கினாள் அபிராமி.

''தேவையான நேரத்தில் லவ் ஹார்மோன் சுரக்காமல் மக்கர் செய்யுது! கல்யாணத்துக்கு பின்னாடி நிறைய

ட்ரீட்மென்ட் கொடுக்கணும் போல இருக்கு!'' என்று போலியான பெருமூச்சுடன் சொல்ல, வெட்கத்துடன் அபிராமி சிட்டாகப் பறந்து செல்வதை, ஒரு புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சக்தி.

அடுத்து வந்த நாட்களை அபிராமியின் தேர்வுகள் முழுமையாக விழுங்கி விட, அவள் தேர்வுகள் முடிந்த அன்று கற்பகம், சக்தியிடம் திருமணத்தைப் பற்றிப் பேசினார்.

''இல்லைம்மா... இப்போ கல்யாணம் வேண்டாம்! அபி, பி.ஜி. முடிக்கட்டும்! ரெண்டு வருஷம் கழிச்சே கல்யாணத்தை வைச்சிக்கலாம்!'' என்ற சக்தியின் உறுதியான பதிலில், கற்பகமும் அபிராமியும் அதிர்ந்து போனார்கள்.

சக்தி திருமணத்தை இரண்டு வருடங்கள் கழித்து வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னதில் அதிர்ந்து போனாலும், முதலில் சமாளித்துக் கொண்டவர் கற்பகம் தான்.

''என்ன சக்தி இது? அவள் படிக்கணும் என்றால் கல்யாணத்துக்கு பின்னாடி கூட படிக்கலாமே? அதை காரணம் காட்டி எதுக்கு கல்யாணத்தை தள்ளிப் போடறே?'' ஆதங்கத்துடன் அவர் வினவிய போது கூட,

''இப்போ அவளுக்கு என்னம்மா வயசாயிடுச்சு.. இருபதுதானே... இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சு கல்யாணம் செஞ்சால் என்ன குறைந்து போய் விடும்?'' என்று சொன்ன சக்தி தனிமையில் அபிராமியின் மனதில் வேரூன்றி இருக்கும் குழப்பத்தை எடுத்து சொல்லி,

''அவள் என்னை கல்யாணம் செஞ்சுக்கும்போது, எந்த வித உறுத்தலும் இல்லாமல் இருக்கணும்மா... நம்ம ரெண்டு பேர் மட்டும் தான் உலகம் என்று இருக்கிறது மாறி, வெளியே போய் நாலு பேரை பார்த்து இன்னும் பழகினால்தான், அவளுக்குள் இருக்கிற இந்த தாழ்வு மனப்பான்மை மாறும்.. அதுதாம்மா அவளுக்கும் நல்லது!'' என்று சொல்லி விட, கற்பகத்தாலும் எதுவும் சொல்ல முடியவில்லை.

''நீ சொல்றதெல்லாம் சரிதான் சக்தி! இருந்தாலும் குழந்தை இந்த ரெண்டு நாளா ரொம்ப வாடிப் போயிட்டாள் பாரு!'' என்று கவலையுடன் சொன்னதும்,

''நான் பார்த்துக்கறேன் அவளை!'' என்றவன் இரண்டு நாள் கழித்து அபிராமியிடம் பேச, அவளது அறைக்கு சென்றான்.

அரவம் கேட்டு திரும்பிய அபிராமி, சக்தியைக் கண்டதும் முகத்தைத் திருப்பி கொண்டு அமர்ந்தாள்.

அவளது அந்த செய்கை சிறு குழந்தையின் கோபம் போலத் தோன்ற, சக்திக்கு புன்னகை அரும்பியது.

''குட்டிப் பாப்பாவுக்கு என்ன கோபம்?'' என்று அவன் விசாரிக்க,

''நான் ஒண்ணும் குட்டிப் பாப்பா இல்லை... எனக்கு இருபது வயசு ஆகுது!''

'இருபது வயசு' என்பதில் அவள் கொடுத்த அழுத்தம் சக்திக்கு மேலும் சிரிப்பை வரவழைத்தது.

தன்னுடைய சிரிப்பு அவளை மேலும் கோபத்தை உண்டு செய்வதை உணர்ந்தவனாக, அவளை சமாதானப் படுத்தும் முயற்சியில் இறங்கினான்.

''நானும் அதையேதான் சொல்றேன்.. இருபது வயசு தான் ஆகுது.. பெண்ணின் திருமண வயது இருபத்தியொன்று என்று நீ கேள்விப்படலையா?'' என்றதும் அவள் அவனை முறைக்க,

''நீ இன்னும் கொஞ்சம் வளரணும்டா கண்ணம்மா!'' என்றான் அவன் புன்சிரிப்புடன்!

''நான் இப்பவே அஞ்சு அடி அஞ்சு அங்குலம்! உங்களை விட அஞ்சு இஞ்சுதான் கம்மி தெரியுமா?'' என்ற அவளது கடுப்பான பதிலில் அவன் வாய் விட்டு சிரித்தான்.

''இதைத்தான் சொன்னேன்! மனசளவில் வளரணும் என்று சொன்னால், உடல் உயரத்தைப் பற்றி சொல்ற பாரு!'' என்று அவன் மேலும் கிண்டல் செய்ய, கோபத்துடன் அவனைப் பார்த்து விட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

''சாரி! சாரி! இங்கே பாரேன்! அபி.. ப்ளீஸ் என்னை கொஞ்சம் பாரு!'' என்று அவன் கெஞ்சியதும், அவன் புறம் திரும்பியவளின் கண்களில் நீர் கோர்த்திருந்தது.

அவளது கண்ணீரைப் பார்த்ததும் பதறியவன், ''ஹே... என்னடா.. சும்மா ஒரு கேலிதானே! இதுக்கு போய்...'' என்று அவன் அவள் கண்ணீரைத் துடைக்க,

''இந்தப் பேச்செல்லாம் வேண்டாம்.. கல்யாணத்தை தள்ளிப் போட என்ன காரணம் என்று தெளிவா சொல்லிடுங்க அத்தான்... எனக்கு என்ன என்னமோ நினைச்சு கஷ்டமா இருக்கு!'' என்று. என்ற அவளது கலங்கிய குரலில் அவனுக்கும் உண்மையை சொல்லி விடலாம் என்று தோன்றியது.

''அபி.. நான் முன்னாடியே ரெண்டு வருஷம் கழிச்சு தான் கல்யாணம் செஞ்சுக்கணும் என்ற முடிவோடுதான் இருந்தேன்.. நீ இன்னும் படிக்கணும், வேலைக்கு போய் உன் சொந்த காலில் நிற்கணும் என்று நினைச்சேன்.. அன்னைக்கு நீ சொன்னே பாரு தகுதியைப் பற்றி! அது என் முடிவை இன்னும் உறுதி ஆக்கிடுச்சு... நீ மேல படிச்சு...'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

''ஓஹோ! எம்.காம்'ல தாழ்வு மனப்பான்மையை நீக்கறது ஏதாவது பாடம் இருக்கா என்ன?'' என்று அவள் எரிச்சலுடன் இடையிட,

''வாயாடி!'' என்று அவள் மூக்கைப் பிடித்து ஆட்டிய சக்தி,

''இது ஒரு வாய்ப்பு.. இன்னும் நிறைய பேரை பார்த்து பழகுவதற்கு ஒரு வாய்ப்பு.. அதுவும் இல்லாமல், கல்வி கண்டிப்பா நம்பிக்கையை இன்னும் வளர்க்கும் என்பது உண்மைடா... அம்மா, நான், நீ என்ற சின்ன வட்டத்துக்குள்ளேயே இருக்காமல் நீ இன்னும் வெளி மனிதர்களோடு பழகும் போது தன்னால் உனக்குள் இருக்கும் குழப்பங்களும் விலகிடும்!'' என்றவன் கொஞ்சம் இடைவெளி விட்டு,

''அதுக்குள்ளே நாம கட்ட போற இலவச மருத்துவ மனைக்கான ஆரம்ப கட்ட வேலைகளையாவது செஞ்சுடலாம் என்று நினைச்சேன்!'' என்று அவன் சொல்லி முடித்ததும், அவள் முகமும் தெளிந்தது.

''எனக்கு தெரியாது அத்தான்.. இந்த ரெண்டு வருஷத்தில என்னோட தன்னம்பிக்கை ரொம்பவே

வளர்ந்து... அப்புறம் என் தகுதிக்கு நீங்க சரியானவர் தானா? என்று யோசிக்க ஆரம்பிச்சிட்டா நீங்க என்னை எதுவும் சொல்லக் கூடாது!'' என்று அவள் தோரணையுடன் சொல்ல,

''அபிராமி வேணுமானால் அப்படி நினைக்கலாம்! ஆனால் என் கண்ணம்மா, என் மேல கருணை காட்டுவா என்று எனக்கு நம்பிக்கை இருக்கு!'' என்று அவன் புன்னகையுடன் பதில் சொல்ல அபிராமியின் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

''குட் கேர்ள்! இப்படியே இரு... நீ ஒரு வாரமா உம்முன்னு இருக்கேன்னு அம்மா ரொம்ப கவலைப் படறாங்க பாரு!'' என்று சொல்லிவிட்டு அவன் கிளம்ப, வெளியே வந்த அபிராமியும், கற்பகத்துடன் எப்போதும் போல் கலகலப்பாக இருக்கத் துவங்கினாள்.

16

சக்தி இப்போதைக்கு திருமணம் வேண்டாம் என்று சொல்லியதில், கலக்கமடைந்திருந்த அபிராமியிடம், சக்தியின் பேச்சு நல்ல மாற்றத்தை உண்டு செய்திருந்தது. சக்தி தன் நல்லதற்குத்தான் சொல்கிறான் என்று புரிந்ததனால், அபிராமியும் ஈடுபாட்டுடன் எம்.காம் படிப்பில் சேர்ந்திருந்தாள்.

அத்தான் சொல்லியதைப் போலவே, தனது தயக்கத்தை எல்லாம் உதறி, அனைவரிடமும் சகஜமாக பழகத் துவங்கினாள்.

இந்த ஒரு வருடத்தில், சமூக அக்கறையும் பொறுப்பும் கொண்ட தன் அத்தானுக்கு ஏற்ற மனைவியாக இருக்க வேண்டும் என்றெண்ணி, கல்லூரியில் உள்ள மற்ற மாணவர்களோடு சேர்ந்து கொண்டு பல்வேறு சமூக சேவைகளில், தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தாள்.

முதலில், சக்திக்காக என்று செய்ய ஆரம்பித்திருந் தாலும், அதை செய்ய ஆரம்பித்த பிறகு கிடைத்த மன நிறைவு அவளை, அந்த வேலையை முழு ஈடுபாட்டு டனே செய்ய வைத்திருந்தது.

சக்தியும், தன்னைப் போலவே மக்கள் சேவையில் ஈடுபாடு கொண்ட பல நல்லிதயங்களின் துணையோடு ஏழைகளுக்கான தரமான இலவச மருத்துவமனை கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தான்.

மருத்துவமனை கட்டுவதற்காக, தன் தாத்தாவின் பெயரில் இருந்த நிலத்தை கொடுக்கலாம் என்று முடிவெடுத்த சக்தி தன் அன்னையிடமும், அபிராமியிட மும் அதைப் பற்றி பேசினான்.

கற்பகம், சந்தோஷமாக அனுமதி அளிக்க, அபிராமியோ, 'இதைப் பற்றி ஏன் என்னிடம் பேசுகிறான்?' என்ற பாவனையில் இருந்தாள்.

''இல்லை அபி... இது நம்ம தாத்தாவோடது... இதில உனக்கும் முழு உரிமை இருக்கு! சோ, உன்னுடைய ஒப்புதலும் ரொம்ப அவசியம்!'' என்று சக்தி எடுத்து சொல்ல,

''இதை எல்லாம் நீங்க என்கிட்டே சொல்ல வேண் டிய அவசியமே இல்லை அத்தான்... உங்க இஷ்டம்தான் என்னுடைய இஷ்டமும்!'' என்றதோடு அபிராமி முடித்து விட்டாள்.

ஒரு அறக்கட்டளை நியமிக்கப்பட்டு, முதல் பணியாக, அவர்களது நிலம், அறக்கட்டளைக்கு மருத்துவமனை கட்டுவதற்காக கொடுக்கப்பட்டது. மருத்துவமனை கட்டத் தேவையான பணத்தை சேர்க்கும் முயற்சியில், அறக்கட்டளையில் இருந்த மற்றவர்களோடு சக்தியும் ஈடுபட்டிருந்தான்.

இடை இடையே சக்தி மருத்துவ முகாம் செல்வதும் நடந்து கொண்டிருந்தது. பதினைந்து நாட்கள் மருத்துவ முகாம் சென்று நேற்றுதான் சக்தி வீடு திரும்பி இருந் தான். அந்த மாதிரி முகாம் சென்று வந்தால், அடுத்த நாள் முழுவதும் தன்னுடன் அவன் நேரம் செலவழிக்க வேண்டும் என்பது அபிராமியின் அன்பு கட்டளை!

அவனுக்குமே, அதில் விருப்பம்தான் என்பதால், அதை நிறைவேற்றுவதற்காக அவளுக்கு மிகவும் பிடித்த இடமான தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குக் கூட்டிச் சென்று விட்டு, வரும் வழியில் ஒரு பூங்காவில் அமர்ந்து இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

''ஹய்யோ! அங்கே பாருங்க அத்தான்! அந்த குழந்தை எவ்வளவு அழகா இருக்குன்னு.. எப்படி சிரிக்குது பாருங்களேன்!'' என்று தானும் ஒரு குழந்தையாய் மாறி, அங்கே விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை ரசித்துக் கொண்டிருந்த அபிராமியை, ரசனையுடன் நோக்கினான் சக்தி.

''குழந்தைன்னா உனக்கு ரொம்ப பிடிக்குமாடா?'' என்ற அவனது கேள்வியில், புருவம் சுருக்கி அவனை ஒரு மாதிரி பார்த்து, ''குழந்தைன்னா யாருக்குத்தான் பிடிக்காது?'' என்று எதிர்கேள்வி கேட்டு விட்டு, மீண் டும் அந்தக் குழந்தையின் புறம் பார்வையைத் திருப்பி னாள் அபிராமி.

''பெண் குழந்தை பிடிக்குமா? ஆண் குழந்தை பிடிக்குமா?'' என்ற அவனது அடுத்த கேள்வியில், நன்றாக அவன் புறம் திரும்பி அமர்ந்தவள்,

''இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம்னு சொல்லிட்டு, இப்போ இதென்ன கேள்வி?'' என்று கழுத்தை நொடிக்காத குறையாக சொல்ல, தலையைப் பின் தள்ளி, வாய் விட்டு சிரித்தான் சக்தி.

அவனது சிரிப்பு தன்னைக் கேலி செய்வதை உணர்ந்தாலும், அதை ஒதுக்கி, ''நம்ம கல்யாணத்துக்கு பின்னாடி, இந்த குடும்ப கட்டுப்பாடு பற்றி எல்லாம் கவலைப்படக் கூடாது... குறைஞ்சது நாலு குழந்தையாவது பெத்துக்கணும்!'' என்று சொல்லிக் கொண்டு போனவள்,

சக்தி புருவம் உயர்த்தி கேலியுடன் பார்ப்பதைக் கண்டவுன், ''சரி... மூணு!'' என்று மாற்றினாள்.

அவன் கண்களில் கேலி கூடியதே தவிர குறைவதாயில்லை.

''சரி.. அட்லீஸ்ட் ரெண்டாவது அத்தான்.. ஒரு பையன்... ஒரு பொண்ணு...'' என்று பேரம் பேசினாள்.

அவள் கைகளையும் தலையையும் ஆட்டி ஆட்டி பேசிய அழகை ரசித்தபடியே, அவளருகில் நெருங்கி அமர்ந்தவன், அவள் கையை எடுத்து தன் கையில் அடக்கியபடி, ''நான் ஒண்ணு சொல்லட்டுமா கண்ணம்மா?'' என்று வினவ, எப்போதும் போல அவனது 'கண்ணம்மா' என்ற அழைப்பில் மயங்கியவள் தன்னை மீறி, அவன் தோளில் தன் தலை சாய்த்து, ''சொல்லுங்க அத்தான்!'' என்றாள்.

''எனக்கும் ரெண்டு குழந்தைதான் வேணும்னு தோணுது.. ஆனால் ஒரு குழந்தைதான் நாம பெத்துக்கணும்! அது பெண்ணா இருந்தா ஒரு ஆண் குழந்தையை தத்து எடுத்துக்கணும், ஆணா பிறந்தால் ஒரு பெண் குழந்தையை தத்து எடுத்துக்கணும்!'' என்று சக்தி உணர்வுப் பூர்வமாக சொல்ல, மயக்கத்துடன் அவன் தோளில் சாய்ந்திருந்தவள், சட்டென்று நிமிர்ந்து அவனை அதிர்ச்சியுடன் நோக்கினாள்.

என்னதான் சமூக அக்கறை வளர்ந்திருந்தாலும், ஒரு குழந்தையை தத்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற தன் அத்தானின் ஆசையை அவளால் இயல்பாக ஏற்க முடியவில்லை.

அபிராமியைப் பொறுத்தவரை, இந்த உலகத்திலேயே உயர்வான மனிதன் என்றால் அது அவளது அத்தான் தான்! அதனால், அவர்களது குழந்தைகளும் அவனைப் போலவே இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு தீவிரமாகவே இருந்தது.

ஒருவேளை, அத்தான் தன்னை கேலி செய்கிறானோ என்றெண்ணி, அவனை கண்ணோடு நோக்கிய அபிராமிக்கு, அவனது கண்களில் கேலி இல்லாமல் உண்மையே இருந்தது புரிந்தது.

''வந்து.. அது எப்படி அத்தான்... என்ன இருந்தாலும் நம்ம குழந்தை மாதிரி வருமா? எனக்கு ரெண்டுமே உங்களை மாதிரியே வேணும் அத்தான்!'' என்று தட்டுத் தடுமாறி, தனக்கு அவன் சொல்லுவதில் சிறிதளவும் விருப்பமில்லை என்று சொல்லி முடித்தாள்.

''என்னை மாதிரின்னா... நீ என்ன மீன் பண்றே அபி.. என்னை மாதிரி உருவமா? இல்லை என்னுடைய குணமா?'' என்று சக்தி வினவ,

''ரெண்டும்தான்... முக்கியமா உங்களை மாதிரி குணம்!'' என்று அவள் அழுத்தத்துடன் சொன்னாள்.

''உருவம்... அதை நாம் முடிவு செய்ய முடியாதில்லையா அபி? ஆனால் குணம்... நாம வளர்க்கிற விதத்தில் தானே வரும்? அப்போ நாம வளர்க்கிற குழந்தைக்கும் நம் குணம் வருமில்லையாடா?'' என்று கனிவுடன் சொல்ல, அவன் சொல்வது புரிந்தாலும், அவளால் அதை ஏற்க முடியவில்லை.

''இங்கே பாருடா செல்லம்...'' என்றபடி குனிந்திருந்த அவளது முகத்தை நிமிர்த்தியவன், ''பெற்றோர் இல்லாத ஒரு குழந்தைக்கு, நம்மால் ஒரு குடும்பம் கொடுக்க முடிஞ்சா, அது எவ்வளவு நல்ல விஷயம்!'' என்று மென்மையாக தன் கருத்தை எடுத்துரைக்க முயன்றான்.

அந்த வார்த்தைகளில், சட்டென்று அபிராமிக்கு தன் சிறு வயதுப் பருவம் நினைவுக்கு வந்தது.

'அனாதையாக நின்ற தன்னை அத்தை அழைத்து வந்திராவிட்டால், தன் நிலைமை என்னவாகி இருக்கும்?' என்று யோசித்தவளுக்கு, சக்தியின் மேல் மரியாதைப் பெருகி, அது கண்ணீராய் வழிந்தது.

''ப்ச்... என்னம்மா இது?''என்று அவள் கண்ணீரைத் துடைத்து விட்டவன், ''உனக்கு பிடிக்காத எதையும் நான் செய்ய மாட்டேண்டா... என்னுடைய எல்லா செயல்களுக்கும் உன் ஒப்புதல் எனக்கு முக்கியம்! அதுவும் இந்த விஷயத்துக்கு உன்னோட ஒப்புதல்தான் ரொம்ப முக்கியம்... குழந்தை வளர்ப்புல தந்தையை விட தாய்க்குதாண்டா பெரிய பங்கு இருக்கு... இப்போ உனக்கு ஒத்துக்க முடியவில்லைன்னா பரவாயில்லை...

ஒரு நாள் உன் மனசு மாறும். அது வரைக்கும் நான் காத்திட்டு இருப்பேன்!'' என்றான்.

அவன் அவளுக்கு கொடுத்த முக்கியத்துவத்தில் நெகிழ்ந்து, பேச வார்த்தைகள் மறந்து நின்று கொண்டிருந்தவள், அவன் கவலையுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து, ''ஒருவேளை நமக்கு ட்வின்ஸ்... ஒரு பையன், ஒரு பொண்ணா பிறந்திட்டால், என்ன குழந்தை அத்தான் தத்து எடுக்கிறது?'' என்று அப்பாவியாய் விசாரித்தாள்.

அவள் கேள்வியில் இருந்தே அவளது சம்மதத்தை உணர்ந்து முக மலர்ச்சியுடன், ''ஒரு பொண்ணு.. ஒரு பையன் தத்து எடுத்துக்கலாமா? நீ நினைச்ச மாதிரியே நாலு குழந்தைகள்! எப்படி அய்யாவோட ஐடியா?'' என்று சொன்னவன், அவளை மெல்லத் தோளோடு அணைத்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.

சங்கோஜத்துடன் அவனிடம் இருந்து விலகி கொண்டு, ''அதெல்லாம் சரி, முதல்ல குழந்தை பிறக்கணும்னா, கல்யாணம் செஞ்சுக்கணும்! அது தெரியுமா... தெரியாதா... டாக்டருக்கு?'' என்று அபிராமி கேலியில் இறங்கினாள்.

''அப்படியா? எனக்கு அது தெரியாதே?'' என்று அளவுக்கு அதிகமாக வியந்து விட்டு, சக்தி ஏதோ சொல்ல வர, அவன் சொல்ல வந்தது புரிந்ததும் சட்டென்று அவன் வாயைப் பொத்தியவள், ''உதை வாங்கப் போறீங்க!'' என்று மிரட்டினாள்.

''ஹே! நான் சொல்ல வந்தது புரிஞ்சிடுச்சா? கண்ணம்மா! நீயும் வளர்ந்திட்டே போல இருக்கேடா!''

என்று அவளை வம்புக்கிழுத்து சிரித்தான் அவளுடைய சக்தி!

''போங்க அத்தான்!'' என்று சிணுங்கினாலும், அவனோடு தானும் சிரிப்பில் இணைந்தவளின் பார்வை சிரித்துக் கொண்டிருந்த சக்தியின் கன்னக் குழியில் பதிந்தது.

'இவனுக்கு மட்டும் எவ்வளவு அழகா குழி விழுது?'

அந்தக் கன்னக்குழியில் முத்தமிடத் துடித்த மனதை அடக்கிக் கொண்டு, அமர்ந்திருந்த அபிராமியைப் பார்த்த சக்தி, என்னவென்று புருவம் உயர்த்தி கேட்க, 'ஒண்ணுமில்லை!' என்று தலை அசைத்தாள் அவள்.

''இவ்வளவு நேரம் என்னையே உத்துப் பார்த்திட்டு இருந்தியே, என்ன விஷயம்?'' என்று அவன் துருவ, சொல்லாவிட்டால் விட மாட்டான் என்று எண்ணிய அபிராமி,

''இல்லை அத்தான்... நீங்க சிரிக்கும்போது உங்க கன்னத்தில் அழகா குழி விழுது இல்லை... அதை.. அதைத்தான் பார்த்திட்டு இருந்தேன்'' என்று ஒரு வழியாக சொல்லி முடித்தாள்.

''ரொம்ப அழகா தான் இருக்கு இல்லை? அப்படியே முத்தம் வைக்கணும் போலத் தோணிருக்குமே?'' என்று சக்தி கண்சிமிட்டி குறும்புடன் வினவ,

தன் மனதில் தோன்றிய எண்ணத்தை அவன் சொன்னதும் ஒரு கணம் திகைத்து விழித்த அபிராமி, சமாளித்துக் கொண்டு, ''ஹய்யோ! ரொம்ப தான் நினைப்பு!'' என்று உதட்டைச் சுழித்து பழிப்பு காட்டினாள்.

''அதானே பார்த்தேன்... உனக்கேன் அந்த மாதிரி எண்ணம் எல்லாம் வரப் போகுது?'' என்று போலியாக

சலித்துக் கொண்டவனின் பார்வை அவள் உதட்டில் பதிந்தது.

''ஆனா எனக்கு அப்படி இல்லைப்பா... நீ உதட்டை இப்படி சுழிக்கும் போது, அதில் முத்தம் கொடுக்க ணும்னுதான் தோணுது!'' என்றபடி அவளை நெருங்கியவன், அவளது மருண்ட விழிகளைப் பொருட்படுத்தாது, அவளது இதழ்களில் தன் இதழ்களால் ஒரு நீண்ட கவிதையை அரங்கேற்றினான்.

அவனது அந்த இதழ் ஸ்பரிசத்தில் முதலல திகைத்தாலும், அவனது முத்தம் தந்த சுகத்தில் அவளும் தன்னை மறந்து ஆழ்ந்து போனாள்.

''அபி... என்ன ஆச்சு?'' என்று கேட்டபடி, அபிராமியின் புறம் திரும்பிய சக்தி, கண்களில் கனவு மிதக்க, ஒரு மந்தகாச புன்னகையுடன் அமர்ந்திருந்தவளை ஆச்சரியத்துடன் பார்த்து, ''அபி...'' என்று அழைத்தான்.

அவன் இரு முறை அழைத்தும், அவளது மோன நிலை கலையாமல் இருக்கவே, ''அபி.. அபி.. ஹே... என்ன ஆச்சு? ஏதோ கனவில இருக்கிற மாதிரி உட்கார்ந்திருக்கே? என்னடா?'' என்று சக்தி அபிராமியின் தோளைப் பற்றி உலுக்க, இனிய கனவில் இருந்து உலுக்கி எழுப்பப் பட்டவளைப் போல திகைத்து விழித்தாள் அவள்.

'ச்சே... இப்படி உட்கார்ந்துகிட்டே கனவு கண்டுட்டு இருக்கேனே... ரொம்பதான் முத்திடுச்சு!'' என்று மனதில் நினைத்தவள், 'ஹய்யோ... இப்போ இவன் என்னனு கேட்டா என்ன பதில் சொல்றது?' என்று விழித்தாள். சற்று முன்னர் தோன்றிய கற்பனை வேறு, அவளது கன்னங்களில் செம்மையைப் பூசி இருந்தது.

அவளது சிவந்த கன்னங்களை ரசனையுடன் பார்த்த சக்தி, ''என்ன கண்ணம்மா? என்ன யோசிச்சிட்டு இருந்தே?'' என்று மென்மையாக வினவ, ''ஒண்ணு மில்லை!'' என்று அவசரமாக பதில் அளித்தாள் அவள்.

''நீ அவசரமா ஒண்ணுமில்லைன்னு சொல்லும் போதே, ஏதோ பெரிசா இருக்குன்னு தோணுதே!'' என்று இழுத்தவனின் பார்வையில் சுவாரசியம் கூடி இருந்தது.

அவசரமாக எழுந்தவள், ''டைம் ஆச்சு... வீட்டுக்கு போய் படிக்கணும்!'' என்று சொல்ல,

''ஹே... நேற்றுதானே உனக்கு எக்ஸாம்ஸ் முடிஞ்சுது. இன்னும் ரெண்டு மாசத்துக்கு லீவுதானே?'' என்று வியப்புடன் விசாரித்தவனின் குரலில் இழையோடிய சிரிப்பு அவளை கேலி செய்தது.

'கடவுளே!' என்று தலையில் கை வைத்தவள், இன்னும் கொஞ்ச நேரம் இங்கே நின்று கொண்டிருந்தால், இன்னும் எதையாவது உளறி வைப்போம் என்று எண்ணி, ''வந்து.. வாங்க அத்தான்.. அத்தை தேடுவாங்க!'' என்று என்று வாய்க்கு வந்ததை சொல்லி விட்டு, நடக்க ஆரம்பிக்க, ஒரு உல்லாச சிரிப்புடன் அவளைத் தொடர்ந்தான் அவளது அத்தான்.

17

மருத்துவமனையில் இருந்து கொஞ்சம் சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்த சக்தி, கண்களில் கவலையுடன் வாயிலில் நின்று கொண்டிருந்த கற்பகத்திடம்,

''என்னம்மா? ஏன் வாசலில் நின்னுட்டு இருக்கீங்க?'' என்ற விசாரித்தான்.

''அபி கோவிலுக்கு விளக்கு போடறேன்னு சொல்லிட்டு போனாள்... இன்னும் வரலை!'' என்று அவர் கவலையுடன் சொல்ல,

''என்னம்மா இது பக்கத்தில இருக்கிற கோயிலுக்குத் தானே போய் இருக்கா? வந்துடுவாள்... நீங்க இன்னமும் குழந்தை மாதிரி ட்ரீட் பண்ணாதீங்க!'' என்று வழக்கம் போல் சொன்னவன்,

''இல்லை சக்தி... அவ போய் ரெண்டு மணி நேரம் ஆகுது... அதான் கவலையா இருக்கு!'' என்று கற்பகம் சொன்னதில், தானும் பதட்டப்பட்டான்.

''ரெண்டு மணி நேரம் ஆகுதா? வேற எங்கேயாவது போகணும் என்று சொன்னாளா?''

''இல்லை... நீ போய் பார்த்திட்டு வரீயா சக்தி?'' என்று கற்பகம் கேட்கும் முன்னரே, சக்தி கேட்டை திறந்து கொண்டு வெளியே சென்றிருந்தான்.

'ஏழு மணி வரைக்கும் இவள் கோயில்ல என்ன பண்ணிட்டு இருக்கா? விட்டால் சாமியார் ஆயிடுவாள் போலிருக்கு!' என்று மனதுக்குள் அவளைத் திட்டிய படியே வந்தவனின் எதிரே அபிராமி நடந்து வருவது தெரிந்தது.

'ஹப்பாடி!' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி, அதே இடத்தில் நின்று விட்ட சக்திக்கு, அபிராமியின் நடையில் இருந்த தடுமாற்றம் கண்ணில் தென்பட்டது.

'என்ன ஆச்சு?' என்று யோசித்தபடியே வேகமாக அவளை நோக்கி சென்றவன், மயங்கி சரிய இருந்தவளை கீழே விழாமல் தாங்கி நிறுத்தினான்.

அபிராமியின் முழு கனமும் தன் மேல் ஏறியதை உணர்ந்த சக்திக்கு, அவள் மயக்கம் அடைந்து விட்டாள் என்பது புரிந்தது.

தெரு என்றும் பாராமல் அவளை மடியில் ஏந்திக் கொண்டு தரையில் அமர்ந்தவன், ''அபி.. அபி...'' என்று அவள் கன்னத்தைத் தட்டி உணர்வூட்ட முயன்றான்.

அதற்குள், அபிராமியின் பின்னால் வந்து கொண்டிருந்த பெண்மணி, ''அச்சோ! மயக்கம் போட்டிருச்சா தம்பி.. கோயில் பிரகாரத்தை நூத்தியெட்டு சுத்து சுத்திட்டு இருந்தது, அப்பவே ஒரு மாதிரிதான் இருந்தது!'' என்று சொல்ல, அதற்கு மேல் தாமதிக்காமல், அவளைக் கையில் ஏந்திக் கொண்டு வீட்டுக்கு வந்தவன், அவளைப் படுக்கையில் படுக்க வைத்து மயக்கத்தில் இருந்து எழுப்புவதற்கான முதலுதவியைச் செய்ய ஆரம்பித்தான்.

சக்தி, அபிராமியை தூக்கி வருவதைப் பதட்டத்துடன் பார்த்துக் கொண்டிருந்த கற்பகம், பின்னோடு வந்து ''என்ன சக்தி, என்ன ஆச்சு?'' என்று பதட்டத்துடன் விசாரிக்க,

''ம்ம்ம்... மேடம் கோயில் பிரகாரத்தை நூத்தியெட்டு சுத்து சுத்தின களைப்பில மயங்கிட்டாங்க!'' என்று கொஞ்சம் எரிச்சலுடன் சக்தி மொழிந்த சக்தி.

''கொஞ்சம் ஜூஸ் போட்டு எடுத்துட்டு வாங்கம்மா!'' என்றவுடன், ''ஹய்யோ! நாள் முழுக்க விரதம் இருந்துட்டு, நூத்தியெட்டு சுத்து சுத்தி இருக்காளா?'' என்று கற்பகம் மலைக்க, அதைக் கேட்ட சக்திக்கு கோபம் தலைக்கேறியது.

அவன் கோபத்துடன் ஏதோ கேட்கும் முன்னர், அபிராமி மெதுவாக கண்களை மலர்த்தவே, சக்தியின் கவனம் அவளிடம் திரும்பியது.

நாள் முழுதும் விரதம் இருந்தவள் கோயிலில் இருந்து வந்து குடிக்கட்டும் என்று ஏற்கனவே கற்பகம் பழச்சாறு வைத்திருந்தார்.

அவசரமாக சென்று அதை எடுத்துக் கொண்டு கற்பகம் வர, படுக்கையில் இருந்து மெல்ல அவளை எழுப்பி தன் தோளில் சாய்த்துக் கொண்டு, அவளுக்கு பழச்சாறைப் புகட்டினான் சக்தி.

படுக்கையின் தலைப்பக்கம் மூன்று தலையணைகளை வைத்து அவளை அமருமாறு பணித்தவன், ''எதுக்கு முழுநாளும் சாப்பிடாமல் இருந்தே? அப்படி இருந்திட்டு கோயில் பிரகாரத்தை வேற நூற்றி எட்டு சுத்து சுத்தி இருக்கே! அறிவே இல்லையா உனக்கு?'' என்று கோபத்துடன் வினவ, அபிராமி தலை குனிந்தபடி அமைதியாக இருந்தாள்.

கோபத்துடன் அன்னையிடம் திரும்பியவன், ''என்னம்மா இது? நீங்களாவது சொல்லக் கூடாதா?'' என்று வினவ,

''எனக்கே தெரியாது கண்ணா! இன்னைக்கு காலையில தான் விரதம் இருக்க போறேன்னு சொன்னாள்... உனக்கு அடி பட்டிருக்கும்போது வேண்டிகிட்டாளாம்! சாமி விஷயம் எதுவும் சொல்லக் கூடாதுன்னு விட்டுட்டேன்.. ஆனால் கோயிலுக்கு விளக்கு போடத்தான் போய் இருக்காள்னு நினைச்சேன்!'' என்று கற்பகம் சொன்னதும், அபிராமியின் புறம் திரும்பிய சக்திக்கு, அவள் திருதிருவென விழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், சிரிப்பு வந்து விட்டது.

வந்த சிரிப்பை அடக்கி கொண்டு, ''உன்னை இப்படி வருத்திக்கிட்டுத்தான் உன் பக்தியையும், என் மேல்

அன்பையும் காண்பிக்கணுமா?'' என்று அதட்ட, ''இல்லை அத்தான், அது வந்து..'' என்று அபிராமி வார்த்தைகளுக்கு தடுமாறிக் கொண்டிருக்க,

''ரொம்ப அதட்டாதே சக்தி.. பாவம் குழந்தை!'' என்று கற்பகம் பரிந்து கொண்டு வந்தார்.

''ஆமாம் குழந்தை செஞ்ச வேலையை பார்த்தீங்க இல்லை? நடு ரோட்டில மயங்கி விழ இருந்தாங்க... நான் மட்டும் சரியான டைம்க்கு போகலைன்னா...'' என்று எரிச்சலுடன் சக்தி சொல்ல,

சக்தி சொன்னதில் இருந்த நியாயம் புரிந்து, அதற்கு மேல் எதுவும் சொல்லாமல், ''சரி... காலையில இருந்து குழந்தை எதுவும் சாப்பிடலை... நான் போய் சீக்கிரம் டிபன் செஞ்சு எடுத்துட்டு வரேன்...'' என்றபடி கற்பகம் அங்கிருந்து நகர்ந்தார்.

அவர் சென்றதும், ''ஏன்டா இப்படி பண்றே?'' என்று ஆதங்கத்துடன் கேட்ட சக்தி, ''நீ மயங்கி விழுந்ததும் நான் எவ்வளவு பதறிப் போயிட்டேன் தெரியுமா?'' என்றான்.

அவனது பட்டத்தைப் பற்றி சொன்னதும் இருபது நாட்களுக்கு முன்னர் சக்தி காலில் பெரிய கட்டோடு வீட்டுக்கு வந்த போது தான் பதறியது அபிராமிக்கு ஞாபகம் வந்தது.

''அபி, எதுக்கு இவ்வளவு பதட்டம்? கட்டுதான் பெரிசு! பெரிசா அடி ஒண்ணும் இல்லை!'' என்று அவன் தேறுதல் சொன்ன போதும், அவளால் கண்ணீரை அடக்க முடியவில்லை.

''எப்படி அத்தான் ஆச்சு? நீங்க வேகமா கூட வண்டி ஓட்ட மாட்டீங்களே?'' என்று அழுகையின் ஊடே

கேட்டவளிடம், ''முதல்ல அழுகையை நிறுத்து... அப்புறம் சொல்றேன்!'' என்றவன் அவள் கண்ணீரை நிறுத்தியதும்தான் விஷயத்தை சொன்னான்.

''இல்லைடா... நடு ரோட்டில திடீர்னு ஒரு குட்டிப் பையன் குறுக்கில வந்துட்டான்... அவன் மேல ஏற்றி விடக் கூடாதேன்னு வண்டியை வளைச்சு திருப்பும் போது பேலன்ஸ் தவறிடுச்சு!'' என்றவன், அவள் கண்களில் மீண்டும் கண்ணீரைக் கண்டதும்,

''சொல்றேன் இல்லை... பெரிசா அடி இல்லைன்னு! அப்புறம் என்னடா?'' என்று தேற்றினாலும், ஒரு வாரம் நடக்கவே அவன் சிரமப்பட்ட போது, எப்போதும் கம்பீர நடையுடன் இருக்கும் தன் அத்தானின் அந்த சின்ன சிரமத்தைக் கூட, அவளால் தாங்க முடியவில்லை.

அவன் சீக்கிரமே நன்றாக நடக்க வேண்டும் என்று அவள் செய்த பிரார்த்தனைக்குத்தான் இன்று அவனிடம் வாங்கி கட்டிக் கொண்டிருக்கிறாள்.

''ஹே! கேட்டதுக்கு பதில் சொல்லாமல் என்ன யோசிச்சிட்டு இருக்கே?'' என்ற சக்தியின் அதட்டலில் நடப்புக்கு வந்தவளுக்கு, அவன் கண்களில் இருந்த பதட்டத்தைப் பார்த்ததும், வம்பிழுக்கத் தோன்றியது.

''நீங்க கூடவா? பெரிய டாக்டர்! மயக்கம் போட்டதுக்கு போய் பயந்து போயிட்டீங்களா?'' என்ற அபிராமியின் குரலில் ஆச்சரியத்தோடு கேலியும் கலந்திருந்தது.

''எப்பவும் டாக்டர் என்ற நிலையில் இருக்க முடியாது கண்ணம்மா! நமக்கு வேண்டியவங்களுக்கு என்று வரும்போது, மனசுதான் முதலில் வேலை செய்யும்!'' என்று சக்தி சொன்னவுடன்,

அவனைப் பெருமையாக பார்த்தவளிடம், ''இப்படி ஒரு பார்வை பார்த்திடு, அப்பப்போ!'' என்று போலியாக சலித்துக் கொண்டான்.

''இனிமேல் இப்படி எல்லாம் செய்யாதே அபி... ப்ளீஸ்!'' என்று மீண்டும் ஒரு முறை கொஞ்சம் கண்டிப்புடன் சொல்லி விட்டு, ''கால் வலிக்குதாடா?'' என்று உருகியவன்,

மென்மையாக அவளது கால்களை பிடித்து விட, ''அச்சோ! என்ன அத்தான் இது?'' என்று பதறியபடி விலக முயன்றாள்.

''ப்ச்... சும்மா இரு!'' என்று அவளை அதட்டியபடி தன் வேலையைத் தொடர்ந்தவன், ''இப்போ நான் என்ன செய்யறேன்னு இப்படி பதறி போறே? ரெண்டு வருஷமா லவ் பண்றோம்... ஒரே வீட்டில் இருக்கோம்னு பேரு! ஒரு சின்ன ரொமான்ஸ் கூட கிடையாது... பக்கத்தில் வந்தாலே, என்னமோ நான் உன்னை கடிச்சு முழுங்கிடற மாதிரி நீதான் ஓடி போயிடுவியே! என்னை பார்த்தால் உனக்கு என்ன வில்லன் மாதிரியா இருக்கு?'' என்று சக்தி சலித்துக் கொள்ள, அபிராமியின் முகம் வெட்கத்தில் சிவந்தது.

அபிராமி அவனிடம் இருந்து விலகிப் போவதற்கு காரணம் அவள் மட்டுமே அறிந்த ஒன்று! அவன் அருகில் வந்தாலே, மனமும் உடலும் தன் வசம் இழப்பதை உணர்ந்துதானே அவள் விலகிப் போகிறாள்!

இதோ, இவ்வளவு சலித்துக் கொள்ளும் சக்தி கூட, அவள் மனம் அறிந்தே அவளை அதிகம் சீண்டுவதில்லையோ என்ற சந்தேகம் அபிராமிக்கு எப்போதுமே உண்டு!

அவளது முகச் சிவப்பைக் கண்டு ரசித்தவாறே, அவள் பாதத்தை வருடியபடி, ''கொலுசு அறுந்து போச்சுன்னு சொல்லிட்டு இருந்தியேடா! புதுசா வாங்கிட்டு வந்திருக்கேன்!'' என்று சொல்லி, தான் வாங்கி வந்திருந்த கொலுசை அவளிடம் காட்டினான்.

''உன்னை கூட்டிட்டு போய் வாங்கணும்னுதான் முதலில் நினைச்சேன்... அப்புறம் சர்ப்ரைசா இருக்கட்டுமேன்னு நானே வாங்கிட்டு வந்துட்டேன்!'' என்றவன்,

''உனக்கு பிடிச்சிருக்கா அபி?'' என்று ஆர்வத்துடன் வினவ,

''ரொம்ப நல்லா இருக்கு அத்தான்... நானே இந்த முறை இந்த மாடலில் தான் வாங்கணும் என்று நினைச்சிருந்தேன்!'' என்று முகம் மலர்ந்து அபிராமி தன் சந்தோஷத்தை வெளியிட,

''ஹப்பாடா! பரவாயில்லை... உன் மனசுக்குள்ள இருக்கிறது எல்லாம் எனக்கும் தெரியுது!'' என்று சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டான்.

''ம்க்கும்... எல்லாம் தெரியுது! ஒண்ணு மட்டும் புரிஞ்சாலும், புரியாத மாதிரி இருக்கு!'' என்று அபிராமி குறையுடன் சொல்ல,

வாய் விட்டு சிரித்த சக்தி, அபிராமியின் முகம் வாடுவதைக் கண்டு ''புரியுதுடா கண்ணம்மா... அடுத்த வாரம் மலை வாழ் மக்களுக்காக ஒரு மெடிக்கல் கேம்ப் போக போறோம்... அதுக்கு போயிட்டு வந்த உடனே கல்யாணம்தான்... அதுக்குள்ளே உனக்கும் எக்ஸாம்ஸ் முடிஞ்சிடும்!'' என்று அவளை சமாதானப்படுத்த முயன்றான்.

அவனது முதல் வாக்கியத்தில் வாடிய அபிராமியின் முகம், அடுத்த வாக்கியத்தில் மலர்ந்து, அதற்கடுத்து அவன் சொன்னதில் குழப்பமுற்றது.

''எத்தனை நாள் கேம்ப் அத்தான்?'' மனதில் கொஞ்சம் பயத்துடன் கேட்டவள், ''ரெண்டு மாசம்டா!'' என்ற அவனது பதிலில் திகைத்து போனாள்.

''ரெண்டு மா...சமா?'' என்று அதிர்ச்சியுடன் வினவியவளுக்கு, ''ஜஸ்ட் ரெண்டு மாசம்தான்!'' என்ற சக்தியின் புன்னகையுடன் கூடிய பதில் எரிச்சலைத் தந்தது.

''போங்க அத்தான்.. ரெண்டு மாசம் உங்களுக்கு குறைச்சலா தெரியுதா?'' என்றவளுக்கு கண்கள் கலங்கி விட்டது.

''ஹே... கண்ணம்மா என்னடா இது?'' என்றபடி அவளருகில் வந்து அமர்ந்தவன்,

''ப்ளீஸ் அத்தான்... ரெண்டு மாசம் எல்லாம் என்னால உங்களை பார்க்காமல் இருக்க முடியாது!'' என்று சிறு குழந்தையின் ஏக்கத்தோடு கூறியவளின் கரங்களைக் கனிவுடன் பற்றிக் கொண்டவன் மென்மையாக பேசத் தொங்கினான்.

''இந்த கேம்ப் ரொம்ப நாளா தள்ளிப் போயிட்டு இருக்குடா! டெல்லியில இருக்கிற என்னோட ஒரு டாக்டர் நண்பன் வட மாநிலங்களில் உள்ள மலை வாழ் மக்களுக்காக ஏற்பாடு செய்திருக்கிற மெடிக்கல் கேம்ப் இது! அவன் ரொம்ப நாளா கேட்டுட்டு இருக்கான்... இப்போதான் இங்கே இருக்கிற மற்ற நண்பர்களோட ஒப்புதலும் கிடைச்சிருக்கு... அடிப்படை மருத்துவ வசதி

கூட இல்லாதவங்களுக்கு நம்மால் உதவ முடியும்னா அதை செய்யாமல் இருக்கலாமா? நீயே சொல்லு! இன்னும் ரெண்டு மூணு மாசத்தில, நம்ம மருத்துவ மனை கட்ட அடிக்கல் நாட்ட போறோம்... அதுக்கப்புறம் இது மாதிரி கேம்ப் போக அவ்வளவு நேரம் வாய்க்காதுடா!''

சக்தியின் பேச்சு புரிந்தாலும், அபிராமிக்கு முழுமை யாக அதை ஏற்க முடியவில்லை.

''என் செல்லக் குட்டி இல்லை?'' என்று அவளது முகத்தை நிமிர்த்தியவன், ''நான்தான் இங்கே இருக்கிற வங்களை சம்மதிக்க வைச்சிருக்கேன்... இப்போ நானே போகலைன்னா நல்லா இருக்குமா சொல்லு?'' என்று அவன் சொன்னதும்,

''ம்க்கும்! எல்லாத்துக்கும் உன் ஒப்புதல் அவசியம் என்று சொல்லிட்டு, இப்போ உங்க இஷ்டத்துக்கு நடந்தா என்ன அர்த்தம்?'' என்று கோபமாக கேட்ட வளைப் பார்த்து நகைத்தவாறே,

''ஏய்! இது நியாயமே இல்லை! மெடிக்கல் கேம்ப் போகலாம், போயிட்டு வந்த அடுத்த நாள் முழுக்க உன் கூட ஸ்பெண்ட் பண்ணனும் என்று தான் நமக்குள்ளே ஒப்பந்தம்! அதைப் போட்டவளே இப்படி பேசலாமா?'' என்று அவன் கேலியுடன் திருப்ப,

''அது... ஒரு வாரம், பத்து நாள் என்றால் பரவா யில்லை! இப்போ ஒரேயடியா ரெண்டு மாசம் என்று சொல்றீங்களே!'' என்றவளின் குரலில் இருந்த ஏக்கம், அவள் தன் மேல் வைத்திருக்கும் அன்பினால் அல் லவோ? என்றெண்ணிய சக்திக்கு உள்ளம் நெகிழ்ந்தது.

''இந்த கேம்ப் போயிட்டு வந்தவுடனே நமக்கு கல் யாணம் என்று சொன்னேனேடா! உனக்கும் எக்ஸாம்ஸ்

இருக்கு இல்லை? நேரம் ஓடிப் போயிடும் கண்ணம்மா!'' என்று அவளைத் தேற்றியவனின் தோளில் அவள் ஒன்றும் பேசாமல் சாய்ந்து கொள்ள, அவனும் அவளது கரங்களை வருடியபடி அமைதியாக இருந்தான்.

உணவைத் தயார் செய்து விட்டு அவர்களை உணவருந்த அழைக்க வந்த கற்பகத்தின் கண்களில், அவர்கள் அமர்ந்திருந்த விதம் பட, ஓசை எழுப்பாமல் திரும்ப சென்றார் அவர்.

சிறிது நேரத்தில், தங்கள் மோன நிலையில் இருந்து கலைந்து சக்தியும் அபிராமியும் உணவருந்த சென்றார்கள்.

முகாம் பற்றி அன்னையிடம் ஏற்கனவே சொல்லி இருந்தான். அவருக்குமே அவனைப் பிரிந்து இரண்டு மாதம் இருப்பது கடினம்தான் என்றாலும், மகனுக்கு மக்கள் சேவையில் இருக்கும் ஆர்வம் அவருக்கு எப்போதுமே பெருமைதான் என்பதால், கற்பகம் ஒன்றும் சொல்லவில்லை.

உணவருந்தி முடித்தவுடன், ''அத்தான் நீங்க எப்போ கிளம்பணும்?'' என்ற அபிராமியின் கேள்விக்கு, ''வர திங்கள் கிழமை அபி!'' என்று சக்தி பதில் சொல்ல,

''அப்போ... என்னை இந்த சன்டே பெரிய கோவில் கூட்டிட்டு போறீங்களா? ப்ளீஸ்!''

அபிராமி வேண்டுகோள் விடுக்க, ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்த சக்தி, ''எப்பவும் கேம்ப் முடிஞ்ச வந்தவுடந்தானே அங்கே கூட்டிட்டு போக சொல்லுவே? என்ன இப்போ கேம்புக்கு முன்னாடியே?'' என்று வினவியவன் சட்டென்று,

''ஹய்யோ! பெரிய கோவிலை நூத்தி எட்டு சுத்து சுத்தணும் என்று ஏதாவது வேண்டுதல் வைச்சிருக்கியா அபி?'' என்று பயந்தவன் போலக் கேட்க,

''போங்க அத்தான்! எப்ப பாரு என்னை கிண்டல் செஞ்சுகிட்டே இருப்பீங்க!'' என்று அவள் சிணுங்கியதை ரசித்தவாறே, ஒப்புதல் சொன்னவன், ஞாயிறு அவளை பெரிய கோயிலுக்கு அழைத்து சென்றான்.

* * *

பத்து நூற்றாண்டுகளுக்கு முன், சோழர்களின் பொற்காலத்தில் கட்டடப்பட்டு, இன்றளவும் கம்பீரம் குறையாமல், இந்து சமயக் கோயிலாக மட்டுமல்லாமல், உலகப் பாரம்பரியச் சின்னமாகவும் விளங்கும் தஞ்சை பெரிய கோவிலின் பிரம்மாண்டத்தையும் கம்பீரத்தையும், எத்தனை முறை வந்தாலும், அபிராமி வியக்காமல் இருந்ததில்லை.

அவள் கோவிலை ரசித்து வியந்தபடி வரும்போது, தன் மனம் கவர்ந்தவளை ரசித்தபடி வருவது சக்தியின் வழக்கம்.

''பொன்னியின் செல்வன் ஹீரோ அருள்மொழி வர்மர் கட்டின கோயில்தானே இது?''

''எவ்வளவு பெரிய விமானம்! எத்தனை அடி அத்தான்?''

கர்ப்ப கிரகத்தில் இருந்து கிட்டத்தட்ட 190 அடி வளர்ந்திருந்த விமானத்தை அண்ணாந்து பார்த்தபடி வினவுவாள்.

''எப்படி அத்தான், இவ்வளவு பெரிய நந்தியை ஒரே கல்லில் செதுக்கினாங்க?''

எத்தனை முறை வந்தாலும் வியப்பதோடு, அவனைக் கேள்வி கணைகளால் துளைத்து எடுத்து விடுவாள் அபிராமி.

கேட்ட கேள்விகளேதான்... சொன்ன பதில்களேதான் என்றாலும், சக்தியும் அவளது கேள்விகளுக்கு பதில் சொல்ல சலிக்க மாட்டான்.

ஆனால், அந்த கேள்விகள் ஒன்றும் இல்லாமல், இன்று அமைதியாக தன் கரத்தைப் பற்றிக் கொண்டு வந்தவளை, யோசனையுடன் நோக்கியவன்,

''என்னடா கண்ணம்மா? உன் ரெகுலர் கேள்விகள் எதுவுமே வரலை!'' என்றான்.

''ப்ச்... இன்னைக்கு எனக்கு மூடே இல்லை! நாளைக்கு நீங்க ஊருக்கு கிளம்பறீங்க என்பதில்தான் என் மனசு முழுக்க இருக்கு!'' என்று மெல்லிய குரலில் சொன்னவளின் கரத்தை மேலும் இறுகப் பற்றிக் கொண்டவனும், அதற்கு மேல் எதுவும் பேசாமல், மனதிற்கினியவளின் அருகாமையை ரசித்தபடி அமைதியாக இருந்தான்.

சக்தி ஊருக்கு கிளம்பும் நேரமும் வந்தது.

அன்று காலையில் இருந்து தன் அறையிலேயே அபிராமி அடைந்து கிடக்க, அவள் முக வாட்டத்தைப் பொறுக்க முடியாத கற்பகம், மகனிடம் வந்தார்.

''சக்தி! காலையில் இருந்து குழந்தை சரியா சாப்பிடலை... அவள் ரூமுக்குள்ளேயே இருக்காள்... நீ கிளம்பறதுக்கு முன்னாடி கொஞ்சம் ஆறுதலா பேசிட்டு கிளம்பு! நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்!'' என்று சொல்லி விட்டு கிளம்பினார்.

அபிராமியின் மனநிலையை நன்கு அறிந்திருந்த சக்திக்கும், கிளம்புவதற்கு முன் அவளிடம் தனிமையில் பேச வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

அதற்கு வாய்ப்பு கொடுத்து விட்டு சென்ற அன்னைக்கு மனதுக்குள் நன்றி சொன்னவன், அபிராமியின் அறைக்கு செல்ல எத்தனித்த போது, அபிராமியே முக வாட்டத்துடன் அறை வாயிலில் நின்று கொண்டிருந்தாள்.

அவள் அருகில் வந்த சக்தி, ''நான் கிளம்பற அன்னைக்கு நீ இப்படி உம்முன்னு இருந்தா எனக்கு கஷ்டமா இருக்காதாடா கண்ணம்மா?'' என்றான்.

''உங்களை யாரு போக சொன்னாங்களாம்? அதுவும் ரெண்டு மாசம்!'' என்று சொல்லும்போதே, அபிராமிக்கு கண்களில் நீர் நிறைந்தது.

''ப்ச்... என்னடா இது? சின்ன குழந்தை மாதிரி! நான்தான் சொல்ல வேண்டியது எல்லாம் சொல்லிட்டேனே! நீயும் தானே ஒத்துகிட்டே? இப்போ இப்படி சொன்னா எப்படி?'' என்று சின்ன கண்டிப்புடன் சக்தி வினவ, அவன் சொன்னதில் இருந்த நியாயம் அபிராமிக்குமே புரிந்துதான் இருந்தது.

அவன் இன்று கிளம்புகிறான், இன்னும் இரண்டு மாதத்துக்கு அவனைப் பார்க்க முடியாது என்ற எண்ணம், அவன் பேச்சில் இருந்த நியாயத்தைப் பின்னுக்குத் தள்ளி, வாட்டத்தை வரவழைத்திருந்தது.

அவளது வாடிய முகம் மனதை வருத்த, அவளை அழைத்து வந்து கட்டிலில் அமர்த்தியவன், தானும் அருகில் அமர்ந்து, ''அபி என் செல்லக் குட்டி இல்லை? அத்தான் புறப்படுற போது இப்படி இருக்கக் கூடாது! சிரிச்சிக்கிட்டே வழி அனுப்பணும்! ரெண்டு மாசம்தானே கண்ணம்மா, சொடக்கு போடறதுக்குள்ளே ஓடிடும். நான் வந்தவுடனே டும்டும்தான் சரியா?'' என்று அவளது

முகத்தைப் பிடித்து கொஞ்சவும், அபிராமி புன்னகைக்க முயன்றாள்.

''குட் கேர்ள்!'' என்று சொன்னவன், ''இதே சிரிப் போட, அத்தானுக்கு ரெண்டு மாசத்துக்கு தாங்குகிற மாதிரி ஏதாவது கொடு பார்க்கலாம்!'' என்று குறும்புடன் தன் முகத்தை அவளருகில் கொண்டு சென்றான்.

எப்போதும் போல வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொள்வாள் என்று சக்தி எதிர்பார்த்திருக்க, அதற்கு மாறாக அவனது தோளில் சாய்ந்த அபி, ''உங்களுக்கு வேண்டியதை நீங்களே எடுத்துக்கோங்க!'' என்று மெல்லிய குரலில் சொன்னதும், அவனுக்கு ஆச்சரிய மாகிப் போனது.

"ஹே! என்ன சொல்றேன்னு தெரிஞ்சுதான் சொல்றீயா? அப்புறம் பேச்சு மாறக் கூடாது!'' என்று அவன் கேலி யுடன் விசாரிக்க, ''ம்ம்ம்...'' என்ற அவளது முனகலே விடையாகக் கிடைத்தது.

''இன்னைக்கு உனக்கு அதிர்ஷ்டம்தாண்டா சக்தி!'' என்று தனக்குத்தானே வாய் விட்டு சொல்லிக் கொண்ட சக்தி, அவளது முகத்தை தன் கைகளில் ஏந்திக் கொண்டு அவளது நெற்றியில் மென்மையாகத் தன் இதழ்களைப் பதித்து, அவளது கன்னங்களிலும் தன் அழுத்தமான முத்திரையைப் பதிக்க, மனம் கவர்ந்த தன் அத்தானின் அந்த முதல் முத்தத்தில் தன்னை மறந்து, விழி மூடி நின்றாள் அபிராமி.

கன்னத்தில் முத்தமிட்டு விட்டு விலகி விடலாம் என்றுதான் சக்தி முதலில் எண்ணி இருந்தான். ஆனால், அப்படி விலக முயன்றவனை, வெட்கத்தில் சிவந்த முகத்துடன் இன்னமும் கண் மூடி நின்ற அபிராமியின் நிலை தடுத்தது.

குனிந்து அவள் முகத்தை பார்த்தவனுக்குள் ஏதோ ஒன்று புரள, அவளது ரோஜா இதழ்களில் முத்தமிட்டவ னுக்கு அதற்கு பிறகு விலகும் எண்ணம் வரவில்லை.

அவனது எண்ணத்துக்கு துணை சேர்ப்பது போல, அபிராமியின் கரங்களும், அவனது கழுத்தில் மாலை யாய்க் கோர்த்திருந்தது.

இருவரும் தங்கள் வசம் இழந்து, மற்றவருக்குள் புதைந்து போக விரும்பியவர்களைப் போல அணைப்பை இறுக்கிக் கொள்ள, சக்தியின் கரங்கள் சற்றே எல்லை மீறத் தொடங்கியது.

சக்தியின் அணைப்பில் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்த அபிராமியின் பெண்மை, சக்தியின் சற்றே எல்லை மீறின ஸ்பரிசத்தில் விழித்துக் கொண்டது.

உள்ளம் நெகிழ்ந்திருந்த நிலையிலும், 'அவனிடம் இருந்து விலகு!' என்று மூளை ஆணையிட, மனமோ 'இன்னும்! இன்னும்!!' என்று அவனது அணைப்புக்கு ஏங்கிக் கொண்டிருந்தது.

அவளது அந்த போராட்டம், தன்னை மறந்திருந்த சக்திக்கும் எட்டியதோ? அவனது கரங்கள் சற்றே தளர்ந்து, அபிராமியைத் தன் பிடியில் இருந்து விலக்க முயன்றது.

அவளை விலக்க முயன்றும் முடியாமல் போகவே, விழி திறந்து பார்த்த சக்திக்கு ஆச்சரியமாக போயிற்று.

அவனை இறுகப் பற்றி இருந்த தன் கரங்களை, எடுத்துக் கொள்ள முயலாமல், அபிராமி இன்னமும் அவன் மார்பில் புதைந்திருந்தாள்.

மெல்லியப் பெருமூச்சுடன் அவளை ஒரு முறை இறுக அணைத்தவன், அவளது செவி மடலில் தன்

இதழ்களைப் பதித்து, ''கண்ணம்மா! அம்மா வந்துடு வாங்கடா!'' என்று கரகரப்பான குரலில் சொன்ன பிறகும், அபிராமி அவனிடம் இருந்து விலகினாள் இல்லை!

''கண்ணம்மா... ரொம்ப சோதிக்காதே! அம்மா நம்ம மேல நம்பிக்கை வைச்சுத்தானே, தனியா பேச இடம் கொடுத்து வெளியே போய் இருக்காங்க!'' என்று சற்றே அழுத்தமாக சக்தி சொன்னதும், அபிராமி சட்டென்று அவனிடம் இருந்து விலகினாள்.

விலகிய வேகத்தில் தடுமாறி விழ இருந்தவளைப் பிடித்து நிறுத்திய சக்தி, ''பார்த்து! மெதுவா!'' என்று சொல்ல, குற்ற உணர்வுடன் தலை கவிழ்ந்தபடி நின்றாள் அபிராமி.

அவளது மனம் புரிந்து, அவள் முகத்தை நிமிர்த்தியவன், அவளது கண்களில் கண்ணீரைக் கண்டு, ''என்ன இது? பைத்தியம்! இப்ப எதுக்கு அழறே?'' என்று வினவ, அவளிடமிருந்து ''சாரி!'' என்ற வார்த்தை முனகலாய் வெளி வந்தது.

''அச்சோ... இப்போ எதுக்கு சாரி சொல்றே? எனக்கு இப்போதான் கொஞ்சம் நிம்மதியா இருக்கு தெரியுமா? கல்யாணத்துக்கு பின்னாடி ட்ரைனிங் கொடுக்கிறதுக்கே நேரம் சரியா இருக்க போகுதோன்னு கவலையா இருந்தேன்.. பரவாயில்லை... கொஞ்ச ட்ரைனிங்கே போதும் போல இருக்கு!'' என்று குரலில் சிரிப்புடன் அவன் சொல்ல, அவள் முகம் வெட்கத்தில் சிவந்தது.

'நானே தடுமாறினாலும், கண்ணியம் காப்பவன் என் அத்தான்!' என்ற கர்வம் தோன்ற, கண்களில் பெருமையும் காதலும் போட்டி போட, சக்தியையே பார்த்துக் கொண்டு நின்றாள் அபிராமி!

''ஹே! நானே ரொம்ப ட்ரை பண்ணி கண்ட்ரோலா இருக்கேன்! இதுக்கு மேல என்னை சோதிக்காமல் இங்கே இருந்து கிளம்பு!'' என்று அவன் மிரட்ட, அருகில் வந்த அபிராமி, எப்போதும் தன்னை ஈர்க்கும் அவனது கன்னக் குழியில் அழுத்தமாக தன் இதழ்களைப் பதித்து விட்டு, வேகமாக ஓடிப் போனாள்.

அவள் முத்தமிட்டு சென்ற கன்னத்தை ஒரு ரசனையான புன்னகையுடன் வருடிப் பார்த்த சக்தி, பயண ஏற்பாடுகளில் இறங்க, அன்றிரவு சக்தி கிளம்பிய போது அபிராமி அவனுக்கு புன்னகையுடன் விடை கொடுத்தாள்.

18

''நீங்க எப்போ அத்தான் வருவீங்க?'' என்று ஏக்கத்துடன் அபிராமி கேட்டதும், வாய் விட்டு சிரித்தான் சக்தி.

''இப்போ எதுக்கு அத்தான் கேலி செஞ்சு சிரிக்கறீங்க?'' என்று சிணுங்கியபடி அவள் கேட்க,

''பின்னே.. ரெண்டு மாசம் கேம்புன்னு உனக்கே தெரியும்... நான் இங்கே வந்து ரெண்டு வாரம்தான் ஆச்சு... எப்ப வருவீங்கன்னு கேள்வி கேட்டால் சிரிக்காமல் என்ன செய்யறது?'' என்று கேலியாக அவன் சொன்னதும், அபிராமிக்கே தன் கேள்வி அபத்தமாக தெரிந்தாலும், அவனைப் பார்க்காத ஏக்கம் குறைந்தபாடில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன் ஊரில் இருந்து சென்றவனால் வாரம் ஒரு முறை மட்டுமே போன் செய்ய முடிந்தது. பீகார் மற்றும் உத்திரப்பிரதேச மாநிலங்களில் உள்ள மலைவாழ் மக்களுக்குத்தான் அவர்களது மருத்துவ முகாம் செல்கிறது.

அவர்களது முகாம் இருக்கும் இடத்தில் போன் சிக்னல் கிடைப்பதே கடினம் என்பதால், ஊருக்கு வெளியே வந்துதான் போன் பேச வேண்டி இருந்தது. தன் கைப்பேசியை எடுத்துச் சென்றும் பயனில்லை என்று சக்தி அதையும் எடுத்துச் சென்றிருக்கவில்லை.

ஊருக்கு வெளியே வந்து போக, போதுமான போக்கு வரத்து வசதியும் குறைவாகவே இருந்ததால், வாரத்துக்கு ஒரு முறை அவரவர் வீட்டுக்கு பேசுவது என்று அங்குள்ள மருத்துவர்கள் முடிவு செய்திருந்தனர்.

போன வாரம் அவன் போன் செய்திருந்த போது இயல்பாக பேச முடிந்த அபிராமியால், மேலும் ஒரு வாரம் ஆன நிலையில், அவனைப் பார்க்க வேண்டும் போலத் தோன்றியதைத் தடுக்க முடியவில்லை. தன் மனதை புரிந்து கொள்ளாமல் அவன் கேலி பேசவே, அவளுக்கு வருத்தமாக இருந்தது.

தன் கேலிக்கு அபிராமியிடம் இருந்து எந்த எதிரொலியும் இல்லாமல் போகவே, கேலியை கை விட்டு அவளைத் தேற்ற எண்ணியவன், ''என்னடா இது? எனக்கும் தான் உன்னை பார்க்காமல் இருக்கிறது வருத்தமா இருக்கு! இன்னும் ஆறு வாரம்தான்! உனக்கும் எக்ஸாம்ஸ் வர போகுதில்லை? அதுல அதிக கவனம் செலுத்தினால், உனக்கும் மாறுதலா இருக்கும்! எப்ப பாரு உம்முன்னே இருக்காதே! அம்மாவுக்கும் கஷ்டமா இருக்கும்! நான் இல்லாத போது நீதானே அவங்களை பார்த்துக்கணும்!'' என்றான்.

''ம்க்கும்! நீங்க ஒண்ணும் எங்க அத்தையை பார்த்துக் கறதைப் பற்றி எனக்கு சொல்ல வேண்டாம்!'' என்று அபிராமி ரோஷத்துடன் சொல்ல, அவள் இயல்புக்கு மீண்டு விட்டாள் என்றதும், சக்திக்கு அவளை வம் பிழுக்கத் தோன்றியது.

''என்னடா கண்ணம்மா.. அன்னைக்கு உனக்கு எக்கச்சக்கமா ஹார்மோன் சுரந்திடுச்சு போல? நான் கூட கல்யாணத்துக்கு பின்னாடி ரொம்ப போராடணுமோன்னு கவலையா இருந்தேன்.. இப்போதான் கொஞ்சம் நிம்மதியா இருக்கு!'' என்று விசாரிக்க, அபிராமிக்கு அன் றைய நினைவில் முகம் சிவந்து, பேச்சு வர மறுத்தது.

''எனக்கே இது என்னோட அபிதானான்னு சந்தேகம் வந்திடுச்சுன்னு பார்த்துக்கோயேன்!'' என்று சக்தி மேலும் வம்பிழுக்க,

வெட்கத்தை புறம் தள்ளி, ''சந்தேகம் வருதா உங் களுக்கு? வரும்! வரும்!'' என்று கருவியவள், அவன் வாய் விட்டு சிரித்ததும், அதில் மயங்கி ''உங்க கிட்ட ஒரு உண்மையை சொல்லட்டுமா அத்தான்?'' என்றாள்.

''ஹே! உண்மையை சொல்ல போறியா? அப் படின்னா எங்கிட்ட பொய் கூட சொல்லி இருக்கியா நீ? குழந்தைக்கு பொய்யே சொல்ல தெரியாதுன்னு உங்க அத்தை சொல்றதெல்லாம் பொய்தானா?'' என்று போலியான அதிர்ச்சியுடன் விசாரித்தான்.

''ப்ச்... நீங்க இப்படி கேலி செஞ்சீங்கன்னா நான் சொல்ல மாட்டேன் போங்க!'' என்று அவள் பிகு செய்து கொள்ள,

''சரி.. சரி.. நான் எதுவும் சொல்லலை... நீ சொல்லு!'' என்று அவளை ஊக்கினான்.

''வந்து.. அது வந்து..'' என்று அவள் இழுக்கவும், ''ஹ்ம்ம்... இப்போதைக்கு நான் வர முடியாதுடா கண்ணம்மா!'' என்று அவன் மீண்டும் கிண்டலில் இறங்க,

''போங்க! நான் சொல்ல மாட்டேன்!'' என்று செல்லம் கொண்டாடினாள் அவனுடைய அருமை கண்ணம்மா!

''என் செல்ல கண்ணம்மா இல்லை? என் கண்ணு செல்லம்மா இல்லை? சொல்லுடா!'' என்று அவன் கொஞ்சத் துவங்க, அவன் அருகில் இருந்தே கொஞ்சுவது போன்ற உணர்வில், அவளுக்கு வெட்கம் வந்தது.

அவளது அந்த மௌனத்தில், அவனுக்குமே அவளது நிலை விளங்க, மனம் கனிந்து, ''சொல்றதுக்கு வெட்கமா இருக்கா... அப்புறமா சொல்றீயா?'' என்று மென்மையுடன் வினவ, எதிர் முனையில் இருந்தவளுக்கோ, அந்த மென்மையில் மனம் நெகிழ்ந்து கண்ணில் நீர் துளிர்த்தது.

அவளது மௌனம் நீளவே, சக்திக்கு பதட்டமாக இருந்தது.

''என்னடா... என்ன ஆச்சு?'' என்று கவலையான குரலில் அவன் கேட்க, அதற்குள் தன்னை சமாளித்துக் கொண்டாள் அபிராமி.

''அது வந்து.. உங்க பக்கத்தில வந்தாலே எனக்கு எப்பவுமே ஜாஸ்தியா லவ் ஹார்மோன் சுரக்க ஆரம்பிச்சிடுமா? அதுதான் நான் எப்பவுமே உங்ககிட்ட இருந்து கொஞ்சம் தள்ளியே இருப்பேன்!'' என்று அவனுக்கு மட்டுமே கேட்கும் மெல்லிய குரலில், வெட்கத்துடன் சொல்லி முடித்தாள்.

துள்ளலுடன் ஒரு விசில் அடித்து ''வாவ்!'' என்ற சக்தி, உடனேயே ''அடிப்பாவி... இதை இத்தனை கிலோ மீட்டர் தள்ளி இருக்கும்போது சொல்றீயே? நியாயமா? தர்மமா?'', என்று அங்கலாய்த்தான்.

அவனுடைய அந்த அங்கலாய்ப்பில், கிளுக்கிச் சிரித்தபடி, ''அதனால்தான் தைரியமா சொல்றேன்!'' என்று அபிராமி சொல்ல,

''இரு... இரு... வந்து வைச்சிக்கிறேன் உன்னை!'' என்றவனிடம், ''தாராளமா!'' என்று சொல்லி விட்டு புன்னகையுடனே போனை வைத்த அபிராமி, அதே புன்னகையோடு உறங்கப் போனாள்.

அதன் பிறகு நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது. வாரம் ஒரு முறை அவனிடம் பேசுவதால் மட்டுமே, அந்த வாரம் முழுமை அடைவதாக அபிராமிக்கு தோன்றியது.

சக்தியைப் பிரிந்திருக்கும் ஏக்கத்தில் இருந்து விடுபட, எப்போதையும் விட அதிகமாய் தேர்வுகளுக்கு படிப்பதில் கவனம் செலுத்தினாள் அபிராமி.

* * *

அன்று கடைசி தேர்வு! தேர்வுகள் இன்றோடு முடிகிறது என்பதை விட, இன்னும் இரண்டு நாட்களில் சக்தி வந்து விடுவான் என்ற சந்தோஷத்திலும், அவன் வந்த பத்து நாட்களுக்குள் திருமணம் என்று கற்பகம் சொல்லி இருந்ததிலும், தேவலோகத்தில் சஞ்சரிப்பதைப் போல உணர்ந்தாள் அபிராமி.

எளிமையான திருமணமே போதும் என்று எல்லாரும் முடிவெடுத்து இருந்ததால், சக்தி தான் வந்ததும் திருமண

ஏற்பாடுகளை பார்த்துக் கொள்வதாக சொல்லி இருந் தான்.

திருமணத்துக்கு உடைகளையாவது வாங்கலாம் என்று கற்பகம் சொல்ல, அத்தான் வந்ததும் வாங்கி கொள் கிறேன் என்ற அபிராமியின் பதிலில் அவள் மனதை உணர்ந்து, கற்பகமும் அவள் விருப்பத்துக்கு தடை சொல்லவில்லை.

அன்று போன் அடிக்கவும் வேகமாக சென்று தொலை பேசியை எடுத்தாள் அபிராமி.

''அத்தான்!'' என்றவள் குரலில் இருந்த சந்தோசம், போன் செய்திருந்த சக்தியையும் தொற்றிக் கொள்ள,

''எப்படிடா இருக்கே கண்ணம்மா? நல்லா எக்ஸாம்ஸ் எழுதினாயா?'' என்று விசாரித்தான்.

''நல்லா இருக்கேன் அத்தான்! நீங்க எப்படி இருக் கீங்க!'' என்றவளின் குரலில் எப்போதும் இருக்கும் ஏக்கம் இல்லாமல் சந்தோஷம் மட்டுமே நிறைந்திருப்பதை உணர்ந்தவனுக்கு, அவன் வரவை எதிர்பார்க்கும் தன் கண்ணம்மாவின் நினைவில் முகம் மலர்ந்தது.

கொஞ்ச நேரம் ஏதேதோ பேசிவிட்டு, ''நீங்க நாளைக்கு அங்கே இருந்து கிளம்பறீங்க இல்ல அத்தான்?'' என்ற கேள்வியில் அபிராமி நிறுத்த,

''ம்ம்ம்... கிளம்பறோம்! ஆனால் இங்கே எல்லாரும் இன்னும் நாலு நாள் டெல்லி, ஆக்ரா என்று சுத்தி பார்த்துட்டு போலாம்னு சொல்றாங்க!'' என்று அவன் இழுக்கவும், அபிராமியின் உற்சாகம் எல்லாம் வடிந்தது.

''வேண்டாம்! உடனே கிளம்பி வாங்க!'' என்று சொல்லத் துடிக்க நாவைக் கட்டுப்படுத்தியவளுக்கு,

இரண்டு மாதங்கள் ஓய்வு ஒழிச்சல் இன்றி வேலை செய்தவர்களுக்கு, இந்த ஏற்பாடு ஒரு மாற்றமாக இருக்கும் என்பது புரிந்தே இருந்தது.

தான் வேண்டாம் என்றால், அத்தான் கிளம்பி வந்து விடுவான் என்று தெரிந்தாலும், ''சரி அத்தான்! போயிட்டு வாங்க!'' என்று தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு அவள் சொல்ல,

''அடிப்பாவி! ரெண்டு மாசம் பார்க்கலை! எப் போடா வந்து பார்ப்போம் என்று நான் இங்கே தவிச் சிட்டு இருக்கேன்... நீ என்னடான்னா போயிட்டு வாங்க என்று சொல்றே!?'' என்று சக்தி அங்கலாய்த்ததும், துள்ளிய மனத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்து,

''இல்லை அத்தான்... அவங்க எல்லாம் போகும் போது, நீங்க மட்டும் கிளம்பி வந்திட்டால் நல்லா இருக்குமா?'' என்று இயல்பான குரலில் வினவினாள்.

''எல்லாம் நல்லாத்தான் இருக்கும்! எனக்கு அங்கே போய் சுத்தி பார்க்கிறதை விட, சீக்கிரம் வந்து உன் னையும் அம்மாவையும் பார்க்கிறதிலதான் அதிக சந் தோஷம்! டிக்கெட் கூட எடுத்திட்டேன் தெரியுமா?'' என்று சொல்லி அவளை சந்தோஷக் கடலில் ஆழ்த்தி னான் அவள் அன்பு அத்தான்!

''தேங்க்ஸ் அத்தான்! ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்!'' என்று அவள் உணர்ச்சிவசப் பட்டு சொல்ல,

''வெயிட்! வெயிட்! இந்த வார்த்தையால் தேங்க்ஸ் சொல்றதெல்லாம் வேண்டாம்! எனக்கு, நான் கிளம்பற அன்னைக்கு கொடுத்தியே, அது மாதிரி டபுள் ட்ரீட் வேணும், சொல்லிட்டேன்!'' என்றவன் குரலிலும் உற் சாகம் பொங்கி வழிந்தது.

''கண்டிப்பா!'' என்று வேகமாக சொல்லி அவனை ஆச்சரியப்படுத்தியவள்,

''ஆனால் நீங்க சொன்ன மாதிரி ட்ரீட் கொடுக்க ஒரு பத்து நாள் டைம் வேணும்!'' என்றபோது, அவள் பத்து நாளில் திருமணம் என்பதை மனதில் வைத்து சொல்கிறாள் என்று புரிந்து விட,

''ஹே! பத்து நாளைக்கு அப்புறம் நீ என்னடி கொடுக்கிறது! இந்தப் பேச்சே வேணாம்... வந்த அன்னைக்கே கொடுக்கிறதுன்னா சொல்லு, நாளைக்கு கிளம்பறேன்! இல்லைன்னா, நான் இப்போ ஊருக்கு வரலை!'' என்று அவன் முறுக்கிக் கொள்ளவும்,

''சரி! வராதீங்க! அப்புறம் இன்னும் பத்து நாள் வீணா போகும்! சொல்லிட்டேன்!'' என்று அவளும் விட்டுக் கொடுக்காமல் பேச,

''ஏய்! இதெல்லாம் அநியாயம்! ரெண்டு மாசம் பிரிஞ்சு இருந்தவுடனே உன் மனசு கல்லாயிடுச்சுடீ! உன்னை இன்னும் ரெண்டு மாசம் தவிக்க விடணும்... அப்போ தான் சரிப்படுவே!'' என்று அவன் பொருமினான்.

ஏனோ, அதற்கு மேல் அபிராமியால் வம்பு வளர்க்க முடியவில்லை!

''ப்ளீஸ் அத்தான்.... அப்படி விளையாட்டுக்கு கூட சொல்லாதீங்க! உங்க இஷ்டப்படியே...'' என்று சொல்லிக் கொண்டு வந்தவளுக்கு, அன்றைய நினைவில் வெட்கத்தில் முகம் சிவந்து விட, மேலே ஒன்றும் சொல்லாமல் நிறுத்தினாள்.

''ஹே! கண்ணம்மா! என்னடா பாதிலேயே நிறுத்திட்டே?'' என்று கிசுகிசுப்பான குரலில் அவன்

வினவியதும், அவன் இதழ்கள் தன் செவி மடலை உரசுவது போன்ற உணர்வில் அபிராமியின் உடல் சிலிர்த்தது.

பல ஆயிரம் கிலோ மீட்டர் தள்ளி இருந்தாலும், தன் கண்ணம்மாவின் மௌனத்துக்கு பொருள் அறியாதவனா அவளது அத்தான்?

அவளது மனம் உணர்ந்து, அதற்கு மேல் அவளை சீண்டாமல், தன் பயணத்தின் விவரங்களை அவளிடம் கூறி விட்டு, அன்னையிடமும் பேசி விட்டு சந்தோஷத்துடன் போனை வைத்தான்.

சக்தியிடம் பேசிய சந்தோஷத்திலேயே, அன்றைய இரவு முழுவதையும் இனிய கற்பனையில் கழித்த அபிராமி, அடுத்த நாள் காலையில் வீட்டை ஒழுங்கு படுத்தும் வேலையும் மும்முரமாக இறங்கி இருந்தாள்.

இன்று மாலை சக்தி லக்னோவில் இருந்து கிளம்புகிறான். இன்னும் இரண்டு நாட்களில் வீட்டுக்கு வந்து விடுவான் என்ற விஷயம் அவளது முகத்தையும் மனதையும் மலரச் செய்திருந்தது.

மாலை நான்கு மணிக்கு போன் அடிக்கவே விரைந்து சென்று எடுத்தாள் அபிராமி.

சக்திதான்!

''கண்ணம்மா! நான்தாண்டா! ஸ்டேஷனுக்கு வந்திட்டேன்! இன்னும் இருபது நிமிஷத்தில ட்ரெயின் கிளம்பிடும்! அம்மாகிட்டயும் சொல்லிடு!'' என்றவன், குரலை தழைத்து,

''வந்தவுடனே செய்ய வேண்டியது ஞாபகம் இருக்கில்லை?'' என்று சொல்லி அவளை சிவக்க வைத்து விட்டு,

''கண்ணம்மா! அட்வான்சா ஒரே ஒரு முத்தம் கொடேன்!'' என்று கொஞ்ச,

''ஹய்யோ! அத்தை பக்கத்திலேயே இருக்காங்க!'' என்று அவள் முனக,

''போடி! இதுக்குத்தான் ஊருக்கு வரும்போதே ஒரு செல்போன் வாங்கித் தரேன் என்று சொன்னேன்! கல்யாணத்துக்கு அப்புறம் வாங்கிக்கறேன் என்று நீதான் சொன்னே!'' என்று சலித்துக் கொண்டு,

''சரி விடு... இன்னும் இரண்டு நாள்! நேர்ல வந்து எல்லாத்தையும் வசூல் செஞ்சுக்கறேன்!'' என்று அமர்த்தலாக சொல்லி விட்டு போனை வைத்தான்.

சக்தியிடம் பேசியதிலிருந்து தனக்குத்தானே, சிரித்துக் கொண்டே வேலை செய்து கொண்டிருந்த அபிராமியைக் கண்டு காணாதது போல் இருந்த கற்பகத்தின் மனமும், மகனது வரவை ஆவலோடு எதிர் நோக்கி இருந்தது.

தங்களின் உற்சாகமும், சந்தோஷமும் இன்னும் கொஞ்ச நேரத்தில் அடியோடு தொலையப் போவதை உணராதவர்களாக இருவரும் உற்சாகத்துடன் வளைய வந்தனர்.

ஏழு மணிக்கு செய்திகள் பார்ப்பதற்காக தொலைக் காட்சியை உயிர்ப்பித்த அபிராமியின் கண்களில் ஓடிக் கொண்டிருந்த பிளாஷ் நியூஸ் பட, கண்கள் தெறித்து விடும் போல அதை உற்று நோக்கியவளின் தொண்டை யில் இருந்து,

''அத்த்தை...'' என்ற அலறல் வெளி வந்தது.

உயிர் போகிற மாதிரி அவள் அலறியதில் பதறி, ஹாலுக்கு வந்த கற்பகத்தின் காதுகளில், செய்திகள்

வாசித்துக் கொண்டிருந்த பெண்மணியின் குரல் நாராச மாய் ஒலித்தது.

''இன்று மாலை லக்னோவில் இருந்து சென்னைக்கு புறப்பட்ட லக்னோ-சென்னை எக்ஸ்பிரஸ் ரயிலில், புறப்பட்ட இரண்டு மணி நேரத்திலேயே தீ விபத்து ஏற்பட்டது.

ஒரு பெட்டியில் ஏற்பட்ட தீ, அடுத்தடுத்த பெட்டி களுக்கும் வேகமாக பரவ, இரண்டு பெட்டிகள் வெடித்து சிதறின.

வெடித்து சிதறிய இரண்டு பெட்டிகளில் இருந்த அனைத்து பயணிகளுமே உயிர் இழந்தனர் என்றும் தீ பரவிய மற்ற பெட்டிகளில் இருந்த பல பயணிகள் உயிர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் சற்று முன் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன!

பெட்டிகள் வெடித்து சிதறியதற்கு தீ விபத்து மட்டும் காரணமாக இருக்க முடியாது என்றும், சில விஷக்கிருமி களால் இரயிலில் கடத்தப்பட்ட வெடிமருந்துப் பொருட் களே இந்த கோரமான விபத்து காரணமாக இருக்கும் என்று தகவல்கள் கசிந்துள்ளன!''

செய்திகளில் ஒலித்த ஒவ்வொரு வார்த்தையும், கற்பகத்தின் மனதில் ஈட்டியாய் பாய்ந்து, அவரது உட லின் ஒவ்வொரு அணுவின் இயக்கத்தையும் நிறுத்தி, அவரை அதிர்ச்சியில் உறைய வைத்திருந்தது என்றால், தன் அத்தானின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்ற எண்ணம் தந்த பாதிப்பைக் கூடத் தாங்க முடி யாமல், அபிராமி மூர்ச்சையாகி இருந்தாள்.

19

சக்தி வந்த ரயிலில் தீ விபத்து என்று தொலைக் காட்சியில் வந்த செய்தி, கற்பகத்தை ஸ்தம்பிக்க வைத்திருந்தது!

உடலும் மூளையும் மரத்து போய் இருக்க, அபிராமி மயக்கமடைந்து விழுந்து கிடந்தது கூட அவர் கண்ணிலோ, கருத்திலோ பதியவில்லை!

எங்கிருந்தோ வந்த மணியோசையில், சிலையாக நின்று கொண்டிருந்த கற்பகத்துக்கு லேசாக உணர்வு வந்தது.

மணியோசையின் ஒலி அதிகரிக்கவும், தொலைபேசி அடிக்கும் அந்த மணியோசை தங்கள் வரவேற்பறையில் இருந்துதான் வருவதை உணர்ந்தார் அவர்! ஏனோ, அந்த தொலைபேசி எழுப்பிய ஓசையில் அவருக்கு தூக்கி வாரிப் போட்டது.

யார் போன் செய்கிறார்கள்? எங்கே இருந்து போன் செய்கிறார்கள்? சக்திக்கு ஏதாவது ஆபத்து என்று... என்ற எண்ணமே மனதில் அச்சத்தை விளைவிக்க, உள்ளம் மீண்டும் உறைந்தது.

இருக்காது!! என் மகனுக்கு எந்த ஆபத்தும் நேர்ந்திருக்காது! கடவுள் எங்களை கை விட மாட்டார்! என்று மீண்டும் மீண்டும் தனக்குதானே அறிவுறுத்திக் கொண்டவருக்கு, நீண்ட நேரமாக தொலைபேசி அடித்துக் கொண்டிருப்பது நினைவுக்கு வந்தது.

தரையோடு வேரூன்றி இருந்த கால்களை பிரயத்தனப்பட்டு நகர்த்தியவர், மெல்ல நடந்து சென்று நடுங்கும் கரங்களால் தொலைபேசியை எடுத்தார்.

''ஆன்ட்டி! நான் சேது பேசறேன் ஆன்ட்டி! இப்போதான் நியூஸ் பார்த்தேன்... நம்ம சக்தி அந்த ட்ரெயின்லதான் வரேன் என்று சொல்லி இருந்தான்... அவன் வந்த பெட்டி நம்பர் உங்களுக்குத் தெரியுமா?'' என்று சக்தியுடன் வேலை செய்யும் மருத்துவ நண்பன் விசாரிக்க, கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்க முயன்றபடி, ''இல்லை தம்பி! எங்களுக்கு தெரியாது!'' என்று மெலியக் குரலில் பதிலிறுத்தார்.

அவரது குரலில் இருந்த அச்சம் அந்த நண்பனை உலுக்கியது.

''பயப்படாதீங்க ஆன்ட்டி! சக்திக்கு எதுவும் ஆகியிருக்காது! நான் இப்பவே இங்கே இருந்து போன மற்ற நண்பர்கள் கிட்ட சக்தியோட நிலையைப் பற்றி விசாரிக்கிறேன்! நீங்க தைரியமா இருங்க!'' என்று சொல்லிவிட்டு போனை வைக்க, போனை அதன் இடத்தில் பொருத்தி விட்டு திரும்பிய கற்பகத்தின் பார்வையில், தலையில் இருந்து ரத்தம் கசிந்து கொண்டிருக்க, மயக்க நிலையில் இருந்த அபிராமி தென்பட்டாள்.

''அபி...'' என்று அலறியபடியே, அவளருகில் வந்தவருக்கு, மயங்கி விழுந்த வேகத்தில், சோபாவில் தலை மோதி, ரத்தம் வருவது புரிந்ததும், பதறிப் போனார்.

பக்கத்து வீட்டில் இருந்த பார்வதியின் கணவரின் துணையோடு, அவளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

அங்கே மகனுக்கு என்ன ஆயிற்று என்று கவலைப் படுவதா, இல்லை இங்கே அபிராமிக்கு என்ன ஆகுமோ என்று கவலைப்படுவதா என்று புரியாமல், களைத்துப் போனார் கற்பகம்!

எத்தனையோ இழப்புகளை தைரியமாக தாங்கி வந்திருக்கிறார்தான்! ஆனாலும், தன் மகனுக்கு ஏதாவது ஆகி இருக்குமோ என்ற எண்ணம், அந்த தாய் உள்ளத்தின் மனோ தைரியத்தை எல்லாம் அடியோடு அழித்து விட்டிருந்தது.

சக்திக்கு எந்த ஆபத்தும் நேர்ந்திருக்கக் கூடாது என்று உடலின் ஒவ்வொரு அணுவும் அரற்றிக் கொண் டிருந்தது.

அபிராமியைப் பரிசோதித்து விட்டு வந்த டாக்டர். சேது, ''பயப்பட ஒண்ணுமில்லை ஆன்ட்டி! மோதிய வேகத்தில் அடிபட்டு ரத்தம் வந்திருக்கு! பெரிய காயம் எதுவுமில்லை! ஆனால், மன அதிர்ச்சிதான் அதிகமா இருக்கு!'' என்று சொல்ல, அந்த நேரம் அவனது அலை பேசி அடிக்க, எடுத்து பேசியவனின் முகம் மாறியதைப் பார்த்துக் கொண்டிருந்த கற்பகத்தின் அடிவயிறு கலங்கியது.

''மை காட்! நல்லா செக் செஞ்சீங்களா?'' என்று திருப்பி திருப்பி அவன் கேட்க, எதிர்முனையில் இருந்த வந்த பதிலில் அவன் முகம் கசங்கியது

போனை அணைத்தவனின் முகத்தையே, கற்பகம் அச்சத்துடன் பார்த்திருக்க, அவரது நிலையைப் பார்த்து சொல்ல வந்ததை சொல்ல முடியாமல் தடுமாறினான் அந்த மருத்துவன்.

''என்ன? என்ன தம்பி?'' என்று காற்றாய் வெளி வந்த குரலில் கற்பகம் விசாரிக்க,

''வெடித்துச் சிதறிய அந்த ரெண்டு பெட்டில ஒன்றில்தான் சக்தி வந்தானாம்!''

வேதனையுடன் சேது சொல்ல, ''இல்லை! இருக்காது! அப்படி இருக்காது! என் சக்திக்கு ஒண்ணும் ஆகி இருக்காது!'' என்ற கற்பகத்தின் அலறலில் அந்த மருத்துவமனையே அதிர்ந்தது.

அவரது வேதனையும் வலியும் மனதைப் பிசைந்தாலும், அவரது வயதுக்கு அவர் இவ்வளவு உணர்ச்சி வசப்படுவது நல்லதில்லை என்று உணர்ந்த சேது, அவரை சமாதானப் படுத்த முயன்றான்.

''ஆன்ட்டி! ப்ளீஸ்!'' என்றவன் அவரது தோளைப் பற்றி சமாதானப் படுத்த, அவன் தோளிலேயே மயங்கி சரிந்தார் கற்பகம்.

அவசரமாக அவருக்கு சிகிச்சை கொடுக்கப்பட்டது. அதிர்ச்சியில் மயக்கம் ஏற்பட்டிருந்தாலும், தன் மகனின் உண்மை நிலையை அறியாமல் இருக்கும் வரை, தன்னால் நிம்மதியாக மயக்கத்தில் கூட இருக்க முடியாது என்பதால், அரை மணி நேரத்திலேயே அவருக்கு மயக்கத்தில் இருந்து விழிப்பு தட்டியது.

அவர் அருகிலேயே நின்று கொண்டிருந்த சேதுவை அருகே அழைத்தவர், ''எனக்கு அங்கே போகணும்!'' என்றார்.

ஒரு பெருமூச்சுடன் தலை அசைத்தவன், ''உங்களால் தாங்க முடியாது ஆன்ட்டி!'' என்று, அங்கே இருந்த கோரத்தை தன் மருத்துவ நண்பன் சொல்லி இருந்ததை

மனதில் வைத்து சொல்ல, கற்பகத்தின் குரல் உறுதியாய் ஒலித்தது.

''நான் கண்டிப்பா அங்கே போகணும்!''

அவர் முகத்தை நிமிர்ந்து நோக்கிய சேதுவுக்கு அவரது மனநிலை புரிந்தது. தன் மகனுக்கு எதுவும் நேர்ந்திருக் காது என்ற நப்பாசை அவர் மனதில் இருப்பதை உணர முடிந்தது.

பார்வதியிடம் அபிராமியைப் பார்த்துக் கொள்ளும்படி வேண்டி விட்டு, சேதுவோடு பயணப்பட்டார் கற்பகம்.

விமானம், ரயில் என்று மாற்றி மாற்றி பயணம் செய்து அவர்கள் விபத்து ஏற்பட்ட கான்பூரை வந்தடைந்த போது, அந்த இடமே சுடுகாடாக காட்சி அளித்தது.

பிணங்களை அப்புறப்படுத்தும் பணிகள் இன்னமும் நடந்து கொண்டிருந்தன.

அங்கங்கே சிதறிக் கிடந்த உடல் உறுப்புகளைக் கண்ட போது, மருத்துவப் பணியில் இருக்கும் சேதுவுக்கே தாங்க முடியவில்லை எனும் போது, கற்பகத்தின் நிலை பற்றி சொல்லித் தேவையில்லை.

மனதில் ஒட்டிக் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும், அங்கே இருந்த சூழ்நிலையில் சிதறிப் போக, அங்கே தரையிலேயே மடங்கி அமர்ந்தார் கற்பகம்.

அங்கிருந்த காவலரிடம் விசாரிக்க, ''அந்த இரண்டு பெட்டி முழுசுமே வெடிச்சு சிதறி விட்டது! பயணிகளின் பட்டியலை வைச்சுதான் இறந்தவர்களை உறுதி செய்ய றோம்!'' என்று சொல்லி விட, சேதுவுக்கு அதை கற்பத் திடம் சொல்லக் கூட துணிவில்லை!

சேது தன் நண்பர்களோடு சேர்ந்து கொண்டு தன்னால் இயன்றவரை சக்தி வேறு ஏதாவது பெட்டியில் பயணம் செய்து தப்பி இருக்கலாமோ என்ற நப்பாசையில், காயம் அடைந்த பயணிகள் சேர்க்கப்பட்டிருந்த மருத்துவமனை முழுவதையும் அலசினான்.

அப்படித் தேடும்போது, சந்தேகத்துக்கு இடமில்லா மல், வெடித்துச் சிதறிய அந்த பெட்டியில்தான் சக்தி பயணம் செய்தான் என்று புலனாயிற்று!

இவர்களைப் போலவே நம்பிக்கையுடன் தன் தாயைத் தேடிக் கொண்டு வந்தவர்களில் ஒருவர் தமிழர்!

''நான் என் அம்மாவை அந்த பெட்டியில்தான் ஏற்றி விட வந்தேன்! சென்னையில் ஒரு முக்கிய திருமணம்! எனக்கு வேலை இருக்கவே என்னால் கூட போக முடி யலை! அப்போதான் எங்க அம்மாவோட பக்கத்து சீட் டில் டாக்டர்.சக்தியை பார்த்தேன்! அம்மாவைத் தனியா அனுப்பறேன் என்று நான் புலம்பிக் கொண்டிருந்த வேலையில, அவர்தான், நான் உங்க அம்மாவை ஜாக்கிர தையா பார்த்துக்கிறேன்! சென்னையில கூட அவங்க போக வேண்டிய இடத்துக்கு தானே கூட்டி போறேன் என்று சொன்னார்! ரொம்ப நல்ல மனுஷன்! கடவுள் ஏன் இப்படி நல்லவங்களை சோதிக்கிறாரோ!'' என்று தன் தாயின் மரணத்தோடு, சக்திக்காகவும் அவர் வருத்தப்பட, கற்பகம் தன் கடைசி நம்பிக்கையும் பொய்த்துப் போன அதிர்ச்சியில் சுருண்டு விழுந்தார்.

* * *

தங்கள் கடந்த காலத்தை உணர்ச்சியற்ற குரலில் சொல்லிக் கொண்டிருந்த கற்பகத்துக்கு, தன் மகனின் மரணத்தைப் பற்றி சொல்லும்போது குரல் குழறியது!

''சிதறிக் கிடந்த உடல் உறுப்புகளில் தன் மகனுடையது எங்கே இருக்கும்? என்று தேடுகிற கொடுமை உலகில் யாருக்குமே வரக் கூடாது பவானி!'' என்று குரல் நடுங்க சொன்ன கற்பகம்,

''உங்களுக்கு ஒண்ணு தெரியுமா பவானி? என் மகன், மரணத்துக்கு பிறகு தன் உடலை தானம் செய்வதற்கு பதிவு செஞ்சு வைச்சிருந்தான்! அப்படிப்பட்டவனுக்கு போய்...'' என்றவரின் குரல், தொண்டையில் இருந்து புறப்பட்ட கேவலில் அடங்கிப் போக, கதறி அழத் துவங்கினார்.

தன் மகனின் முகத்தைக் கடைசி முறையாக பார்க்கக் கூட கொடுத்து வைக்கவில்லை என்ற ஒரு தாயின் தவிப்பை உணர முடிந்த பவானிக்கும் கண்கள் குளமாக, கதறி அழுத கற்பகத்தை ஆதரவுடன் அணைத்து கொண்டார் பவானி.

தங்களை கண்ணின் மணியாக பார்த்துக் கொண்டிருக்கும் கற்பகம் அழுவதைத் தாங்க முடியாமலோ, இல்லை தங்கள் வயிற்றுப் பசிக்காகவோ? குழந்தைகளும் அழத் துவங்கினர்.

குழந்தைகளின் அழுகுரலைக் கேட்ட கற்பகம் பதறி எழப் போக, அவரை அமரும்படி சொன்ன பவானி, எழுந்து சென்று குழந்தைகளின் தேவையைக் கவனித்து விட்டு வந்தார்.

அவர் திரும்ப வந்த போது, ஒய்ந்து போய் இருந்த கற்பகத்தின் தோற்றம், மனதில் வலியை உண்டு செய்ய, கற்பகத்தின் கையைப் பற்றிக் கொண்ட பவானி,

''போதும் கற்பகம்! இதுக்கு மேல எதுவும் சொல்ல வேண்டாம்!'' என்றார்.

''இல்லை பவானி... சொல்லிடறேன்! இத்தனை நாளாய் மனசில அழுத்தி வைச்சிருந்த எல்லாத்தையும் சொல்லிடறேன்!''

தன்னிடம் சொல்வது அவரது மன அழுத்தத்துக்கு ஒரு வடிகாலாக இருக்கும்பட்சத்தில், அதை ஏன் தடுக்க வேண்டும் என்றெண்ணிய பவானியும் ஆமோதிப்பாகத் தலையசைக்க, கற்பகம் மீண்டும் தங்கள் கடந்த காலத்துக்குள் பிரவேசித்தார்.

* * *

கான்பூரில் இருந்து தஞ்சாவூருக்கு வந்து சேர்ந்த பயணம் முழுவதுமே, உயிரற்ற ஜடம் போலத்தான் கற்பகம் இருந்தார்.

தங்கள் ஊருக்கு வந்து சேர்ந்ததும்தான், அவருக்கு சுய உணர்வே வந்தது! அபிராமியை எப்படி சந்திக்கப் போகிறோம் என்ற பரிதவிப்பும் கூடவே வந்தது!

சக்தியின் இழப்பைத் தன் மனமே இன்னும் ஒத்துக் கொள்ளாத நிலையில், அபிராமிக்கு எப்படி ஆறுதல் சொல்லப் போகிறோம் என்று அவர் மனம் மலைத்தது.

கற்பகத்தை கண்டதும் ஓடி வந்த பார்வதி, ''அக்கா? என்ன ஆச்சுக்கா?'' என்று வினவ, கற்பகத்தின் கண்களில் இருந்த ஜீவனற்ற பார்வையே பார்வதிக்கு பதில் சொன்னது.

''கடவுளே!'' என்று தானும் பரிதவித்த பார்வதி,

''அபியை எப்படித் தேற்றப் போறீங்களோ தெரியலையே அக்கா? இந்த ரெண்டு நாளா அத்தை எங்கே? அத்தான் எங்கே? என்ற கேள்வியைத் தவிர அவள் வாயில் இருந்து வேற எந்த வார்த்தையும் வரலையே!

ரெண்டு நாளா ஒண்ணும் சாப்பிடக் கூட இல்லை! தூங்கவும் இல்லை!'' என்று புலம்ப, கற்பகத்துக்கு கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது.

''கடவுளே! அபிராமியைத் தேற்றும் சக்தியை எனக்கு தா!'' என்றவருக்கு சக்தியின் நினைவில் கண்கள் மீண்டும் குளமாகியது.

கற்பகம், அபிராமி இருந்த அறையின் உள்ளே நுழைந்ததும் வெறித்த பார்வையோடு, அபிராமி அமர்ந்திருப்பது கண்ணில் பட்டது.

அரவம் கேட்டு திரும்பிய அபிராமியின் கண்களில் கற்பகம் தென்பட, அவளது பார்வை, அவரைத் தாண்டி கொண்டு பின்னால் அலைபாய்ந்தது.

அவள் விரும்பியவன் வரவில்லை என்றதும், ''அத்தை! அத்தான் எங்கே?'' என்றவள் குரலில் இருந்த நடுக்கம், கற்பகத்தையும் மனம் உடையச் செய்தது.

'''சொல்லுங்க அத்தை? அத்தான் எங்கே?'' நடுக்கத்தையும் மீறி அபிராமியின் குரல் உயர,

''சக்தி போயிட்டான் அபி! நம்மை தவிக்க விட்டுட்டு போயிட்டான்! திரும்ப வரவே முடியாத இடத்துக்கு போயிட்டான்!'' என்று கதறிய கற்பகத்தை, நம்ப முடியாமல் பார்த்த அபிராமியின் உதடுகள் துடித்தது.

''இல்லை! என் அத்தான் என்னை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டார்... நீங்க பொய் சொல்றீங்க! நான் நம்ப மாட்டேன்... நான் நம்பவே மாட்டேன்!'' என்று அபிராமி அலறிய அலறலில், அவசரமாக டாக்டர்,சேது உள்ளே வந்தான்.

உடல் நடுங்கிக் கொண்டிருந்த அபிராமியைக் கண்டவன், ஜாடையாய் நர்சைப் பார்க்க, அவர் உடனே ஊசியில் ஒரு மருந்தை நிரப்பிக் கொடுக்க, அபிராமியின் அருகில் வந்த சேது, ''காம் டவுன் அபிராமி!'' என்றுவிட்டு, மருந்தை செலுத்தப் போக, சட்டென்று அந்த மருந்தைத் தட்டி விட்ட அபிராமி,

கற்பகத்திடம் திரும்பி, ''சொல்லுங்க அத்தை... நீங்க சொன்னது பொய்யின்னு சொல்லுங்க! சொல்லுங்க!'' என்று குரல் எடுத்து கத்த ஆரம்பித்தாள்.

கற்பகம் ஒன்றும் பேசாமல் கண்ணீர் உகுத்தபடி நிற்க,

இரண்டு நாட்களாக, அபிராமியின் உடல் நிலையைக் கவனித்துக் கொண்டிருந்த மருத்துவரிடம் பேசி இருந்த சேதுவுக்கு, இவளை உணர்ச்சிவசப் பட வைப்பது, நல்லதில்லை என்று புரிந்தது.

அதற்குள், நர்சும் இன்னொரு ஊசியில் மருந்தை நிரப்பிக் கொண்டு வர, அபிராமியின் பார்வை கற்பகத்திடம் பதிந்திருந்த நேரத்தில், சேது அவள் கையில் மருந்தை செலுத்தினான்.

ஊசி குத்தியதை உணரக் கூட இல்லாமல் அபிராமி, கற்பகத்திடம் ''பொய்யின்னு சொல்லுங்க!'' என்று அரற்றிக் கொண்டிருந்தாள்.

உள்ளே சென்று மருந்து வேலை செய்ய ஆரம்பித்ததும், அபிராமி அரற்றல் குறைந்து மயக்கத்தில் ஆழ்ந்தாள்.

மேலும் நான்கு நாட்கள் அபிராமி மருத்துவமனையில் இருக்க வேண்டி இருந்தது. அந்த நாட்களுமே, அவள் விழித்திருந்த நேரமும் குறைவாகவே இருந்தது.

விழித்திருந்த நேரத்திலும், வெறித்த பார்வையோடு அமர்ந்திருந்தாளே தவிர, கற்பகத்திடம் அவள் எதுவும் பேசினாலில்லை.

வீட்டுக்கு வந்து இரண்டு நாட்களாகியும் அவள் எதுவும் பேசவில்லை! ஏன்? அழக் கூட இல்லை!

உண்ணாமல், உறங்காமல் எந்நேரமும் ஒரு வெறித்த பார்வையோடு இருந்தவளைப் பார்க்க பார்க்க கற்பகத்தின் வேதனையும் கூடியது.

கற்பகமும் அதே நிலையில்தான் இருந்தார் என்றாலும், தன் சிறு வயதில் இருந்தே பல்வேறு இழப்புகளை சந்தித்திருந்ததால், நிதர்சனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் அவருக்குப் புரிந்தது.

அபிராமியிடம் பேச வேண்டும் என்றெண்ணி, அவளது அறைக்கு சென்றவருக்கு, விளக்கைக் கூட போடாமல், அவள் ஜன்னலருகே நின்றிருப்பது தென்பட்டு பெரு மூச்சை வரவழைத்தது.

அறைக்குள் வந்த கற்பகம் தன்னை வேதனையுடன் பார்த்ததையோ, அறையின் விளக்கைப் போட்டு விட்டு அருகில் வந்ததையோ, மெல்லிய குரலில் ''அபி... அபிம்மா'' என்று அழைத்ததையோ, இவற்றில் எதையுமே உணராமல், ஜன்னல் வழியே, வெளியே இருந்த அந்தகாரத்தை வெறித்தபடி நின்று கொண்டிருந்தாள் அபிராமி.

இரு முறை அழைத்தும் பலனில்லாமல் போகவே, ''கண்ணம்மா...'' என்று ஒரு முறை அழுத்தமாக கற்பகம் அழைக்க, ''அத்தான்...'' என்ற விசிப்போடு சட்டென்று திரும்பினாள் அபிராமி.

அங்கே, அவளது அத்தான் இல்லாமல், அத்தை நின்று கொண்டிருக்கவே, அழுகையில் உதடு பிதுங்க, சரிந்து அமர்ந்தவள், முகத்தை முட்டியில் புதைத்தபடி கதறி அழத் துவங்கினாள்.

அவளது கண்ணீர் கற்பகத்தின் கண்ணீர் சுரப்பியையும் திறக்கச் செய்தது. ஒரு முடிவுடன், கண்களைத் துடைத்தவர், அபிராமியின் தலையைக் கோதியபடி பேசத் துவங்கினார்.

''சக்தி... சக்தி போனது நமக்கு பேரிழப்புதான்... அதை ஈடு செய்யவும் முடியாது... 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ' அப்படின்னு அவ்வை சொன்னதுதான் நிதர்சனம் அபிம்மா... அந்த நிதர்சனத்தை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகணும்... அவனை எடுத்துகிட்டு நம்மை அந்த கடவுள் விட்டு வைச்சிருக்கார் என்றால், நம்மால் ஆக வேண்டிய காரியம் ஏதோ இருக்குன்னுதான் அர்த்தம்... அதைப் புரிஞ்சு நடந்துக்கறதுதான் நல்லது அபி... இப்படி நீ அழுது அழுது உடம்பை கெடுத்துக்காதே!'' என்றவர், தான் சொன்னது எதுவுமே காதில் விழாதது போல அபிராமி அழுகையை நிறுத்தாமல் இருப்பதைக் கண்டு,

''போ... எழுந்து போய் முகத்தைக் கழுவிட்டு வந்து சாப்பிடு... ரெண்டு நாளா நீ ஒண்ணுமே சாப்பிடலை... உன்னோடு சேர்ந்து நானும் சாப்பிடலை... மயக்கம் வர மாதிரி இருக்கு அபி...'' என்று மெல்லிய குரலில் கற்பகம் சொல்ல, தன்னால் அவரும் சாப்பிடாமல் இருப்பதை உணர்ந்த அபிராமி எழுந்து போய் முகத்தை கழுவி விட்டு வந்து சாப்பிட அமர்ந்தாள்.

அத்தைக்காக உண்ண அமர்ந்தாலும், உணவு தொண்டையை விட்டு இறங்க மறுத்தது. இதே உணவு மேஜையில், உருட்டி மிரட்டி தன்னை இரண்டு இட்லிகள் அதிகம் சாப்பிட வைத்த சக்தியின் மிரட்டலுக்கு மனம் ஏங்கியது.

கண்களில் கண்ணீர் நிறைந்து, கன்னத்தில் வழிய ஆரம்பித்த நேரத்தில், கற்பகத்தின் ''அபிம்மா...'' என்ற மென்மையான அழைப்பு, அபிராமியை நடப்புக்கு கொண்டு வந்தது.

கண்ணீரை வழிய விடாமல் உள்ளே இழுத்தவள், தண்ணீர் குடித்து உணவை தொண்டையில் இருந்து உள்ளே தள்ள முயன்றாள்.

தான் உண்பதைக் கண்ட கற்பகமும் உண்ண ஆரம் பிக்கவே, அவர் உண்டு முடிக்கும் வரை காத்திருந்தவள், இரண்டு இட்லியோடு ''எனக்கு போதும் அத்தை... நான் தூங்கப் போறேன்'' என்று சொல்லி விட்டு தன் அறை யில் வந்து புகுந்து கொண்டாள்.

சற்று முன்னர் அத்தை என்னிடம் பேசியது நினை வுக்கு வந்தது. என்ன அழுது புரண்டாலும், இனி அத் தான் வர மாட்டான் என்ற எண்ணம், கண்ணீரை நிறுத்தி வேறு விதமாக யோசிக்க வைத்தது.

தான் என்ன பெரிதாக ஆசைப்பட்டு விட்டோம்... தனக்கென்று, தன்னையே உயிராய் விரும்பும் ஒரு கணவன், அவனைப் போலவே இரு குழந்தைகள்! அவ்வளவுதனே? அதைத் தருவதற்கு கூட ஏன் அந்தக் கடவுளுக்கு மனம் வரவில்லை?

'உங்களுக்கு நான் தகுதியானவள்தானா?' என்று என்று சக்தியைக் கேட்டது தவறோ? 'ஆம். உனக்கு

தகுதி இல்லைதான்!' என்று அந்தக் கடவுள் மண்டை யில் தட்டி சொல்லி விட்டாரோ?

தன்னைக் காதலிக்காமல் இருந்திருந்தால், அத்தைக்கு மகனாக, மக்களுக்கு சேவை செய்யும் ஒரு நல்ல மருத் துவனாக உயிரோடு இருந்திருப்பானோ?

தன்னை காண வேண்டும் என்ற ஆசையில்தானே, அவன் அவசரமாக மற்றவர்களின் திட்டத்தில் கலந்து கொள்ளாமல் கிளம்பி வந்தான்?

சின்ன வயதில் இருந்தே, தன்னை துரதிஷ்டம் துரத்து கிறதோ? தன் அதிர்ஷ்டமின்மைதான் சக்தி அத்தானை யும் தன்னிடம் இருந்து பறித்து விட்டதோ? என்ற எண் ணம், கண்களில் புதிதாய் கண்ணீரை உற்பத்தி செய்தது.

இனிமேல் வாழ்க்கை எப்படி இருக்கும்? காலம் முழுக்க இப்படி கண்ணீர் விட்டுக்கொண்டே கழியுமோ? இந்த கண்ணீர் எல்லாம் தீர்ந்து போன பிறகு, கண்களில் இருந்து ரத்தம் வழியுமோ? என்று குருட்டாம்போக்கில் எண்ணிக்கொண்டே போனவளின் உடல் சிலிர்த்தது.

இப்படி தானும் அழுது கொண்டு, அத்தையையும் வேதனைப் படுத்தி வாழ்வதை விட, தானும் அத்தான் போன இடத்துக்கே சென்று விட்டால் என்ன? என்று தோன்றியது. சிறிது நேரம் அதே யோசனையில் உழன்றவள், ஒரு முடிவுடன், சக்தியின் அறைக்குச் சென்றாள்.

கொஞ்சம் நேரம் உருட்டி பிரட்டிய பிறகு, அவளுக்கு தேவையானது கிடைத்தது. மெல்ல அத்தையின் அறையை எட்டிப் பார்த்தவள், தன்னை மீறிய அசதியோடு அவர் அயர்ந்து உறங்குவது தெரிய, நிம்மதியுடன் தன் அறைக் குச் சென்றாள்.

''என்னை மன்னிச்சுடுங்க அத்தை... அத்தான் இல்லாத உலகத்தில் வாழ முடியாமல்தான் அவர் போன இடத்துக்கு போகப் போகிறேன்!'' என்று எழுதி வைத்தவள், இனம் புரியாத ஒரு அமைதியோடு, தூக்க மாத்திரைகளை விழுங்கத் துவங்கினாள்.

20

மருந்தின் பிடியில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த அபிராமியை, அருகில் இருந்து கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கற்பகத்துக்கு, நேற்று மட்டும் தான் கெட்ட கனவு கண்டு சரியான நேரத்துக்கு விழித்திராமல் இருந்திருந்தால், என்ன ஆகி இருக்கும் என்ற நினைப்பில் இப்போதும் மனம் நடுங்கியது.

பத்து நாட்களாக சரியான உறக்கம் இல்லாமல் இருந்தவர், நேற்றுதான் தன்னையும் அறியாமல் அசந்து உறங்கினார். கெட்ட சொப்பனம் கண்டு விழித்தவருக்கு மனமே சரியில்லை! ஏதோ தோன்றவும் அபிராமியின் அறைக்கு வந்தவர், அங்கே அவள் இருந்த கோலத்தைக் கண்டு உறைந்து போனார்.

அந்த நடு நிசியில் மருத்துவமனைக்கு கூட்டி வந்து, இன்று மதியம் டாக்டர்.சேது இனிமேல் அபிராமியின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று சொல்லும் வரை அவர் பட்ட பாட்டை வார்த்தைகளால் வடிக்க இயலாது.

இப்போதும், அபிராமியிடம் அவரால் குற்றம் காண முடியவில்லை. சக்தியின் மீது அவள் வைத்திருந்த அன்பை உணர்ந்தவர் என்பதால், அவளைத் தனி அறையில் தங்க விட்டது தன் தவறு என்றுதான் அவருக்குத் தோன்றியது.

அபிராமியை இனிமேல் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியவர், அபிராமியிடம் அசைவை உணர்ந்து எழுந்து அவசரமாக அவள் அருகில் வந்தார்.

விழிகளை மலர்த்தி தான் இருந்த அறையை நோட்டம் விட்ட அபிராமிக்கு, தன் நேற்றைய முயற்சி பலனளிக்கவில்லை என்பது புரிந்து கண்களில் நீர் சுரந்தது.

சந்தோஷமாக வாழத்தான் கொடுத்து வைக்கவில்லை! நிம்மதியாக சாகக் கூட முடியவில்லையே!

கண்ணீருடன் அவள் கண்களை மூடிக் கொள்ள, அவளது கரத்தைப் பற்றிய கற்பகம், ''அபி... இப்படி செய்யலாமா அபி?'' என்று ஆதங்கத்துடன் வினவ, பதிலேதும் சொல்லாமல் அமைதியாக கண்ணீர் வடித்தவளிடம்,

''ப்ளீஸ் அபி! இன்னொரு முறை இந்த மாதிரி எண்ணம் உனக்கு வரவே கூடாது!'' என்று அவர் கண்டிப்புடன் சொல்ல, அதுவரை அமைதியாக இருந்த அபிராமி வெடித்தாள்.

''என்ன செய்ய சொல்றீங்க? காலம் பூரா கண்ணீர் விட்டுகிட்டு உங்களையும் கஷ்டப்படுத்திட்டு இருக்க சொல்றீங்களா? என்னால முடியாது!'' என்று வேகமாக சொன்னவளுக்கு, உடல் பலவீனத்தால் மூச்சு வாங்கியது.

''ப்ளீஸ் அத்தை! அத்தான் இல்லாத உலகத்தில் என் னால வாழ முடியாது! இன்னைக்கு இல்லைன்னாலும் ஒரு நாள், அவரில்லாத வலியால் நெஞ்சு வெடிச்சு செத்துடுவேன்! அதுக்கு இப்பவே என்னை நிம்மதியாக சாக விடுங்க!'' என்று விரக்தியான குரலில் சொன்ன வளை வெறித்து நோக்கிய கற்பகம்,

''தாராளமா செத்துப் போ!'' என்றார் உணர்ச்சியற்ற குரலில்!

''அதுக்கு முன்னாடி என்னையும் கொன்னுடு!'' என்று அவர் தொடர்ந்து சொன்னதும், அதிர்ச்சியோடு அபிராமி எழுந்து அமர்ந்தாள்.

''உன் மாமா இறந்த போது 'என் மகன் இருக்கிறான், அவனுக்காக நான் வாழணும்' என்று மனசைத் தேற்றிக் கொண்டேன். இப்போ அந்த உயிருக்கு உயிரான மகனும் போய்ட்டான்... ஆனாலும் உனக்காகத்தான் நான் என் உயிரைப் பிடிச்சு வைச்சிருக்கேன்... நீ என்னடான்னா...'' என்று கலங்கிய குரலில் சொன்ன கற்பகம்,

''இன்னொரு தடவை இந்த மாதிரி ஒரு முடிவு எடுக் கிறதுக்கு முன்னாடி, என்னைக் கொன்னுட்டு இந்த மாதிரி செய், ஏன்னா இன்னொரு இழப்பைத் தாங்குகிற சக்தி எனக்கு இல்லை!'' என்று இரு கரம் கூப்பி அபிராமி யிடம் வேண்டி விட்டு, கண்ணை முடிய படி நிற்க, அவரது கண்களில் இருந்து கண்ணீர் வெள்ளமாகப் பெருகியது

தன்னை வேண்டியபடி நின்றிருந்த கற்பகத்தை தலை நிமிர்த்தி பார்த்த அபிராமி திகைத்து போனாள். பத்து நாளில் பத்து வயது முதிர்ந்ததைப் போன்ற தோற்றத் தோடு கற்பகம் இருந்தது நெஞ்சில் வலியை ஏற்படுத் தியது.

வாழ்க்கையின் ஆதாரமாய் இருந்த பிள்ளையைப் பறி கொடுத்து விட்டு, அந்த துக்கத்தைக் கூட தனக்காக அடக்கி கொண்டு, தன் மேல் அன்பும் அக்கறையும் செலுத்தும் அந்த நல்ல உள்ளத்தின் முன், தான் தூசியானது போன்ற உணர்வு தோன்றியது.

துக்கத்தில் அவருக்கு ஆறுதலாக இல்லாமல், தன் துன்பத்தையே பெரிதாக எண்ணிக் கொண்டு, அதி லேயே உழன்று கொண்டு, இப்போது இப்படி ஒரு முடிவை எடுத்து அவரை வேதனைப்படுத்தி கொண்டிருக்கும் தன் மேலேயே அபிராமிக்கு ஒரு வெறுப்பு படர்ந்தது.

'ச்சே... என்ன மாதிரியான சுயநலவாதி நான்?' என்று எண்ணியவளுக்கு, 'நான் இல்லாத போது நீதானே அம்மாவைப் பார்த்துக் கொள்ள வேண்டும்!' என்ற சக்தியின் குரல் அசரீரியாய் ஒலித்தது போல இருந்தது.

சட்டென்று கை நீட்டி கற்பகத்தின் கைகளைப் பற்றிக் கொண்ட அபிராமி, ''என்னை மன்னிச்சிடுங்க அத்தை... இனிமேல் இந்த மாதிரி எந்த தப்பும் செய்ய மாட்டேன்... இன்றிலிருந்து நான் உங்களுக்கு மகளுக்கு மகளாவும், மகனுக்கு மகனாவும் இருப்பேன்!'' என்று சொல்லி அவரது கைகளில் முகம் புதைத்து, இதுதான் கடைசி கண்ணீர் என்பது போல, அழுது கரைந்தாள்.

அவள் மனம் புரிந்தாற்போல, கற்பகமும் அமைதியாக நின்று இருந்தார்.

சிறிது நேரம் கழித்து, தானாகவே நிமிர்ந்த அபிராமி, முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு, ''இன்னைக்கே வீட்டுக்கு போயிடலாமா அம்மா?'' என்று வினவ,

அவள் வார்த்தையில் இருந்த தெளிவும், அம்மா என்ற அழைப்பும், மன வேதனையை அகற்ற, ''டாக்டர்

கிட்ட கேட்டுட்டு வரேன் ராஜாத்தி...'' என்றபடி கற்பகம் மருத்துவரைக் காண விரைந்தார்.

வீட்டுக்கு வந்ததும், அன்றிரவு அவளது அறைக்குச் சென்ற அபிராமியைத் தடுத்தார் கற்பகம்.

''என் கூடவே படுத்துக்கோ அபி...'' என்று அவர் மெல்லியக் குரலில் சொல்ல, அவரது பயத்தை உணர்ந்த அபிராமி, ''பயப்படாதீங்கம்மா... இனிமேல் கண்டிப்பா அந்த மாதிரி எந்த முடிவும் எடுக்க மாட்டேன்!'' என்று உறுதியான குரலில் சொல்ல, கற்பகத்தின் மனம் நிம்மதி அடைந்தது.

அடுத்த நாள் காலை, இருவருக்கும் ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

கதவைத் தட்டும் ஒலி கேட்டு, கற்பகம் கதவைத் திறக்க, அங்கே ஒரு மனிதர், ''இங்கே அபிராமி இருக் காங்களா?'' என்று விசாரித்தார்.

''நீங்க யாரு?''

''நான் திருச்சியில இருந்து வரேன்! அபிராமியோட தாத்தா குருராமனின் வக்கீலோட உதவியாளர் நான்... அங்கே பெரியவர் சாகக் கிடக்கிறார்! அதற்கு முன் தன் பேத்தியைப் பார்க்கணும் என்று அவங்களை அழைத்து வர என்னை அனுப்பி இருக்கார்!''

வந்தவர் சொன்ன விவரத்தை தன் அறையில் இருந்த படியே கேட்டிருந்த அபிராமிக்கு மனம் வெதும்பியது.

''பிள்ளையே இல்லை! அப்புறம் என்ன பேத்தி!'' என்று கல் மனதோடு அந்த அத்தை சொன்னது நினை வுக்கு வந்தது. அப்போது இல்லாத பேத்தி இப்போது மட்டும் எப்படி கண்ணுக்கு தெரிகிறாள்.

அவளது யோசனையை உள்ளே வந்த கற்பகத்தின் குரல் கலைத்தது.

''அபி... உடனே கிளம்பு... அங்கே உன் தாத்தா...'' என்று அவர் அவசரமாக சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''நாம் எங்கேயும் போகலை அம்மா!'' என்றாள் அபிராமி.

''அபி...'' என்று திகைத்த கற்பகம் அவளது எண்ண ஓட்டத்தை உணர்ந்து, ''அபி.... உன் மனசு எனக்குப் புரியுது... அவங்க என்ன மாதிரி பேசி இருந்தாலும், இந்த மாதிரி நேரத்தில் அதை எல்லாம் மனசில வைச்சிக்கக் கூடாது அபி... அப்புறம் ஒரு காலத்தில், அந்த நேரத்தில் போகாமல் இருந்தோமே என்று உனக்குத்தான் குற்ற உணர்வா இருக்கும்!'' என்றவர், அபிராமி அசையாமல் இருப்பதைக் கண்டு,

''அம்மா சொல்றேன் இல்லை? கிளம்பு!'' என்று கொஞ்சம் கண்டிப்பான குரலில் சொன்னதும், அபிராமி கிளம்பினாள்.

திருச்சி சென்று, தன்னைக் கண்டதும் கண் கலங்கிய பாட்டனாரைப் பார்த்த போது, கற்பகம் சொன்னதில் இருந்த உண்மை அவளுக்குப் புரிந்தது.

''அபிராமி! உன் பாட்டியின் பேரை வைச்சிருக்கான் என் பிள்ளை! இத்தனை நாள் உன்னை கண்டு கொள் ளாமல் இருந்ததுக்கு என்னை மன்னிச்சிடும்மா!'' என்று அந்தப் பெரியவர் சொன்னபோது, அபிராமிக்கே ஒரு மாதிரியாகப் போனது.

''பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதீங்க!'' என்று சொன்ன போதும் அவளுக்கு ''தாத்தா!'' என்று அவரை அழைக்க வாய் வரவில்லை.

அதை உணர்ந்து கொண்ட பெரியவர், ''என் மேல் உனக்கு கோபம் இருந்தால் அது நியாயம்தாம்மா! அப்போ என் கவுரவம்தான் பெரிசு என்று உன் அப்பாவை சேர்த்துக் கொள்ள மறுத்துட்டேன்... எமன் எதிர்க்க வந்து நிற்கும்போதுதான் வாழ்க்கையில எது பெரிசு, சின்னது என்ற உண்மை விளங்குது! கோபம் இருந்தாலும், இந்தக் கிழவன் உன்னைப் பார்க்கணும் என்று சொல்லி அனுப்பும்போது வந்தே பாரு... நீ உண்மையிலேயே பெரிய மனுஷிதான்!'' என்றவர்,

''ஒரே ஒரு முறை என்னை தாத்தான்னு கூப்பிட றாயாம்மா!'' என்று நா தழு தழுக்க வினவிய போது, தான் ஆடா விட்டாலும் தன் சதை ஆடும் என்பதற் கேற்ப, அபிராமிக்குமே கண் கலங்கிப் போனது.

அருகில் நின்ற கற்பகம், அபிராமியின் தோளை மெல்ல அழுத்த, ''என்ன தாத்தா... எதுக்கு இப்போ கண் கலங்கறீங்க?'' என்ற அபிராமியின் வார்த்தைகளில் அவரது முகம் மலர்ந்தது.

''அதானே... எதுக்குப்பா நீங்க கண் கலங்கறீங்க? பாருங்க அபிராமி வந்திட்டாள்... அவள் வந்த அதிர்ஷ்டம், இவ்வளவு நாள் பேசக் கூட முடியாமல் இருந்த அப்பா இந்த அளவுக்கு பேச ஆரம்பிச்சிட்டார்!'' என்ற அந்த அத்தையின் வார்த்தைகளில், ஆச்சரியத்துடன் நிமிர்ந்த அபிராமி, அவரை ஒரு உணர்ச்சியற்றப் பார்வை பார்த்து விட்டு, தாத்தாவிடம் பார்வையைத் திருப்ப, அவரது முகத்தில் ஒரு விசித்திரமான முறுவல் படர்ந்ததைக் கண்டு குழம்பினாள்.

''வா அபி! பிரயாணம் செய்தது களைப்பா இருக்கும்! வந்து சாப்பிட்டு ஓய்வெடு!'' என்று அந்த அத்தை, அபிராமியை அழைக்க, வக்கீல் தடுத்தார்.

''இருக்கட்டும்மா... முதலில் அய்யா சொன்ன வேலையை முடித்து விடலாம்!'' என்றவர், ஒரு பத்திரத்தை எடுத்து அபிராமியிடம் நீட்ட, அதை வாங்கத் தயங்கிக் கொண்டிருந்த அபிராமியை, ''வாங்கிக்கோம்மா!'' என்று ஊக்கினார் அவளது தாத்தா.

அதை வாங்கிப் படித்த அபிராமியின் கண்கள் விரிந்தது. தன் சொத்தை இரு பாகமாக பிரித்திருந்த குருராமன், ஒரு பாகத்தை அபிராமியின் பெயரில் எழுதி இருந்தார். தன் அன்னை, அடைக்கலம் தேடி இந்த வீட்டுக்கு அழைத்து வந்த போது, கிடைக்காத ஆறுதலை எண்ணிய அபிராமிக்கு, அந்தப் பத்திரத்தை கிழித்துப் போடும் அளவுக்கு எரிச்சல் வந்தது.

அவளது முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த பெரியவருக்கு, அவளது எண்ணம் புரிந்ததோ என்னமோ?

அருகில் இருந்த வக்கீலை அழைத்தவர், அவரது காதில் ஏதோ சொல்ல,

''நீங்க எல்லோரும் கொஞ்சம் வெளியே இருங்க!'' என்று அங்கிருந்த மற்றவரைப் பார்த்து சொல்ல, வெளியே செல்ல முயன்ற கற்பகத்தின் கரத்தைப் பற்றி, ''நீங்க இருங்க! உங்களுக்கு தெரியாமல் எதுவும் இல்லை!'' என்று ஒரு அழுத்தத்துடன் அபிராமி சொன்னாள்.

கற்பகத்தின் தூண்டுதலால்தான், தன் பேத்தி தன்னை தாத்தா என்று அழைத்ததை உணர்ந்த பெரியவரும், ''நீ இரும்மா!'' என்றார்.

எரிச்சலுடன் அவரைப் பார்த்த படியே, அந்த அத்தை யும், அவரது மகனும் வெளியே சென்றனர்.

அவர்கள் சென்றதும் கதவை அடைத்து விட்டு வந்த வக்கீல், அபிராமியின் புறம் திரும்ப அவர் எதுவும்

சொல்வதற்கு முன்னரே, "எனக்கு இந்த... இந்த சொத்தெல்லாம் வேண்டாம்!" என்றாள் உறுதியான குரலில்!

அவளை ஒரு பார்வை பார்த்த அந்த வக்கீல், "உன் கோபம் புரியுது அபிராமி! உன்னைப் புறக்கணித்த தாத்தா மேல் உனக்கு கோபம் இருப்பதிலும் தவறில்லை! ஆனால் முழுத் தவறும் அவர் மேல் இல்லைம்மா... உன் அம்மா உன்னை இங்கே அழைச்சு வந்த விவரம் அவருக்குத் தெரியாது... தன் பிள்ளை இறந்து போனதைக் கேள்விப் பட்டு அவர் உன்னைத் தேடணும் என்றுதான் இருந்தார்... அப்போ உங்க அத்தை இல்லாததும் பொல்லாததும் சொல்லி அவரைக் குழப்பிட்டாங்க... தன் மகள் மேல் இருந்த நம்பிக்கையால் பெரியரும் அவங்க சொன்னதை எல்லாம் நம்பினார்... இப்போதான் முழு சொத்தையும் தாங்களே அனுபவிக்கணும் என்ற பேராசையில் அவங்க செய்த தில்லு முல்லு எல்லாம் தெரிய வந்தது... இது உனக்கு உரிமையான சொத்து அபிராமி... இதை நீ ஏற்றுக் கொண்டால்தான் உங்க தாத்தாவோட குற்ற உணர்வு நீங்கும்!" என்று தாத்தாவின் சார்பாக பேச, அபிராமிக்கு அதை ஏற்றுக் கொள்ளும் எண்ணம் வரவில்லை.

அவளது முகத்தையே ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்த பெரியவரைக் கண்ட கற்பகத்துக்கு பாவமாக இருந்தது.

"சரி என்று சொல்லு அபி!" என்ற கற்பகத்தின் தூண்டுதலில், அபிராமியும் சரி என்று தலை அசைக்க, "ரொம்ப நன்றி அபிம்மா!" என்ற பெரியவரின் உயிர், தன் நீண்ட நாள் குற்ற உணர்வு நீங்கிய நிம்மதியோடு பிரிந்தது.

அவரது காரியங்கள் முடிந்தவுடன் கிளம்ப எத்தனித்த அபிராமியை, "எங்கே போறே அபி? இது உன் வீடு! இனிமேல் நீ இங்கேதான் இருக்கணும்!" என்று தடுத்தார்.

அதைக் கேட்ட அபிராமிக்கு, பழைய நினைவில் ஒரு கசப்பான முறுவல் தோன்றியது.

"நீங்களாவது சொல்லுங்க அக்கா! என் பையனுக்கு அபியை கல்யாணம் செஞ்சு வைக்கணும் என்று அப்பா ரொம்ப ஆசைப்பட்டார்! என்ன இருந்தாலும் உறவு விட்டு போய் விடக் கூடாது பாருங்க!"

அந்த அத்தை கற்பகத்திடம் முறையிட, சர்க்கரையைத் தடவினாற் போன்ற அந்தப் பேச்சில் அபிராமிக்கு எரிச்சல் வந்தது.

இவ்வளவு கரிசனமும், தன் பெயரில் தாத்தா எழுதி விட்டுப் போயிருக்கும் சொத்தினால்தான் என்பது கூட புரியாத சிறு குழந்தையா அவள்?

இங்கே இருந்து எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிளம்ப வேண்டும் என்று எண்ணியவள், அந்த அத்தையின் முகத்தைக் கூடப் பார்க்க பிடிக்காதவளாய் வக்கீலிடம்,

"அங்கிள்... என் பெயரில் இருக்கும் சொத்தை எல்லாம் பணமா மாற்றி கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்! இங்கே இன்னொரு முறை வரக் கூட எனக்கு விருப்பமில்ல... நான் வராமலே இதைச் செய்ய என்ன ஃபார்மாலிடியோ, அதை சொன்னீங்கன்னா, அதன் படி செய்யறேன்!" என்றவள், அந்த அத்தையின் முகத்தில் தோன்றிய மாறுதலை கவனிக்காமல், கற்பகத்தையும் அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.

மீண்டும் தஞ்சாவூர் வீட்டுக்குள் நுழைந்த போது, இருவருக்கும் சக்தியின் நினைவு நெஞ்சை பலமாகத் தாக்கியது.

இரண்டு நாட்கள் அமைதியாகக் கழிய, கற்பகம் அபிராமியிடம் வந்தார்.

''அபி... நாம வேற ஏதாவது ஊருக்கு போய் விடலாமா?'' அவரது கேள்வியை ஆச்சரியத்துடன் எதிர்கொண்ட அபிராமிக்குமே, அதே எண்ணம்தான் ஓடிக் கொண்டிருந்தது.

சக்தியின் நினைவுகள் இடம் சம்மந்தப்பட்டதல்ல என்று இருவருமே உணர்ந்திருந்தாலும், இட மாறுதல் இப்போதைய மன நிலைக்கு கொஞ்சமாவாவது ஆறுதலாக இருக்கும் என்று தோன்றியது.

தஞ்சாவூர் வீட்டை, சக்தி தன் நண்பர்களோடு மருத்துவமனை கட்ட ஏற்பாடு செய்திருந்த அறக்கட்டளைக்கு கொடுக்கலாம் என்று அபிராமி சொன்ன போது, கற்பகமும் எந்த தடையும் சொல்லவில்லை.

சென்னையில் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து கொண்டு, இருவரும் சென்னைக்கு இடம் பெயர்ந்தனர்.

புது வேலையாலும் புது இடத்தாலும் இருவரின் மனக்காயங்களை ஆற்ற முடியவில்லை என்றாலும், இந்த மாற்றம் ஒரு வகையில் இருவருக்கும் தேவையானதாக இருந்தது.

அபிராமியின் மனம் மட்டும் தன் அலைப்புருதலை நிறுத்தவில்லை. அந்த மாதிரி நேரங்களில் அவளது மனநிலை உணர்ந்து கற்பகம், அவளிடம் தைரியம் தரும் வகையில் பேசுவது வழக்கம்.

''ஒவ்வொரு இழப்பும் நமக்கு காயங்களை மட்டும் தருவதில்லை அபி... கூடவே ஏதோ ஒரு பாடத்தையும் சேர்த்துதான் தரும்... நமக்கு நெருக்கமானவங்களை இழக்கும்போது, அவங்க மேல இருக்கிற அன்பை எப்படி காட்டணும் தெரியுமா? அவங்க என்ன மாதிரி விஷயங்களை செய்ய நினைச்சாங்களோ அதை நம்மால் முடிந்த அளவு செஞ்சு காட்டணும்!''

சக்தியின் கொள்கையே, ''உண்மையிலேயே உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவ வேண்டும்!'' என்பது தான்!

''புண்ணியம் சேர்க்கணும் என்ற எண்ணத்தில் செய்யும் பெரிய உதவியை விட, உண்மையிலேயே ஒருவருக்கு உதவி தேவைப்படும்போது செய்யும் சின்ன உதவிதான் உண்மையிலேயே உயர்ந்தது!'' என்று அவன் அடிக்கடி சொல்லும்போது,

''ஆஹா! திருக்குறளை கொஞ்சம் அப்படி இப்படி மாற்றி நீங்க சொன்ன மாதிரி சொல்றீங்களே அத்தான்!'' என்று அவனை வம்பிழுப்பது நினைவுக்கு வந்து அபிராமியின் கண்கள் நனைந்தது.

அவள் அப்படி அவன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் எண்ணத்தில் இருந்த போதுதான், சுந்தரியின் மூலமாக தான் செய்ய வேண்டியது என்ன என்று அவள் உணர்ந்தாள்.

தாத்தா கொடுத்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு பயன்படுத்தக் கூடாது என்ற முடிவில் இருந்தவள், தங்கள் இல்லத்துக்கு ஒரு சொந்த இடம் தேவை என்ற நிலையில், அதை பயன்படுத்தினாள்.

இல்லம் ஆரம்பித்த நாளில் இருந்து அபிராமியிடம் ஏற்பட்டிருந்த மாற்றம், கற்பகத்துக்கும் மன நிம்மதியைத் தந்தது.

சக்தியின் நினைவில் சோர்ந்து போவதும், தன்னை மறந்த நிலையில் வெறித்து பார்த்தபடி இருப்பதும் மெல்ல மெல்ல குறைந்து அடியோடு நின்று போனது.

முன்பு போல குறும்புகள் இல்லை என்றாலும், புன்னகை நிறைந்த முகத்துடன் அவள் இருந்ததே கற்பகத்துக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இரண்டு ஆண்டுகள் கழித்து, கற்பகம் அபிராமியிடம் அவளது திருமணத்தைப் பற்றிப் பேச, ''நான் நிம்மதியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் இந்த விஷயம் மட்டும் பேசாதீங்க அம்மா!'' என்றதோடு அபிராமி முடித்து விட, கற்பகத்தால் அப்படி விட முடியவில்லை.

அவரும் தன்னால் இயன்ற அளவு, அவளது மனதை மாற்றும் முயற்சியை செய்து வந்தார்.

இப்போது சூர்யாவைக் கண்டதும், தன் முயற்சி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை வந்ததோடு, சூர்யாவை விட ஒரு சிறந்த துணை அபிராமிக்கு அமைந்து விடாது என்பதால், என்ன செய்தேனும் அபிராமியின் மனதை மாற்றி விட வேண்டும் என்பதில் கற்பகம் உறுதியாக இருந்தார்.

கற்பகம் தங்கள் கடந்து வந்த பாதையை சொல்லி முடித்ததும், கற்பகத்தை ஒரு வித மரியாதையுடன் நோக்கிய பவானி, ''நீங்க கவலைப்படாதீங்க கற்பகம்! இன்னும் ஒரு முறை அபிகிட்ட இந்த விஷயத்தைப் பற்றி பேசுங்க... அவள் ஒத்துக் கொண்டால் நல்லது! இல்லைன்னா, நானே அவள் கிட்ட பேசறேன்!'' என்றபடி விடை பெற்றுக் கொண்டு போனார்.

அன்னை, தன்னிடம் சொல்லி இருந்த விஷயங்களைக் கேட்ட சூர்யாவுக்கு மனம் பாரமாக இருந்தது.

தான் விரும்பும் பெண், ஏற்கனவே ஒருவனை உயிராய் நேசித்திருக்கிறாள் என்ற எண்ணம் யாருக்குமே வலியைக் கொடுக்கும்தான்!

ஆனால், இப்படி ஒரு வேதனையை அவள் அனுபவித்திருக்கிறாளே என்று அவளுக்காகவே சூர்யாவின் மனம் வேதனைப்பட்டது.

இத்தனை வேதனையையும் தாண்டி, மற்றவர்களுக்கு ஆதரவாக இருக்கும் அவளது நிலை, அவள் மேல் மரியாதையை மேலும் அதிகப் படுத்தியதோடு, இனி அவள் வாழ்வில் வேதனையின் சாயலைக் கூட பட விடக் கூடாது என்ற உறுதியையும் ஏற்படுத்தியது.

* * *

அன்று இரவு, பவானி சொல்லி இருந்த படி அபிராமியிடம் திருமண விஷயத்தைப் பற்றி பேசினார் கற்பகம்.

எப்போதும்போல் தன் மறுப்பை சொல்லி விட்டு அபிராமி தன் அறைக்கு கிளம்ப,

''இன்றைக்கு எனக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகணும் அபி!'' என்ற கற்பகத்தின் குரலில் இருந்த ஏதோ ஒன்று, அபிராமியின் மனதை உலுக்கியது.

அவர் குரலில் இருந்தே அவர் ஏதோ முடிவெடுத்து விட்டார் என்று என்றெண்ணிய அபிராமி, கொஞ்சலில் இறங்கினாள்.

''அம்மா... இந்த பேச்சு வேண்டாம் என்றுதான் சொல்றேனே அம்மா! ப்ளீஸ் இதை இத்தோடு விட்டுடுங்க! என் செல்ல அம்மா இல்லை?''

''இல்லை... நான் உன் அம்மா இல்லை!''

அழுத்தமாக கற்பகத்திடம் இருந்து பதில் வர, ''என்னம்மா நீங்க...'' என்று அபிராமி ஆரம்பிக்க,

''அம்மான்னு சொல்லாதே... நான் உன் அம்மா இல்லை... அம்மாவா இருந்திருந்தா இத்தனை நாளா நீ உன் வாழ்க்கையை பாழாக்கி கொண்டிருப்பதைப் பார்த்து சும்மா இருந்திருக்க மாட்டேன்... நீயும் என் கண்ணீரைப் பார்த்துட்டு சும்மா இருந்திருக்க மாட்டே...'' ஆதங்கமாய் கற்பகத்திடமிருந்து வெளி வந்த வார்த்தைகள் அபிராமியின் மனதில் வலியை உண்டாக்கியது.

''ப்ளீஸ்மா... நீங்க ஒத்துக்கலைன்னாலும் நீங்கதான் எனக்கு அம்மா... துவண்டு போய் இருந்த உள்ளத்துக்கு சக்தி கொடுத்து, நாலு பேருக்கு உதவியா இருக்கிற அளவுக்கு என்னை உயர்த்தியது நீங்கதான்...''

''அபி... நீ நாலு பேருக்கு உதவியா இருக்கிறதைப் பார்த்து எனக்கு எப்பவும் பெருமைதான்... ஆனால் சந்தோசம்? அது நீ உனக்குன்னு ஒரு வாழ்க்கையை அமைச்சுகிட்டு சந்தோஷமா இருக்கும்போதுதான் எனக்கு கிடைக்கும்...''

''அம்மா ப்ளீஸ்... என்னை புரிஞ்சுக்கோங்க... நான் இப்பவே ரொம்ப சந்தோஷமாதான் இருக்கேன்! என்னால கல்யாணத்தைப் பற்றி நினைச்சு கூட பார்க்க முடியாதும்மா... ப்ளீஸ்!''

அபிராமியின் குரலில் இருந்த தவிப்பு அபிராமியை இளக்கினாலும், இது இளகுவதற்கான நேரமில்லை என்று உணர்ந்தவராய், அழுத்தமாகவே நின்றிருந்தார்.

என்ன சொல்லி புரிய வைப்பது என்ற தவிப்போடு அபிராமி நின்றிருக்க, கதவை தட்டும் ஒலி கேட்டு கதவைத் திறந்தாள் அபிராம்.

அங்கே பரபரப்புடன் நின்றிருந்த சுந்தரியைப் பார்த்ததும், ''என்னக்கா? என்ன விஷயம்?'' என்று அபிராமி விசாரிக்க,

''அபி... புதுசா இல்லத்துக்கு வந்திருக்கிற பொண்ணோட பொருளை வைக்கிறதுக்காக, தீபாவோட அலமாரியை தர சொல்லி இருந்தே இல்லை? தீபாவோட துணி மணிகளை எடுக்கும்போது, இந்த லெட்டர் கிடைச்சது! உன் பேரை போட்டு எழுதி இருக்கா பாரு!'' என்றபடி சுந்தரி கொடுக்க, அந்த கவரை ஆச்சரியத்துடன் வாங்கினாள் அபிராமி.

''சரி அபி... நான் போறேன்... வேலை இருக்கு!'' என்று சுந்தரி சென்றதும், அந்த கவரை யோசனையுடன் பார்த்த அபிராமிக்கு, ஏனோ நெஞ்சில் இனம் புரியாத கலக்கம் எழுந்தது.

தயக்கத்துடன் கடிதத்தைப் பிரித்து படித்த அபிராமி, பிரம்மை பிடித்தவள் போல நிற்க,

அப்படி என்ன இருக்கிறது அந்த கடிதத்தில்? என்று ஆச்சரியத்தோடு அபிராமியின் அருகில் வந்த கற்பகம் அந்த கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

''அன்புள்ள அபி அக்காவுக்கு,

இந்த முறை டாக்டரைப் பார்த்து விட்டு வந்ததில் இருந்து எனக்கு நம்பிக்கை குறைவதைப் போல இருக்கு அக்கா...

சுதாகர் போன போது நானும் இந்த உலகத்தை விட்டு போய் விட வேண்டும் என்றுதான் நினைத்தேன்... ஆனால் அன்னபூரணி அம்மா என்னைக் காப்பாற்றி உங்ககிட்ட ஒப்படைத்த போது, உங்கள்

ஆறுதல் வார்த்தைகள் என்னை என் குழந்தைக்காக வாழ வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு உண்டாக்குச்சு...

ரெட்டை குழந்தைகள் என்றபோது, எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை... என் குழந்தைகளுக்குக் கூடப் பிறந்த பந்தம் என்று ஒண்ணு இருக்கு என்ற சந்தோசம் எனக்கு இன்னும் நம்பிக்கையைக் கொடுத்தது...

ஆனால்... என்னோட சந்தோஷத்துக்கு ஆயுள் கம்மி தான் என்று டாக்டர்கிட்ட போய் விட்டு வந்த பிறகு தெரிஞ்சது...

அக்கா... நீங்க எனக்கு எவ்வளவோ உதவிகள் செஞ்சிருக்கீங்க...

இன்னும் ஒரே ஒரு முக்கியமான உதவியை உங்ககிட்ட இருந்து நான் எதிர்பார்க்கிறேன்...

எனக்கு இந்த பிரசவத்தில ஏதாவது ஆகி விட்டது என்றால், நீங்க என் குழந்தைகளை ஒரு நல்ல குடும்பத்தில் குழந்தைகளா வளர்வதற்கான ஏற்பாட்டை செய்யணும்... என்னையும் என் சுதாவையும் போல, எங்கள் குழந்தைகளும் அனாதைகளா வளரக் கூடாது... அவங்களுக்கு ஒரு அன்பான அம்மா, அப்பா கிடைக்கணும்...

இன்னொரு வேண்டுகோளும் இருக்கு... என் குழந்தைகள் ரெண்டு பேரும் ஒரே குடும்பத்தில் வளரணும்... கடவுளா பார்த்து கொடுத்த அந்த சகோதர பந்தத்தை அவங்க இழந்துடக் கூடாது...

இந்த உதவியை நீங்க செய்வீங்க என்ற நம்பிகை எனக்கு இருக்கு...

நீங்க செய்த, செய்யப் போற எல்ல உதவிகளுக்கும் என் நெஞ்சார நன்றி சொல்லிக்கறேன்...

அக்கா, இன்னும் ஒரு விஷயம்: நீங்க அம்மாவின் விருப்பப்படி ஒரு கல்யாணத்தை செஞ்சுகிட்டு என் குழந்தைகளை உங்க குழந்தைகளா ஏத்துகிட்டா, அது தான் என் ஆத்மாவுக்கு ரொம்பவே சந்தோசம் கொடுக்கும் செயலா இருக்கும்.

ஆதரவற்ற பெண்களுக்கு பக்க பலமாய் இருக்கும் நீங்க, உங்க தனிப்பட்ட வாழ்க்கையிலையும் சந்தோஷயா இருக்கணும் என்று நான் ஆசைப்படறேன். இதை உங்ககிட்டே நேரில் சொல்ற அளவுக்கு எனக்கு தைரியம் இல்லை. இதை என்னோட கடைசி ஆசையாய் நினைச்சு நிறைவேற்றுவீங்க என்ற நம்பிக்கையுடன்...

தீபா.

தீபாவின் கடிதம் அபிராமிக்கு எந்த அளவுக்கு வேதனையைக் கொடுத்ததோ, அந்த அளவுக்கு கற்பகத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

தீபா இங்கே வந்த சமயம், அவளுக்கு தைரியம் கொடுக்கவென்று எண்ணி அபிராமியின் கதையை சொன்னது எவ்வளவு நல்லதாகி போயிற்று என்று தோன்றியது.

கடவுளாகப் பார்த்து இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் என்று எண்ணிய கற்பகம், கடவுளுக்கும், தீபாவுக்கும் மனதார நன்றி சொன்னார்.

அபிராமியின் திகைத்த தோற்றம், மனதுக்கு வருத்தமாக இருந்தாலும், அவளது வாழ்க்கை நன்றாக இருப்பது தானே முக்கியம் என்று எண்ணியவர், அபிராமியை அழைத்து வந்து சோபாவில் அமர்த்தி தானும் அருகில் வந்து அமர்ந்தார்.

"அபி... இங்கே பாரு... ஏன் இப்படி அதிர்ச்சியா இருக்கே... தீபாவோட ஆசை நியாயமானதுதானே? அத்தோட அவளோட ஆசையையும் சொல்லி இருக்கா பாரு... உனக்கோ இந்த குழந்தைகள் என்றால் உயிர்... நான் பார்த்திருக்கும் மாப்பிள்ளைக்குமே, நீ குழந்தைகளைத் தத்தெடுக்கிற விஷயத்துல எந்த ஆட்சேபனையும் இல்லை... இதெல்லாம் ஏதோ கடவுளா பார்த்து செஞ்ச மாதிரி இருக்கு... இப்பவும் நீ கல்யாணத்துக்கு சம்மதிக்காம இருந்தால் அது நீ இந்த குழந்தைகளுக்கு செய்யற அநியாயம் இல்லையா?"

அபிராமி குழந்தைகளின் மேல் வைத்திருந்த அளவு கடந்த அன்பின் மேல் இருந்த நம்பிக்கையில் கற்பகம் பேச,

அவரை இன்னதென்று புரிந்து கொள்ள முடியாத ஒரு பார்வை பார்த்த அபிராமி, எழுந்து தொலைபேசியின் அருகில் செல்ல, கற்பகம் குழப்பத்தோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"அன்னபூரணி மேடம்தானே? மேடம்... நான் அபிராமி பேசறேன்... நாளைக்கு தீபாவோட குழந்தைகளை அங்கே உங்க இல்லத்தில் கொண்டு வந்து விடறேன்... ம்ம்ம்... இல்லை மேடம், ரெண்டு பேரையும் ஒரே குடும்பத்தில தத்து கொடுக்கிற மாதிரி பாருங்க... அதுதான் தீபாவோட ஆசை... ம்ம்ம்... சரி வைச்சிடறேன்... நாளைக்கு பார்க்கலாம்."

நிதானமான குரலில் அன்னபூரணியிடம் அபிராமி சொன்ன வார்த்தைகள், கற்பகத்தின் மனதில் இருந்த நம்பிக்கையை அழிக்க, அதிர்ச்சியோடு அவளை பார்த்துக் கொண்டிருந்தவரின் அருகில் வந்த அபிராமி,

"இந்த குழந்தைகள் மேல் எனக்கு உயிர்தான்... ஆனால் அதுக்காக என்னால ஒரு கல்யாணம் செஞ்சுக்க

முடியாதும்மா... முடியவே முடியாது... என்னை இதுக்கு மேல வற்புறுத்தாதீங்க! என்கிட்டே போராடற சக்தி இல்லை..." என்று கையெடுத்து கற்பகத்தைக் கும்பிட்டவள், அதற்கு மேல் தனக்கு சக்தி இல்லை என்பதாய் தரையில் அமர்ந்து விம்மி அழ ஆரம்பித்தாள்.

அவளைத் தேற்றவும் தோன்றாமல் விக்கித்து போய் நின்றார் கற்பகம்.

21

தீபாவின் கடிதத்தைப் படித்த பிறகு, கற்பகத்தின் மனதில் நம்பிக்கை வளரத் தொடங்கி இருந்தது.

இந்த இரண்டு மாதத்தில் குழந்தைகள் இருவரும் அபிராமியின் உயிர் மூச்சாகி போனதை உணர்ந்திருந்தவருக்கு, தீபாவின் கடிதம் வரப் பிரசாதமாகத் தெரிந்தது.

கடவுள் தனக்கு உதவி செய்யவே தக்க சமயத்தில் அந்தக் கடிதத்தை வெளி வரச் செய்திருக்கிறார் என்றெல்லாம் அவர் நம்பிக்கையுடன் நினைத்ததில், அபிராமி அன்னபூரணியிடம் சொன்ன வார்த்தைகள் அமிலத்தை வார்த்தன.

அபிராமி, அழுது சோர்ந்து, தானாகவே தெளிந்து அவளது அறைக்குள் சென்று முடங்கிக் கொள்ள, கற்பகத்தின் நிலைதான் பரிதாபமாக இருந்தது.

சூர்யா மாதிரி ஒரு கணவன், பவானி மாதிரி ஒரு மாமியார் அமையும் பாக்கியத்தை ஏற்றுக் கொள்ள

மாட்டேன் என்று அடம் பிடிக்கும் அபிராமியின் மேல், வாழ்க்கையில் முதல் முறையாக அவருக்குக் கோபம் எழுந்தது.

பவானிக்கு, அங்கே அபிராமி என்ன பதில் சொல்கிறாளோ என்று யோசனையாக இருந்தது. கற்பகமே போன் செய்வார் என்று அவர் காத்திருக்க வெகு நேரமாகியும் அவரிடம் இருந்து எதுவும் தகவல் வராமல் இருக்கவே, தானே போன் செய்து பார்க்கலாம் என்றெண்ணிய பவானி, கற்பகத்தை அழைத்தார்.

பவானி போன் செய்ததும், நடந்த அனைத்தையும் அவரிடம் கலங்கிய குரலில் விவரித்த கற்பகத்திடம், ''தைரியமா இருங்க! நாளைக்கு நானே அபிகிட்ட பேசறேன்!'' என்று ஆறுதல் அளித்தார் பவானி.

பவானியிடம் பேசி விட்டு, அபிராமியின் அறைக்கு வந்த கற்பகம், கதவு திறந்திருப்பதை கண்டு உள்ளே எட்டிப் பார்க்க, குழந்தைகளின் அருகில் அமர்ந்து கொண்டு, அவர்களை தன் கரங்களால் வருடிய வண்ணம் அமர்ந்திருந்த அபிராமி தென்பட்டாள்.

அன்னபூரணியிடம் உணர்ச்சிவசப் பட்டு சொல்லி விட்டாளே தவிர, குழந்தைகளைப் பிரிவது அவளால் முடியாது என்று கற்பகத்துக்குத் தோன்றி விட, ஒரு நிம்மதியோடு, நாளை பவானியின் முயற்சிக்கு பலன் இருக்க வேண்டும் என்று வேண்டியபடியே, தன் அறைக்குச் சென்றார் அவர்.

அடுத்த நாள் காலை இல்லத்துக்கு கிளம்பிய அபிராமியிடம்,

''குழந்தைகளை எப்போ தாய் இல்லத்துக்கு கூட்டிகிட்டு போகணும்?'' என்று கற்பகம் வினவ,

அந்தக் கேள்வி அபிராமியின் கண்களில் ஒரு வலியைத் தோற்றுவித்ததைக் கண்ட கற்பகம், ''இவ்வளவு அன்பு இருக்கும்போது, இவர்களுக்காகவேனும் திருமணம் செய்து கொள்ளக் கூடாதா?!'' என்று எண்ணி கோபப் பட்டாலும், அவளின் வலி அவருக்கும் வேதனையைத் தரத்தான் செய்தது.

''இன்னைக்கு சாயந்திரம் கூட்டிட்டு வரச் சொல்லி இருக்காங்க!'' என்று உணர்ச்சியற்ற குரலில் சொன்னவள், அமைதியாக சாப்பிட்டு விட்டு கிளம்பினாள்.

அவள் இல்லத்துக்கு சென்ற சிறிது நேரத்திலேயே, பவானி வர, அவரை ஆச்சரியத்துடன் வரவேற்ற அபிராமி,

''என்ன ஆன்ட்டி? என்ன விஷயம்!'' என்று விசாரித்தாள்.

''எல்லாம் நல்ல விஷயம்தான் அபி! சூர்யாவுக்கு கல்யாணத்துக்கு பொண்ணு பார்த்திருக்கோம்!'' என்று அவர் சொன்னதும்,

''வாவ்! ரொம்ப நல்ல விஷயம்! என் கிட்ட சூர்யா சொல்லவே இல்லையே?'' என்றாள் அபிராமி.

''பொண்ணு பார்த்தாச்சு... எங்க எல்லாருக்கும் பிடிச்சாச்சு! இன்னும் பெண்ணோட சம்மதம் மட்டும்தான் பாக்கி!''

''சூர்யாவோட நல்ல மனசுக்கு எல்லாம் நல்லபடியாகவே நடக்கும் ஆன்ட்டி! அந்தப் பெண்ணும் கண்டிப்பா சம்மதம் சொல்லிடுவாங்க பாருங்க!'' என்று முகமலர்ச்சியுடன் அபிராமி சொல்ல,

''நானும் அப்படித்தான் எதிர்பார்க்கிறேன்!'' என்று ஒரு மாதிரிக் குரலில் சொன்னவர்,

''சூர்யாவைப் பற்றி நீ என்ன நினைக்கிறே அபி?'' என்று வினவினார்.

''நல்ல குணம்! மற்றவங்களுக்கு உதவி செய்யற மனசு! ரொம்ப மரியாதையானவர்... மொத்தத்தில் ரொம்ப நல்ல மனிதர்!''

அபிராமியின் பதிலில் பவானியின் முகம் மலர்ந்தது.

''அந்த நல்ல மனுஷனை நீ ஏன் கல்யாணம் செஞ்சுக்கக் கூடாது அபி?'' என்று திடீரென்று பவானி கேட்ட கேள்வியில், அபிராமி திகைத்துப் போனாள்.

அதிர்ச்சியோடு அமர்ந்திருந்தவளை ஆதுரத்துடன் நோக்கிய பவானி, ''சூர்யா உன்னை விரும்பறான் அபி... நீ ஏன் கல்யாணத்துக்கு சம்மதிக்கலை என்று உன் அத்தை சொன்ன விஷயங்களைக் கேட்ட பிறகு, அவனோட நேசம் இன்னும் ஜாஸ்தியாகி இருக்கு... உங்க கல்யாணம் நடந்தால் நீங்க மட்டுமில்லை, நான், உங்க அத்தை எல்லாருமே சந்தோஷமா இருப்போம் அபி! நீ உன் பிடிவாதத்தை விட்டுட்டு, இந்த கல்யாணத்துக்கு சம்மதிக்கணும் அபி! ப்ளீஸ்!'' என்று சொன்னதும், சிலையாய் அமர்ந்திருந்த அபிராமிக்கு உணர்வு வந்தது.

கற்பகம் தன்னிடம் நேற்று பேசியதன் பின்புலம் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

தன்னையும் அறியாமல், சூர்யாவின் மனதில் சஞ்சலம் உருவாகக் காரணமாக இருந்திருக்கிறோமே என்றெண்ணி, அவள் மனம் வேதனை அடைந்தது.

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்து அமர்ந்தவள், ''சூர்யா ரொம்ப நல்லவர் ஆன்ட்டி... அவருக்கு அவரை மட்டுமே விரும்பும் ஒரு நல்ல பொண்ணு கிடைப்பாள்!

அதுதான் அவருக்கும் நல்லது!'' என்று உறுதியான குரலில் சொல்ல,

''ஆனால், அவனுக்கு உன்னைத்தானே அபி பிடிச்சிருக்கு!'' என்ற பவானியிடம்,

''ப்ளீஸ் ஆன்ட்டி! நான் சூர்யாவை ஒரு நல்ல நண்பராதான் நினைக்கிறேன்!'' என்றாள் அபிராமி.

''அந்த நல்ல நண்பன் வாழ்க்கைத் துணையாவும் இருக்கலாமே அபி?''

''எனக்கு ஒரு துணை அவசியம் என்று தோணலை ஆன்ட்டி!''

''நீ உன்னோட நிலையில் இருந்து மட்டும் யோசிக்கிறே அபி! உன் நலத்தை மட்டுமே உயிர் மூச்சா நினைக்கிற உங்க அத்தையைப் பற்றி யோசிச்சு பாரேன்?'' என்ற பவானியின் ஆதங்கமான கேள்வியில், அபிராமிக்கு கண் கலங்கியது.

''அவங்களுக்காக நான் எது வேணுமானாலும் செய்வேன் ஆன்ட்டி! திருமணத்தைத் தவிர!''

உறுதியாக வந்த அபிராமியின் பதிலில் அவளை வெறித்து நோக்கிய பவானி, ''ஏன் அபி? கணவனை இழந்த சித்ராவுக்கு ஒரு நல்ல வாழ்வு ஏற்படுத்திக் கொடுத்த போது, உன் மேலே எனக்கு மரியாதை வந்துச்சு! ஆனால், உன் அத்தானை காதலிச்சதுக்காக, நீ கல்யாணமே செஞ்சுக்காமல் காலம் முழுக்க அவருக்கு விதவையா இருக்கணும் என்று நினைக்கிறாயா? இது சரியா?'' என்று சொல்லிக் கொண்டிருந்த வேளையில்,

சட்டென்று தன் இருக்கையில் இருந்து எழுந்த அபிராமி, ''அப்படி சொல்லாதீங்க!'' என்று அதட்டினாள்.

அந்த அதட்டலில் திகைத்த நிமிர்ந்த பவானி, ''நான் என் அத்தானுக்கு விதவையா வாழலை! அவருக்கு மனைவியா, தீர்க்க சுமங்கலியா வாழ்ந்துட்டு இருக்கேன்! அவரோட குழந்தைகளுக்கு தாயாய் வாழ்ந்துட்டு இருக்கேன்!'' என்று பெருமிதத்துடன் சொன்ன அபிராமியைக் கண்டு அதிர்ந்து போனார்.

அவரது திகைப்பைக் கண்டு, தன்னை சமாளித்துக் கொண்டு அமர்ந்த அபிராமி, ''உங்களுக்கு வேடிக்கையா தெரியலாம்! ஆனால், நான் இந்த ஐந்து வருஷமா அவரோட, கற்பனையில குடும்பம் நடத்திட்டு இருக்கேன்... அந்த கற்பனை உலகம் எனக்கும், என் அத்தானுக்கும், என் குழந்தைகளுக்கும் மட்டுமே சொந்தம்! அதில வேற யாருக்குமே அனுமதி இல்லை! அந்த வாழ்க்கைதான் எனக்கு சுவாசமா இருக்கு! எனக்கு சக்தி தருது! என்னை ஒரு மனுஷியா உலவ வைக்குது!'' என்று உணர்ச்சிவசப்பட்ட குரலில் சொல்லிக் கொண்டு போக,

''அபி...'' என்று பவானி அழைத்ததைக் கவனிக்காத அபிராமி, தன்னையும் மீறி தன் கற்பனை உலகத்தில் மூழ்கிப் போனாள்.

''அந்த உலகத்தில, எனக்கு சந்தோஷத்தைத் தவிர வேற எதுவும் இல்லை! எங்களுக்கு இரண்டு குழந்தைகள்! ட்வின்ஸ்! ஒரு பொண்ணு, ஒரு பையன்! ரெண்டு பேரும் அப்படியே அவங்க அப்பா மாதிரி! குணம், அழகு எல்லாத்திலையும்! அதிலயும், என் பொண்ணுக்கு அவங்க அப்பா மாதிரியே கன்னத்தில் குழி விழும்!'' என்று முகம் விகசிக்க, கண்கள் ஜொலிக்க சொல்லிக் கொண்டு போனவளை மிரண்டு போய் பார்த்துக் கொண்டிருந்த பவானி,

அவள் தன் கற்பனை உலகத்தில் இருந்து மீளுவதாக இல்லை என்று உணர்ந்ததும், ''அபி!'' என்று கொஞ்சம் அதட்டலாக அழைக்க, நடப்புக்கு மீண்ட அபிராமி, நாற்காலியில் அமர்ந்து, கொஞ்ச நேரம் அமைதியாகத் தன் விரல்களை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

பவானி, ''அபி...'' என்று மென்மையாக அழைத்ததும், ''இதைப் பற்றி நான் அத்தை கிட்ட கூட சொன்னதில்லை ஆன்ட்டி! என் மனசை மாற்றும் முயற்சியில் நேரத்தை விரயம் செய்யாமல், சூர்யாவுக்கு நீங்க வேற ஒரு நல்ல பெண்ணைப் பார்க்கணும் என்பதற்குத்தான் இதை உங்ககிட்ட சொல்ல வேண்டியதா போச்சு! நீங்க என்னை புரிந்து கொள்வீங்க என்று நினைக்கிறேன்!'' என்று எழுந்து நின்ற அபிராமி, கை கூப்பி விடை கொடுக்க, அதற்கு மேல் எதுவும் பேசத் தோன்றாமல், பேச முடியாமல் அங்கிருந்து கிளம்பினார் பவானி.

கற்பகத்தை தங்கள் வீட்டுக்கு அழைத்திருந்தார் பவானி.

''அவள் கற்பனையில சக்தி கூட வாழ்ந்திட்டு இருக்கேன்னு சொல்லும்போது கூட நான் பெரிசா நினைக்கலை கற்பகம்! ஆனால், குழந்தைகளைப் பற்றி சொல்லும்போது, அவள் முகத்தில, கண்ணில, குரலில் ஒரு உண்மையான தாயோட பெருமிதத்தை என்னால் உணர முடிஞ்சது... அது அவளோட கற்பனை வாழ்க்கையின் வீரியத்தை எனக்கு புரிய வைச்சது! அவளோட மனசை மாத்தறது முடியாத காரியம்னுதான் தோணுது!''

பவானி அபிராமியைப் பற்றி சொன்னதைக் கேட்ட கற்பகம் அதிர்ச்சியில் ஆழ்ந்தார். இத்தனை நாளாய், அவள் சக்தியின் இழப்பை ஏற்றுக் கொண்டு வாழப்

பழகிக் கொண்டாள் என்று தான் நினைத்திருந்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்று புரிந்தது.

இரவு எட்டு மணியானால், தன் அறைக்கதவை அடைத்துக் கொண்டு விட்டு, காலை வரை எக்காரணம் கொண்டும் வெளியே வராமல் இருக்கும் அபிராமியின் செயலுக்கு இப்போதுதான் அர்த்தம் புரிந்தது.

அவ்வளவுதானா? இந்த ஜென்மத்தில் கற்பனையில் தான் அவளுக்கு குடும்ப வாழ்க்கையா? என்று எண்ணியவளுக்கு, மனம் உடைந்தது.

அவரது மனம் புரிந்து, பவானி அவரது கரத்தைப் பற்றிக் கொண்டார்.

இவர்கள் இருவரின் மன நிலைக்கு மாறாக சூர்யாவின் மனம் வேறு யோசனையில் ஆழ்ந்தது.

ஐந்து வருடங்களாய், மனதுக்குள் தன் அத்தானுடன் குடும்பம் நடத்தினாலும், அதைக் கொஞ்சம் கூட வெளிக் காட்டாமல், இயல்பு வாழ்க்கையை வாழ முடியுமா? என்ற எண்ணம் அவன் மனத்தைக் குடைந்தது.

அவளது இந்த இரட்டை வாழ்க்கை, அவளுக்கு ஏதாவது ஆபத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற எண்ணம் தோன்ற, தன் அறைக்குச் சென்றவன், ஒரு போன் செய்து விட்டு,

''அம்மா! நான் கொஞ்சம் வெளியே போய் விட்டு வரேன்!'' என்று அன்னையிடம் கூறி விட்டு,

''ஆன்ட்டி! வாங்க... உங்களை போற வழியில வீட்டில் டிராப் பண்ணிட்டு போறேன்!'' என்று அவரையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

போகும் வழியில், ''ஆன்ட்டி! அபிராமியின் நடத்தையில எப்பவாவது, அவளோட கற்பனை வாழ்க்கை வெளியே தெரியும்படி ஏதாவது விஷயம் நடந்திருக்கா?'' என்று விசாரித்தான்.

''இல்லை தம்பி! அப்படி எதுவும் நடந்ததில்லை! இன்னும் சொல்லப் போனால், சக்தியைப்பற்றி அவள் இத்தனை வருஷத்தில ஒரு முறை கூட பேசினதில்லை!'' என்று குழப்பத்துடன் சொல்ல, அதன் பிறகு தீவிரமான யோசனையில் ஆழ்ந்த சூர்யா, கற்பகத்தை வீட்டில் விட்டு, சென்ற இடம், அவர்களது குடும்ப மருத்துவரின் மருத்துவமனை!

* * *

தன் அறையில் படுத்திருந்த அபிராமியின் மனம், குழந்தைகளைத் தாய் இல்லத்தில் விட்டு விட்டு வந்ததில் இருந்தே, வேதனையில் உழன்று கொண்டிருந்தது.

'எனக்கு என் அத்தானுடன் வாழும் இந்த வாழ்க்கையே போதும்!' என்று கண்கலங்க தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

தன் அறைக்குள் நுழைந்ததுமே, தன்னியல்பாய் தன் கற்பனை உலகத்துக்குள் நுழைந்து கொள்ளும் அபிராமியால் இன்று ஏனோ அது முடியவில்லை.

இதுநாள் வரை, தனக்குள் பொக்கிஷமாய் பொத்திக் காத்த விஷயத்தை வெளியில் பகிர்ந்து கொண்டதாலோ என்னமோ, அவளது மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தது.

ஆழ் மனப் பெட்டகத்தில், புதைந்திருந்த பழைய நினைவுகள், மேலெழும்பிக் கொண்டு வந்து அவளை அலைக்கழித்தன!

தான் தன் கனவுக் குடும்பத்தை துவங்கிய நாள் கண் முன் காட்சியாய் விரிந்தது.

* * *

சென்னைக்கு இடம் பெயர்ந்து, வேலையில் சேர்ந்த பிறகும், அபிராமியின் மனதில் பெரிய மாற்றம் ஏற்பட வில்லை!

'அத்தான்! அத்தான்!' என்று மனம் அரற்றுவதும் குறைந்தபாடில்லை!

சக்தி மருத்துவ முகாம் சென்ற அன்று, தான் அவ னிடம் நெகிழ்ந்து நின்றது நினைவுக்கு வந்து, மனமும் உடலும் ஒரு சேர, அவனது அணைப்புக்கு ஏங்கித் தவித்தது!

'இனி இந்த அணைப்பு உனக்கு கிடைக்காது! மனதைத் தேற்றிக் கொள்!' என்று மூளை சொன்னதை ஏற்கும் நிலையில் அவளது மனம் இல்லை!

'அத்தான் இனி வர மாட்டான்!' என்ற எண்ணம், அவளது தவிப்பை அதிகமாக்கியதே தவிர, குறைக்க வில்லை!

இந்த தவிப்பும் வேதனையும் தன் உயிர் இருக்கும் வரை தொடரும், என்று எண்ணியவளுக்கு மீண்டும் உயிரைப் போக்கிக் கொள்ளும் எண்ணம் கூடத் தோன் றியது!

தான் கற்பகத்திடம் கொடுத்த சத்தியத்தையும், தான் இல்லாத போது அவள்தான் அன்னையைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று சக்தி சொன்னதையும், நினை வுக்கு கொண்டு வந்து தன் எண்ணத்தைத் துடைத்து

எறிந்தவளுக்கு, அத்தானுக்காக ஏங்கும் தன் உள்ளத் தவிப்பைப் போக்கும் வழி தெரியவில்லை!

சக்தியின் புகைப் படத்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, ''ஏன் அத்தான் என்னை விட்டு போனீங்க? உங்களை விட்டு என்னால் இருக்க முடியாது என்று உங்களுக்கு தெரியாதா? என்னைத் தவிக்க விட்டுட்டு ஏன் போனீங்க?'' என்று வாய் விட்டு அழுதபடி, அவனது புகைப் படத்தை முகத்தோடு வைத்து அழுத்திக் கொண்டவளுக்கு,

''நான் உன்னை விட்டுட்டு எங்கேயும் போகலை கண்ணம்மா! உன் கூடவேதாண்டா இருக்கேன்!'' என்று சக்தியின் குரல் கேட்பதைப் போலிருந்தது.

சட்டென்று அழுகையை நிறுத்தி விட்டு, சுற்றும் முற்றும் கண்களை அலைய விட்டவளின் பார்வை கையில் இருந்த புகைப் படத்தில் நிலைக்க, அதில் இருந்த சக்தி, கண் சிமிட்டி தன்னைப் பார்த்து சிரிப்ப தைப் போன்ற உணர்வில், அவளது உடல் சிலிர்த்தது.

அவனது புகைப் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, அந்த விபத்து ஏற்படாமல், நல்ல விதமாக சக்தி வந்திருந்தால், இந்நேரம் அவள் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்? என்ற கற்பனையில் ஆழ்ந்தாள்.

எளிய திருமணம்! அன்பே உருவான கணவன்! சந்தோசம் மட்டுமே நிறைந்திருக்கும் வாழ்க்கை!

அவளது அத்தான் அவளை உயிராய்த் தாங்கி இருப் பான்! அவளும் அவனது காரியம் யாவிலும் கைகொடுக் கும் மனைவியாக இருந்திருப்பாள்!

அவளது வாழ்க்கை ஒரு நந்தவனமாய் மணம் வீசி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை!

அந்த இனிய கற்பனை தந்த சந்தோஷத்தில், கண்கள் சொருக படுக்கையில் சரிந்தவள், வெகு நாளைக்குப் பிறகு அமைதியாக உறங்கினாள்.

'அத்தான் இல்லை! இனி வரவே மாட்டான்!' என்ற உண்மை தந்த தவிப்பை விட, அவள் கண்ட கற்பனை அவளுக்கு சந்தோஷத்தைத் தர, அந்த சந்தோஷத்தை விட்டு விட அவளுக்கு மனமில்லை!

அன்று தோன்றிய கற்பனை, நாளுக்கு நாள் வளர்ந்து, சுவாசத்தைப் போல இன்றியமையாததாக மாறி, அவள் ஆன்மாவோடு கலந்தது.

தனக்கென சிருஷ்டித்துக் கொண்ட அந்த கற்பனை உலகில் அவள் அபிராமி இல்லை! தனது அத்தானின் கண்ணம்மா மட்டுமே!

* * *

தன் பழைய நினைவில் இருந்து மீண்ட அபிராமிக்கு, தன்னுடைய கற்பனை வாழ்க்கையாவது நீடிக்குமா என்ற பயம் எழுந்து மனம் படபடத்தது.

''இல்லை! இந்த வாழ்க்கையை என்னிடம் இருந்து யாராலும் பறிக்க முடியாது!'' என்று மீண்டும் மீண்டும் தனக்குள் சொல்லிக் கொண்டவள், தன்னுடைய கற்பனை வாழ்க்கைக்குள் பிரவேசித்து, அதனுள் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள்.

கண்ணம்மாவின் காதல்

''என் செல்ல கண்ணம்மா! என்னடா ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்ற கணவனின் அக்கறையான குரலில் நெகிழ்ந்து, அவனது தோளில் முகம் புதைத்த கண்ணம்மா, சிறிது நேரம் கழித்து நிமிர்ந்து, அவனது கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு,

''என்னை விட்டு எங்கேயும் போக மாட்டீங்கதானே அத்தான்?'' என்று கண்களில் ஏக்கத்தை நிரப்பி, கம்மிய குரலில் வினவ,

''என் கண்ணம்மாவை விட்டுட்டு நான் எங்கேடா போவேன்? ஏன்டா இப்படி எல்லாம் கேட்கிறே?'' என்றவன் குரலில் இருந்த காதலில் கரைந்த கண்ணம்மா,

''இன்னும் கொஞ்ச நாளைக்கு கேம்ப் அது இதுன்னு எங்கேயும் போகக் கூடாது!'' என்றாள்.

ஆச்சரியமாகப் பார்த்தாலும் ''சரி!'' என்றான் கணவன்!

''என் கூடவே இருக்கணும்!''

''சரி!'' என்று தலையாட்டியவனின் குரலில் கேலி இருந்ததோ?

''என்ன கிண்டல் வேண்டி இருக்கு?'' என்று அதட்டிய மனைவியிடம்,

''அச்சோ! நான் போய் என் கண்ணம்மாவை கிண்டல் செய்வேனா? அப்புறம் அவளுடைய சலுகை எல்லாம் எனக்கு கிடைக்காமல் போய் விடுமே?'' என்று பயந்தவன் போல கணவன் சொல்ல,

தன்னை மீறி சிரித்த கண்ணம்மா, ''அப்படியே பயப்படற மாதிரி நடிக்கிறதைப் பாரு!'' என்று செல்லமாய்த் தன் அத்தானின் காதைப் பிடித்து திருக,

''ஸ்... ஆ... வலிக்குது! விடுடி ராட்சசி!'' என்று அவன் போலியாய்க் கத்த,

''ராட்சசியா!? நானா? இருங்க... இன்னைக்கு உங்களைப் பட்டினி போட்டால்தான் சரி வரும்!'' என்று கறுவினாள் மனைவி!

''சும்மாதானே சொன்னேன்! உனக்குத் தெரியாதா? இந்த பட்டினி கிட்டினி எல்லாம் வேண்டாம்! வேற ஏதாவது தண்டனை கொடு! வாங்கிக்கறேன்!'' என்று கணவன் கெஞ்சி, கொஞ்சினான்.

''என்ன தண்டனை கொடுக்கலாம்!'' தாடையில் ஒரு விரல் தட்டி, கண்களை உருட்டியபடி யோசிக்கும் மனைவியின் அழகை ரசித்துக் கொண்டே,

அவள் காதில் ரகசியமாக ஒரு தண்டனையை கணவன் சொல்ல, ''சீய்!'' என்று அழகாய் வெட்கத்துடன் முகம் சிவந்தாலும், கணவன் சொல்லைத் தட்டாத மனைவியால், அவன் சொன்னதை நிறைவேற்றும் வேலையில் அவள் இறங்க,

அங்கே, தண்டனை கொடுத்தவள், வாங்கியவன் இருவருமே அதை ரசிக்கத் தொடங்கி இருந்தார்கள்!

22

தங்கள் குடும்ப டாக்டர் சாரங்கனின் அறையில் இருந்தான் சூர்யா.

அபிராமியைப் பற்றி அவன் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டவர், அவன் தனக்கிருக்கும் சந்தேகங்களை முன் வைத்தபோது,

''உன் கேள்விகளுக்கெல்லாம் சரியான விடை கிடைக்கணும் என்றால், ஒரு மனநல மருத்துவரைத்தான் பார்க்க வேண்டும் சூர்யா. என்னுடைய அனுபவ அறிவுக்கு எட்டியவரை சொல்கிறேன்!'' என்றவர்,

''உன் முதல் சந்தேகம்... படித்த பெண்ணான அபிராமியால் உண்மை இல்லாத ஒரு கற்பனை வாழ்க்கையை எப்படி ஏற்றுக் கொள்ள முடிகிறது என்பது தானே?'' என்று வினவ சூர்யா ஆமோதிப்பாய் தலையசைத்தான்.

''இது அறிவு சம்பந்தப்பட்ட விஷயமில்லை சூர்யா... முழுக்க முழுக்க மனம் சம்மந்தப்பட்ட விஷயம்... ஒரு டாக்டரா இருந்து கொண்டு நான் இப்படி சொல்வது உனக்கு ஆச்சரியமாக இருக்கலாம்... ஆனால் அதுதான் உண்மை!''

''எத்தனையோ பேர் தங்களுக்கு சாதகமா இருக்கிற ஒரு விஷயத்தை, அது மூட நம்பிக்கையாக இருந்தாலும், சரியா தப்பா என்ற ஆராய்ச்சி இல்லாமல் காலம் முழுக்க ஏற்றுக் கொண்டு இருக்கிறதில்லையா? இதுவும் ஒரு வகையில் அப்படித்தான்!''

''தன் அத்தான் இல்லையே என்ற தவிப்பு. அத்தைக்காக உயிரோடு இருக்க வேண்டிய கட்டாயம், இதெல்லாம் அவளை இந்த மாதிரி ஒரு சூழலில் தள்ளி இருக்கலாம்!''

''ஆனால், அவளுக்குள் அப்படி ஒரு விஷயம் இருக்கிறதை எந்த சமயத்திலும் வெளியிடாமல் இருக்கிறது சாத்தியமா?'' என்று சூர்யா தன் அடுத்த கேள்வியை கேட்டான்.

''நீ சொல்ற எல்லாத்தையும் வைச்சு பார்த்தா, ரெண்டு விஷயம் தோணுது சூர்யா! ஒண்ணு, தன் கற்பனை வாழ்க்கை தன்னுடைய ரொட்டீன் வாழ்க்கையைப் பாதிக்காத அளவுக்கு, அதை வேறு படுத்திப் பார்க்கிற அளவுக்கு அந்தப் பொண்ணு ஒரு ஸ்ட்ராங் பெர்சனா

லிட்டியா இருக்கணும்! இல்லை, தன்னுடைய கற்பனை வாழ்க்கையை எந்தக் காரணம் கொண்டும் இழக்கக் கூடாது என்ற தீவிரமான எண்ணத்தில ஜாக்கிரதையா நடந்துக்கிறவளாக இருக்கணும்!''

டாக்டர் சொன்னதைக் கேட்ட சூர்யாவுக்கு, அபிராமி யின் மனதில் அவர் சொன்ன இரண்டாவது காரணம் தான் இருக்கும் என்று தோன்றியது.

''அவளுக்கு அந்த கற்பனை வாழ்க்கை மீது கட்டுப் பாடு இருக்கும் பட்சத்தில், அவள் அந்த கற்பனை வாழ்க்கையில் இருந்து விடுபட நினைத்தால், அது சாத்தியம்தானே அங்கிள்?''

சூர்யாவின் கேள்வியில் அவனைப் புன்னகையுடன் நோக்கிய சாரங்கன், ''இது ஒரு நல்ல கேள்வி! ஆனால், இதுக்கான பதிலைப் பொதுப்படையாக சொல்ல முடி யாது! அந்த வாழ்க்கை அவளுக்கு எந்த அளவுக்கு முக்கியம், எந்த அளவுக்கு அவளைப் பாதித்திருக்கிறது என்பதை எல்லாம் சோதனை செய்து பார்த்த பிறகுதான் சொல்ல முடியும்!'' என்று சாரங்கன் சொன்னதும்,

'குழந்தைகளைப் பற்றி சொல்லும்போது அவள் முகத்தில் ஒரு தாயின் பெருமிதத்தை உணர முடிந்தது!' என்று அன்னை சொன்னது நினைவுக்கு வர, அந்த கற்பனை வாழ்க்கை அவளை எந்த அளவு பாதித்திருக் கிறது என்பதை சூர்யாவால் உணர முடிந்தது.

அவன் யோசனையில் இருப்பதைக் கண்ட மருத்துவர், தொடர்ந்து சொன்னார்.

''நமக்குள் நீண்ட காலமாக இருக்கும் சில பழக் கங்களை சட்டென்று மாற்றிக் கொள்வதே அவ்வளவு

சுலபம் இல்லை சூர்யா! அதிலும் ஒரு சில பழக்கங்கள், ஒரு கால கட்டத்துக்குப் பிறகு நம்மையே கன்ட்ரோல் செய்ய ஆரம்பிச்சிடும்! அப்படி இருக்கும்போது, தனக்கு சந்தோசம் மட்டுமே அளிக்கும், தனக்கு வாழ்வதற்கான சக்தி அளிப்பதாய் அவள் நினைத்துக் கொண்டிருக்கும் கற்பனையை, அவ்வளவு எளிதாக அவளால் விட்டுவிட முடியாது!''

''அதெல்லாம் சரி அங்கிள்! இந்த மாதிரி ஒரு அப் நார்மல் விஷயம் அவள் உடலை, மனசைப் பாதிக் காதா?'' என்று தன் மனதை அரித்துக் கொண்டிருக்கும் கேள்வியை வினவினான்.

''கண்டிப்பா பாதிப்பு ஏற்படும் சூர்யா! இன்னைக்கு இல்லைன்னாலும் ஒரு நாள், தான் வாழும் கற்பனை வாழ்க்கைக்கு ஒரு இடையூறு வரும்போது, அவளுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க முடியாது!''

சாரங்கன் அழுத்தமாக பதில் சொன்னதும், சூர்யாவின் மனம் படபடத்தது.

''இப்போ என்ன செய்யறது அங்கிள்?''

''ஒரு மனநல மருத்துவர் கிட்ட சிகிச்சை எடுத்துக் கணும்! அதுவும் அவள் முழு மனசோடு சிகிச்சைக்கு ஒத்துழைக்கணும்! இல்லன்னா எந்த சிகிச்சையும் பலன் அளிக்காது!''

''எப்போ அங்கிள் சிகிச்சை ஆரம்பிக்கணும்?''

''எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம்!''

மருத்துவர் சொன்னதைக் கேட்டு ஒரு கணம் அமைதியாக அமர்ந்திருந்த சூர்யா, ''தேங்க்யூ அங்கிள்!

நான் கிளம்பறேன்!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி னான்.

காரில் வந்து அமர்ந்தவனின் மனம் வேகமாக சோர்ந்திருந்தது.

அபிராமியின் கடந்த காலத்தை அறிந்த பிறகு, அவ்வளவு ஆழமாக நேசித்தவனை அவளால் எளிதில் மறக்க முடியாது என்று தான் எண்ணியதும், தன் அன்பால் அவளது மனக் காயங்களை ஆற்ற வேண்டும் என்று முடிவெடுத்ததும் நினைவுக்கு வந்தது.

இப்போது பார்த்தால், காலம் முழுமையுமே அவளால் சக்தியை மறக்க முடியாது போல் இருக்கிறதே! அந்த எண்ணம் தோற்றுவித்த வருத்தத்தைவிட, இந்தக் கற்பனை வாழ்க்கை அவளுக்கு எந்தவித மன பாதிப் பையும் ஏற்படுத்தி விடாமல் தடுக்க வேண்டும் என்ற எண்ணம்தான் மேலோங்கி இருந்தது.

அவளுடைய கற்பனை வாழ்க்கை அவளுக்கு எந்த அளவுக்கு முக்கியம் என்பதை, தீபாவின் குழந்தைகளை அவள் தாய் இல்லத்தில் விட்டு விட சம்மதித்ததில் இருந்தே அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

இந்த இரண்டு மாதங்களாக, உயிராக அன்பு காட்டிய குழந்தைகளைப் பிரிவதென்றால் அவளது கற்பனை வாழ்க்கையில் இருந்து விடுபடத் தேவையான சிகிச் சைக்கு அவளை ஒத்துக் கொள்ள வைப்பது சரியான காரியமில்லை என்பதம் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

அபிராமியை சிகிச்சைக்கு எப்படி ஒத்துக் கொள்ள வைப்பது என்று யோசித்தவனின் சிந்தனையை, அலை பேசி இடையிட்டது.

அலைபேசியை எடுத்துப் பார்த்தவனின் புருவம் சுருங்கியது.

* * *

பவானியின் வீட்டில் இருந்து வந்த கற்பகத்தின் மனம் வெறிச்சோடிக் கிடந்தது.

அபிராமி, கணவன் குடும்பம் என்று வாழ்வது இனிமேல் கற்பனையில்தானா என்று எண்ணியவருக்கு, ஒரு விரக்திப் புன்னகை மலர்ந்தது.

குழந்தைகளை தாய் இல்லத்தில் விட்டு விட்டு வந்த அபிராமி, சோர்வுடன் தன் அறைக்குள் புகுந்து கொண் டதைக் கண்டவருக்கு, இப்போதிருக்கும் மனநிலையில் அவளிடம் பேசத் தோன்றவில்லை.

தன் மகனை விரும்பிய பாவத்திற்காக அபிராமி, இப்படி தன்னைச் சுற்றி ஒரு வேலி அமைத்துக் கொண் டதை அவரால் தாங்க முடியவில்லை.

அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்கா விட்டால், தன் மகனுடைய ஆத்மா கூட தன்னை மன்னிக்காது என்று எண்ணியவருக்கு, நெஞ்சு வலிப்பது போலத் தோன்றியது.

எழுந்து அமர்ந்தவர், தண்ணீர் குடித்து நெஞ்சை நீவிக் கொண்டார். வலி அதிகமாவது போலத் தோன்ற வும், எழுந்து நின்றவருக்கு உடனே அபிராமியைப் பார்க்க வேண்டும் போலத் தோன்றியது.

அவசரமாக அவளது அறைக் கதவைத் தட்டினார்.

கதவைத் திறக்க அவள் எடுத்துக் கொண்ட அந்த கொஞ்ச நேரத்தில், அவரது மனம் படபடத்தது.

கதவைத் திறந்த அபிராமி, அவரது சோர்ந்த முகத்தைக் கண்டதும், பதட்டத்துடன், ''என்ன அத்தை? என்ன விஷயம்? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?'' என்றாள்.

''அத்தையா?''

அபிராமியின் அந்த விளிப்பு, மனதை உலுக்க, அவருக்கு வலி மிகுதியாகத் தோன்றியது.

''நெஞ்சு வலிக்குது அபி!'' என்று அவர் மெல்லிய குரலில் சொன்னதும்,

''நெஞ்சு வலிக்குதா? அய்யோ... இருங்க அத்தானை எழுப்பறேன்!'' என்றபடி அவள் உள்ளே திரும்ப,

''அபி... என்ன சொல்றே?'' என்று அவர் பதறினார்.

''அத்தான்! அத்தான்!'' என்று அழைத்துக் கொண்டு போனவள்,

''இங்கேதானே படுத்திட்டு இருந்தார்... எங்கே போனார்?'' என்றபடி குளியலறை கதவை பலமாகத் தட்டி அழைக்க, அவளைக் கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருந்த கற்பகத்துக்கு தன் வலி மறந்தது.

வேகமாக அருகில் வந்தவர், ''யாரைக் கூப்பிடறே?'' என்று அழுத்தமான குரலில் வினவ,

''ஏன்? அத்தானைத்தான்!'' என்ற அவளது பதிலில், அவரது உள்ளக் குமுறல் வெளி வந்தது.

''உனக்கு என்ன பைத்தியமா? செத்துப் போனவனைக் கூப்பிடறேன் என்று சொல்றாயே?'' என்று வேகமாகக் கேட்டவரை,

''அத்தை!'' என்ற அவளது குரல் அதட்டியது!

''முட்டாள்! முட்டாள்! நீ கற்பனையில நடத்திற குடும்பம் உண்மையானதில்லை! அது ஒரு முட்டாளின் சொர்க்கம்! அதை விட்டு வெளியில் வா! அப்போதான் உண்மையிலேயே உனக்குன்னு ஒரு வாழ்க்கையை வாழ முடியும்!'' என்று அவளிடம் கத்தியவர்,

''நல்லா கேட்டுக்கோ! உன் அத்தான் இப்போ உயிரோடு இல்லை! இல்லை! இல்லை! இல்லை!'' என்ற கற்பகத்தின் வார்த்தைகள், அன்று முழுவதுமே பல்வேறு உணர்ச்சிகளின் பிடியில் சிக்கித் தவித்திருந்த அபிராமியின் மனதில் வேலை பாய்ச்சி, வேரிழந்த மரமாய் அவளை மயங்கிச் சரிய வைத்தது.

* * *

அபிராமியின் இல்லத்தில் இருந்து போன் என்றதும் அவசரமாக போனை எடுத்த சூர்யா, ''தம்பி!'' என்று அழுகையினூடே அழைத்த கற்பகத்தின் குரலில் கலக்கமுற்றான்.

''என்ன ஆன்ட்டி? என்ன விஷயம்?'' என்று அவன் பதற, அவர் விஷயத்தைச் சொன்னதும்,

''பயப்படாதீங்க ஆன்ட்டி! இன்னும் பத்து நிமிஷத்தில் நான் அங்கே இருப்பேன்!'' என்று சொல்லிவிட்டு அவசரமாகக் கிளம்பினான்.

மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அபிராமிக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

வெளியே வந்த மருத்துவரிடம் ''என்ன அங்கிள்? என்ன ஆச்சு?'' என்று பதட்டத்துடன் சூர்யா விசாரிக்க,

''அளவுக்கு மீறிய மன அழுத்தம்! ரத்த அழுத்தம் எக்கச்சக்கமா ஏறி இருக்கு!''

''என்ன சொல்றீங்க அங்கிள்?''

''அவள் மயக்கம் தெளிந்ததும், மன நல சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய வேண்டியது ரொம்ப அவசியம் சூர்யா! இந்த அழுத்தத்தை வளர விடறது அவளுக்கு நல்ல தில்லை!'' என்ற மருத்துவர்,

''நாளைக்குக் காலையில, சைக்கியாட்ரிஸ்ட் நந்தன் வருவாரு! நான் இன்னைக்கு நைட்டே வெளியூர் போறேன்! அதுக்கு முன்னாடி அவர் கிட்ட நான் எல்லாம் சொல்லிட்டுப் போறேன்! நீ அவர்கிட்ட நாளைக்கு அபிராமிக்கு சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செஞ்சிடு!'' என்று சொன்னவர்,

''இன்னைக்கு நைட் முழுக்க அவள் மயக்கத்தில்தான் இருப்பாள்! ஒரு வகையில் அது நல்லதும் கூட!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

கண்ணீர் விட்டபடி அமர்ந்திருந்த கற்பகத்தின் அருகில் வந்த சூர்யா, ''பயப்படாதீங்க ஆன்ட்டி! அபிக்கு எதுவும் ஆகாது!'' என்று அவரது தோளைப் பற்றி தேறுதலாகக் கூறிவிட்டு, ''நீங்க வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுங்க... எப்படியும் அபி விழிக்க காலை ஆயிடும்!'' என்றான்.

''இல்லை தம்பி! அபி இந்த நிலையில இருக்கும் போது, என்னால வீட்டில நிம்மதியா இருக்க முடியாது! நான் இங்கேயே இருக்கேன்!'' என்றவரின் மனம் புரிந்து அவரை அதற்கு மேல் வற்புறுத்தாத சூர்யா,

அவர் அங்கேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்து விட்டு, தானும் மருத்துவமனையிலேயே தங்கினான். இடையில் அன்னைக்கு அழைத்து விவரம் சொன்னவ

னிடம், தானும் வருவதாக பவானி சொல்ல, ''இல்லைம்மா... நாளைக்கு வாங்க போதும்!'' என்றான்.

அடுத்த நாள் காலை, அபிராமி விழிப்பதற்குள், வீட்டுக்குச் சென்று குளித்துவிட்டு வந்த சூர்யா, அபிராமியைப் பார்ப்பதற்குள், அந்த மன நல மருத்துவரை சந்தித்து விட்டு வருவது நல்லது என்றெண்ணி, வரவேற்பில் அவருடைய அறையை விசாரித்துக் கொண்டு அவரைக் காணச் சென்றான்.

எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டே, மருத்துவரின் அறைக்குச் சென்றவன், அங்கே நின்றிருந்த பணியாளிடம், டாக்டர். சாரங்கன், சந்திக்கச் சொன்னதாகச் சொன்னதும், உள்ளே சென்று அனுமதி பெற்று வந்தவன், ''உள்ளே போங்க சார்!'' என்று கதவைத் திறந்து விட்டான்.

''குட் மார்னிங் டாக்டர்! ஐ அம் சூர்யா!'' என்று காலை வணக்கம் தெரிவித்து கை நீட்டிய சூர்யாவின் கையைப் பிடித்துக் குலுக்கிய டாக்டர், ''குட் மார்னிங்! உட்காருங்க!'' என்று அமர வைத்து ''என்ன விஷயம்?'' என்று விசாரிக்க,

''டாக்டர். சாரங்கன் உங்க கிட்ட எல்லாம் சொல்லிட்டுப் போறதாச் சொல்லி இருந்தாரே?'' என்று சூர்யா இழுக்க,

''டாக்டர். சாரங்கனா? அவர் ஒண்ணும் சொல்லவில்லையே?'' என்றார் டாக்டர்.

''வெளியூர் போற அவசரத்தில் சொல்ல மறந்திருக்கலாம்!'' என்ற சூர்யா,

''இங்கே ஒரு பேஷண்ட் அட்மிட் ஆகி இருக்காங்க டாக்டர்!'' என்று ஆரம்பித்து, அபிராமியைப் பற்றி

சொல்ல ஆரம்பிக்க, மன நல சிகிச்சை என்றதுமே அவன் தவறாகத் தன்னைப் பார்க்க வந்து விட்டான் என்று உணர்ந்து கொண்ட டாக்டர்,

''ஒரு நிமிஷம் மிஸ்டர். சூர்யா! நீங்க சைக்கியாட்ரிஸ்ட் நந்தனைப் பார்க்க வந்திருக்கீங்க என்று நினைக்கிறேன்!'' என்று இடையிட,

''அப்போ நீங்க!? மூன்றாவது மாடியில் இரண்டாவது அறை என்று சொன்னாங்களே?''

''சரியாதான் சொல்லி இருக்காங்க... இது நான்காவது மாடி!'' என்று புன்னகையுடன் டாக்டர் சொல்ல,

''சாரி டாக்டர்! ஏதோ நினைப்புல இன்னொரு மாடி ஏறி வந்திட்டேன்! வெளியே நேம் போர்டு கூட பார்க்காமல் வந்தது தப்புதான்! சாரி ஃபார் தி டிஸ்டர்பன்ஸ்!'' என்று மன்னிப்பு வேண்டி விட்டு சூர்யா எழ,

''இட்ஸ் ஓகே!'' என்ற டாக்டர்,

''மிஸ்டர். சூர்யா! ரொம்ப டென்ஷனா இருக்கீங்க என்று நினைக்கிறேன்... தீர்க்க முடியாத பிரச்சனை என்று எதுவுமே இல்லை! எல்லாம் நல்லபடியாக நடக்கும், கவலைப்படாதீங்க!'' என்று மென்மையான குரலில் சொல்ல,

டாக்டரின் வார்த்தைகள் தன்னுள் ஏதோ இனம் புரியாத இதத்தைப் பரப்பியதை உணர்ந்து, புன்னகையுடன் அவரை நோக்கிய சூர்யா, ''தேங்க் யூ டாக்டர்!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

* * *

மயக்கத்தில் இருந்து அபிராமி விழித்ததுமே, மனநல மருத்துவர் நந்தன், அவளை வந்து சந்தித்தார்.

அபிராமியைப் பற்றிய முழு விவரத்தையும் அவர்களிடம் இருந்து சேகரித்த மருத்துவர், ''அபிராமிக்கு உடனடியா மன நல சிகிச்சை கொடுக்கிறது அவசியம்! இப்போ அவங்க ஏகப்பட்ட குழப்பத்தில் இருக்காங்க... ஒரு விதத்தில இந்த குழப்பமான நிலையை நம்ம சிகிச்சைக்குப் பயன்படுத்தறதுதான் நல்லது என்று நினைக்கிறேன்... அவங்க குழப்பம் எல்லாம் தெளிஞ்சு, மீண்டும் தன்னோட கற்பனை உலகத்துக்குப் போறதுக்கு முன்னாடி, சிகிச்சை செய்யறதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன்!'' என்ற டாக்டர், தன் முயற்சியைத் தொடங்கி இருந்தார்.

அவர் என்ன முயற்சி செய்தாலும், சிகிச்சைக்கு அவளுடைய பூரண சம்மதத்தை அவர் பெற வேண்டி இருந்தது.

இரண்டு நாட்களாகப் போராடியும், சிகிச்சைக்குத் தேவையான ஒத்துழைப்பு அபிராமியிடம் இருந்து கிடைக்கவில்லை.

''நீங்க படிச்சவங்க... உங்களுக்கு நான் சொல்றது நல்லாவே புரியும்... உண்மையில இல்லாத ஒன்றை இருக்கிறதா நினைச்சு எவ்வளவு நாள் உங்களை நீங்களே ஏமாற்றிக்கப் போறீங்க அபிராமி? அது இன்னைக்கு இல்லைன்னாலும் ஒரு நாள் உங்க மனசையும், உடலையும் கண்டிப்பா பாதிக்கும்... நீங்க இந்த சிகிச்சைக்கு ஒத்துக்கிறதுதான் நல்லது!''

இரண்டு நாட்களாக சொன்னதையே, இப்பொழுதும் ஒரு சிறு குழந்தைக்கு சொல்வது போல, பொறுமையுடன் டாக்டர். நந்தன் சொல்ல, இரண்டு நாட்களாக கண்ணீர் விட்டுக் கொண்டு அமைதியாக இருந்ததைப்

போல் போல் இல்லாமல், உறுதியுடன் அவரை நிமிர்ந்து பார்த்தாள் அபிராமி.

''சாரி டாக்டர்... என்னால இந்த சிகிச்சைக்கு ஒத் துழைக்க முடியாது!''

அதிர்ந்து நோக்கிய டாக்டரிடம், ''என்னை விட்டு டுங்க டாக்டர்... என் கற்பனை உலகத்தை என்கிட்டே இருந்து பறிக்க முயற்சி செய்யாதீங்க!'' என்று அவள் உறுதியுடன் சொல்ல,

''இல்லை அபிராமி, இதை வளர விட்டால் உங் களுக்கு மனச்சிதைவு ஏற்படக்கூட வாய்ப்பு இருக்கு!'' என்று அவளுக்கு புரிய வைத்திடும் வேகத்தில் டாக்டர் சொல்ல,

''இல்லை! இல்லை! அப்படி எதுவும் ஆகாது... நீங்க எனக்கு சிகிச்சை கொடுத்து என் அத்தானோட நினைவு களை, அவரோட நான் வாழற வாழ்க்கையைப் பறிச்சிட் டீங்கன்னாதான் எனக்கு ஏதாவது ஆகிடும்!'' என்று வெறி பிடித்தவள் போல் கத்திய அபிராமியின் தேகம், உணர்ச்சிகளின் தாக்கத்தில் நடுங்கத் தொடங்கியது.

அவளது அந்த வெடிப்பு, இப்போதிருக்கும் நிலை மையில் அவளுக்கு நல்லதில்லை என்று எண்ணிய டாக்டர், ''ரிலாக்ஸ்... ரிலாக்ஸ் அபிராமி!'' என்று அவளை அமைதிப் படுத்த முயன்றார்.

''இல்லை... நான் சொல்லிடறேன்!'' என்று பிடிவாதத் துடன் அபிராமி தொடர்ந்தாள்.

''என்னால நான் வாழற இந்த கற்பனையை வாழ்க் கையை எக்காரணத்தைக் கொண்டும் விட்டுக் கொடுக்க முடியாது... அது... அது மட்டும் இல்லன்னா, என்னால

எந்த வேலையும் ஒழுங்கா செய்ய முடியாது! அந்த வாழ்க்கைதான் எனக்கு வாழறதுக்கான சக்தி கொடுக் குது! அந்த வாழ்க்கை இல்லைன்னா என்னால சரியா மூச்சு... மூச்சு விடக் கூட முடியாது டாக்டர்... மூச்சு முட்டி நான் செத்துப் போய்விடுவேன்... கண்டிப்பா செத்தே போய் விடுவேன்!''

பைத்தியம் பிடித்தவளைப் போலப் பிதற்றியவள், ''என்னை விட்டுடுங்க... இப்படியே விட்டுடுங்க... எனக்கு எந்த சிகிச்சையும் வேண்டாம்... வேண்டாம்... வேண்டாம்!'' என்று கதறி அழ ஆரம்பித்தாள்.

அவள் அழுவதைத் தாங்க முடியாமல், கற்பகம் அவளை நோக்கி வர, டாக்டர் வேண்டாம் என்பதாய் கை அசைத்து தடுத்தார்.

நீண்ட நேரம் கண்ணீரில் கரைந்த அபிராமி, தன் சக்தி எல்லாம் வடித்தாற்போல, தான் அமர்ந்திருந்த இருக்கை யிலேயே மயங்கிச் சரிந்தாள்.

அடுத்த இரண்டு நாட்களும் அபிராமி மயக்கத்தி லேயேதான் இருந்தாள்.

அவ்வப்போது, ''வேண்டாம்... என் அத்தான்கிட்ட இருந்து என்னைப் பிரிக்காதீங்க... ப்ளீஸ்... ப்ளீஸ்...'' என்று அவளிடம் இருந்து எழுந்த பலவீனமான புலம்பல் தான், அவளுக்கு உணர்வு என்று கொஞ்சம் இருக்கிறது என்பதைச் சுற்றி இருந்தவர்களுக்கு உணர்த்தியது.

இரண்டு நாட்களாக அபிராமி விழிக்காமல் இருப்பதில் பதட்டமடைந்த சூர்யா, டாக்டரிடம் அவளது நிலை பற்றி விசாரித்தான்.

அளவுக்கு அதிகமான மன அழுத்தம்தான் இந்த நீண்ட மயக்கத்துக்கு காரணம், இந்த மன அழுத்தத்தை

வளர விட்டால், மாரடைப்பு ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறது என்று மருத்துவர் சொன்ன சூர்யா அதிர்ச்சி அடைந்தான்.

அவனது அதிர்ச்சியைக் கண்ட டாக்டர், ''இப்போ அவங்களுக்கு உடல் மற்றும் மனம் ரெண்டுமே பாதிக் கப்பட்டிருக்கு மிஸ்டர் சூர்யா. இப்போதைய நிலையில், எந்த மாதிரி சிகிச்சை கொடுப்பது என்று எனக்குத் தெரிஞ்ச மற்ற டாக்டர்ஸ்கிட்டயும் டிஸ்கஸ் செஞ்சிட்டு தான் இருக்கேன்...'' என்று தேறுதலாக சொல்லிவிட்டுச் சென்றார்.

மயக்கத்திலும், அவள் புலம்புவதைப் பார்த்த கற்பக மும் மனம் தாங்காமல் அழுதார்.

''இவ்வளவு நாளா அவன் இழப்பை மறந்து வாழ்ந்து கிட்டு இருக்கான்னு நினைச்சிருந்தேனே... இப்படின்னு தெரியாமப் போயிடுச்சே... இவ்வளவு அன்பை முழுசா அனுபவிக்கிற கொடுப்பனையை அந்த கடவுள் என் பிள்ளைக்குக் கொடுக்காமல் போயிட்டாரே'' என்று கற் பகம் அழ, பவானிதான் அவருக்கு ஆறுதலாக இருந்தார்.

சூர்யாவுக்கு மனம் சங்கடத்தில் ஆழ்ந்து இருந்தது. தெளிந்த நீரோடையாகச் சென்று கொண்டிருந்த அபிராமியின் வாழ்க்கையில், தான் கல்யாணம் என்னும் கல் எறிந்து குழப்பி விட்டோமோ, என்று குற்ற உணர்வு எழுந்தது.

'கடவுளே! அவள் என்னை திருமணம் செய்து கொள்ளவில்லை என்றாலும் பரவாயில்லை! அவளை முன்பு இருந்த மாதிரியே நல்ல படியாக பிழைக்க வைத்துவிடு!' என்று அவன் மனம் இடைவிடாமல் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தது.

அவள் மயக்கத்திலும் தன் அத்தானை நினைத்து புலம்புவதைக் கண்டவனின் மனதில், 'எனக்கு மட்டும் நடந்து முடிந்த ஒரு விஷயத்தை மாற்றும் சக்தி இருக்கு மானால், அவளது அத்தானை உயிர்ப்பித்து அபிராமி யோடு சேர்த்து விடுவேன்!' என்ற எண்ணம் கூடத் தோன்றியது.

யோசித்து யோசித்து மண்டை பிளப்பது போலத் தோன்றவும், கேண்டீன் சென்று ஒரு காபி குடிக்கலாம் என்று நினைத்துக் கிளம்பியவனுக்கு, அங்கே அபிராமி யின் பிரச்சனைக்கான தீர்வு கிடைக்கப் போகிறது என்பது அப்போது தெரிந்திருக்கவில்லை!

23

தன் யோசனையில் உழன்றவாறே மாடிப்படியில் இறங்கிய சூர்யா, கால் இடறி விழப் போகும் நேரத்தில், ஒரு கரம் அவனைத் தாங்கிப் பிடித்து நிறுத்தியது.

தன்னியல்பாய், ''தேங்க் யூ!'' என்று சொல்லியபடி நிமிர்ந்த சூர்யா, தனக்கு உதவியவரைப் பார்த்ததும் மலர்ந்தான்.

''எனி ப்ராப்ளம் மிஸ்டர். சூர்யா? அன்னைக்குப் பார்த்ததை விட சோர்வா தெரியறீங்களே!'' என்று பரிவாக, அவர், அன்று டாக்டர். நந்தனுக்குப் பதிலாகத் தான் தவறுதலாக சந்தித்த டாக்டர் விசாரிக்க, சூர்யாவுக்கு ஏனோ அவரிடம் மனம் விட்டுப் பேச

வேண்டும் போன்ற உந்துதல் தோன்றி ஆச்சரியத்தை வரவழைத்தது.

அவன் அமைதியாக இருப்பதைக் கண்ட டாக்டர், ''நான் கேண்டீன் போறேன்... நீங்களும் வாங்களேன்!'' என்று அழைக்க, அவரோடு சென்றான்.

''என்ன மிஸ்டர். சூர்யா... நீங்கள் அட்மிட் செய்திருக்கும் பேஷண்டுக்கு ஏதாவது...?'' என்று டாக்டர் விசாரிக்க,

சூர்யா தன் மனதில் இருந்ததை எல்லாம் அவரிடம் கொட்டினான்.

தான் சொல்ல, சொல்ல டாக்டரின் முகத்தில் மாறுதல் ஏற்படுவதைக் கவனியாமல் சொல்லிக் கொண்டு வந்த சூர்யா, ''கல்யாணம் அது இது என்று சொல்லி அமைதியா வாழ்ந்துகிட்டு இருந்த அபிராமியின் வாழ்க்கையில் நான்தான் பிரச்சனை ஏற்படுத்திட்டேனோ என்று எனக்கு குற்ற உணர்வா இருக்கு டாக்டர்!'' என்று தன் தவிப்பை வெளியிட,

''சூர்யா! அவங்க பேர் என்னன்னு சொன்னீங்க?'' என்று குரல் நடுங்க அவர் விசாரிக்க, ஆச்சரியத்துடன் நிமிர்ந்த சூர்யா, ''அபிராமி!'' என்றான்.

அவன் பெயரைச் சொன்னதும், டாக்டரின் முகத்தில் தோன்றிய வலியும் வேதனையும் அவனது ஆச்சரியத்தை மிகுதியாக்கியது.

ஒரு முறை தன் கண்களை இறுக மூடித் திறந்த டாக்டர், ''அவங்க அத்தை பேர் கற்பகமா?'' என்றதும், சூர்யா அதிர்ந்தான்.

''டாக்டர் உங்களுக்கு எப்படி தெரியும்?'' என்று ஆச்சரியத்துடன் விசாரித்தவன் கண்கள் ஒரு யூகத்தில் சட்டென்று விரிந்தது.

''டாக்டர்!? நீங்க??'' என்று தன் யூகத்தை நம்ப முடியாமல் விசாரித்த சூர்யாவின் செவிகளில்,

''ஆமாம் மிஸ்டர். சூர்யா! நான் தான் டாக்டர். சக்தி! அபிராமியின் அத்தான்!'' என்ற டாக்டரின் வார்த்தைகள் விழுந்து, அவனைத் திகைத்து நிற்க வைத்தது!

திகைத்து நின்ற சூர்யா, உடனே சமாளித்துக் கொண்டு விட்டான். தான் சற்று நேரத்துக்கு முன் சக்தியை அபிராமியுடன் சேர்ப்பித்து விடுவதைப் பற்றி எண்ணியது நினைவுக்கு வந்தது.

''வொண்டர்ஸ் நெவர் சீஸ்!'' (Wonders never cease!) என்று அவனையும் அறியாமல் அவனது வாய் முணுமுணுத்தது!

மனதில் இருந்த பாரம் எல்லாம் வடித்தாற் போன்று, நெஞ்சில் ஒரு இதம் பரவுவதை உணர முடிந்தது.

நிம்மதிப் பெருமூச்சுடன், நிமிர்ந்து சக்தியை நோக்கியவன் அங்கே கண்களில் நீருடன் அவன் அமர்ந்திருப்பதைக் கண்டதும், ''டாக்டர்! என்ன இது! எல்லாம் நல்லபடியா நடக்கப் போற நேரத்தில ஏன் இப்படி இருக்கீங்க? சீக்கிரம் வாங்க டாக்டர்! அபிராமியை பார்க்கப் போகலாம்!'' என்று அவனைத் துரிதப்படுத்தினான்.

இந்த நொடியே தன் கண்ணம்மாவைப் பார்க்க வேண்டும், என்று துடித்த மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு, சக்தி நிதானமாகப் பேசினான்.

''இல்லை மிஸ்டர். சூர்யா! இப்போ போய் அபியைப் பார்க்கிறது சரியா இருக்காதுன்னு தோணுது.. என்னைப் பார்த்ததும், அவளோட மன அதிர்ச்சி இன்னும் அதிகமாகலாம்! நாம் முதல்ல டாக்டர் கிட்ட பேசிட்டு, அவர் கிட்ட

ஆலோசனை கேட்டுட்டு அவளைப் பார்க்கப் போக லாம்!''

அபிராமியைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பை, சக்தியின் கண்களில் இருந்து உணர முடிந்த சூர்யா வுக்கு, அப்போதும் அவளது உடல், மன நிலையை யோசித்து அவன் நிதானமாக செயல்படுவதை எண்ணி ஆச்சரியமாக இருந்தது.

இவனுக்காக அபிராமி உருகுவதில் ஆச்சரியமில்லை என்ற எண்ணம் தோன்றியது.

''நீங்க சொல்றது சரிதான் டாக்டர்!'' என்றவன், சக் தியை அழைத்துக் கொண்டு டாக்டர். நந்தனைப் பார்க்க செல்ல, அவர் இப்போதுதான் அபிராமியின் அறைக்குச் சென்றிருப்பதாக அவரது உதவியாள் சொன்னார்.

''மயக்கத்திலிருந்து விழிச்சிட்டாங்க என்று நினைக் கிறேன்!'' என்று சூர்யா சொல்ல, சக்தியின் மனதிலும் ஒரு பரபரப்பு எழுந்தது.

வேகமாக இருவரும் அபிராமியின் அறையை நோக்கிச் செல்ல, அங்கே கேட்ட அபிராமியின் கதறல், சக்தியின் நிதானத்தை உடைத்து, அவனை உடனே உள்ளே செல்ல வைத்தது.

''போங்க! நீங்க எல்லாரும் இங்கே இருந்து போயி டுங்க! நீங்க எல்லாரும் என் அத்தானை என்கிட்டே இருந்து பிரிக்கப் பார்க்கறீங்க! போங்க! போங்கன்னு சொல்றேன் இல்லை?'' என்று வெறி பிடித்தவள் போல் மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக் கத்திக் கொண் டிருந்தவளின் குரல், கடைசியில் கதறலாய் வெளிவர, அதற்கு மேல் பொறுக்க முடியாமல், உள்ளே ஓடிச் சென்ற சக்தி,

''கண்ணம்மா! இங்கே பாரு! அமைதியா இருக்க ணும்! யாரும் உன்கிட்ட இருந்து என்னைப் பிரிக்க முடியாது! அத்தான் சொல்றேன் இல்லை? அமைதியா இரு!'' என்று அவளை மென்மையாகப் பிடித்தபடி அடக்க முயன்றான்.

உள்ளே வந்த சக்தியைக் கண்டதும், அதிர்ச்சியில் திகைத்து நின்றார் கற்பகம்!

ஆனால், அபிராமியிடம் எந்த அதிர்ச்சியும் இல்லை!

''வந்துட்டீங்களா? நீங்களாவது இவங்க கிட்ட சொல் லுங்க அத்தான்! எனக்கு ஏதோ நல்ல வாழ்க்கை அமைச்சு தரப் போறாங்களாம்! என்னோட சந்தோஷமான வாழ்க் கையைப் பறிச்சிட்டு, அதைவிட நல்லதா வாழ்க்கை தர முடியுமா என்ன? நீங்க சொல்லுங்க அத்தான்... அப்பத் தான் இந்த அத்தையும் கேப்பாங்க!'' என்று அவன் தோளில் சாய்ந்தபடி, அபிராமி அழுகையினூடே சொன் னதும் சக்தி உறைந்து போனான்.

அபிராமி... அவனது கண்ணம்மா அவன் உண்மையி லேயே வந்து விட்டான் என்பதை உணரவே இல்லை!

''அபி... அபி... இங்கே பாருடா! கண்ணம்மா! இங்கே பாரு! உன் அத்தான் உண்மையிலேயே வந்துட்டேன்டா!'' என்று தவிப்புடன் சக்தி சொன்னதைக் காதில் வாங் காமல்,

''நான் அன்னைக்கே சொன்னேன் இல்லை... என்னை விட்டுட்டு எங்கேயும் போகக் கூடாதுன்னு! பாருங்க! நீங்க என்னை விட்டுட்டுப் போன நேரத்தில, இவங்க எல்லாரும் என்னை நிரந்தரமா உங்ககிட்ட இருந்து பிரிக்கப் பார்க்கிறாங்க!'' என்று தேம்பியபடி அவள் சொன்னதும்,

சக்தி அவளுக்குத் தன்னை எப்படி உணர வைப்பது என்று தவித்துப் போனான்.

தன் கண்ணம்மாவின் கண்ணீர் அவனது கண்களையும் நிரப்பியது!

"கண்ணம்மா! நான் உண்மையிலேயே வந்துட்டேன்டா... கற்பனை இல்லைடா... செல்லம்மா... நிமிர்ந்து என்னைப் பாருடா... உன் அத்தான் வந்திருக்கேன்டா!'' என்று கண்ணீருடன் சொன்னவன், அவளது கையை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்த, அபிராமி அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

தன் அத்தானின் கண்களில் நீரைக் கண்டதும், அனிச்சையாக அவள் கரம், அந்த கண்ணீரைத் துடைத்தது.

''என்ன அத்தான் இது? என்னை அழக் கூடாதுன்னு சொல்றவர் இப்போ நீங்க அழறீங்களே! முதல்ல இங்கே இருந்து எல்லாரையும் அனுப்புங்க!'' என்று மற்றவர்கள் பக்கம் திரும்பியும் பாராமல் சொல்ல,

''ஹய்யோ! கடவுளே! இவளுக்கு நான் எப்படி புரிய வைப்பேன்?'' என்ற சக்திக்கு தன் கன்னத்தில் இருந்த அவளது கை, தன் கன்னத்துத் தழும்பில் நிரடுவதைக் கண்டதும், கண்கள் பளிச்சிட்டது.

சட்டென்று அவளது கரத்தைத் தன் கன்னத்தில் இருந்து எடுத்தவன், ''அபி! இங்கே பாரு...'' என்று தன் கன்னத்தைச் சுட்டிக் காண்பிக்க, அவனது கன்னத்தைக் கண்ட அபிராமி அதிர்ந்து போனாள்.

தன் அத்தானின் இடது கன்னத்தில் அழகுடன் மிளிரும் கன்னக் குழி இருந்த இடத்தில நீண்ட தழும்பு இருப்பதைக் கண்டு பதறிப் போனவளாக, ''என்ன ஆச்சு அத்தான்?'' என்று அவள் உதடு துடிக்க விசாரித்ததும்,

''அத்தானுக்கு அடி பட்டிருச்சுடா கண்ணம்மா! அந்த ஆக்சிடென்ட்ல இந்த அடி மட்டும்தான் பட்டுச்சு... ஹாஸ்பிட்டல்ல மயக்கத்தில இருந்தேனா... அதான் உடனே உன்னைப் பார்க்க வர முடியலை! சரி ஆனதும் என் கண்ணம்மாவைப் பார்க்க ஓடி வந்துட்டேன்! மற்றபடி நான் நல்லா இருக்கேன் பாரு!''

தன் பதட்டத்தை மறைத்துக் கொண்டு, சிறு குழந்தைக்குச் சொல்வது போல் சொல்லி, தான் உண்மையிலேயே வந்து விட்டதை அவளுக்கு உணர வைக்க முயன்ற சக்தி, அவளது கரங்களைத் தன் மேல் படர விட, அபிராமியின் கண்கள் விரிந்தது.

விரிந்த கண்கள் அலைபாய, அவனை தலை முதல் பாதம் வரை அளந்தவளின் கரங்கள், அவன் முகத்தை, தோளை, கரங்களை நடுக்கத்துடன் வருடின!

''உண்மையிலேயே வந்துட்டீங்களா அத்தான்?'' என்று அவள் தலை சரித்து, காற்றாகிப் போன குரலில் வினவ,

கண்ணீருடன் ''ஆமாம்!'' என்பதாய் வேகமாகத் தலையாட்டினான் அவளது சக்தி!

கண்களை மூடித் திறந்த அபிராமியின் உடல் தொய்ந்தது.

''அபி...'' என்று பரிதவிப்புடன் அழைத்தபடி சக்தி அவளைத் தாங்கிக் கொள்ள,

''இனிமேல் என்னை விட்டுட்டுப் போக மாட்டீங்க தானே?'' என்று பலவீனமான குரலில், எல்லை இல்லாத ஏக்கத்துடன் கேட்டவளை, இறுக அணைத்துக் கொண்டு, ''கண்டிப்பா போக மாட்டேன்டா... என்

கண்ணம்மாவை விட்டுட்டு நான் எங்கேடா போவேன்?'' என்றவன் குரல் தழுதழுத்தது.

நிறைவுடன் புன்னகைக்க முயன்ற அபிராமி, அவள் அணைப்பிலேயே மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்தாள்.

தன் மேல் அவளது கனத்தை உணர்ந்ததும், அவள் மயங்கி விட்டாள் என்றுணர்ந்த சக்தி தன்னை மறந்தான்! தான் ஒரு மருத்துவர் என்பதை மறந்தான்!

''டாக்டர்! டாக்டர்! அவள் மயங்கிட்டாள் டாக்டர்! என்னன்னு கொஞ்சம் சீக்கிரம் பாருங்க டாக்டர்!'' என்று பதறிக் கொண்டே படுக்கையில் அவளைக் கிடத்த, ஆழ்ந்த மயக்கத்திலும் அபிராமியின் கரம் அவனது சட்டையை இறுகப் பற்றி இருந்தது.

''ரிலாக்ஸ் டாக்டர், சக்தி! கடந்த நாலு நாளாகவே அவங்களுக்கு ஏகப்பட்ட அதிர்ச்சி... டென்ஷன்... மன அழுத்தம்! நீங்க திரும்பி வந்துட்டீங்க என்ற அதிகப்படி சந்தோசம் கூட அவங்க இருக்கிற நிலைமையில அவங்களுக்கு அதிர்ச்சிதான்... கவலைப்படாதீங்க... எல்லாம் சரி ஆகிடும்!'' என்று அவனை சமாதானப் படுத்திய வாறே, அபிராமியைப் பரிசோதித்த டாக்டர்,

''எக்கச்சக்கமா ஏறி இருந்த அழுத்தம் இப்போ ரொம்பவும் குறைந்து போய் ரொம்ப கீழே இருக்கு!'' என்று சொல்லிப் பதற வைத்துவிட்டு,

''பயப்படாதீங்க! சரி ஆகிடும்!'' என்று சொல்லி விட்டு, அவளது உடலில் ஒரு மருந்தை செலுத்தி விட்டு, ''அவங்க விழிச்சதும் என்னைக் கூப்பிடுங்க!'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

மயக்கத்தில் இருந்த அபிராமியை ஒரு நிமிடம் அமைதியாகப் பார்த்திருந்த சக்தி, மெல்ல அவளது

கரத்தைத் தன்னிடம் இருந்து விலக்கி விட்டுத் திரும்பியதும், கண் மூடி நின்றிருந்த கற்பகத்தைக் கண்டு வேகமாக அவர் அருகில் வந்தான்.

கற்பகத்தால் நடந்து கொண்டிருந்த எதையும் நம்ப முடியவில்லை!

அபிராமி அடிபட்ட பறவையாய்க் கதறிக் கொண்டிருந்ததைக் கண்டிருந்தவருக்கு, 'சக்தி உயிரோடு வந்து விட மாட்டானா?' என்ற ஏக்கம் தோன்றியதும், அதைத் தொடர்ந்து சக்தி வந்ததும், நிஜமா இல்லை கனவா என்று புரியவில்லை!

ஒருவேளை, தானும் அபிராமியைப் போல கற்பனை உலகத்தில் இருக்கிறோமோ என்ற சந்தேகம் தோன்றியது!

உறைந்து போய் நின்றிருந்தவருக்கு, சக்தி, ''அம்மா!'' என்று அழைப்புடன் தன்னை அணைத்துக் கொண்டதும் தான் உணர்வு வந்தது!

தன் தோளில் சாய்ந்திருந்த மகனின் கண்கள் கலங்குவதை உணர்ந்தவர், ''சக்தி! என் கண்ணா! உண்மையிலேயே வந்துட்டாயா?'' என்று அவனது முகத்தை நிமிர்த்தி, அவனது முகத்தை வருடியபடி விசாரிக்க,

''வந்துட்டேன்மா! உண்மையிலேயே வந்துட்டேன்!'' என்று கண்ணீருடன் சக்தி பதில் சொல்ல,

''இத்தனை நாள் எங்களை எல்லாம் தவிக்க விட்டுட்டு எங்கேடா இருந்தே?''

அதுவரை அதிர்ச்சியில் அடங்கி இருந்த உள்ளக் குமுறல் வெளியே வர, விம்மி அழுதவரை,

''ப்ளீஸ்மா... அழாதீங்கம்மா!'' என்று தோளோடு அணைத்து சக்தி சமாதானப்படுத்த முயன்றான்.

ஆனால், இத்தனை நாளாய், எங்கே தன் மகனைப் பற்றி பேசினால், அபிராமி கலங்குவாளோ என்று அவன் நினைவுகள் அனைத்தையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருந்த அந்த தாயுள்ளம், தன் மகன் திரும்பி வந்து விட்டான் என்ற நிம்மதியில், தன் மொத்தத் தவிப்பையும், வெளியேற்றி விடத் துடித்தது!

தன்னுடைய நீண்ட அழுகையில் தன் உள்ளத் தவிப்பை வெளியேற்றி விட்டு, மகனை அன்புடன் வருடியவர், அவனது கன்னத்துத் தழும்பை வருடி, ''வேற எதுவும் அடி படலையே?'' என்று புதிதாய் கண்ணீருடன் விசாரிக்க,

''இல்லைம்மா! நான் நல்லபடியா திரும்பி வந்துட்டேன்!'' என்று அவரை மென்மையாக அணைத்துக் கொண்டான் சக்தி.

''இத்தனை வருஷம் எங்கே இருந்தே சக்தி? எப்படி இருந்தே?'' என்று அவர் அடுத்த விசாரணையைத் தொடர்ந்தவரின் குரலில் கவலை தெரிய,

''எல்லாம் சொல்றேன்! நீங்க இவ்வளவு உணர்ச்சி வசப் படாதீங்க!'' என்று சொன்னவன், அவரை மெதுவாக நடத்திச் சென்று அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்து, தண்ணீர்ப் பருகச் செய்தான்.

அவர் கொஞ்சம் நிதானமடைந்ததும்தான், அறையில் இருந்த மற்றவர்களின் நினைவு வர, சூர்யாவின் அருகில் வந்த சக்தி, ''தேங்க்யூ மிஸ்டர் சூர்யா! இந்த ஒரு மாசமா நான் அம்மாவையும் அபியையும் தேட எவ்வளவு முயற்சி செய்தேன் என்று உங்களுக்குத் தெரியாது!

இன்று உங்க புண்ணியத்தால் நான் அவங்களைப் பார்த்துட்டேன்! உங்களுக்கு நன்றி சொல்ல என்கிட்டே வார்த்தைகளே இல்லை!'' என்று நெகிழ, சூர்யா ஒன்றும் பேசாமல் அவனது கரத்தைப் பற்றி அழுத்தினான்.

''ஒரு மாசமா தேடறேன் என்று சொல்றீங்க! பத்திரிகையில் ஒரு விளம்பரம் கொடுத்திருந்தால் கூட போதுமே?'' என்று சூர்யா தன் சந்தேகத்தை வெளியிட,

''நான் அம்மாவைத்தான் முதலில் பார்க்கணும் என்று நினைச்சிருந்தேன் சூர்யா! அம்மா, இந்த ஐந்து வருஷத்தில அபிக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்க முயற்சி செஞ்சிருப்பாங்க என்று எனக்குத் தெரியும்! அப்படி அவளுக்கு ஒரு வாழ்க்கை அமைந்திருந்தால், அவளைப் பொறுத்தவரை நான் இறந்தவனாக இருந்துட்டுப் போகட்டும் என்று நினைத்தேன்! அதனால்தான் விளம்பரம் கொடுக்கலை! என் நண்பர் வழியா ஒரு துப்பறியும் நிறுவனம் மூலமா தேடிட்டு இருந்தேன்!''

சக்தி சொன்னதைக் கேட்ட சூர்யாவுக்கு, அவன் மேல் மரியாதை எழுந்தது.

அவள் வாழ்க்கையில் தன்னால் ஒரு சஞ்சலம் நேரக்கூடாது என்று நினைக்கும் சக்தி!

அவனது நினைவு மட்டும் போதும் என்று அவனோடு கற்பனையில் வாழ்ந்து கொண்டிருந்த அபிராமி!

இவர்கள் இருவரையும் பிரித்து வைத்து வேடிக்கை பார்த்த கடவுள் மேல் கோபம் எழுந்த அதே சமயம், இப்போதாவது சேர்த்து வைத்தாரே என்று அவருக்கு நன்றி சொல்லவும் தோன்றியது.

''இவ்வளவு நாளா எங்கே இருந்தீங்க சக்தி? அந்த ட்ரைன்ல நீங்க பயணம் செய்ததா ஒருத்தர் உறுதியா

சொன்னாரே? அதுவுமில்லாமல், உங்க நண்பர்கள் அங்கே மருத்துவமனை எல்லாத்திலையும் உங்களைத் தேடினாங்களாமே?'' என்ற சூர்யா விசாரித்தான்.

''ம்ம்ம்... நான் அந்த ட்ரைன்ல பயணம் செய்தது உண்மைதான் சூர்யா! ஆனால், என்னுடைய அந்த பயணம் கொஞ்ச நேரத்திலேயே தடை பட்டுடுச்சு!'' என்றவன், ஐந்து வருடங்களுக்கு முன்பு நடந்ததை சொல்லத் தொடங்கினான்.

24

ரயிலில் ஏறிய சக்தியின் மனம் உற்சாகத்தில் சிறகடித்து பறந்து கொண்டிருந்தது!

இன்னும் இரண்டு நாட்களில் அபிராமியை சந்திக்கப் போகிறோம்! இன்னும் பத்து நாட்களில் அவளுடன் திருமணம்!

திருமணத்துக்குத் தேவையான உடையைத் தான் வந்ததும் தான் வாங்க வேண்டும் என்று அபிராமி சொல்லி இருந்தது நினைவுக்கு வர, அளவுக்கு அதிகமாக பொருட்களை வாங்கப் பிடிக்காத சக்திக்கே, அவளுக்குப் பிடித்த எல்லாவற்றையும் வாங்கிக் குவிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது!

கொஞ்ச நேரத்துக்கு முன் அவளிடம் பேசியதும், தன்னுடைய வார்த்தைகளில் வெட்கமடைந்து அவள் பேசாமல் இருந்ததும் நினைவுக்கு வந்தது!

அவளது முகச் சிவப்பு கண் முன் தோன்றி, அவனது முகத்தில் அழியாதப் புன்னகையை ஒட்டியது!

தன் இடத்தில் வந்து அமர்ந்தவன், தன் அன்னையை வழி அனுப்ப வந்த ஒருவர், போக மனமில்லாமல் இருப்பதைக் கண்டு,

''நானும் சென்னைதான் போறேன்... அங்கே இருந்து எனக்கு தஞ்சாவூர் போற வண்டிக்கு நேரமிருக்கும்! அவங்களை எந்த இடத்தில விடணுமோ விட்டுட்டே போறேன்!'' என்று அவரிடம் வாக்களித்தான்.

எப்போதும் உதவும் குணம் அவன் கூடப் பிறந்தது தான் என்றாலும் இன்று ஏனோ யார் முகமும் வாடுவதைக் காண அவனுக்குப் பிடிக்கவில்லை!

நான் சந்தோஷமாக இருக்கும் இந்த நேரத்தில் சுற்றி இருப்பவர்களும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தோன்றியது.

தன்னுடன் பயணம் செய்தவர்களுடன் அவன் கலகலப்பாகப் பேசிக் கொண்டு வர, அடுத்த நிறுத்தம் வரும்போது எல்லாம் மாறிப் போயிற்று!

''ஏறு! ஏறு! சீக்கிரம்! வண்டி பத்து நிமிஷம்தான் நிற்கும்!'' என்று ஒரு இளைஞன் தன் மனைவியையும் குழந்தையையும் ஏற்றிவிட்டு விட்டு, சக்தி அமர்ந்திருந்த பக்கத்து இருக்கையில் அவர்களை அமர வைத்துவிட்டு இறங்கப் போக,

''அப்பா... நீயும் வாப்பா!'' என்று அழுதான் அந்தக் குட்டிப் பையன்!

''அப்பாவும் வரேன் கண்ணா! உனக்கு பிஸ்கட் வாங்கிட்டு வரேன்!'' என்று சொல்லி விட்டு நகர முயன்றவனை,

''பிஸ்கட் வேணாம்! நீ வா!'' என்று சொல்லி குழந்தை அடம் பிடிக்க,

''குழந்தை அழறானே சார்! என்கிட்டே பிஸ்கட் இருக்கு! நான் தரேன்! நீங்க உட்காருங்க!'' என்ற சக்தி, தாங்கள் அமர்ந்திருந்த இடத்தில, அந்தப் பெண் உட்கார்ந்த இடம்தான் காலியாக இருந்தது என்பதை உணர்ந்து,

''வேற சீட்டா உங்களுக்கு? நீங்க வேணும்னா இங்கே உட்கார்ந்துக்கோங்க... நான் அந்த சீட்டுக்கு போறேன்!'' என்று உதவ முன் வந்தான்.

''இல்லை சார்! டிக்கெட் கிடைக்கலை! இவங்களுக்கு மட்டும்தான் பெர்த் கிடைச்சிருக்கு! நான் ஓபன் டிக்கெட் எடுத்திருக்கேன்!'' என்று அந்த இளைஞன் சொன்னதும், வண்டி வந்தபோது அன்ரிசர்வ் பெட்டியில் முண்டியடித்துக் கொண்டிருந்த கூட்டம் மனதில் தோன்றி, சக்தி மலைத்துப் போனான்.

''இங்கே இருந்து சென்னை வரை போகப் போறீங்களா?'' என்று அவன் விசாரிக்க,

''ஆமாம் சார்! இவங்க அப்பா ரொம்ப சீரியஸா இருக்கார்! தட்கல் டிக்கெட் இவங்களுக்கு மட்டும்தான் கிடைச்சது!'' என்று அவசரமாக சக்தியிடம் சொன்னவன்,

''டிடிஆர். வந்தா பிரச்சனை ஆயிடும்! அவனைப் பார்த்துக்கோ கவி! நான் இறங்கி முன்னாடி இருக்கிற அன்ரிசர்வ் பெட்டில ஏறணும்!'' என்று மனைவியிடம் படபடத்தான்.

குழந்தை போல அழவில்லை என்றாலும், அந்த பெண்ணுக்குமே அவன் அருகே இருக்க வேண்டும் என்ற ஏக்கம் இருந்ததைப் போல சக்திக்குத் தோன்ற, சட்டென்று முடிவெடுத்தவன்,

''என்னோட டிக்கெட்ல நீங்க பிரயாணம் செய்யுங்க சார்! எனக்கு ஒண்ணும் அவசரமில்லை!'' என்றான்.

ஆச்சரியத்துடன் சக்தியைப் பார்த்த அந்த இளைஞன், ''இல்லை சார்... இருக்கட்டும்!'' என்று தயங்க,

''பாருங்க... அவங்க ரொம்ப பயந்து போய் இருக்காங்க... நீங்க கூட இருந்தீங்கன்னா தெம்பா இருக்கும்!'' என்று சொல்லி அவனது பதிலை எதிர்பாராது தன் பயணச்சீட்டை எடுத்துக் கொடுத்தவன்,

''இவங்களுக்கு மட்டும் சென்னையில் இறங்கியதும், அவங்க போக வேண்டிய இடத்துக்கு, வண்டி ஏற்பாடு செய்து கொடுத்துடுங்க ப்ளீஸ்!'' என்று அந்த மூதாட்டியைப் பற்றி சொல்லிவிட்டு, ரயில் கிளம்பும் நேரத்தில் அவசரமாக இறங்கினான்.

இறங்கியவனின் மனதில் கொஞ்ச நேரம் முன்பிருந்த உற்சாகம் இப்போதில்லை!

ஆனாலும் அந்தப் பெண் பாவம்! தன் தந்தைக்கு என்ன ஆகுமோ என்ற கலவரத்தோடு, அழுது கொண்டிருக்கும் குழந்தையையும் சமாளித்துக் கொண்டு பயணம் செய்ய வேண்டும் என்றால்? தான் செய்தது சரிதான் என்ற முடிவுக்கு வந்தவன், அபிராமிக்கு போன் செய்து சொல்லலாமா என்று தோன்றிய எண்ணத்தை உடனே அழித்தான்.

இரண்டு நாட்களில் அத்தான் வந்து விடுவான் என்று ஆவலோடு எதிர்பார்த்திருப்பவளுக்கு, ஏமாற்றத்தைத் தர வேண்டாம் என்று எண்ணியவன், என்ன பாடு பட்டாவது திட்டமிட்டபடி ஊருக்குச் சென்றுவிட வேண்டும் என்றெண்ணி, அங்கிருந்த ஒரு ட்ராவல்ஸ் கம்பெனிக்குச் சென்றான்.

விமானத்தில் செல்ல விவரம் கேட்டபோது, ''இங்கே இருந்து சென்னைக்கு இன்னைக்கு ஃப்ளைட் இல்லை சார்! இங்கே இருந்து காரில் டெல்லிக்கு போனால், ஐந்து மணி நேரம் ஆகும்! நாளைக்கு விடிகாலை டெல்லி ஃப்ளைட்டில் வேணுமானால், டிக்கெட் புக் செஞ்சு தரேன்! இங்கே இருந்து எங்கள் காரிலேயே டெல்லிக்குப் போயிடலாம்!'' என்றான் அந்த ஏஜன்ட்.

''சரி!'' என்று ஒத்துக்கொண்டுவிட்டு, தன் பயணத்தைத் தொடங்கினான் சக்தி.

பயணம் தொடங்கிய இரண்டு மணி நேரத்திலேயே, இவர்கள் முன்னே வந்த ஒரு கார் தாறுமாறாக வர, ஓட்டுனர், அந்த காரோடு மோதாத வகையில் காரை வளைத்துத் திருப்ப, எதிரே வந்த வண்டி தறி கெட்டு ஓடி ஒரு மரத்தில் அதீத சத்தத்துடன் மோதி நின்றது!

காரை நிறுத்தச் சொன்ன சக்தி, காரை விட்டு இறங்கி அந்த வண்டியை நோக்கி செல்ல, ஓட்டுனர் தடுத்தான்!

''வாங்க சார்! நாம போகலாம்! அப்புறம் போலீஸ், கேஸ் அது இது என்று பிரச்சனை ஆயிடும்!'' என்று வண்டியை விட்டு இறங்க,

''என்னப்பா இது கொஞ்சம் கூட இரக்கமே இல்லாமல் பேசறே! அங்கே இருக்கிறவங்களுக்கு என்ன ஆச்சோ?'' என்று அவசரமாகத் தன் பையில் இருந்த முதல் உதவிப் பெட்டியை எடுத்துக் கொண்டு நடக்க,

''சார்! சொன்னா கேளுங்க சார்! நம்ம மேல தப்பில்லை என்றாலும் போலீஸ் கேட்க மாட்டாங்க சார்!'' என்று சொல்லிக் கொண்டே இருந்தவன், சக்தி தன் பேச்சைக் கேட்பதாக இல்லை என்றதும், வண்டியைக் கிளப்பினான்!

சக்திக்கு அருகில் வந்து, ''நான் போறேன் சார்!'' என்று விட்டு, காரை அவன் வேகமாக ஓட்ட, அந்தக் காரில் தன் பை மற்றும் பர்ஸ் இருப்பது நினைவுக்கு வந்தது.

''காருக்குள் என் பை இருக்கு! வண்டியை நிறுத்து!'' காரின் பின்னால் கத்திக் கொண்டே ஓடினான்.

அவன் நிறுத்துவதாக இல்லை!

பையைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணியவன், அடிபட்டு இருந்தவர்களை கவனிக்க வேண்டிய கட்டாயத்தில், மற்றதை மறந்தான்.

காரில் ஓட்டுனர் இருக்கையில் ஒரு ஆணும், பக்கத்தில் ஒரு பெண்ணும் இருந்தார்கள். மரத்தில் மோதிய வேகத்தில், காரின் முன் பக்க கண்ணாடி உடைந்து, கண்ணாடித் துண்டுகள் அங்கங்கே சிதறி இருந்தன.

நல்ல வேளையாக, ஓட்டுனர் இருக்கையில் இருந்தவன், சீட் பெல்ட் அணிந்திருந்ததால், அந்த அளவுக்கு அவனுக்கு அடிபட்டிருக்கவில்லை. மயக்கத்தினால் வந்த அதிர்ச்சிதான் போலிருக்கிறது என்று எண்ணியவன், பக்கத்தில் இருந்த பெண்ணைப் பார்க்க, அவளது தலையில் அடிபட்டு ரத்தம் வந்து கொண்டிருந்தது.

பின் சீட்டில் ஒரு ஐந்து வயது பையன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு பெரிதாக அடி பட்ட மாதிரி தெரியவில்லை

காரின் ஓட்டுனர் பக்க ஜன்னல் மட்டுமே திறந்திருந்தது. கார்க் கதவைத் திறக்க இயலவில்லை!

என்ன செய்வது என்று குழம்பியவன், கை நீட்டி உள்ளே இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து அந்த

ஆணின் மேல் தெளித்து மயக்கத்தைத் தெளிவிக்க முயற்சி செய்தான்!

அதற்குள், உள்ளே தூங்கிக் கொண்டிருந்த பையன் எழுந்து, தன் தாயின் தலையில் இருந்த ரத்தத்தைப் பார்த்து அழ ஆரம்பிக்க,

''அழாதே!'' என்று தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் என்று எல்லா மொழியிலும் சொல்லிப் பார்க்க, பையன் அழுகையை நிறுத்துவதாயில்லை!

உள்ளே இருந்த பெண்மணிக்கு முதலுதவி அளிக்க வேண்டும் என்று மருத்துவ மூளை அறிவுறுத்த, காரைத் திறப்பதற்கு வேறு என்ன செய்யலாம் என்று அவன் யோசித்த நேரத்தில், பையனது அழுகை அதிகமானது.

''இங்கே பாரு கண்ணா! நீ இப்படி முன்னாடி வா! நான் உன்னை வெளியே வர வைக்கிறேன்!'' என்று சொல்ல, பையனுக்கும் உள்ளே இருப்பதை விட வெளியே வர வேண்டும் என்று தோன்றியதோ!

சக்தியின் பேச்சைக் கேட்டு முன் புறம் வந்தவனை, கை நீட்டி சக்தி தூக்கிக் கொள்ள, அவனை வெளியே இழுப்பதற்குள், பையனின் காலில் ஒரு கண்ணாடித் துண்டு கிழித்துவிட, பையன் பயந்து திமிறித் திரும்பியதில், உள்ளே, பாதி தலையை நுழைத்திருந்த சக்தியின் சிரம், ஜன்னலின் மேல்புறத்தில் பலமாக இடித்தது!

ஏதோ தலையில் இறங்கியதைப் போல் இருந்தது. சிதறிக் கிடந்த கண்ணாடித் துண்டில் ஒன்றாக இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டே, வலியுடன் தலையை அசைத்தவனின் இடது கன்னத்தில் இன்னொரு கண்ணாடித் துண்டு பட்டு, கன்னம் கிழிபட்டு ரத்தம் வழிந்தது.

சக்தி, தன் வலியைப் பொருட்படுத்தாமல், பையனை வெளியே இழுத்தான்.

அதற்குள், ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்திருந்த ஆணும் மயக்கத்தில் இருந்து மீள, அவனது முயற்சியில் கார்க் கதவு திறக்கப்பட்டது.

கன்னத்தின் கீறலில் இருந்து வந்த ரத்தத்தைக் கண்டு கொள்ளாமல், சக்தி அந்தப் பெண்ணுக்கு முதலுதவி செய்தான்.

முதலுதவி செய்து முடித்ததும்தான், தன் தலையில் இருந்து ரத்தம் வழிவதையும், சுருக் சுருக் என்று வலி ஏற்படுவதையும், சக்தியால் உணர முடிந்தது.

வலியின் அளவில் இருந்தே, பெரிய காயம் என்பதை உணர்ந்த சக்தி, அந்த மனிதனிடம் தன்னைப் பற்றிய விவரத்தைச் சொல்ல வேண்டும், தன் முகவரியைத் தர வேண்டும் என்று எண்ணும்போதே, தன் உணர்வை இழந்திருந்தான்.

சக்திக்கு சிகிச்சை அளிக்கும்போது, நிறைய ரத்தம் சேதமாகி இருந்தது. மூளையில் ரத்தம் உறைந்திருக்க, சிகிச்சைக்குப் பிறகு அவன் கண் விழிக்கவில்லை! கோமாவிலேயே ஐந்து வருடம் இருக்க வேண்டியதாயிற்று!

அவனைப் பற்றிய எந்த விவரமும் தெரியாத நிலையில், அவர்கள் போலீசுக்குப் போக, விபத்து நடந்த இடத்தில, சக்தியின் பொருள் என்று எதுவும் இல்லாததால், அந்த புகாரும், தேங்கிக் கிடக்கும் எத்தனையோ புகாரில் ஒன்றாகக் கிடந்ததே தவிர வேறெந்த பலனும் இருக்கவில்லை!

தக்க சமயத்தில், தங்களைக் காப்பாற்றிய நன்றிக்காக, அந்தக் குடும்பம் அவனை ஐந்து வருடங்களாக நல்லபடியாக பார்த்துக் கொண்டனர்.

தங்களைக் காப்பற்றியவனை, அவனது குடும்பத்தோடு சேர்த்து வைக்க வேண்டும் என்று உந்துதலில் அவர்கள் தொடர்ந்து சிகிச்சை அளிக்க, அந்த சிகிச்சையின் பயனாக, சென்ற மாதம் அவனுக்கு நினைவு திரும்பியது.

ஐந்து வருடங்கள்!

தனக்கு என்ன ஆனதோ என்று தெரியாமல், அன்னையும் அபிராமியும் எப்படி தவித்தனரோ என்ற உணர்வில், அதற்கு மேல் ஒரு நாள் கூடத் தாமதிக்காமல், தஞ்சாவூருக்கு வந்து சேர்ந்தவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

ரயில் விபத்தில் தான் இறந்து விட்டதாக மற்றவர் நினைத்திருந்த விபரம் தெரிய வர, அந்த நேரத்திலும், தன்னுடன் பயணம் செய்த அந்த மூதாட்டி, தான் பயணச்சீட்டு கொடுத்த அந்த சிறிய குடும்பம், மற்றும் முகம் தெரியாத சக பிரயாணிகளுக்காக அவன் மனம் வேதனைப்பட்டது.

தன் டாக்டர். நண்பன் சேது வாயிலாக, அபிராமியும் அன்னையும் சென்னைக்கு இடம் பெயர்ந்ததைத் தெரிந்து கொண்டான். அதற்கு மேல் சேதுவுக்கும் விபரம் தெரிந்திருக்கவில்லை. சென்னை சென்ற பிறகு முகவரி தெரிவிப்பதாகச் சொல்லிச் சென்றவர்களிடம் இருந்து அதன் பிறகு எந்த தகவலும் இல்லை என்றான் நண்பன்.

அதன் பிறகு சென்னை வந்த சக்தி, தன் நண்பனின் மூலம் ஒரு துப்பறியும் நிறுவனம் வாயிலாக அன்னையைத் தேட ஆரம்பித்தான்.

பெரிதாக விவரங்கள் இல்லாததால் அந்த தேடுதலில், அவ்வளவு சீக்கிரம் பலன் கிடைக்கவில்லை.

இன்று, முகம் தெரியாத சூர்யாவின் மூலம், தன் அன்னையையும் அபிராமியையும் சந்திக்கும் வாய்ப்பு

கிடைத்திருக்கிறது. சக்தி மீண்டும் தனது மனமார்ந்த நன்றியை சூர்யாவிடம் தெரிவித்தான்.

25

அபிராமி, முழுமையாகத் தேறி வருவதற்கு ஒரு வாரம் ஆனது!

அந்த ஒரு வாரம் முழுவதும், இமைப் பொழுதும் அவளை நீங்காமல் அருகில் இருந்து கவனித்துக் கொண்டான் சக்தி!

அபிராமி மயக்கத்தில் இருந்து விழித்ததும், தன்னைத் தேடுவாள் என்பதை உணர்ந்திருந்த சக்தி, அவள் விழிக்கும்போது, அவள் கண்ணில் படும்படியே நின்றிருந்தான்.

மயக்கத்தில் இருந்து விழித்ததும், எதிரே இருந்த தன் அத்தானின் மேல் பதித்த பார்வையை, அபிராமி வேறெங்கும் திருப்பினாள் இல்லை!

அறையில் இருந்த மற்றவர்கள், அவள் கண்ணிலோ கருத்திலோ படவும் இல்லை!

அதே சமயம், வாய் திறந்து அவனிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை!

அவளது பார்வை மட்டும் அவன் மீதே படிந்திருக்க, அவளது மௌனம் நீண்டு கொண்டே போனது!

சக்தியாக அவளிடம் கேட்ட கேள்விகளுக்கும் பேசிய பேச்சுக்கும் கூட அவளிடம் இருந்து எதிரொலி இல்லை!

விழித்திருக்கும் நேரம் வரை அவனைப் பார்வையா லேயே வருடிக் கொண்டிருந்தாளே தவிர, அவளிடம் இருந்து வேறெந்த அசைவும் இல்லாமல் போகவே, அவள் உறங்கியதும் டாக்டரிடம் சக்தி கவலையாக விசாரித்தான்.

''பாருங்க சக்தி! அவங்க மனசு இப்போ ரொம்ப களைச்சுப் போயிருக்கு! எது நிஜம், எது கற்பனை என்ற குழப்பம் அவங்க மனசுக்குள்ள இருக்கிறது இயல்புதான்! அவங்களுக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க! நீங்க உண்மை யிலேயே திரும்பி வந்துட்டீங்க என்ற விஷயத்தை அவங்க மனசு எந்தக் குழப்பமும் இல்லாமல் ஏத்துக் கணும்! அதுதான் நல்லது!''

டாக்டர் சொன்னதில் இருந்த உண்மை புரிய, சக்தியும் அவள் பேசவில்லையே என்று ஏக்கமாக பார்த்துக் கொண் டிருப்பதைக் கைவிட்டு, அவளிடம் பழைய கதைகளை இயல்பாகப் பேச ஆரம்பித்தான்!

அவளைக் கேலி செய்தான்!

அவளை மிரட்டினான்!

அவளை வெட்கப்பட வைத்தான்!

மொத்தத்தில், அவள் காண்பது கற்பனை அல்ல! நிஜம்! என்பதை புரிய வைக்க வார்த்தைகளால் அல்லாமல் செய்கையால் முயன்றான்!

அவனது முயற்சிக்கு பலன் இருந்தது!

முதல் இரண்டு நாட்கள், பார்வையால் மட்டும் அவனை வருடிக் கொண்டிருந்தவள், மூன்றாவது நாள் அவனை சைகையால் அருகில் அழைத்து அவனிடம் ஒண்டிக் கொண்டாள்!

அடுத்த இரண்டு நாட்களில், அவனோடு சேர்ந்து பழம் கதைகளைப் பேசத் துவங்கினாள்!

ஒரு வாரம் கழித்து உடல் மற்றும் மன அளவில் முழுமையாகத் தேறியவள், ''என்னை இப்பவே கல் யாணம் செஞ்சுக்கோங்க அத்தான்!'' என்ற மெல்லியக் குரலில் சொன்னபோது,

''நீ எப்போ கேட்பேன்னு காத்திட்டு இருந்தேன்டா கண்ணம்மா!'' என்று கண்களில் நீர் திரையிட சொன்ன சக்தி, அவளை மென்மையாக அணைத்து, நெற்றியில் முத்தமிட,

அவனது அணைப்பிலும் முத்தத்திலும் மயங்கினாலும், ''என்ன இது!'' என்று சுற்று முற்றும் பார்த்து விட்டு அவனிடம் இருந்து அவள் விலக,

''ஊரில் இருந்து வந்ததும், நீ தரேன்னு சொன்னது ஞாபகம் இருக்கில்லை? இதுக்கே இப்படிச் சொன்னால் எப்படி?'' என்று உல்லாசமாகக் கேட்டு அவளை சிவக்க வைத்தவன், தாமதிக்காமல், திருமண வேலையில் இறங்கினான்!

மருத்துவமனையில் தான் நடந்து கொண்டது எதுவும் நினைவில் இல்லை என்றாலும், சக்தியிடம் என்ன நடந்தது என்று நச்சரித்து தெரிந்து கொண்டிருந்தாள் அபிராமி. அவனும் அவளது மனம் புண்படாத வகையில் நடந்ததைச் சொல்லி இருந்தான்.

அதன் விளைவாக, கற்பகத்திடம், ''உங்களை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன் அத்தை! மன்னிச்சிடுங்க!'' என்று அபிராமி மன்னிப்பு வேண்ட,

''நீ ஒண்ணும் செய்யலைடா ராஜாத்தி! நான்தான் பல நேரம் உன் மனசு தெரியாமல் நடந்து உன்னை கஷ்டப்படுத்தி இருக்கேன்!'' என்ற கற்பகத்தை,

"இல்லை அத்தை! நீங்க எப்பவுமே எனக்கு நல்லது மட்டும்தான் செஞ்சிருக்கீங்க!" என்று அணைத்துக் கொண்டாள் அபிராமி.

"ஆன்ட்டி... நான் என்னையும் மீறி ஏதாவது தவறா பேசி உங்க மனசைக் காயப்படுத்தி இருந்தால் மன்னிச்சிடுங்க!" என்று பவானியிடமும் மன்னிப்பு வேண்ட,

"நீ எதுவும் சொல்லலை அபி!" என்றபடி அவளது கரத்தை ஆதரவாகப் பற்றிக் கொண்டார் பவானி.

"உங்களை நான் எப்பவுமே ஒரு நல்ல நண்பனாத்தான் நினைச்சேன் சூர்யா!" என்று சூர்யாவிடம் சொன்னவள், அதற்கு மேல் என்ன பேசுவது என்று தயங்க,

"நான் எப்பவும் உங்களுக்கு ஒரு நல்ல நண்பன்தான் அபி!" என்ற சூர்யாவின் பதில், அவளது குற்ற உணர்வைப் போக்கியது!

தெய்வ சந்நிதானத்தில், சுற்றி இருந்த நல்ல உள்ளங்களின் வாழ்த்துக்களோடு, சக்தி தன் கண்ணம்மாவின் கழுத்தில், மாங்கல்யத்தைப் பூட்ட, தன் கற்பனைத் திருமணம் நிஜமான சந்தோஷத்தில், அபிராமியின் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சிந்தியது!

தன் மனைவியின் மனம் உணர்ந்த சக்தி, அவளது தோளை ஆதரவுடன் பற்றிக் கொள்ள, நிமிர்ந்து அவனை நோக்கிய அபிராமி, நிறைவுடன் புன்னகைத்தாள்.

அன்றே, தீபாவின் குழந்தைகளை இருவரும் தத்தெடுத்துக் கொண்டனர்!

இனி தனக்கில்லை என்று எண்ணி இருந்த குழந்தைகள், மீண்டும் தனக்கு சொந்தமானதில், மகிழ்ச்சியில்

திளைத்திருந்த அபிராமி, அன்று முழுவதும் அவர்களுடனே நேரத்தை செலவு செய்ய, அவளது எண்ணம் புரிந்து சக்தியும் அவர்கள் கூடவே இருந்தான்.

கணவனிடம், தங்கள் பிள்ளைகளைப் பற்றிய, அருமை பெருமைகளை வாய் ஓயாமல் அபிராமி பேசிக் கொண்டிருக்க, மனைவியை எண்ணி சக்தியின் உள்ளம் பெருமையில் பூரித்திருந்தது.

சக்தி இல்லத்தில், அனைவருக்கும் திருமண விருந்து கொடுக்கப்பட்டது!

இதே மாதிரி ஒரு விருந்தில், தன் பிள்ளையின் மனதை அறிந்த பவானிக்கு, தன் பிள்ளையின் வாழ்வை எண்ணி கவலை பிறந்தது!

ஒரு பெண்ணாக, அபிராமியின் வாழ்வுக்காக சந்தோஷப் பட்டாலும், ஒரு தாயாக, தன் மகன் விரும்பிய பெண் அவனுக்கு வாய்க்கவில்லையே என்ற வருத்தம் அவருக்கு இல்லாமல் இல்லை!

தன் வருத்தத்தை அவர், மகனிடம் பகிர்ந்து கொள்ள, அந்த வருத்தம் தேவையற்றது என்றான் மகன்!

"சக்தியையும் அபியையும் பார்க்கும்போது, அவங்களைப் போலவே எதிர்பார்ப்பில்லாத அன்பை, வரப்போற மனைவி மேல, கொட்டணும் என்று ஆசையா இருக்கு! சீக்கிரம் பொண்ணு பார்க்க ஆரம்பிங்க!" என்ற மகனை ஆச்சரியமாகப் பார்த்தவர்,

"அபி மாதிரியே பார்க்கட்டுமா?" என்று விசாரிக்க,

"எனக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லைம்மா! என் மனைவி என்று வருகிறவளை, அவள் எப்படி இருந்தாலும்,

நேசிக்க நான் காத்திருக்கேன்!'' என்ற மகனைப் பார்த்த பவானியின் உள்ளமும் நிறைந்தது.

* * *

''நாள் முழுக்க குழந்தைகளோடு இருந்தாச்சு இல்லை? இன்னைக்கு நைட். அவங்க என் கூட இருக்கட்டும்! நீ போ!'' என்று கற்பகம், அபிராமியை சக்தி இருந்த அறைக் குள் அனுப்ப, உள்ளே வந்த அபிராமியின் உள்ளம் நிறைந்து, அது கண்ணீராய் வெளி வந்தது!

இனிமேல் அத்தானோடான அவளது வாழ்க்கை கற்பனை இல்லை!

உண்மையிலேயே அவளது வாழ்க்கை அவளது அத்தானோடு துவங்கப் போகிறது!

அவளது கற்பனை நிஜமாகப் போகிறது!

அந்த எண்ணம் தந்த ஆனந்தத்தைத் தாங்கும் சக்தி கூட இல்லாமல், உடல் நடுங்க நின்று கொண்டிருந்தவள்,

கண்களில் காதலும் குறும்பும் போட்டி போட, ''என்ன?'' என்று புருவம் உயர்த்தி வினவிய சக்தியைக் கண்டதும்,

''அத்தான்!'' என்று அழைப்போடு ஓடிச் சென்று அவனை அணைத்துக் கொண்டாள்.

''கண்ணம்மா! சூப்பர் ரியாக்ஷண்டா!'' என்று கேலி யாக சொன்ன சக்தி, தன்னை அணைத்திருந்தவளின் உடல் அழுகையில் குலுங்கவும்,

''கண்ணம்மா! என்னடா? என் செல்லம்மா... என்னடா'' என்று கேட்டபடியே அவளைத் தன்னிடம் இருந்து விலக்க முயன்றான்.

அவளது அழுகையை நிறுத்த முடியாமல் போகவே, அவளது முதுகை மென்மையாக வருடியபடி நின்றான்.

ஐந்து வருட கற்பனை வாழ்க்கைக்குப் பின்னே அவள் மறைத்து வைத்திருந்த கண்ணீர் அது, என்பதை அறிந்த வனுக்கும் கண்ணீர் துளிர்த்தது.

இனிமேல், தன் கண்ணம்மாவின் கண்களில் கண் ணீரே வர விடக்கூடாது என்று அவன் உறுதியாக முடி வெடுத்த வேளையில், அபிராமியும் தன்னை மீட்டுக் கொண்டு, அவனிடம் இருந்து விலகி, ''சாரி!'' என்று சொல்லிவிட்டு புன்னகைக்க முயன்றாள்.

மெல்ல அவளை அணைத்தபடியே கட்டிலுக்கு இட்டுச் சென்றவன், அவளைத் தன் மேல் சாய்த்தபடி அமர்ந்து கொண்டான்.

''இனிமேல் இப்படி அழக்கூடாது!'' என்று கொஞ்சம் கண்டிப்புடன் சொன்னவன்,

''நம் சோதனைக் காலம் முடிந்து விட்டது கண்ணம்மா! அப்போவே, தைரியமா இருந்தவன், இப்போ இப்படி கண்கலங்கலாமா? போதுண்டா நீ அழுதது எல்லாம்!'' என்று அவளை மென்மையாக அணைத்துக் கொண்டு,

''எல்லாம் என்னோட தப்புதான்! பயண மாறுதலை அப்பவே உங்களுக்குத் தெரிவிச்சிருந்தால் நீயும் அம் மாவும் இவ்வளவு வேதனைப்படத் தேவை இருந்திருக் காது!'' என்று வருத்தமான குரலில் சொல்லிவிட்டு,

''அதுவும் அந்த நேரத்தில் நீ எடுத்திருந்த முடிவு! உனக்கு ஏதாவது ஆகி இருந்தால்?'' என்று சொன்ன வனின் உடல் நடுங்குவதைக் கண்டு,

அவனது முதுகை வருடியவள், அவன் வாடுவது பொறுக்காமல், ''என்ன அத்தான் இது! என்னைப் பழசை நினைச்சு கலங்கக் கூடாது என்று சொல்லிட்டு நீங்க ஏன் வருத்தப்படறீங்க?'' என்று அவனைத் தேற்றினாள்.

இருவரும், சிறிது நேரம் தங்களது அணைப்பில் இதம் கொண்டு அமைதியாக இருக்க, அபிராமியின் விரல்கள், அவனது கன்னத்துத் தழும்பை வருடியது.

''உனக்குப் பிடிச்ச கன்னக் குழியை இந்த தழும்பு மறைச்சிடுச்சேன்னு கவலையா இருக்கா?''

மென்மையாகக் கேட்டவனின் அணைப்பில், இன்னும் நெருங்கிக் கொண்டு,

''உங்க கன்னக் குழி எனக்கு பிடிக்கும் அத்தான்! ஆனால், இப்போ இந்த தழும்புதான் அதைவிட ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என்று சொல்லியபடியே, அவனது தழும் பில் அவள் தன் இதழ்களைப் பதிக்க, அடுத்த கணம் கணவனின் இறுகிய அணைப்பில் இருந்தவளுக்கு மூச்சு முட்டியது!

அவளது நிலை உணர்ந்து அவளை விடுவித்தவன், தன் மென்மையான அணைப்புக்குள் மீண்டும் அவளைக் கொண்டு வர, நிமிர்ந்து நோக்கியவள், கணவனின் கண் கள் கண்ணீரால் பளபளப்பதைக் கண்டு பதறிப் போனாள்.

''என்ன அத்தான் இது?'' என்று துடைக்க வந்தவளின் கரத்தை, கன்னத்தோடு வைத்து அழுத்திக் கொண்டவன்,

''நீ இவ்வளவு அன்பு வைக்கிற அளவுக்கு நான் என்னடா செஞ்சேன் உனக்கு?'' என்று கம்மிய குரலில் வினவ,

''நான் இன்னைக்கு நாலு பேருக்கு உதவக் கூடிய மனு ஷியா இருக்கேன் என்றால், அதுக்கு காரணமே நீங்க தானே அத்தான்?'' என்றவளை அணைத்துக் கொண்டவன்,

''இத்தனை நடந்தும், நீ இவ்வளவு சாதித்திருப்பதை நினைச்சு எனக்கு எவ்வளவு பெருமையா இருக்கு தெரியு மாடா?'' என்றவன் குரலிலுமே பெருமிதம் பொங்கி வழிந்தது!

''நான் செஞ்ச, செய்யப்போற எல்லா விஷயங்களுக் கும் நீங்கதான் அத்தான் எனக்கு உந்து சக்தி! நீங்க இல்லை என்ற நினைப்பில் இருண்டுப் போன என் வாழ்க்கையில், ஒளி பாய்ச்சியதும் உங்க கூட வாழ்ந்த அந்த கற்பனை வாழ்க்கைதான் அத்தான்!'' என்றவள்,

''பாயுமொளி நீ எனக்கு...'' என்று கண்கள் பிரகாசிக்க மெல்லியக் குரலில் பாட,

''ஹே... அது பாரதி தன் கண்ணம்மாவை சொல்றா ருடா...'' என்ற சக்திக்குப் பதிலாக,

''பாரதி வேணுமானால், தன் கண்ணம்மாவை சொல்லி இருக்கலாம்! ஆனால், உங்க கண்ணம்மாவுக்கு பாயுமொளி நீங்கதான் அத்தான்!'' என்றவள் குரல் நெகிழ, அதை மாற்றும் முயற்சியாக,

''முதல் வரியையே ஆராய்ச்சி செஞ்சிட்டு இருந்தால் எப்படி? அடுத்த வரிக்கு போகலாமா?'' என்றான் கணவன்!

''பார்க்கும் விழி நான் உனக்கு!'' என்று அவள் பாட,

''தோயும் மது நீ எனக்கு. தும்பியடி நான் உனக்கு!'' என்று குழைந்த குரலில் பாடிய அவளது அத்தான்,

அவளது இதழ் எனும் மதுவை சுவைக்கும் தும்பியாய் மாற,

தன்னை மறந்து அந்த சுகத்தில் ஆழ்ந்தாள் அவனது கண்ணம்மா!

சிறிது நேரம் கழித்து மனமின்றி நிமிர்ந்தவன், மனைவியின் சிவந்த முகத்தை ரசனையுடன் நோக்கி விட்டு,

''அடுத்த வரிக்குப் போகலாமா?'' என்று சரசக் குரலில் வினவ,

அவனது முத்தம் தந்த மயக்கத்தில் இருந்து மீளப் பிடிக்காதவளாய், ''போதும் இந்த பாடல் ஆராய்ச்சி!'' என்று மூடி இருந்த விழிகளைத் திறவாமல் அவள் முனக,

''இனிமேல் தான் முக்கியமான வரிடா கண்ணம்மா!'' என்றான் கணவன் குறும்புக் குரலில்!

அவன் சொல்ல வந்தது புரிந்தும், ''முக்கியமானதா? அப்படி என்ன வரி? எனக்கு மறந்து போச்சே!'' என்று விழிகளை விரித்தவளின் குரலில் குறும்பைக் கண்ட கணவன்,

''வீணையடி நீ எனக்கு! மேவும் விரல் நான் உனக்கு!'' என்று காதில் ரகசியமாகப் பாட, அவன் இதழ்கள் தன் செவி மடலில் ஏற்படுத்திய குறுகுறுப்பில், நெளிந்தபடியே,

''நடுவில ரெண்டு வரி விட்டுட்டீங்க!''

அவனை மடக்கி விடும் நோக்கத்தில், அவள் சட்டென்று சொல்லிவிட,

''மாட்டிக்கிட்டாயா? மறந்து போச்சுன்னு பொய்தானே சொன்னே?'' என்று அவளது கன்னத்தோடு கன்னம் வைத்து இழைத்தவன்,

''இந்த வரிக்கு அர்த்தம் தெரியுமில்லை?'' என்று குழைய,

கன்னம் சிவந்தாலும், ''தெரியாது!'' என்று அப்பாவியாய் உதட்டைப் பிதுக்கி, கண்ணை விரித்தாள் அவனது கண்ணம்மா!

இதைத்தானே அவனும் எதிர்பார்த்தான்!

''விளக்கம் வேணுமா?'' என்று உல்லாசமாகக் கேட்டவனின் உடல் மௌனச் சிரிப்பில் குலுங்கியது!

''ம்ம்ம்...'' என்று அவளுக்கே கேட்காத குரலில் முனகியபடி, அவள் அவனது மார்பில் தஞ்சம் புக,

''சில விஷயங்களுக்கு தியரியை விட பிராக்டிகல் தான் பெட்டர்!'' என்று குரலில் துள்ளலுடன் சொன்னவனின் விரல்கள், தன் இதய வீணையை மீட்டத் துவங்கி இருந்தது.

அந்த மென்மையான மீட்டலில், வீணையும் நெகிழத் துவங்க, அங்கே இல்லறம் எனும் இனிய இசை ஆரம்பமாகியது!

✸ மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ✸

சக்தியின் குடும்பம் மீண்டும் தங்கள் ஊரான தஞ்சாவூருக்கே குடி பெயர்ந்திருந்தது. அபிராமியின் சக்தி இல்லமும் கூடத்தான்!

சக்தியின் முயற்சியில் கட்டப்பட்ட இலவச மருத்துவமனை, இலவச மருத்துவ சேவை புரிவதில், உயர்ந்த இடத்தைப் பிடித்திருந்தது. அவர்களது அந்த சேவைக்கு அங்கீகாரமாக, அரசாங்கத்தில் இருந்தும் பல சலுகைகள் கிடைத்திருந்தன!

தான் செய்த உதவியை மனதில் வைத்து தன்னை ஐந்து வருடங்கள், கவனித்துக் கொண்ட குடும்பத்தோடும், சூர்யாவின் குடும்பத்தோடும் ஒரு தோழமையான உறவு தொடர்ந்து கொண்டிருந்தது.

''அப்பா! அப்பா! அம்மா எனக்கு ராதை வேஷம் போட்டிருக்காங்க பாருங்க! எப்படி இருக்குன்னு சொல்லுங்கப்பா!'' என்று தன் மழலைக் குரலில் கொஞ்சியபடி விசாரித்த தன் மகள் தீப நந்தினியைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்ட சக்தி.

''ரொம்ப ரொம்ப அழகா இருக்காளே என் சின்னக் கண்ணம்மா!'' என்று கொஞ்சியபடி முத்தமிட,

''எனக்கு கண்ணன் வேஷம் எப்படி இருக்குப்பா?'' என்று ஆர்வமாகக் கேட்டுக் கொண்டு வந்து நின்றான் அவனது செல்ல மகன் சுதா நந்தன்!

''அடடே, அந்த சின்னக் கண்ணனே வந்து நிற்கிற மாதிரி இருக்கே!'' என்று பாராட்டி விட்டு, அவனையும் மடியில் அமர்த்திக் கொண்ட சக்தி, அவனையும் முத்தமிட்டான்.

குழந்தைகளுக்கு பெயர் வைத்தபோது, அவர்களைப் பெற்றவர்களின் பெயர் வருமாறு பார்த்துக் கொண்ட தன் மனைவியின் நினைவில், சக்தியின் மனம் கனிந்த நேரத்தில்,

தான் கற்பனையில் கண்டதெல்லாம், நிஜத்தில் நிறைவேறும்போது அடையும் ஆனந்தத்தை இப்போதும் அடைந்தபடி, கண்கள் பிரகாசிக்க, தங்கள் குழந்தைகளைத் தன் கணவன் கொஞ்சுவதை ஆசையுடன் ரசித்துக் கொண்டிருந்தாள் அபிராமி!

நிமிர்ந்து நோக்கிய சக்திக்கு, தன் மனைவியின் கண்களில் இருந்த ஒளி, அவளது எண்ண ஓட்டத்தைத் தெரிவித்துவிட,

குழந்தைகளை மடியில் இருந்து இறக்கி விட்டவன், ''குட்டீஸ்! பாட்டி கிட்ட உங்க ரெண்டு பேருக்கும் வாங்கி வந்த டாய்ஸ் கொடுத்திருக்கேன் பாருங்க! போய் வாங்கிக்கோங்க!'' என்று அனுப்பி வைக்க,

''ஹய்யா!'' என்று துள்ளிக் குதித்தபடி குழந்தைகள் தங்கள் பாட்டியைப் பார்க்க ஓடினார்கள்.

மனைவியின் அருகில் வந்து, அவளை மேலும் சிந்திக்க விடாமல், ''என்ன சொல்றாங்க நம்ம குட்டி குட்டீஸ்?'' என்று விசாரித்தவனின் பார்வை, தன் கண்ணம்மாவின் மேடிட்டிருந்த மணி வயிற்றில் பதிந்தது!

அவனது பார்வையை உணர்ந்து, அழகாக முகம் சிவந்தாள் அவனது மனைவி.

இவ்வளவு வெட்கப்படுகிறவள், முதலில் குழந்தையே பெற்றுக் கொள்ள வேண்டாம் என்று சொன்னது அவனுக்கு நினைவு வந்தது.

குழந்தைகள் மீது அவளுக்கு இருக்கும் ஆசையை மனதில் வைத்து, அவன் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசினால், ''வேண்டாம்! அத்தான்! நமக்குக் குழந்தைகள் பிறந்தால், இப்போ நம்ம குழந்தைகள் கிட்ட காட்டுகிற பாசத்தில் வேறுபாடு வந்திடுமோ என்று பயமா இருக்கு!'' என்று தயங்குவாள்.

''உன்னால வித்தியாசம் காட்ட முடியாதுடா கண்ணம்மா!'' என்று அவன் சொன்னாலுமே, அவளுக்கு ஏதோ பயம்!

ஆனால், தன் மனைவியின் குழந்தை ஆசையை அறிந்தவனல்லவா அவளது சக்தி!

கொஞ்ச நாள் அமைதியாய் இருந்தவன், தங்கள் குழந்தைகள் மூலமே அவளிடம் தூது சென்றான்.

''எனக்கு தம்பி பாப்பா வேண்டும்!'' என்று பெண்ணும்,

''எனக்கு இன்னொரு தங்கச்சி பாப்பா வேண்டும்!'' என்று மைந்தனும்,

தினமும் அவளை நச்சரிக்க ஆரம்பித்தனர்.

தங்கள் குழந்தைகள் ஒன்றைக் கேட்டால் அதை எப்பாடு பட்டாவது நிறைவேற்றும், தாயான அபிராமியால் அவர்களது அந்த ஆசையை மறுதலிக்க இயலவில்லை!

குழந்தைகளின் ஆசைப்படியே, இரு மகவுகள் அவளது கர்ப்பக் கிரகத்தில் ஜனித்திருந்தன!

மருத்துவனான சக்திக்கு, ஸ்கேன் ரிப்போர்ட்டில் இருந்தே, அபிராமியின் வயிற்றில் இருப்பது 'ஒரு ஆண், ஒரு பெண்!' என்று தெரிய, அவன் அதை சந்தோஷத் துடன், மனைவியிடம் பகிர்ந்து கொள்ள, மொத்தக் குடும்பமும் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தது.

''அபி... சக்தி... வாங்க! பூஜை செய்யலாம்!'' என்று கற்பகம் அழைக்க, தங்கள் நினைவில் இருந்து மீண்ட கணவன் மனைவி இருவரும், நிறைவான மனநிலை யில் பூஜையில் கலந்து கொண்டனர்.

''இன்னைக்கு பாட்டி கிட்ட கதை கேட்டுட்டு தூங்கப் போறோம்!'' என்று குழந்தைகள், கற்பகத்துடன் சென்று விட,

தாய்மை தந்த பூரிப்பில் மேலும் அழகு மிளிர, அறைக்குள் வந்த மனைவியை, ஆசையுடன் தழுவிக் கொண்ட சக்தி,

''என்னடா கண்ணம்மா? இன்னைக்கு சும்மா ஜில்லுன்னு கும்முன்னு இருக்கே?'' என்று குறும்புடன் கண் சிமிட்டி வம்பிழுக்க,

''நாலு குழந்தைகளுக்கு அப்பா! பேசற பேச்சைப் பாரு!'' என்று கேலி பேசினாலும், தன் கணவனின் கண்ணுக்கு தான் அழகியாகத் தெரிவதில், பெருமிதம் கொண்டாள் மனைவி.

''இதென்ன வம்பா இருக்கே? எத்தனை குழந்தைகள் இருந்தால் என்ன? பொண்டாட்டியை கொஞ்சறதுக்கும் அதுக்கும் என்ன சம்மந்தம்?'' என்றவனின் கரங்களும் தனது மனைவியை கொஞ்சத் தொடங்கி இருந்தன.

''அத்தான்!'' என்று மனைவி இழுக்க,

''என்னத்தான்!'' என்று கணவன் ராகம் போட, மனைவி அவன் முதுகில் ஒன்று போட்டாள்.

''வர வர அதிரடி அபிராமி ஆயிட்டே நீ! கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல் புருஷனை அடிக்கிறே?''

அவனது குரல்தான் மிரட்டியதே தவிர, அவனது இதழ்களும், கரங்களும் அதற்கு நேர் மாறாக அவளைக் கொஞ்சிக் கொண்டிருந்த வேலையை செவ்வனே தொடர்ந்து கொண்டிருந்தன.

''எனக்குத் தூக்கம் வருது அத்தான்!'' என்று அவள் சலுகையாய் சொல்ல,

காலையில் இருந்தே பூஜைக்காக என்று அன்னை யுடன் சேர்ந்து அவள் செய்த வேலைகளை அறிந்தவன்

என்பதால், அவளிடம் இருந்து முயன்று தன் கரங்களைப் பிரித்துக் கொண்டு,

''சரிடா கண்ணம்மா! தூங்கு!'' என்று அவன் சொல்ல,

''அந்த பாட்டு பாடுங்க அத்தான்!'' என்றவள், தன் கணவனின் மார்பெனும் மஞ்சத்தில் தலை சாய்த்து, கண்களை மூடிக் கொண்டாள்.

குனிந்து அவளது உச்சியில் இதழ் பதித்து, அவளது தோளை மென்மையாக வருடியபடி, சக்தி மெல்லியக் குரலில் பாடத் துவங்கினான்!

''சுட்டும் விழிச்சுடர்தான், கண்ணம்மா!

சூரிய சந்திரரோ?

வட்டக்கரிய விழி, கண்ணம்மா!

வானக் கருமை கொல்லோ?''

✶

பாயும் ஒளி நீ எனக்கு...!

பிரேமலதா பாலசுப்ரமணியம்